2391

# BHARATHAM

# ARJUNAN THAVANILAI SARUKKAM

WITH

INTRODUCTION AND EXPLANATORY NOTES

BY

V. T. SAMBANDHAN,

TAMIL PANDIT: THE JAFFNA HINDU COLLEGE,
EDITOR: "INTHUSATHANAM",
COMMENTATOR ON CAMBRIDGE TAMIL SELECTIONS ETC.

*PUBLISHED BY*

S. SIVAGURUNATHAN,
NAYANMARKADDU,
NALLORE.

1944.

வில்லிபாரதம்—ஆரணியபருவம்

# அருச்சுனன் தவநிலைச் சருக்கம்

2391

இஃது

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும்

"இந்துசாதன"ப் பத்திரிகாசிரியருமாகிய

## ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

இயற்றிய

பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு

முதலியவற்றுடன்

நாயன்மார்கட்டு

**செ. சிவகுருநாதனால்**

**யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திரசாலையில்**

**அச்சிடுவிக்கப்பெற்றது.**

சுபானு வருஷம், தை மாதம்.

(CopyRight Registered).

உ

# நான்முகம்

வில்லிபுத்தூரர் பாரதத்து ஆரணியபருவத்தின் முதற் சருக்கமாகிய அருச்சுனன் றவநிலைச் சருக்கம் சிறந்த கவிகளாற் சிவபரத்துவத்தை நன்கெடுத்துக் கூறுவதாகும். இலங்கை வித்தியாபகுதியார் 1943-ம் ஆண்டிற்குரிய ஆங்கில எஸ். எஸ். ஸீ. பரீட்சைக்கு இச்சருக்கத்தையும் ஒரு பாடமாக விதிக்கலாயினர். இதனால் இந்நூலின் முந்திய பதிப்புப் பிரதிகள் செலவாயின; மேற்படி வித்தியாபகுதியார் இந்த 1944-ம் ஆண்டிலும் ஆங்கில S. S. C., H. S. C. என்னும் இரு பரீட்சைகட்கும் இச்சருக்கத்தைப் பாடமாக விதித்துள்ளனர் இந்த இரண்டாம் பதிப்பிற் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வுரை குறித்த மாணவர்கள் மாத்திரமல்லாமல் சைவமக்கள் தமிழபிமானிகளாகிய எல்லாரும் ஏற்றுப் படிக்கத்தக்கதாகும். இவ்வுரையில் தவறுகள் காணப்படினும் அவற்றைப் பொருட்படுத்தாது இதன்கட் கூறப்படும் சிவபரத்துவத்தையும் கவிநலத்தையும் உத்தேசித்துத் தமிழ்மக்களெவரும் இதனை அபிமானிப்பார்களாக.

இந்நூல் அச்சாகுங்காலத்தில், தங்கள் சிரமத்தையும் நேரத்தையும் பொருட்படுத்தாது பிழைதிருத்துதல் முதலிய உதவிகளைச் செய்தவர்களாகிய, வண்ணார்பண்ணை நாவலர் கலாசாலை ஆசிரியருளொருவராகிய பிரம்மஸ்ரீ. க. வை. ஆத்மநாதசர்மா, 'இந்துசாதன'ப் பத்திரிகையின் துணையாசிரியராகிய பண்டிதர் க. கி. நடராசனவர்கள், 'இந்துசாத'னாலயத்தில் இலேககராயிருக்கும் திரு. சு. இராமலிங்கம் ஆகிய இவர்களிடத்து நன்றி பாராட்டுகின்றேன். மேலும் என்னால் வெளியிடப்படும் புத்தகங்களைக் காலந்தோறும் அபிமானித்து வாங்கி உபயோகித்து என்னை இவ்விஷயத்தில் ஊக்கப்படுத்திவரும் உபாத்தியாயர்கள், மாணாக்கர், புத்தகசாலை அதிகாரிகள் முதலியோரிடத்தும் நன்றி பாராட்டுகின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
3—2—1944. } ம. வே. திருஞானசம்பந்தன்.

# பாரத நூலாசிரியர் வரலாறு

பரதவமிசத்து அரசர்களின் சரித்திரத்தைக் கூறும் நூல் பாரதம் எனப்படும். இது முதனூலாற் கொண்ட பெயர்; தத்திதாந்தம். இங்கே குறித்த பரதன் துஷ்யந்தராசனுக்குச் சகுந்தலையிடத்தே பிறந்த புத்திரன். இவனுக்குச் சர்வதமனனென்றும் பெயர். இவன்வமிசத் துற்பவித்தவர் பாரதர் எனப்படுவர். தருமார்த்த காம மோட்சமென்னும் புருஷார்த்தம் நான்கனையும் பயத்தலானும், வேதத்தை இருக்குமுதல் நான்காக வகுத்த வியாச முனிவர் கூற ஐங்கரக்கடவுள் தமது செங்கரமொன்றில் ஒற்றைவெண்மருப்பை எழுத்தாணியாகக்கொண்டு மாமேருவெற்பாகிய ஏட்டகத்துப் பொறித்தமையானும், இந்நூல் ஐந்தாம்வேதமென விதந்து கூறப்படும். இம்மகாபாரதம் இதிகாசங்களுள் ஒன்றாகும். (இதிகாசம்: நாற்பொருள் பயக்கும் புராதனகதையைக் கூறு நூல்). வடமொழியில் வியாசர் செய்த பாரதத்தைச் சங்கப்புலவர்களு ளொருவராகிய பெருந்தேவனார் தமிழில் வெண்பாவாலியற்றினர். அது பெருந்தேவனார்பாரதம் எனப்படும். அப்புலவரும் பாரதம் பாடிய பெருந்தேவனாரெனப்படுவர். அதற்குப்பின் நமது கவிசிரேட்டராகிய வில்லிபுத்தூராழ்வார் விருத்தப்பாவா லியற்றுவாராயினர். இதனை வில்லிபாரதம் என்பர். இது சங்கிரகமாயிருத்தலைக் கண்டு தொண்டைநாட்டு மாதலம்பேட்டையில் இற்றைக்கு முன்பின் நூறு வருடங்கட்குமுன் வசித்த அருங்கவிப்புலவரும் சைவசமயத்தினருமாகிய நல்லாப்பிள்ளையென்பவர் வில்லிபாரதத்துள்ள ௪௦ பருவங்களுட் சுருங்கச்சொல்லியிருப்பவற்றை முதனூலிலுள்ளவாறே விரித்து, வில்லிபுத்தூரர் பாடிய அவ்வவ்வினப் பாக்களாலே பாடி அவற்றினிடையே பெய்தும், ஈற்றில் நின்ற எட்டுப் பருவங்களைத் தாமே பாடியுஞ் சேர்த்தனர். அந்நூல் நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கும். அது ௧௰௫௦௦ கவிகள் வரையிற் கொண்டது. அதனை ஆதாரமாகக் கொண்டே, நமது நாட்டிற் சாமானிய சனங்களாற் படிக்கப்படும் பாரதக்கதை (வசனம்) எழுதப்பெற்றுள்ளது. நல்லாப்பிள்ளை பாரதஞ் சொன்னயம் பொருணயத்திற் குறைந்ததன்று. அவர் கவியருமை யறியுமாற்றலிலார் சிலர் வெற்றெனத் தொடுத்தலென்னுங் குற்றமுடைத்தென வெளிற்றுரை பிதற்றுவர். இனி, வில்லிபுத்தூரர் வரலாறு வருமாறு:—

நூலாசிரியர் குமாரர் வரந்தருவார் கூறிய சிறப்புப்பாயிரத்தையும் கர்ணபரம்பரையையும் ஆதாரமாகக்கொண்டே இவர் வரலாறு ஈண்டு வரைதற்பாலதாம். இவர் பெண்ணை நதி பாயும் நடு நாடென்னும் திருமுனைப்பாடி நாட்டிலேசனியூரிலே பிராமணவருணத்திலே வீரராகவாச்சாரியரென்பவரது புதல்வராகப் பிறந்து, தக்க பருவத்தில் ஆரியமும் திராவிடமும் பயின்று, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நால்வகைக் கவியும் பாடுவதில் வல்லுநராய்த் தமிழ்நாட்டு மூவேந்தராலுஞ் சன்மானிக்கப்பெற்றவராய், தாம் வழிபடு கடவுளாகிய திருமால்மீது திவ்விய பிரபந்தங்களைப் பாடிவருவாராயினர். அக்காலத்தில் திருமுனைப்பாடிநாட்டில் வக்கபாகை என்னும் நகரத்திலே கொங்கர் குலபதியாக அரசுசெய்து, கல்வி செல்வம் கொடை என்னு மிவற்றிற் சிறந்து, புலவர் குழாத்தைச் சேர்த்து, முச்சங்கத் தமிழ்நூல்களையும் அபிவிருத்திசெய்து, கண்டனென்னுஞ் சோழனுக்கு முடிசூட்டி, நாற்றிசையினுஞ் சென்று அவன் பகைவரைச் செயித்து, அவன் புலிக்கொடியை யெங்கும் நிலைநாட்டி, பலவளங்களையும் மேலோங்கச்செய்து



வாழ்ந்த வரபதியாட்கொண்டானென்றும் கொங்கராயனென்றுங் கூறப்படும் பெயர்களையுடைய பெருந்தகையாளன் இவரது கல்வித்திறமையைச் செவியுற்று, இவரைத் தன்னிடமழைத்துப் பெரிதுஞ் சன்மானித்து, தமிழ்மக்கட்குபகாரமாக மகாபாரதக்கதையைச் சங்கிரகமாகப் பாடும்படி வேண்ட, இவர் பாடினர் என்பர்.

இஃதன்றி, இந்நூலாசிரியர் சகோதாருக்கும் இவருக்குமிடையே தாயபாக சம்பந்தமாக வெழுந்த வியாச்சியத்தைத் தீர்த்தற்பொருட்டு அக்கொங்கராயனிடந் தெரிவிக்க, அவன் பாரதத்தைப் பாடிக்கொண்டுவந்தபின் விவாதந் தீர்த்துவிடுவதாகக் கூற, இவர் பாடிக்கொண்டு சென்றாரென்றும், பின்னர்த் துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கு மிடையே தாயபாகங் காரணமாக எழுந்த யுத்தத்தையும் பயனையுஞ் சிந்தித்து, இவர் தம் பாகத்தைச் சகோதாருக்குத் தாமே கொடுத்தனரென்றுஞ் சிலர் கூறுவர்.

வில்லிபுத்தூரர் விஷ்ணுபத்தி பெரிதும் உடையவரென்றும், சிவதூஷணஞ்செய்யு மியல்பினரென்றும், சந்தக்கவி பாடுவதில் நிகரற்றவராய் ஏனைய புலவர்களுடன் வாதஞ்செய்து, தோல்வியுற்றவர்களின் காதினை, ஆட்கொண்டான் கொடுத்த ஆயுதத்தால் அரிவது வழக்கமென்றும், இங்ஙனமொரு சமையத்தில் அநந்தனென்னும் பாவலரொருவர் அபஜெயமுற, இவர் அவரது காதை அரியச் செல்ல, அப்புலவர் விநோதமாக, "என் பெயரையுடைய சேஷனுக்குங் காதில்லை, எனக்கும் இல்லாதுபோதல் நன்று" என்று கூற, இவர் அப்புலவரது சமயோசித வார்த்தையில் மகிழ்ந்து, கர்ணபங்கஞ் செய்யாது சென்றாரென்றும், பின்னர் இவர் திருவண்ணாமலைக்குச் செல்ல அங்குள்ள கவிவாணர்கள் இவரது வருகையை யறிந்தஞ்சி அறுமுகக்கடவுளது திருவருட்செல்வராகிய அருணகிரிநாதரிடம் அடைக்கலம் புகுந்தனரென்றும், அவர் அப்புலவர்களை அஞ்சவேண்டாவெனப் புகன்று, தம்முடன் வாதம்புரிய வந்த வில்லிபுத்தூரரை நோக்கி "நீர் ஒரு அந்தாதி பாடுதிர்; யான் அதற்கு உடனே பொருள் கூறுகின்றேன்; பின் யான் பாடும் அந்தாதிக்கு நீர் அர்த்தஞ் சொல்லுதிர்" என, அதற்கியைந்து வில்லிபுத்தூரார் திருமான்மீது ஓர் அந்தாதி பாட, உடனே அருணகிரிநாதர் அர்த்தங்கூறி முடித்துப் பின்னர் கந்தரந்தாதி பாட "திதத்தத்தத்" என்றற் றொடக்கத்துக் கவிக்குப் பொருள்சொல்ல வியலாது மயங்கி, வில்லிபுத்தூரார் தாம் வைத்திருந்த கர்ணசேதனஞ் செய்யுங் கருவியை அவரிடங் கொடுக்க, அவர் அதனைப் பெற்று "இனியாயினும் புலவர்களை மானபங்கஞ் செய்யாதீர்" எனப் புத்தி கூறி விடுத்தனரென்றும், வில்லிபுத்தூரார் வரும் மார்க்கத்தில் ஒரு சிவாலயம் எதிர்ப்பட, அவர் அவ்வாலயம் தமக்குப் புலப்படாவண்ணம் ஆலயத்திற்கும் தமக்குமிடையே எழினியிடுவித்து, அப்பாற் சென்றபோது கண்ணொளி மழுங்கி யுளம் வருந்தி அயலே நின்ற பரிசனர் மூலமாக அருணகிரிநாதர்க்கு அச்செய்தியைத் தெரிவிக்க, அவர் சிவாபராதத்தால் அது நிகழ்ந்ததென வுணர்ந்து மனநொந்து, "புரத்தை நரசிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை, எரித்தவர்க்குத் தாச னெதிரே—நிரைத்தபுகழ்த், தேன்காட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்றாமல், என்கெட்டுப் போனா னிவன்." என்னும் வெண்பாவைப் பாடியருளிக் கண்ணொளி பெறச்செய்து, மீட்டும் அவரைத் தன்னிட மழைத்துச் சிவநிந்தை செய்யவொண்ணாதென நன்மதி புகட்டி, அவர் பாடிய பாரதத்திலுள்ள சிவநிந்தைகளை நீக்கும்படி பணிக்க,

வில்லிபுத்தூரார் சிவபரத்துவத்தின் உண்மையை உணர்ந்து, சிவலிங்கத்தைக் களைந்து, சிவபரத்துவத்தை விளக்கிப் பாடினரென்றுஞ் சொல்வர். இவ்வாசிரியர் தம்முடன் வாதஞ்செய்து தோல்வியெய்திய புலவர்கட்குக் கர்ணசேதனஞ் செய்தன ரென்பதற்கு "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னிங்கில்லைக் குறும்பி யளவாக் காதைக் குடைந்து தோண்டி, யெட்டியமட் டறுப்பதற்கோ வில்லியில்லை" என்னுந் தனிக்கவி ஆதாரமாகக் கொள்ளக் கிடக்கின்றது. இவர் சிவபத்தி சிவபரத்துவசம்மதமுடைய ரென்பது இந் நூலிலுள்ள தற்சிறப்புப்பாயிரத்தில் "மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு, மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்" என்னுஞ் சிலேடைமொழிப் பிரயோகத்தானும், அருச்சுனன் றவநிலைச் சருக்கத்தில் 'ஆசறு கடவுளோர்க்கு மருமறை தனக்கு மெட்டாத் தேசவன்' எனவும், "கற்றவர் வளைத்துத் திரிபுர மெரித்தோன் கற்றவர் கருத்தினுற் காண் போன்" எனவும், "தத்துவ மறைக்கு மெட்டுதற்கரிய தன்வடிவில்' எனவும், 'ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவன்" எனவும், "வள்ளலெனை யாளுடைய மாதவனு மாதவனு மல்லமர் தொடங்கி யுறவே" எனவுஞ் சிவபிரானைக் குறித்துக் கூறியமையானும், அச்சருக்கத் திலே எம்பெருமான் திருமேனியில் விசயன் வில்லடி பட்டமையைக் கூறும் "விண்ணிலுறை வானவரில்" என்றற் றொடக்கத்து வரு மிரு செய்யுளானும், பதின்மூன்றாம்போர்ச் சருக்கத்துள்ள தோத்திரப் பாக்களானும், பிறவாற்றானும் இனிது புலப்படும் என்க. அவர்காலத்தில் வடமொழிப் பதங்கள் விரவிய சந்தப் பாக்கள் பெரிதும் பாடப்பெற்றன வென்பது இந் நூலானும் இந்நூலாசிரியர் காலத்தவரான அருணகிரிநாத ரியற்றிய நூல்களானும் அறியத்தகும். வில்லிபுத்தூரார்காலம் இவ்வளவினதென வரையறுத்துக் கூறியதற்குத் தக்கவாதாரங் கண்டிலேம். அருணகிரிநாதர், இரட்டைப் புலவர், இந்நூலாசிரியர் மூவரும் ஒரேகாலத்தின ரென்பதற்கு மாத்திரஞ் சில ஆதாரங்களுள. சற்றேறத்தாழ ௫௦௦ வருடங்கட்கு முன் வாழ்ந்தன ரென்று கூறுவர்.

"பெருங்காப்பியநிலை பேசுங்காலை" என்னுஞ் சூத்திரத்திற் கண்டபடி இந்நூல் காப்பியநடையிலே சொல்லணி பொருளணிகளும் பலவகைச் சந்தங்களும் பொருந்தியுள்ளது. திருவள்ளுவர் முதலிய முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் ஆங்காங்குப் பெய்யப்பெற்றுள்ளது. யுத்தம் பாடுதலில் தமிழாசிரியர்களுள் இவரே நிகரற்றவரெனலாம். வியாச பாரதத்தையே பெரிதும் அநுசரித்தனரென வடமொழிவல்லார் கூறுகின்றனர். சிறப்புப்பாயிரத்தை நோக்கும்போது இந்நூன் முழுவதும் பாடின ரென்றே புலப்படுகின்றது. முதற் பத்துப் பருவங்களொழிந்த வேனைய பருவங்களின் கதி யெவ்வாறாயிற்றோ வறிகிலேம். கம்பராமாயணத்திற் போல இந்நூலகத்தும் இடையிடையே ஆக்குவித்தோனைச் சிறப்பித்திருக்கின்றனர். அதனைக் காண்டவதகனச் சருக்கம், நிரைமீட்சிச் சருக்கம், பதினாறாம்போர்ச் சருக்கம், பதினேழாம்போர்ச் சருக்கம் என்னுமிவற்றிலுள்ள ௫௦ம், ௧௦௪-ம், ௬௦-ம், ௬௨-ம் கவிகளான் முறையே நோக்குக. இந்நூலின் மாண்பையும் இந்நூலாசிரியரின் மாண்பையுங் குறித்து எமது சிற்றறிவிற் கெட்டியவளவிற் கூறப்புகினும் விரியுமாகலின் அஃதஞ்சி விடுத்தாம்.

---

# மகாபாரதம்.

## ஆரணியபருவம்

ஆரணியசம்பந்தமானது ஆரணியம். அஃதாவது பாண்டவர் வனவாசஞ் செய்தகாலத்து நிகழ்ந்த செய்தி. பருவம்=மூங்கில் முதலியவற்றின் கணு; அஃது உவமையாகுபெயராய்க் கணுப் போன்ற நூலின் பெரும்பிரிவிற்குப் பெயராயிற்று. ஆகவே ஆரணிய பருவமென்பது அரணியத்தில் நிகழ்ந்த செய்தியைக் கூறும் பருவம் என இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன்றொக்க தொகைப்பெயராக விரியும்.

### அருச்சுனன் றவநிலைச் சருக்கம்.

இஃது அருச்சுனனுடைய தவத்தினது நிலைமையைக் கூறுஞ் சருக்கம் என விரியும் [நிலை-நிலைமை, தன்மை] சருக்கம் ஈண்டுச் சிற்றுறுப்பிற்குப் பெயராய் நின்றது. ஆறனுருபிரண்டும் பண்புத் தற்கிழமைப் பொருளில் வந்தன.

பெருமித வலியும் பாரும் பேணலார் கவர வின்சொற்
றருமனுந் தம்பி மாருந் தழலெழு தையலாளும்
அருமக முனிவர் மூந்நான் காயிரர் சூழ்ந்து போதக்
கருமுகில் படியுஞ் சாரற் காமிய வனம் புக்காரே.

இதன் பொருள்: பெருமித வலியும் பாரும் - மேம்பாட்டினையுடைய வலிமைக்குக் காரணமான படை பொருள் முதலாயினவற்றையும் இராச்சியத்தையும், பேணலார் கவர-(துரியோதனன் முதலாகிய) பகைவர் (சூதில்) அபகரித்துக்கொண்டமையால், இன்சொல் தருமனும் - இனிய சொல்லைக் கூறுந் தருமபுத்திரனும், தம்பிமாரும் - (வீமன் முதலியநான்கு) தம்பியரும், தழல்எழு தையலாளும் - யாகாக்கினியிற்பிறந்த பெண்ணாகிய திரௌபதியும், அரு மக முனிவர் மூந்நான்கு ஆயிரர் - அரிய யாகங்களைச் செய்யும் பன்னீராயிர முனிவர்கள், சூழ்ந்து போத-(தம்மைச்) சூழ்ந்துவர, கருமுகில் படியும் சாரல் - கரிய மேகங்கள் வந்து படிகின்ற மலைப் பக்கத்தினையுடைய, காமியவனம் புக்கார் - காமியம் எனப்படுங் காட்டைச் சென்றடைந்தனர். என்றவாறு. ஏ - அசை.

"படை குடி கூழமைச்சு நட்பரணாறு-முடையா னரசரு ளேறு" என்ற வண்ணம் படை முதலிய அங்கங்களே அரசர்க்கு வலிமையைப் பெருக்குவனவாதலின், வலிக்குக் காரணமான அவற்றை வலி எனஉபசரித்துக் கூறி

ஞர். பேணலார் - விரும்புதலில்லாதவர், நேசியாதவர் எனக் காரணப் பெயர். தன்மாட்டுப் பிறர் வெகுண்டாலும் பொறுமையினையே பூஷணமாகக் கொண்டொழுகலின், இன்சொற்றரும னென்ருர். போத - புகுத என்பதன் மரூஉவாதலின் வர என்னும் பொருடரும்; காமியம் - விரும்பத் தக்கது. காமியவனம் சரசுவதிநதிதீரத்திலுள்ளதென்பர். இது முதல்மூன்று செய்யுள் அறுசீரடியாசிரிய விருத்தம். (௧)

ஆரமு மகிலு நாறு மருவியுஞ் சுனையு மத்த
வாரணம் பிடிக ளோடு வாரிதோய் கானி யாறும்
ஈரமு நிழலுங் காயுங் கனிகளும் யாவு மீண்டிக்
காரினம் பொழியு மந்தக் கானகத் தழகு கண்டார்.

இ - ள்: ஆரமும் அகிலும் நாறும் - சந்தனமணமும் அகில்மணமும் வீசுகின்ற, அருவியும் சுனையும் - அருவிகளும் சுனைகளும், மத்த வாரணம் பிடிகளோடு வாரிதோய் கானியாறும் - மதங்கொண்ட ஆண்யானைகள் பெண்யானைகளோடு நீரில் முழுகுகின்ற கான்யாறுகளும், ஈரமும் நிழலும் - குளிர்ச்சியும் மரநிழல்களும், காயும் கனிகளும் - காய்களும் கனிகளுமாகிய, யாவும் ஈண்டி - எல்லாம் நெருங்கப்பெற்று, கார் இனம்பொழியும் - முகிற் கூட்டம் (மழையைப்) பொழியப்பெறும், அந்தக் கானகத்து அழகு கண்டார் - அந்தக் காமியவனத்தினது அழகைப் பார்த்தனர். எ - று.

அருவிகளிலும் சுனைகளிலும் அகிலும் சந்தனமரமும் தாழ்ந்து படிதலால், அவை நறுமணங்கமழ்வனவாயின. ஈண்டி, பொழியும் - செயப்பாட்டுவினைப்பொருளன. ஈண்டப்பெற்றுப் பொழியப்பெறுங் கானகம் என வினைமுடிவுசெய்க; இஃதன்றி, ஈண்ட என்பதன் றிரிபாகக்கொண்டு, ஈண்டப் பொழியும் எனக் காரியகாரணப் பொருட்டாகக் கொள்ளினுமாம். ஈரம் - நீர்க்கசிவுமாம் (நீர்வளம்). மத்த என்னும் அடைமொழியாற்றலால் வாரணமென்பது பெண்ணொழித்துக் களிற்றைக் குறிப்பாலுணர்த்திற்று. (௨)

அங்கிவர் புகுந்த பின்ன ரங்கியின் புகையு மாறிப்
பொங்கிய வோமத் தீயின் புகையினான் முகிலுண் டாகச்
சிங்கமுந் துதிக்கை மாவுஞ் சேர்ந்துடன் றிரியச் சூழல்
எங்கணு மழகு பெற்ற திமகிரிச் சாரல் போன்றே.

இ - ள்: அங்கு இவர் புகுந்த பின்னர் - அக் காமிய வனத்தின் கண்ணே (தருமபுத்திரன் முதலாகிய) இவர்கள் அடைந்தபின், பொங்கிய ஓமத் தீயின் புகையினான் முகில் உண்டாக - சுவாலித்தெரிகின்ற யாகாக்கினியின் புகையினாலே மேகங்கள் உண்டாதலினால், அங்கியின் புகையும் மாறி - காட்டுத் தீயின் புகையுங் காணப்படுதலின்றி, சிங்கமும் துதிக்கை மாவும் - சிங்கங்களும் துதிக்கையினையுடைய யானைகளும், சேர்ந்து உடன் திரிய - நட்புற்று ஒருங்கே சஞ்சரித்தலால், சூழல் எங்கணும் - (காமியவனத்தின்) இடமெங்கும், இமகிரிச் சாரல் போன்று - இமயமலைச் சாரலையொத்து, அழகு பெற்றது - அழகினை யுடையதாயிற்று. எ - று.

மழைதவறாமற் பெய்தலின் காட்டுத்தீயும் அதன்புகையு மில்லையாயின. புகையும் என்னுமும்மை காட்டுத்தீயேயன்றிப் புகையும் என எச்சத்தோ



டிழிவுசிறப்பும்மை. தருமசீலர்களாகிய பாண்டவரும் முனிவர்களும் வாழ்தலின், துட்டமிருகங்களுந் தம்மியல்பான பகைமைநீங்கி நட்புற்று வாழ்தலும், அவர்கள் வளர்க்கும் ஓமாக்கினியால் காலந்தப்பாது மழை பொழிதலும், அதனாற் காட்டுத்தீபற்றி யெரிதல் குறைதலுமுளவாய் இமயமலைச் சாரலைப்போன்று வளம் மிகுவதாயிற்று அவ்வனம் என்பதாம். (௩)

வேறு.

துருப னுந்திட்டத் துய்மனுஞ் சோமக
நிருப ரானவர் யாவரு நேர்ந்துடன்
விரவு தானை விராடனுஞ் சுற்றமும்
மருவி னரவ் வனத்திருந் தோரையே.

இ - ள்: துருபனும் - பாஞ்சாலதேசத்தரசனாகிய துருபதனும், திட்டத்துய்மனும் - அவனது மகனாகிய திட்டத்துய்மனும், சோமகநிருபரானவர் யாவரும் - பாஞ்சாலவரசனைச் சேர்ந்த அரசர் எல்லாரும், நேர்ந்து உடன் விரவுதானை விராடனும் - அணிபொருந்தி உடன் வருகின்ற சேனையையுடைய விராடராசனும், சுற்றமும் - அவனது சுற்றத்தவரும், அவ்வனத்து இருந்தோரை - அக்காமியவனத்தின்கண் இருந்த பாண்டவரை, மருவினர் - அடைந்தனர். எ - று.

நேர்ந்து - ஒழுங்குபொருந்தி, அணிவகுக்கப்பட்டு. விராடன் - மச்சநாட்டரசன். துருபன் - துருபதனென்பதன் சிதைவு. இதுமுதல் ௧௨ செய்யுள் கலிவிருத்தம். (௪)

மற்று மற்று மகீபரி லன்பினல்
உற்ற வுற்ற வுறவுடை யோர்களுங்
கற்ற கற்ற கலைவித மாக்களுஞ்
சுற்று மொய்த்தனர் தோமறு கேண்மையார்.

இ - ள்: மகீபரில் அன்பினல் உற்ற உற்ற - அரசருள்ளே அன்பினால் மிக நெருங்கிய, மற்று மற்று உறவு உடையோர்களும் - மற்ற மற்ற உறவினராகிய சல்லியன் முதலிய அரசர்களும், தோம் அறு கேண்மையார் - குற்றமற்ற நண்பினையுடையவராகிய, கற்ற கற்ற கலைவித மாக்களும் - பலவிதமான சாஸ்திரங்களைக் கற்றறிந்த புலவர்களும், சுற்று மொய்த்தனர் - (அப்பாண்டவரைச்) சூழவந்து நெருங்கினார்கள். எ - று.

அடுக்குகள் மிகுதிப்பொருளில் வந்தன. மகீபர் - பூமியைக்காப்பவர். சுற்று - சூழ்ந்த இடம். (௫)

மாத வத்தின் பயனென மாதவன்
யாத வக்குலத் தேறிமை யோர்பதி
ஆத பத்துக் கருநிழல் போலருள்
வேத வித்தக வீரனு மேவினான்.

இ - ள்: மாதவன் - இலக்குமிதேவிக்கு நாயகனும், யாதவக் குலத்து ஏறு - யாதவகுலத்தரசருள்ளே ஆண்சிங்கம் போன்றவனும், இமையோர்

பதி - தேவர்கட்கெல்லாந் தலைவனும், ஆதபத்துக்கு அரு நிழல்போல் அருள் - (பிறவித்துன்பமாகிய) வெயிலுக்குச் சிறந்த நிழல்போல அருள்செய்யவல்ல, வேதவித்து அக வீரனும் - வேதங்களை யுணர்ந்த ஞானிகளின் இருதயத்தில் வாழும் வீரனுமாகிய கண்ணபிரானும், மாதவத்தின் பயன் என - (பாண்டவர் செய்த) பெரிய தவப்பயன்போல, மேவினன் - வந்தடைந்தனன். எ - று.

வேதவித் - வேதங்களையுணர்ந்த ஞானி; 'பிரமவித்' என்பது போன்ற தகரமெய்யீற்று வடசொல்; அது தமிழில் உகரவீறாக விகாரப்பட்டு வந்தது. அகம் - மனம். இனி, வித்தகன் என்பதை ஒருமொழியாகக்கொண்டு, வேதங்களை அருளிச்செய்த சதுரப்பாடுடையான் எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். வித்தகம் - சதுரப்பாடு, சாமர்த்தியம். இன்னும் சிருட்டிமுதலில் விஷ்ணு அன்னவுருக்கொண்டு பிரமாவுக்கு வேதங்களை உபதேசித்தாராதலின், வேதம் உலகிற் றோன்றுதற்கு வித்தாயுள்ளான் என்றலுமொன்று; வித்து + அகம் = வித்தாகிய இடம். இமையார் - கண் இமையாதவர், எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட விகுதி ஆகாரம் ஓகாரமாகி 'இமையோர்' என நின்றது. [நன்னூல், சூத்திரம்-௫௫௫.] இஃது இமையவர் என்னும் பெயரின் வேறு. இமையவர் - ஒளிருந் தேகமுடையவர்; இமைத்தல் - ஒளிர்தல், பிரகாசித்தல். தேவர் என்னும் வடமொழியும் இப்பொருட்டாதலறிக. இவ்வாறன்றி இமையா நாட்டத்தவரை இமையவர் என்றல் எதிர்மறையிலக்கணை வழக்கென்றும், அதுவே இமையோர் எனத் திரிந்ததென்றும் கொள்வாருமுளர். உம்மை எச்சத்தோடு உயர்வுசிறப்புப்பொருளது. ஆதபத்துக்கு அருநிழல் என்னு நான்கனுருபின்பொருளைப் 'பிணிக்குமருந்து' என்புழிப்போற் கொள்க; ஆதபவருத்தத்தைப்போக்க நிழலுதவுமாறுபோல என்பது கருத்து. யாதவ குலம் என்பது செய்யுளோக்கி விரித்தல் விகாரம் பெற்று நின்றது. (௬)

பாரி ழந்தவிப் பாதகச் சூதுகேட்
டீரு நெஞ்சின ரேமுறு நோக்கினர்
பேர றன்றரு பிள்ளையைப் பார்த்தருள்
கூர வன்பொ டிவையிவை கூறுவார்.

இ - ள்: பார் இழந்த இப்பாதகச் சூது கேட்டு - (அங்கே வந்த அரசர்கள்) இராச்சியத்தை யிழத்தற்கேதுவாகிய இத் தீய சூதின் செய்தியைத் (தருமன் சொல்லக்) கேட்டு, ஈரும் நெஞ்சினர் - பிளக்கப்படும் மனத்தினையுடையராகவும், ஏமுறு நோக்கினர் - துன்புற் றழுங் கண்ணினராகவும், பேர் அறன் தரு பிள்ளையைப் பார்த்து - பெருமைபொருந்திய அறக்கடவுள் பெற்ற பிள்ளையாகிய தருமபுத்திரனைப் பார்த்து, அருள் கூர - கருணைமிகுதலால், வன்பொடு இவை இவை கூறுவார் - வீரத்தோடு இவ்வார்த்தைகளைச் சொல்லலுற்றார்கள். எ - று.

ஏமமுறு என்பது ஏமுறு என விகாரமாயிற்று. ஏமம் - துன்பம், இன்பமிரண்டற்கும் பொதுச்சொல், ஈண்டுத் துன்பத்தின்கண் வந்தது. நெஞ்சினர், நோக்கினர்: குறிப்புமுற்று வினையெச்சப்பொருளில் வந்தன. கூறு



வார் - கூறலுற்றார், கூறுவாராயினர்: இறந்தகாலத்து எதிர்காலம் மயங்கின வழுவமைதி. [நன் - சூ ௫௮௬] மேல்வருவனவும் அன்ன. (௭)

மரபின் வல்லியை மன்னவை யேற்றிய
குருகு லேசனைக் கொற்றவெஞ் சேனையோ
டிரிய வெற்றுது மிப்பொழு தேயென
உரமுஞ் சீற்றமுந் தோற்றவு ரைசெய்வார்.

இ - ள்: மரபின் வல்லியை - உயர்குடிப் பிறந்த பூங்கொடிபோல்வாளாகிய திரௌபதியை, மன் அவை ஏற்றிய குருகுலேசனை - இராசசபையிற் கொணர்ந்து துகிலுரிவித்த குருகுலத்தரசனாகிய துரியோதனனை, கொற்ற வெம் சேனையோடு இரிய - வெற்றிபொருந்திய கொடிய சேனையுடன் கெட்டொழியும்படி, இப்பொழுதே எற்றுதும் என - இப்போதே (சென்று) கொல்வேம் என்று, உரமும் சீற்றமும் தோற்ற - தம் வலிமையும் கோபமும் வெளிப்பட, உரை செய்வார் - சொல்வார் (சிலர்) எ - று.

குருகுல + ஈசன் = குருகுலேசன்; குணசந்தி. (௮)

தம்பி மாரைத் தனித்தனி யேயுயிர்
வெம்பி வீழ விரைந்துவில் வாங்கியின்
றும்பர் காண வுயிரழிப் போமெனத்
தும்பை சூடக் கருதினர் சொல்லுவார்.

இ - ள்: தம்பிமாரை - துச்சாதனன் முதலிய தம்பியரை, தனித்தனியே - ஒருவர்பின் ஒருவராக, உயிர் வெம்பி வீழ - பிராணபலம் வாடிச் சோரவும், உயிர் உம்பர் காண - (அதனால்) அவருயிர் வீரசொர்க்கமடையவும், இன்று - இன்றையதினம், விரைந்து வில்வாங்கி - விரைவாக வில்லை வளைத்துப் பொருது, அழிப்போம் என - கொல்லுவோமென்று, தும்பை சூட கருதினர் சொல்லுவார் - (போருக்குத்) தும்பைப்பூமாலை சூடும்படியெண்ணிச் சொல்லுவார் (சிலர்). எ - று.

இனி, உம்பர்காண - தேவர்கள் காணும்படி. எனினுமாம். அதற்கு இயைய, உயிரழித்தல் - உடம்பினின்றும் உயிரை நீக்குதல் எனவுரைக்க. போர்செய்வார் தும்பைப்பூமாலை சூடுதல் அக்கால வழக்கு.

திரௌபதியைச் சபையிலிழுத்துவந்து துகிலுரிந்த துச்சாதனனையும், அதனைப் பார்த்துக் களித்திருந்த ஏனைத் தம்பியரையுங் கொல்லுமாறு கோபித்தனர் சிலர் என்பது கருத்து. (௯)

வஞ்ச கச்சுப லன்றரு மைந்தனை
வெஞ்ச மத்தினில் வீழக் கணத்திடைச்
செஞ்ச ரத்தின் வழியுயிர் செல்லவே
யெஞ்சு விக்க வெழுமென் றியம்புவார்.

இ - ள்: சுபலன் தரும் வஞ்சக மைந்தனை - சுபலன் பெற்ற புதல்வனாகிய வஞ்சகத்தினையுடைய சகுனியை, கணத்திடை. வெம் சமத்தினில் வீழ - க்ஷணப்பொழுதினுள்ளே கொடிய யுத்தத்திலே (வலியழிந்து) விழும்

படியாகவும், செம் சரத்தின் வழி உயிர் செல்ல - நேரிய அம்பு தைத்த துவாரத்தின்வழியே உயிர் போகும்படியாகவும், எஞ்சுவிக்க - கொல்லு தற்கு, எழும் என்று இயம்புவார் - புறப்படுங்களென்று சொல்லுவார் (சிலர்). எ - று.

இத்தீமை யெல்லாவற்றிற்கும் சகுனியின் மாயச்சூதே காரணமாதலின், அவனைக் கொல்ல எழுமென்றார் சிலரென்பதாம். செஞ்சரம் - பகைவிரத்தந்தோய்ந்தமையாற் செந்நிறத்த கணை யெனலும் ஆம். (க0)

சீத வெண்குடை வேந்தர்தந் தேர்விடுஞ்
சூதன் மைந்தன் சுயோதனன் றோழனை
மாதி ரங்களில் வானவர் காணவிப்
போது டற்றுவ மென்னப் புகலுவார்.

இ - ள்: சீத வெண்குடை வேந்தர்தம் தேர் விடும் - குளிர்ச்சியாகிய வெண்கொற்றக்குடையையுடைய அரசரது தேரைச் செலுத்துகின்ற, சூதன் - சாரதிக்கு, மைந்தன் - மகனாயுள்ள, சுயோதனன் தோழனை - துரியோதனனுக்கு நண்பனாகிய கன்னனை, மாதிரங்களில் வானவர் காண - எட்டுத்திக்கிலுமிருந்து உலகினைக்காக்கும் தேவர்கள் காணும்படி, இப்போது உடற்றுவம் - இப்பொழுதே (சென்று) போர்செய்து கொல்லுவாம், என்ன புகலுவார் - என்று சொல்வார் (சிலர்). எ - று.

அரசனுடைய தண்ணளியை அவர்குடைமேலேற்றிச் சீதவெண்குடை என்றார். கன்னன் தானும் அசுராம்சமாய், அவ்வாறான துரியோதனனுக்கும் நண்பனாகி அதர்மசகாயனாயிருத்தலின், அவனைக் கொல்லுதற்கண் இந்திராதி தேவர்கட்கு உவப்பாதலின் 'மாதிரங்களில் வானவர் காண' என்றார். சுயோதனன் - மிகவும் யுத்தப்பிரியன் எனப் பொருள்படும். திருதராட்டிரனுடைய தேர்ச்சாரதியால் வளர்க்கப்பட்டமையிற் கன்னன் 'சூதன்மைந்தன்' எனப்படுவன்.

சபையில் இழுத்துக்கொண்டுவரப்பட்ட திரௌபதி, 'தருமபுத்திரர் தம்மைத் தோற்றபின் என்னைத் தோற்க உரியராகார்; சபையோரே! நீங்கள் நீதியைச் சொல்லுமின்' எனக்கேட்க, விகர்ணன் எழுந்து தன்னைத் தோற்றபின் தருமபுத்திரன் தன்மனைவியைத் தோற்றானாதலின் அது முறையன்றென்ன, அப்போது கன்னன் 'முன்னர்த் தன்பொருளெல்லாந் தோற்றபோதே அப்பொருள்களில் மனைவியும் ஒருபொருளாதலிற் சபைக்குக் கொண்டுவருதல் முறையாம்' என்றானாதலின் அவனைச் சினந்தார் சிலர் என்பதாம். (கக)

உந்த வுந்த வொருவர்க் கொருவர்வாய்
முந்த முந்த முடுகு சினத்தராய்
அந்த வந்த வவனிபர் யாவரும்
இந்த விந்த வுரைக ளியம்பவே.

இ - ள்: வந்த அந்த அவனிபர் யாவரும் - (தருமபுத்திரனைக்காண) வந்த அந்த அரசரெல்லாம், உந்த உந்த - (அவமானம் தம்மை) மேலும்



மேலும் பிடர்பிடித்துத் தள்ளுதலால், முடுகு சினத்தராய் - விரைந்தெழுங் கோபத்தையுடையராய், ஒருவர்க்கு ஒருவர் வாய் முந்த முந்த - ஒருவர் சொல்லின்னொருவர்சொல் மிகவும் முற்படும்படி (விரைந்து), இந்த இந்த உரைகள் இயம்ப - இப்படிப்பட்ட பல வார்த்தைகளைச் சொல்ல. எ - று.

உந்த வுந்த: இடைவிடாமைப்பொருளில்வந்த அடுக்கு. முந்த முந்த: மிகுதிப்பொருட்டு. இந்த விந்த: பன்மைப்பொருட்டு. ஒருவர்க்கொருவர் என்றதில் நான்கனுருபு எல்லைப்பொருளில் வந்த வேற்றுமைமயக்கம். வாய்: கருவியாகுபெயர். அவனிபர் - பூமியைக் காப்பவர் எனக் காரணப்பெயராகிய வடசொல். வாக்கியத்தை முடிக்குஞ் சொல்லாகிய வினையின்மையான் இச்செய்யுள் முடிவுபெறாமல் அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடிதலாற் குளகம். வந்த அரசர் யாவரும் பாண்டவருடைய நன்மைதீமைகளிற் பங்குபெற்றொழுகுஞ் சுற்றமித்திராதலின், மானமுஞ் சினமும் உந்த இவ்வாறு கூறினரென்க. (கஉ)

கேட்டி ருந்தருள் கேசவன் வாசவன்
காட்டி ருந்தன னென்னக் கவின்பெறுந்
தோட்டி ருந்தளி தேனுகர் சோலையின்
மாட்டி ருந்த மகீபர்க் குரைசெய்வான்.

இ - ள்: வாசவன் காட்டு இருந்தனன் என்ன - இந்திரன் கற்பகச் சோலையின்கண்ணே யிருந்தாற் போல, அளி கவின் பெறும் தோட்டு இருந்து தேன் நுகர் சோலையில் - வண்டுகள் அழகுபொருந்திய இதழினையுடைய மலர்களிலிருந்து தேனையுண்கிற (காமியவனச்) சோலையின்கண்ணே, கேட்டு இருந்தருள் கேசவன் - (அரசர் பலருங் கூறிய வார்த்தைகளைக்) கேட்டுக்கொண்டிருந்த கண்ணபிரான், மாட்டு இருந்த மகீபர்க்கு உரைசெய்வான் - பக்கத்திலிருந்த அவ்வரசர்கட்குச் சொல்லுவானாயினன். எ - று.

என்ன இருந்தருள் கேசவன் என இயையும். வாசவனைக் கேசவற்கு ஒப்பாக்கிக் கொண்டுகூட்டி யுரைக்க; இனி, மாட்டிருந்து அம்மகீபர்க்கு எனப்பிரித்து அதற்கியையப் பொருள்கொள்ளினுமாம். (கங)

விடுக விந்த வெகுளியைப் பின்புற
அடுக நுந்திற லாண்மைக டோன்றவே
வடும னங்கொடு வஞ்சகஞ் செய்பவர்
கெடுவ ரென்பது கேட்டறி யீர்கொலோ.

இ - ள்: வடு மனம் கொடு வஞ்சகம் செய்பவர் - குற்றம்பொருந்திய மனத்தையுடையராய் (ப் பிறரை) வஞ்சித்தொழுகுவோர், கெடுவர் என்பது கேட்டு அறியீரோ - (அதனாற்றாமே) அழிவாரென்பதை (ப் பெரியார் வாய்)க் கேட்டு அறிந்திலீரோ, (ஆகையால்); இந்த வெகுளியை விடுக - இப்பொழுது கொண்ட கோபத்தை யொழிக. [பதின்மூன்று வருடங் கழிந்த பின்னர், பாண்டவர் நாட்டிற்கு வருங்கால்], பின்பு உற - பின்னரும் (அத்துரியோதனாதியருடைய தீமைகள்) நிகழ்ந்தால், நும் திறல்

ஆண்மைகள் தோன்ற அடுக - உங்களுடைய வலிமையும் வீரத்தன்மையுந் தோன்றும்படி (அவர்களைக்) கொல்லுக. எ - று.

கொல் - அசைநிலை. உற்றால் என்னும் வினையெச்சம் உற எனத் திரிந்து நின்றது. (கச)

இயைந்து ரைத்த வியைபின் படியினி
வியந்தி ருக்கும் விபினந் தொறுமிருந்
துயர்ந்த பிற்செய் வினையையின் றுன்னுதல்
அயர்ந்து ரைத்த லலாதிலை யாவதே.

இ - ள்: இயைந்து உரைத்த இயைபின்படி - மனமிசைந்து செய்து கொண்ட உடன்பாட்டின்படி, வியந்து இருக்கும் விபினந்தொறும் இருந்து - (முனிவர்கள்) நன்குமதித்து வசித்தற்கிடமான (புண்ணிய) வனங்கடோறும் வாசஞ்செய்து, உயர்ந்தபின் - (தவம் வரம் முதலியவற்றால்) மேம்பட்டபின்பு, செய்வினையை - செய்யவேண்டிய போரை, இன்று உன்னுதல் - இப்பொழுதே நினைத்துப் பேசுதல், அயர்ந்து உரைத்தல் அலாது - அறிவு மயங்கிப் பேசுதலாகுமே யல்லாமல், ஆவது இலை - (அதனால்) வரும் பயனில்லை. எ - று.

அயர்தல் - அறிவு சோர்தல், ஈண்டு ஆலோசனையின்மை யுணர்த்தும்; என்றது தருமபுத்திரர் சொன்ன சொற்றவறார், நீதிதிறம்பாராதலின் உங்கள் சொல்லை அநுசரித்து நடத்தல் இப்போழ்தியலாதென்றவாறு. இனி உயர்ந்தபின் என்பதற்கு, கடவநாள் கழித்து வெளிப்பட்டுயர்வடைந்த பின் (உயர்வு=சுவாதீனம்) என்றும், 'அயர்.........இலையாவது' என்பதற்குத் தருமபுத்திரனுக்குச் சொற்சோர்வுபடுதலாகிய குற்றமாகுமன்றிக் குணமாகுமாறில்லை என்றும் பொருள்கொள்ளலாம். (கரு)

வேறு

கேட்டிநீ முரச கேது கிளைஞர்தம் மிருக்கைதோறும்
ஈட்டிய புதல்வ ருள்ளார் யாரையு மிருத்தல் செய்து
காட்டிடை நீவிர் வைகிக் கடவநாள் கழித்து மீண்டு
நாட்டிடை வந்தாற் காண்டி நலனுளோர் நலன்க ளெல்லாம்.

இ - ள்: முரசகேது கேட்டி - முரசக்கொடியையுடைய தருமபுத்திரனே கேட்பாயாக, நீ ஈட்டிய புதல்வர் உள்ளோர் யாரையும் - நீ பெற்றுள்ள புதல்வரும் மற்றுஞ் சுற்றத்தவருமாகிய எல்லாரையும், கிளைஞர்தம் இருக்கை தோறும் இருத்தல் செய்து - (அவர்களுடைய நெருங்கிய) உறவினரில்லங்கடோறும் வசிக்கச் செய்து, காட்டிடை நீவிர் வைகி - காட்டின்கண்ணே நீங்கள் (பன்னிரண்டு வருடம்) வசித்து, கடவநாள் கழித்து - (அஞ்ஞாதவாசத்துக்கு) உரிய நாள்களையும் [ஒருவருடத்தையும்] கழித்து, மீண்டு நாட்டிடை வந்தால் - திரும்பி நாட்டின் கண்ணே வெளிப்பட்டு வந்தபின், நலன் உளோர் நலன்கள் எல்லாம் காண்டி - (இந்த) நல்லன்புள்ளோரது உதவிகளை யெல்லாங் கண்டுகொள் (அறிந்துகொள்வாயாக). எ - று.



இச்செய்யுள் தருமபுத்திரனை நோக்கிக் கண்ணபிரான் கூறியது. முரசகேது: அன்மொழித்தொகைப்பெயர்; அண்மைவிளி யாதலின் இயல்பாயிற்று அஞ்ஞாதவாசத்துக்குரிய காலம் ஒருவருடமாயினும் வனவாசஞ் செய்தற்குரிய காலத்தை நோக்க அது மிகச் சொற்பம் என்பது தோன்றக் 'கடவநாள்' என நாளென்னும் பெயராற் கூறினர்; மீண்டுவருதல் - வனவாசம் அஞ்ஞாதவாசமென்னு மிவைகளை விதிக்கப்பட்டவாறு முடித்து வருதல். கேட்டி, காண்டி: முன்னிலையேவலொருமை வினைமுற்றுக்கள். இது முதல் உக செய்யுள் அறுசீரடியாசிரிய விருத்தம். (கசு)

அன்னையைச் சுபலன் பாவை யருகுற விருத்தி யுங்கள்
தன்னையர் தம்மை யாக சேனனூர் தன்னில் வைத்துப்
பின்னையும் வேண்டு வோரைப் பிறிவுற நெறியிற் போக்கி
நன்னயத் தொடுநீர் கானம் வைகுத னன்மை யென்றான்.

இ - ள்: அன்னையைச் சுபலன் பாவை அருகு உற இருத்தி - தாயாகிய குந்திதேவியைக் காந்தாரியின் சமீபத்தில் இருக்கச்செய்து, உங்கள் தன்னையர் தம்மை - உங்கள் புத்திரரை, யாகசேனன் ஊர்தன்னில் வைத்து - துருபதராசனது ஊரில் இருத்தி, பின்னையும் - மேலும், வேண்டுவோரை பிறிவு உற நெறியில் போக்கி - வேண்டிய உறவினரை வெவ்வேறாக அவரவர்க் கியைந்த சுற்றத்தார் வழியிலே அனுப்பி, நல் நயத்தொடு நீர் கானம் வைகுதல் நன்மை - நல்லநீதியோடு பொருந்த நீவிர் வனத்தில் வசித்தல் நன்மையாகும், என்றான் - என்று கூறினன் (கேசவன்). எ - று

என்றான் என்னும் வினைமுற்றை கசு - ம் செய்யுளிற் போந்த கேசவன் என்னும் எழுவாயொடு இயைக்க. தனயர் என்பது தன்னையர் என விரித்தல் விகாரம் பெற்றது; அகரம் ஐகார மானமை மொழியிடைப் போலி. பிறிவுற - பிரிவு பிரிவாக, வெவ்வேறாக. நீதியொடு பொருந்த என்றது சபையில் நீ உடன்பட்ட கடப்பாட்டிற்குத் தக என்றவாறு. (கஎ).

அச்சுத னுரைத்த மாற்ற மறன்சுதன் மகிழ்ந்து கேட்டு
மெய்ச்சுதர் முதலா மற்றும் விளம்பிய கிளையை யெல்லாம்
இச்சையின் படியே யாங்காங் கெய்துவித் தீரா றாண்டும்
அச்சுறு கானில் வைகு மார்வமே யார்வ மானான்.

இ - ள்: அச்சுதன் உரைத்த மாற்றம் - கண்ணபிரான் சொல்லிய வார்த்தையை, அறன்சுதன் மகிழ்ந்து கேட்டு - தருமபுத்திரன் விருப்புடன் கேட்டு, மெய்ச்சுதர் முதலா - உண்மைநெறியினை யுடைய மைந்தர் முதலாக, மற்றும் விளம்பிய கிளையை எல்லாம் - (மேலே) கூறிய மற்றுஞ் சுற்றத்தாரை யெல்லாம், இச்சையின்படியே - (கண்ணபிரானது) விருப்பத்தின்வண்ணமே, ஆங்காங்கு எய்துவித்து - அவ்வவ்விடங்கட்குப் போக்கி, ஈராறு ஆண்டும் - பன்னிரண்டு வருடமும், அச்சுறு கானில் வைகும் ஆர்வமே ஆர்வம் ஆனான் - அச்சத்தை விளைவிக்குங் காட்டின் கண்ணே வசிக்கு மெண்ணத்தையே விரும்பி மேற்கொண்டான். எ - று.

எ - தேற்றம். அச்சுதன் - அழிவில்லாதவனென விஷ்ணுவுக்குக் காரணப்பெயர், அவரது அவதாரமாகிய கண்ணபிரானுக்காயது. ஆர்வம் - விருப்பம். முதலாக என்பது முதலா என ஈறு தொக்கது. அச்சம் - அச்சு என நின்றது மது.

(கஅ)

சோனைமா முகிலின் மேனித் தோன்றலுந் துவரை புக்கான்
ஏனையோர் தாமுந் தத்த மெயிலுடை நகரி புக்கார்
ஞானயோ கிகளு மொவ்வா நரேசனுந் தம்பி மாருங்
கானமே தாங்க ளாளுங் காசினி யாகக் கொண்டார்.

இ - ள்: சோனை மாமுகிலின் மேனித் தோன்றலும் - பெருமழையைப் பொழியுங் கரிய மேகம் போலுந் திருமேனியையுடைய கண்ணபிரானும், துவரை புக்கான் - துவாரகாபுரியை யடைந்தனன், ஏனையோர் தாமும் - மற்றையரசர்களும், தத்தம் எயில் உடை நகரி புக்கார் - தங்கள் தங்களுடைய மதில்சூழ்ந்த நகரங்கட்குச் சென்றனர், ஞானயோகிகளும் ஒவ்வா நரேசனும் - ஞானயோகத்தைச் செய்யு முனிவர்களுந் தனக்கொப்பாகாத தருமராசனும், தம்பிமாரும் - (வீமன் முதலாகிய) தம்பியர் நால்வரும், கானமே தாங்கள் ஆளும் காசினியாக கொண்டார் - காட்டையே தாங்களாளுகிற இராச்சியமாகக் கொண்டனர். எ - று.

தோன்றல் - பெருமையிற் சிறந்தோன், பிரசித்திபெற்றவன். நரேசன் - (நர + ஈசன்) மனுஷர்க்குத் தலைவன். இல்லறத்தி லிருந்து கொண்டே காமக் குரோதாதிகளை யொழித்துச் சத்தியம், பொறுமை, தயை முதலிய நியமங்களைக் கைக்கொண்டொழுகலின், அவ்வாழ்க்கையைத் துறந்து இயமநியமாதிகளைப் பூண்ட ஞானயோகிகளும் தருமபுத்திரற்கு ஒப்பாகாரென்பதாம். (கக)

அவ்வனந் தன்னில் வந்த வரசெலா மகன்ற பின்னர்
வெவ்வனம் விடாது மேவித் தவம்புரி வியாத னென்னுஞ்
செவ்வன முனிவன் வந்தே சேயவன் சேய்க ளான
இவ்வன சரிதர் தம்மை யினைவுட னெய்தி னானே.

இ - ள்: அவ்வனந்தன்னில் வந்த அரசு எலாம் அகன்ற பின்னர் - அக்காமிய வனத்தின்கண்ணே (பாண்டவரைக்காண) வந்த அரசரெல்லாரும் (தத்தமூர்க்கு) மீண்டபின்பு, வெவ்வனம் விடாது மேவி தவம்புரி - கொடிய காட்டின் கண்ணே நீங்காதிருந்து தவஞ்செய்யும், வியாதன் என்னும் செவ்வன முனிவ்ன் - வியாச னெனப்படுஞ் செப்பமாகிய குணத்தினையுடைய முனிவன், வந்து - (அக்காமிய வனத்தின்கண்) வந்து, சேயவன் சேய்களான இவ்வனசரிதர் தம்மை - தனது புதல்வனாகிய பாண்டுவின் மக்களாயுள்ள வனவாசஞ்செய்யும் இப்பாண்டவரை, இனைவுடன் எய்தினன் - துன்பத்தோ டடைந்தான். எ - று.

வியாதன் - வேதங்களை நான்காக வகுத்து ஒழுங்குசெய்தவன். செவ்வனம் - செப்பம், செவ்வை. சேயவன் - புதல்வன், என்றது பாண்டுமகாராசனை. வனசரிதர் - வனவொழுக்கமுடையார், வனவாசிகள்; (வடமொழி). இனைவுடன் என்னு மூன்றனுருபு விசேடணப் பொருளில் வந்தது. (உ0)

கண்டெதிர் சென்று போற்றிக் கண்ணினுஞ் சென்னி மீதும்
கொண்டன ரவன்றன் பாதங் குளிர்ந்தன ருயிரு மெய்யும்
புண்டர நுதலி னானைப் பூசனை செய்த பின்னர்
வண்டணி தாரான் செய்த வஞ்சனை யனைத்துஞ் சொன்னார்.



இ - ள்: கண்டு - (பாண்டவர் வியாசமுனிவனைக்) கண்டு, எதிர்சென்று - எதிர்கொண்டழைத்து, போற்றி - துதித்து, அவன்றன் பாதம் கண்ணினும் சென்னிமீதும் கொண்டனர் - அம்முனிவனுடைய பாதங்களைச் சிரத்திலும் கண்களிலும் பொருந்தப் பணிந்து, உயிரும் மெய்யும் குளிர்ந்தனர் - உயிருமுடலுந் தளிர்க்கப்பெற்று, புண்டர நுதலினானைப் பூசனை செய்தபின்னர் - திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிந்த நெற்றியையுடைய அம்முனிவனைப் பூசித்துபசரித்த பின்பு, வண்டு அணி தாரான் செய்த - வண்டுகள்மொய்த்த மாலையைத்தரித்த துரியோதனன் செய்த, வஞ்சனை அனைத்தும் சொன்னார் - வஞ்சகங்களை யெல்லாஞ் சொல்லினார்.

தமக்கு உறுதியாயினகூறி யுற்றுழியுதவும் முனிவனைத் தரிசிக்கப்பெற்றமையால் உயிருமெய்யுங் குளிர்ந்தன ரென்க. கொண்டனர், குளிர்ந்தனர்: வினையெச்சப்பொருளில் வந்த முற்று. கொண்டு குளிர்ந்து செய்த (பின்னர்) என முறையே வினைமுடிவு காண்க. (உக)

செறிந்தவர்க் கூற்றங் கோலாஞ் செய்தவ முனியு முன்னே
குறிந்தன நிகழ்ந்த வெல்லாங் கூறுதல் கொடிது பாவம்
பிறிந்தன தாயந் தன்னிற் பெரும்பகை யினிதென் றன்றோ
அறிந்தவ ருரைத்தா ரைய வவாவினுக் கவதி யுண்டோ

இ - ள் செறிந்தவர்க்கு ஊற்றம் கோலாம் - தன்னை யடைந்தார்க்கு (இடர்வந்துழி) ஊன்றுகோல்போலுதவும், செய்தவ முனியும் - தவத்தைச் செய்யும் வியாதமுனிவனும், முன்னே நிகழ்ந்த எல்லாம் குறிந்தனம் - முன்னர் நிகழ்ந்த காரியங்களையெல்லா மறிந்தேம், கூறுதல் கொடிது - (இங்கே) சொல்லுதல் மிகத்துன்பந்தரும், பாவம் பிறிந்தன தாயந்தன்னில் - மனம் ஒற்றுமையில்லாத தாயத்தாரைப் பார்க்கிலும், பெரும்பகை இனிது என்று அன்றோ - பெரும்பகைவர் நல்லரென்றல்லவா, அறிந்தவர் உரைத்தார் - (நூல்களை) உணர்ந்த பெரியோர் கூறினர், ஐய - அப்பனே அவாவினுக்கு அவதி உண்டோ - ஆசைக்கோ ரெல்லையுண்டோ. எ - று.

ஊற்றங் கோல் - ஊன்று கோல். குறித்தனம் என்பது மெலிந்து நின்றது. பாவம் - அபிப்பிராயம் (வடமொழி). பிறிந்தன பெயரெச்சப் பொருளில் வந்த வினைமுற்று; பிதா முதலிய முன்னோரால் தேடப்பட்ட தாய் புத்திரன் முதலியோர்க்குக் கிடைக்கும் உரிமைப்பொருள் தாயம் எனப்படும்; அதனைப் பெறுதற்குரிய உடன்பிறந்தோரை யுணர்த்தினமையால் தாயம் ஆகுபெயர். தாயத்தாரினும் என்ற எதிர்ப்பொருளுக்கியைய அப் பெரும்பகையினிது என்பதனையும் உயர்திணையாக்கிப் பொருளுரைக்கப்பட்டது; இஃது உயர்திணையை அஃறிணைவாய்ப்பாட்டாற் கூறிய வழுவமைதி. [நன். "உருவகவுவமையில்" என்னுஞ் சூத்திரத்தில் 'பிறவும்' என்ற மிகை இதற்கு விதி] ஓகாரங்கள் எதிர்மறை. அன்றோ - அன்று என்னு மெதிர்மறையை 'ஓ' என்னு மெதிர்மறை மறுத்தமையால் உடன்பாட்டுப் பொருளை வற்புறுத்தி 'இனிதென்றேயுரைத்தார்' என்னும் பொருடரும். ஐய: அண்மைவிளி; பேரனை ஐய என விளித்தது, மகனை 'அப்பனே' என்பது போன்ற மரபுவழுவமைதி. அவாவினுக் கவதியுண்டோ என்றதனால் அத்தினபுரியை யாளுதலோடமையாமல் உங்களது இந்திரப்பிரத்தத்தையும் ஆள அவாவினன் துரியோதனன் எனக் குறிப்பெச்சமாய் எஞ்சிநின்ற பொருளுரையிற் கொள்க. (உஉ)

துன்றின ரின்ன லெய்தத் துன்னல ராகித் தம்மில்
ஒன்றினர் செறினு முள்ள துண்டென வுணரத் தேற்றிக்
கன்றினர் கவலை தீர்த்தான் கண்ணுடைக் கருணை மூர்த்தி
குன்றின துயர்ச்சி யந்தக் குன்றினுக் கறிய வுண்டோ.

இ-ள்: கண்உடை கருணைமூர்த்தி - தத்துவ ஞானத்தையுடைய அருளேயுருவாகவுள்ள வியாசமுனிவன், துன்றினர் - உறவினராகிய துரியோதனுதியர், இன்னல் எய்த - (நீவிர்) துன்பத்தை யடையும்படி, தம்மில் துன்னலர் ஆகி - தம்முள்ளத்தே பகைமையை யுடையராய், ஒன்றினர் செறினும் - (புறத்தே நும்மோடு நட்புடையார் போலச்) சேர்ந்து நும்மை யிவ்வாறு வருத்தினுரெனினும், உள்ளது உண்டுஎன - உங்களிடத்துள்ளதாகிய மகிமை குறையாதுள்ளதேயாகு மென்று, உணரத் தேற்றி - உணரும்படி தேறுதல் வார்த்தைகூறி, கன்றினர் கவலைதீர்த்தான் - வருந்தின பாண்டவரின் கவலையை நீக்கினுன், குன்றினது உயர்ச்சி அந்தக் குன்றினுக்கு அறிய உண்டோ - மலையினதுயர்ச்சியை அம்மலைக்கு அறிதல் கூடுமோ. எ—று.

கவலை முதிர்ந்துழிக் கற்றவும் கைகொடாவாதலின், தம்பெருமை தாமறியாது கலங்கினர் பாண்டவர். இக்கருத்தை யுணர்த்தி நிற்றலின் ஈற்றடி பிறிதுமொழிதல் என்னும் அணி. ஓ: எதிர்மறை. (உ௩)

நீவிரே யல்லிர் முன்னு ணிலமுழு தாண்ட நேமி
நாவிரி கீர்த்தி யாள னளனெனு நாம வேந்தன்
காவிரி யென்னத் தப்பாக் கருணையான் சூதிற் றோற்றுத்
தீவிரி கானஞ் சென்ற காதைநுஞ் செவிப்ப டாதோ.

இ—ள்: நீவிரே அல்லிர் - (அரசருட் சூதினுற் கேடுற்றோர்) நீவிர் மாத்திரமோ வெனின் அல்லீர், முன்நாள் - முற்காலத்தில், காவிரி என்னத் தப்பா கருணையான் - காவிரியாறுபோல ஒருகாலமும் வற்றாத அருளினுல் ஈயும் வள்ளலும், (அதனுல்), நிலம் முழுது ஆண்ட நேமி - பூவுலகமுழுதையு மாசு செய்த ஆஞ்ஞா சக்கரத்தையுடைய, நாவிரி கீர்த்தியாளன் - எல்லாருடைய நாவிலும் பரந்த புகழை ஆள்பவனுமாகிய, நளன் எனும் நாமவேந்தன் - நளனென்னும் பேர்பெற்ற அரசன், சூதில் தோற்று - சூதாட்டத்தினுல் (இராச்சிய முழுதையுந்) தோற்று, தீவிரி கானம் சென்ற காதை - நெருப்புப் பரந்த காட்டிற்குச் சென்ற சரித்திரம், நும் செவிப்படாதோ - உங்கள் காதிற் பட்டதில்லையோ? (கேள்விப்படாததோ என்பதாம்.) எ-று.

நளன் வரைவின்றி யீயும் முதல் வள்ளலாதலின், கோடை நீடினும் நீரைத் தப்பாதுதவுங் காவிரிபோலத் தப்பாதுதவுங் கொடையாளன் என்பார் 'காவிரி.........கருணையான்' என்றார். ஈகையைக் கருணையென்றது காரியகாரணவுபசாரம். "உரைப்பாருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்-றீவார்மே னிற்கும் புகழ்" என்பவாகலிற் காரண காரிய முறைப்படி கொண்டுகூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. நாமம் - பெயர்; இனி பிரசித்தி பெற்ற எனப் பொருள்படும் 'நாம' என்னும் வடமொழி யிடைச்சொல் லெனினுமாம். சூதில்: ஐந்தனுருபு ஏதுப்பொருட்டு, படாததோ என்பது படாதோவென விகாரமாயிற்று. ஏ: பிரிநிலை. ஓ: வினு. முழுதுமென்னு முற்றும்மை தொக்கது. (உ௪)



தோத்திர மான தெய்வச் சுருதிகள் யாவு நான்காக்
கோத்தவன் பின்னுஞ் சொல்வான் குன்றவில் லவன்பா லின்று
பார்த்தனே சென்று பாசு பதக்கணை வாங்கி னல்லால்
ஆர்த்தபைங் கழலா யெய்தா தரும்பகை முடித்தலென்றான்.

இ—ள்: தோத்திரம் ஆன தெய்வச் சுருதிகள் யாவும் - மந்திர ரூபமாகிய தெய்வத்தன்மை வாய்ந்த வேதங்களையெல்லாம், நான்கா கோத்தவன் - (இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என) நான்காக வகுத்த வியாசமுனிவன், பின்னும் சொல்வான் - மேலும் கூறுவான், ஆர்த்த பைங் கழலாய் - (காலிற்) கட்டப்பட்ட பசும் பொன்னுலாகிய வீரக்கழலையுடைய தருமபுத்திரனே. இன்று - இந்நாள், பார்த்தனே சென்று - அருச்சுனனே போய், குன்ற வில்லவன்பால் - மேருமலையை வில்லாகவுடைய பரமசிவனிடம், பாசுபதக்கணை வாங்கின் அல்லால் - பாசுபதாஸ்திரம் பெற்றாலல்லாமல், அரும்பகை முடித்தல் எய்தாது - வெல்லுதற்கரிய பகைவரையழித்தல் உங்கட்கு முடியாது, என்றான் - என்று கூறினுன். எ—று.

ஏ: பிரிநிலை. சுருதி - எழுதாமறையாய் உதாத்த முதலிய வோசை பிழையாவண்ணம் உபதேச பரம்பரையாற் கேட்டே யோதப்படுவதெனக் காரணப் பெயராகும். வேதத்திற்குத் தெய்வத்தன்மையாவது இம்மை மறுமைப் பயன்களை விரும்பி யாகாதி கிருத்தியங்களை அவ்வேத விதிப்படி செய்யின், விரும்பிய வண்ணமே அப்பயன்களைத் தவறாது பயக்கவல்ல விசேஷசக்தி. பாசுபதம் - பசுபதியினுடையதெனத் தத்திதாந்தப் பெயர். பசுபதி - ஆன்மாக்களுக் கெல்லாந் தலைவன், சிவன்; பாசுபதக்கணை - பாசுபதமாகிய கணை என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கணை-அம்பு. ()

பரிவுடன் முனிவன் மாற்றம் பணிந்துதன் றலைமேற்கொண்டு
வரிசிலைக் குலக மெண்ணு மகபதி மகனை நோக்கிக்
கிரிசனை யுன்னி வெள்ளிக் கிரிப்புற மெய்தி யார்க்கும்
அரியநற் றவஞ்செய் தேனு மவனருள் பெறுதியையா.

இ—ள்: முனிவன் மாற்றம் - வியாசமுனிவனது சொல்லை, பரிவுடன் பணிந்து தன் தலைமேற்கொண்டு - (தருமபுத்திரன்) அன்போடு வணங்கித் தன் சிரமேற் கொண்டு, வரிசிலைக்கு உலகம் எண்ணும் - நீண்ட வில்லின் வன்மைக்குச் சிறந்தவனுக உலகினர் மதித்துக் கூறுகின்ற, மகபதி மகனை நோக்கி - இந்திர குமாரனுகிய அருச்சுனனைப் பார்த்து, ஐயா - அப்பனே, வெள்ளிக் கிரிப்புறம் எய்தி - கைலாயமலைப் பக்கத்தே சென்று, கிரிசனை உன்னி - பரமசிவனைக் குறித்து, யார்க்கும் அரிய நல்தவம் செய்தேனும் - பிறரெவர்க்குஞ் செய்தற்கரிய சிறந்த தவத்தைச் செய்தாயினும், அவன் அருள் பெறுதி - அப்பெருமானுடைய திருவருட் படையைப் பெறக் கடவை. எ—று.

'வில்லுக்கு விஜயன், சொல்லுக் கரிச்சந்திரன்' என்பது உலகமொழியாதலின், வரிசிலைக் குலகமெண்ணு மகபதி மைந்தனென்றார். கிரிசன் - (கைலை) மலையை வாசஸ்தானமாக வுடையவன். ஐயா: அன்புபற்றி வந்த மாபுவழுவமைதி. முனிவன்-மோன நிலையை யடைந்தவன்எனப் பொருள்படும்; முனி என்னும் வடசொல்லின் திரிவு; இனி இதனைத் தமிழ்ச்சொல்

லாகக் கொண்டு இருவகைப் பற்றையும் முனிந்தவன் என்றுரைப்பாருமுளர்.
மகபதி - யாகத்துக்குத் தலைவன். (உசு)

எனவிடை கொடுப்ப மண்ணி லிணையிலா வியாதன் பாதம்
மனனுற விறைஞ்சி யாங்கோர் மந்திர முறையிற் பெற்று
நனிமிகு திதியு நாளு நல்லதோர் முகூர்த்தந் தன்னிற்
றனிவழி யியக்கர் காட்டத் தனஞ்சயன் சேற லுற்றான்.

இ—ள்: என விடை கொடுப்ப - என்று (தருமபுத்திரன்) கட்டளை செய்ய, மண்ணில் இணையிலா வியாதன் பாதம் - பூவுலகிற் றனக்கு நிகராவாரில்லாத வியாச முனிவனுடைய பாதங்களை, மனன்உற இறைஞ்சி - விருப்புடன் நமஸ்கரித்து, ஆங்கு ஓர் மந்திரம் முறையில் பெற்று - அம் முனிவனிடத்தே ஒப்பற்ற மந்திரத்தை உபதேச முறைப்படி பெற்று, திதியும் நாளும் நனி மிகு - திதியும் நக்ஷத்திரமும் மிக உத்தமமாயுள்ள, நல்லது ஓர் முகூர்த்தம் தன்னில் - ஒரு சுபமுகூர்த்தத்திலே, தனிவழி - மனுஷசஞ்சாரமதிகமில்லாதிருக்குங் காட்டுவழியை, இயக்கர் காட்ட - யக்ஷர்கள்காட்ட, தனஞ்சயன் சேறலுற்றான் - அருச்சுனன் செல்வானாயினன் எ—று.

மண்ணில் இறைஞ்சியென இயைத்து நிலத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து என்றுரைப்பினுமாம். முகூர்த்தம் - சுபவேளை. இயக்கர் - குபேரனது நகரவாசிகளாகிய தேவசாதியார். தனஞ்சயன் - தனத்தைச் சயித்தவன், பகைவரை வென்று திறைப்பொருள் பெற்றவனென்பதாம். (உஎ)

வெஞ்சல மனத்த ரானோர் விரகினாற் கூட்டங் கூட்டி
நஞ்சல துவமை யில்லா நவைபுரிந் தனர்க ளேனுஞ்
சஞ்சல மும்மைப் போலுந் தரணிப ருறுதல் செய்யார்
அஞ்சலி ரென்று மீள வாரண முனியும் போனான்.

இ—ள்: ஆரண முனியும் - வேதங்களை வகுத்த வியாச முனிவனும், மீள - மீட்டும். வெம் சல மனத்தர் ஆனோர் - கொடிய கோபம் பொருந்திய மனத்தையுடைய பகைவர், விரகினால் கூட்டம் கூட்டி - உபாயத்தினால் தமது சபையில் வருவித்து, நஞ்சு அலது உவமைஇல்லா - நஞ்சேயல்லாமல் வேறொப்பில்லாத, நவை புரிந்தனர்களேனும் - தீங்கைச் செய்தாராயினும், உம்மைப்போலும் தரணிபர் - உங்களைப்போன்ற (தீரர்களான) அரசர்கள், சஞ்சலம் உறுதல் செய்யார் - மனக்கலக்கத்தை யடையமாட்டார்கள், அஞ்சலிர்என்று-ஆகையினால் நீவிரும்அஞ்சாதொழிவீரென்றுசொல்லி, போனான்-(தன்னிடஞ்) சென்றனன் எ—று.

தரணிபர்-பூமியைக் காப்பவர். முனியுமென்னு மும்மை எச்சவும்மை. மீள என்று என இயைக்க. (உஅ)

மரவுரி யுடையன் சென்னி வகுத்தசெஞ் சடையன் றூணிச்
சாமுட னங்கி யீந்த தனுவினன் றவத்தின் மேலே
புரிதரு மனத்த னெல்லாப் புண்ணியங் களுக்குந் தானே
உரைபெறு தசர தன்றன் மகனலா துவமையில்லான்.

இ—ள்: மரவுரி உடையன் - (அருச்சுனன்) மரவுரியை உடையாக அணிந்தவனும், சென்னி வகுத்த செம்சடையன் - சிரத்தின்மேலே கூட்டி



முடித்த அழகிய சடாமுடியை யுடையவனும், அங்கி தூணிச் சாமுடன் ஈந்த தனுவினன் - அக்கினிதேவன் அம்பறாத் தூணியுடன் கொடுத்த வில்லையேந்தியவனும், தவத்தின் மேலே புரிதரு மனத்தன் - தவத்தின் கண்ணே விரும்பி யெழுகின்ற மனத்தையுடையவனும், (இவ்வாற்றால்); எல்லாப் புண்ணியங்களுக்கும் - (உருவுந் திருவும் முதலான) எல்லாத் தரும சீலங்கட்கும், தானே உரைபெறு தசரதன்றன் மகன்அலாது - இணையின்றித் தானொருவனேயாய்க் கீர்த்திபெற்ற தசரத குமாரனாகிய இராமனையல்லாது, உவமை இல்லான் - வேறொப்பில்லா னாயினன் எ—று.

தானே என்னு மேகாரம் பிரிநிலை. உரை - கீர்த்தி. இனி 'எல்லா ........மகன்' என்பதற்கு எல்லாத் தருமகுணங்கட்கும் உலகத்தில் தானே உவமையாக எடுத்துச் சொல்லத்தக்க இராமன் என்றுரைப்பினு மமையும். புண்ணியம் - புண்ணியத்தாலெய்தும் சற்குண முதலாயின, பரிசுத்தகுணம். உடையன் முதலாயின வினையெச்சப் பொருளவாகிய குறிப்புமுற்றுக்கள். ()

நெறியிரு புறத்து மூசி நுழையொணா நெருக்க மிக்க
செறிதரு வனமுஞ் சிங்கஞ் சிந்துரஞ் செருச்செய் சாரற்
பொறைகளும் வெம் பிசாச பூதமோ டியக்கர் யாரும்
உறைதரு குவடு நீங்கி யுத்தர முடிவு கண்டான்.

இ—ள்: நெறி இருபுறத்தும் - வழியினிருபக்கத்திலும், ஊசி நுழையொணா - ஊசியும் நுழைதற்கியலாத, நெருக்கம் மிக்க செறிதரு வனமும் - நெருக்கம் மிகுந்த அடர்ந்த காடுகளையும், சிங்கம் சிந்துரம் - சிங்கமும்யானையும், செரு செய் சாரல் பொறைகளும் - (தம்முட்) போர் செய்கின்ற சாரலையுடைய குன்றுகளையும், வெம் பிசாச பூதமோடு இயக்கர் யாரும் - கொடிய பேய்களும் பூதங்களும் இயக்கரனைவரும், உறைதரு குவடும் - வசிக்கின்ற சிகரங்களையுடைய பெரிய மலைகளையும், நீங்கி - கடந்து, உத்தர முடிவுகண்டான் - (பாரதகண்டத்தின்) வடதிசை யெல்லையை யடைந்தான் எ—று.

ஊசியு மென்னு மிழிவுசிறப்பும்மை தொக்கது, பொறை - சிறுமலை. குவடு - சிகரம்; ஆகுபெயராய்ப் பெரிய மலையை யுணர்த்திற்று. (கூ0)

அத்திசை யிமயமென்னு மரசவெற் படைந்து மிக்க
பத்தியோ டம்மை தன்னைப் பயந்தகுன் றென்று போற்றிச்
சத்திய விரதன் றம்பி தபோவனந் தோறுந் தங்கண்
முத்தழல் வளர்ப்போர் பாத முளரிகண் முடிமேற் கொண்டான்.

இ—ள்: சத்திய விரதன் தம்பி - மெய்ம்மையை விரதமாகக் கொண்டொழுகுந் தருமபுத்திரனது தம்பியாகியஅருச்சுனன், அத்திசை - அவ் வடதிசையில், இமயம் என்னும் அரச வெற்பு அடைந்து - இமயமென்று பேர்பெற்ற மலையரசைச் சேர்ந்து, அம்மைதன்னைப் பயந்த குன்று என்று - உமாதேவியைப் புத்திரியாகப்பெற்ற மலையென்று கருதி, மிக்க பத்தியோடு போற்றி - மிகுந்த அன்புடனே துதித்து, தபோவனந் தோறும் - (அங்குள்ள) தவவனங்களி லெல்லாம், தங்கள் முத்தழல் வளர்ப்போர் - தங்கட்குரிய மூன்றக்கினிகளையும் வளர்க்கும் முனிவர்களின், பாதமுளரிகள் - பாததாமரை மலர்களை, முடிமேல் கொண்டான் - சிரமேற் சூடினான் எ - று.

சிறந்த அருவி, ஓஷதி, பொன், மணி முதலிய அரிய வளங்களெல்லாம் நிரம்பப்பெற்று அதிக உன்னதத்தோடு விளங்குதலின் இமயமலையை மலைகளுக் கரசென்றல் நூன்மரபு; அம்மலையின் அதிதெய்வமாகிய இமவான் உமாதேவியைப் புத்திரியாகக் கொண்டு வளர்த்தமையால் அத்தேவி பார்வதி யென்னும் பெயர் பெற்றாளென்று [பர்வதத்தின் புத்திரி பார்வதி] புராணாதிகள் கூறும். அச்செயலை அத்தெய்வத்தின் தாவரவடிவாகிய மலைமேலேற்றி 'அம்மைதன்னைப் பயந்த குன்று' என்றார். முத்தழல்: ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம் என்பன. மூளரி - மலருக் காதலாற் பொருளாகுபெயர். தபோவனம்; வடமொழித்தொடர். (௬௧)

சாரண ரியக்கர் விச்சா தரர்முதற் பலருஞ் செஞ்சொல்
ஆரணப் படியே சூழ வடவிக டோறும் வைகி
நாரணன் மலரோ னும்பர் நாயகன் பதங்க ணச்சிக்
காரணத் தவஞ்செய் வோரைக் கண்டுகண் டுவகை கூர்ந்தான்.

இ - ள்: சாரணர் இயக்கர் விச்சாதரர் முதல் பலரும் - சாரணரும் யக்ஷரும் வித்தியாதரரும் முதலாகிய பலரும், அடவிகடோறும் சூழவைகி - வனங்கடோறும் நாற்பக்கங்களிலுந் தங்கி, நாரணன் மலரோன் உம்பர் நாயகன் பதங்கள் நச்சி - விஷ்ணு பிரமா இந்திரன் ஆகிய இவர்களுடைய பதவிகளை விரும்பி, செம் சொல் ஆரணப்படியே - நன்மைபயக்குமந்திரமொழியாகிய வேதவிதிப்படியே, காரணத்தவம் செய்வோரை - (அப்பதவிகளடைதற்குக்) காரணமாகிய தவங்களைச் செய்கின்றவரை, கண்டு - (அங்கங்கே) பார்த்துப் பார்த்து, உவகை கூர்ந்தான் - மகிழ்ச்சிமிகுந்தான் எ - று.

அருச்சுனனானவன் பலரும் வைகித் தவஞ்செய்வோரைக் கண்டு கூர்ந்தான் என வினைமுடிவு செய்க. பலரும் என்பது தவஞ்செய்வோர் என்னும் வினைப்பெயரை விசேடித்துச் செயப்படு பொருளுடையதாய் நின்றது. சாரணராதியோர் தேவசாதி வகையினர். மலரோன் - விஷ்ணுவின் உந்திக்கமலத்திற் றோன்றியவன். பொருளறியாமலே விதிப்படியோதினோர்க்குத்தானும் அதனாற் பாவத்தைப் போக்கி நன்மைபயக்கு மந்திரமொழியாதலிற் 'செஞ்சொலாரணம்' என்றும், வீடுபேற்றினிமித்தஞ் செய்யுந்தவம் நிஷ்காமியதவ மாதலின், மேலுலகபோகங்களை விரும்பிச் செய்யுந் தவங்களைக் காமிய தவமென்பார் 'காரணத்தவம்' என்றும் விசேடித்தார். ()

அரியும்வெங் கரியுந் தம்மி லமர்புரி முழக்கங் கேட்டுங்
கிரியினின் முழக்கங் கேட்டுங் கிராதபோர் முழக்கங் கேட்டும்
எரிகிளர் முழக்கங் கேட்டு மெம்பிரா னிமவான் றந்த
புரிகுழலோடும் வைகும் புண்ணியப் பொருப்பைச் சேர்ந்தான்.

இ—ள்: அரியும் வெங்கரியும் - சிங்கமும் கோபமுள்ள யானையும், தம்மில் அமர்புரி முழக்கம் கேட்டும் - ஒன்றோடொன்று போர்செய்கின்ற பேரொலியைக் கேட்டும், கிரியின் இன் முழக்கம் கேட்டும் - மலையின் கண்ணேயுள்ள இனிய ஒலியைக் கேட்டும், கிராதர் போர் முழக்கம் கேட்டும் - வேடர் போர்செய்யுமாரவாரத்தைக் கேட்டும், எரிகிளர் முழக்கம் கேட்டும் - காட்டுத்தீ பற்றியெரிதலா லுண்டாகிய பேரோசையைக் கேட்டும், எம்பிரான் - நந் தலைவராகிய பரமசிவன், இமவான் தந்த - மலையரசன் (வளர்த்து) மணஞ்செய்து கொடுத்த, புரிகுழலோடும் வைகும் - முடிக்கப்பட்ட கூந்தலையுடைய பார்வதி தேவியோடெழுந்தருளியிருக்கின்ற, புண்ணியப் பொருப்பை - பரிசுத்த க்ஷேத்திரமாகிய கைலாசமலையை, சேர்ந்தான் - அடைந்தனன் எ - று.



வேட்டுவ மகளிர் ஆயத்தோடு மலையெதிர்கூவி யாடுமோசையும், குரவையாடல் கிளிகடிதல் முதலிய தொழில்செய்தற்கண் அன்னார் பாடலோசையும் இன் முழக்க மெனப்பட்டன. இனி மலையின்கணுள்ள அருவி முகில் முதலியவற்றின் முழக்கத்தை மலையின்முழக்க மென்றாரெனினுமாம். பிரான் - தலைவன், இறைவன். புரிகுழல் - அன்மொழித்தொகை.

கைம்மலை யுரிவை யோடு கட்செவிக் கச்சுஞ் சாத்துஞ்
செம்மலை விழியிற் காணான் சிந்தையாற் கண்டு போற்றி
யம்மலைச் சாரறோறு மருந்தவம் புரிநர் கூற
விம்மலை நீங்கி யாங்கண் மெய்த்தவ விரத னானான்.

இ—ள்: கைம்மலை உரிவையோடு - யானைத்தோலுடனே, கட்செவிக் கச்சுஞ் சாத்தும் செம்மலை - அரவக் கச்சினையுமணிந்துள்ள இறைவனாகிய பரமசிவனை, விழியில் காணான் - கண்ணாற்காணாதவனாய், சிந்தையால் கண்டு போற்றி - மனத்தினாற் றியானித்துத் துதித்து, அம்மலைச் சாரல்தோறும் - அம்மலையின் சாரல்களில், அருந்தவம் புரிநர் கூற விம்மலை நீங்கி - சிறந்த தவத்தைச் செய்வோர் கூறினமையால் (காணாமையாலுண்டான) துன்பத்தை நீங்கி, ஆங்கண் மெய்த்தவ விரதன் ஆனான் - அம்மலைச் சாரலின்கண்ணே உறுதியான விரதத்தை யுடையனாய்த் தவஞ்செய்யத் தொடங்கினான் எ—று.

கைம்மலை: துதிக்கையினையுடைய மலைபோன்ற வுருவத்தையுடையதென ஆகுபெயர். கட்செவி - கண்ணையே செவியாகவுடையதென அன்மொழித்தொகை. கச்சு - இடையில் உடைமேற் கட்டப்படுவது. தவம் புரிநர் கூறியதாவது தவம்புரிந்தாலன்றிக் கிரீசனைக் கண்ணிற் காணல் முடியாதென்பதாம். அது, கண்ணிற் காணான் சிந்தையாற் கண்டு விம்மலை நீங்கி என்னுந் தொடர்களால் விளங்கும். புரிநர் என்பதில் நகரம் பெயரிடைநிலை. (௬௨)

எயிலொரு மூன்றுஞ் செற்றோ னேந்திழை யுடனே வைகுங்
கயிலையின் பெருமை தன்னைக் கட்டுரை செய்வ தெங்ஙன்
வெயிலவன் முதலோர் நாளு மேம்பட வலஞ்செய் வார்கள்
அயிலுநல் லமுதோர் சூழ்வந் தன்புடன் போற்றுவாரே.

இ—ள்: வெயிலவன் முதலோர் - சூரியன் முதலாயினோர், மேம்பட - தாம் மேன்மையடையும்பொருட்டு, நாளும் வலம்செய்வார்கள் - தினமும் பிரதக்ஷிணஞ் செய்வார்கள், அயிலும் நல் அமுதோரே - அமிர்தத்தையுண்ணுகின்ற தேவர்களே, சூழ்வந்து - பிரதக்ஷிணஞ் செய்து, அன்புடன் போற்றுவார் - பக்தியுடன் துதிப்பார்கள், (ஆகையினால்); எயில் ஒரு மூன்றும் செற்றோன் - முப்புரங்களையு மெரித்தழித்த பரமசிவன், ஏந்திழையுடனே வைகும் - உமாதேவியோ டெழுந்தருளியிருக்கும், கயிலையின்

பெருமைதன்னை - கைலாசமலையின் மகிமையை, கட்டுரைசெய்வது எங்ஙன்-வருணித்துக் கூறுவதெவ்வாறு எ—று.

முதலோர் - கோள்களும் நாள்களும். ஏகாரத்தைக் கொண்டுகூட்டி யுயர்வு சிறப்புப் பொருள் கொள்க. எயில் - மதில், பொன் வெள்ளியிரும் பென்னு மூன்றுலோகங்களாலான அழியாக்கோட்டைகளையுடைய மூன்றூர் கட்காதலால் ஆகுபெயர்; கைலை - கயிலை என ஐகாரத்துக்குப் பிரதியாக அகர யகர இகரங்கள் எதுகைபற்றி வந்தன; இதற்கு விதி நன்னூலில் "அம்முனிகரம்" என்னுஞ் சந்தியக்கரசூத்திரம். கௌரி - கவுரி எனவருவனவற்றிற்கும் அதுவே விதியாகக் கொள்க. எங்ஙனம் என்பது கடைக்குறைந்து நின்றது. (௫௭)

உருகிய வெள்ளி போல வுயர்முழை தோறும் வீழும்
அருவிநீர் புனிதன் வேணி யமருமா நதியிற் றோன்ற
உருகிய பனிவான் குன்றி லொண்பனிக் கடவுள் வந்து
மருவிய தென்னத் தோன்றும் வருணமால் வரையின் றென்பால்.

இ—ள்: உருகிய வெள்ளி போல - உருகின வெள்ளி யொழுக்குப் போல, உயர் முழை தோறும் வீழும் அருவிநீர் - உயர்ந்தவிடத்துள்ள மலைத்துவாரங்களிலிருந்து விழுகின்ற அருவிநீர், புனிதன் வேணி அமரும் மா நதியில் தோன்ற - நிர்மலராகிய பரமசிவனது சடையின்கண்ணே யிருக்குங் கங்காநதிபோலத் தோன்ற, வான் குன்றில் உருகிய பனி - பெரிய மலையின்மேலே உருகிய பனியானது, ஒண்பனிக் கடவுள் வந்து மருவியது என்னத் தோன்றும் - ஒளி பொருந்திய பனிக்கடவுள் வந்து தங்கியிருப்பதுபோலக் காணப்படுகின்ற, வருணமால் வரையின் தென்பால் - வெண்ணிறத்தினையுடைய பெரிய கைலாசமலையின் தென்சாரலில் எ—று.

பனிக்கடவுள் - பனிக்காலத்தின் அதிதெய்வம். மாநதி - மகாநதி யென்பதன் சிதைவு. முழை - மலைப்பிளப்பு, குகை.

வேறு.

ஆசினன் மறைப்படியு மெண்ணில் கோடி யாகமத்தின் படி
யுமெழுத் தைந்துங் கூறிப், பூசினன் வடிவமெலாம் விபூதி யாலப்
பூதியினைப் புரிந்தசடைப் புறத்தே சேர்த்தான், மீதேசினு லப்
பொருப்பின் சிகர மேவுஞ் சிவனிவனே போலுமெனத் தேவரெல்
லாம், பேசினர் வரிசிலைக்கை விசயன் பூண்ட பெருந்தவத்தி
னிலைசிலர்க்குப் பேச லாமோ.

இ—ள்: ஆசு இல் நான்மறைப்படியும் - குற்றமில்லாத நான்கு வேதங்களிற் கூறிய விதிப்படியும், எண் இல் கோடி ஆகமத்தின் படியும் - (கிரந்த சங்கியையால்) அளவிடற்கரிய பல ஆகமங்களின் விதிப்படியும், எழுத்து ஐந்தும் கூறி - ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தை யுச்சரித்து, வடிவம் எலாம் விபூதியால் பூசினன் - உடம்பு முழுவதையும் விபூதியினால் (உத்தூளனமாக) அணிந்து, அப்பூதியினை புரிந்த சடைப்புறத்தே சேர்த்தான் - (அணிந்து மிகுந்த) அவ்விபூதியைக் கட்டிய சடைமுடியின்மேலே அணிந்தான், தேசினல் - அவ்வாறான உருவப்பொலிவினால், தேவரெல்லாம் - 



தேவர்களெல்லோரும், அப்பொருப்பின் சிகரம் மேவும் சிவன் இவனே போலும் என - அக் கைலாசமலையி னுச்சியி லெழுந்தருளியிருக்குஞ் சிவன் இவன்றானே என்று ஐயுற்று, பேசினர் - கூறினார்கள், (அங்ஙனமாயின்); வரிசிலைக்கை விசயன் பூண்ட பெருந்தவத்தின் நிலை - கட்டமைந்த வில்லையேந்திய கையினையுடைய அருச்சுனன் மேற்கொண்ட பெரிய தவத்தின் நிலைமையினை, சிலர்க்கு பேசல் ஆமோ - (எம்போலுஞ்) சிலர்க்குப் புகழ்ந்து கூறுதல் முடியுமோ. எ - று.

கோடி - எண்ணெண்ணை யுணர்த்தாது குறிப்பாற் பன்மைமிகுதியை யுணர்த்திற்று. கவியாற் புகழ்ந்து புனைந்து கூறவல்லார் உலகிற் சிலராதலிற் 'சிலர்க்குப் பேசலாமோ' என்றார். தேசினற் பேசினரென இயையும். இது முதல் ௫௯ செய்யுள் எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஒருதாளின் மிசைநின்று நின்ற தாளி னூருவின்மே லொரு
தாளை யூன்றி யொன்றுங், கருதாமன் மனமடக்கி விசும்பி
னோடுங் கதிரவனைக் கவர்வான்போற் கரங்க ணீட்டி, யிருதாரை
நெடுந்தடங்க ணிமையா தோரா யிரங்கதிருந் தாமரைப்போ
தென்ன நோக்கி, நிருதாதி யரின்மனுவாய்த் தவஞ்செய்வாரி
னிகரிவனுக் கார்கொலென நிலைபெற் றானே.

இ—ள்: ஒருதாளின் மிசை நின்று - ஒருகாலில் நிமிர்ந்து நின்று, நின்ற தாளின் ஊருவின்மேல் - நின்ற காலின் தொடையின்மேல், ஒரு தாளை ஊன்றி - மற்றைக்காலை (முடக்கிப்) பொருந்தவைத்து, ஒன்றும் கருதாமல் மனம் அடக்கி - வேறொரு பொருளையுஞ் சிந்தியாதபடி மனத்தை யொருவழிப்படுத்தி, விசும்பின் ஓடும் கதிரவனைக் கவர்வான் போல் - ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியனைப் பிடிப்பவன்போல, கரங்கள் நீட்டி - கைகளை (மேலே) நீட்டி, இருதாரை நெடுந்தடங்கண் இமையாது - கருவிழிகளையுடைய நீண்ட அகன்ற இருகண்களையு மிமைக்காமல்; ஓர் ஆயிரம் கதிரும் தாமரைப்போது என்ன நோக்கி - (சூரியனது) ஆயிரங்கிரணங்களையுந் தாமரைமலரைப் பார்ப்பதுபோலப் பார்த்து, நிருத ஆதியரில் - இராக்கதர் முதலாயினோரிலும், மனுவாய் - மனிதரிலும், தவம் செய்வாரில் - தவஞ்செய்வாருள்ளே, இவனுக்கு நிகர் ஆர் என - இவனுக்கு ஒப்பாவார் யாவருளரென்று சொல்லும்படி, நிலைபெற்றான் - (தவத்தில்) ஸ்திரமாய் நின்றனன். எ - று.

கொல், ஏ: அசைநிலை. தாரை - கண்மணி. மனுவாய் - ஏழனுருபேற்ற பெயர். யாவரென்னும் வினாப்பெயர் ஆரென மரீஇயிற்று. (௫௮)

தோற்றியதெம் மிடத்தேயித் தோன்றன் மாலை சூட்டியபொற்
றொடியென்றே துரங்கம் பொற்றேர், கூற்றியல்வெஞ் சிலைபா
ணந் தூணி நாணி குரக்குநெடுங் கொடிமுன்னங் கொடுத்தே
மென்றே, காற்றினுடன் விரைவுறச்சென் றருந்து மாறு காண்
டவநம் பசிக்களித்த காளை யென்றே, நாற்றிசையும் வளர்த்த
தழற் கடவு ளந்த நரனுடலங் குளிர்விக்கு நாரம் போன்றான்.

இ - ள்: நாற்றிசையும் வளர்த்த தழற்கடவுள் - (அருச்சுனன் தனக்கு) நான்கு பக்கத்திலும் மூட்டியெரியவிட்ட அக்கினிதேவன், இத்தோன்றல் மாலைசூட்டிய பொற்றொடி - இவ்வருச்சுனன் மாலைசூட்டி மணந்த பொன்னாலாகிய வளையலையணிந்த திரௌபதி, தோற்றியது எம்மிடத்தே என்றோ - பிறந்தது எம்மிடத்தென்று கருதியோ, துரங்கம் பொற்றேர் - (நான்கு) வெள்ளைக்குதிரைகளும் (அழியாத) அழகிய தேரும், கூற்று இயல் வெஞ்சிலை நாணி பாணம் தூணி - யமனையொத்த வியல்பினையுடைய (பகைவர்க்கு) அச்சத்தை விளைக்கும் வில்லும் நாணும் அம்பும் அம்பறாத்தூணியும், குரக்கு நெடுங் கொடி - பெரிய அநுமக்கொடியுமாகிய இவைகளை, முன்னம் கொடுத்தேம் என்றோ - (காண்டவமெரித்த) முற்காலத்துக் கொடுத் துதவிசெய்தோமே யென்றுகருதியோ, காற்றினுடன் விரைவுறச் சென்று அருந்துமாறு காண்டவம் நம் பசிக்கு அளித்த காளை என்றோ - காற்றோடு விரைந்துபோயுண்ணும்படி காண்டவவனத்தை நமது பசிதீரக் கொடுத்துதவிய வீரனென்று கருதியோ, அந்த நரன் உடலம் குளிர்விக்கும் நாரம் போன்றான் - அந்த அருச்சுனனது உடம்பினைக் குளிரச்செய்யும் நீரினை யொத்திருந்தான். எ - று.

தன் மருகனென்னுமன்பினாலோ, அழியாத் தேர் முதலியன ஈந்து தன்னாற் சம்மானிக்கப்பட்டவனைத் தான் வருத்தல் சால்பன்றென்று கருதியோ, உபகாரஞ்செய்தவற்கு அபகாரஞ்செய்யலாகாதென் றெண்ணியோ அக்கினிதேவன் சுடுதலின்றித் தண்ணீர்போற் குளிர்ந்திருந்தானென்பதாம். தோன்றல் - எல்லோராலும் அறியப்பட்டவன், பிரசித்தன்; (இது தொழிலாகுபெயர்). பொற்றொடி - அன்மொழித்தொகை. காளை - உவமையாகுபெயர், இடபம்போன்ற பெருமித நடையினனென்பது பொருள். நரன் - நரநாராயண ரென்னுமிருவருண் முதனின்ற நரனின் அவதாரமாயுள்ளான். குரங்கு + நெடுங்கொடி = குரக்கு நெடுங்கொடி. நாற்றிசையுமக்கினி வளர்த்துச் சூரியனைப் பார்த்து நின்று தவஞ் செய்தானெனவே பஞ்சாக்கினி மத்தியிற் றவஞ்செய்தான் விசயனென்றவாறும். (௧௯)

வலப்பாகஞ் செழும்பவளச் சோதியென்ன வாணீலச் சோ
தியென்ன மற்றப் பாகங், கலப்பான திருமேனி யணிந்த நீற்
றாற் கதிர்முத்தின் சோதியென மேனை யீன்ற, குலப்பாவை
யுடன்கயிலைக் குன்றில் வாழ்விற் குன்றுடையோன் றிருக்கோலங்
குறிப்பா லுன்னிப், புலப்பாடு புறம்பொசிய மார்புந் தோளும்
பூரித்தா னுடல்புளகம் பாரித் தானே.

இ - ள்: வலப்பாகம் செழும்பவளச் சோதி என்ன - வலப்பாகம் செழுமையாகிய பவளத்தினொளி யென்றுசொல்லவும், மற்றப்பாகம் வாள் நீலச் சோதியென்ன - இடப்பாகம் ஒளிபொருந்திய நீலமணியின் பிரகாசமென்று சொல்லவும், கலப்பான திருமேனி - (ஆணுருவும் பெண்ணுருவுங்) கலந்துள்ள அர்த்தநாரீசுவரத்திருமேனி, அணிந்த நீற்றால் கதிர்முத்தின் சோதி என - (உத்தூளனமாகப்) பூசப்பட்ட திருநீற்றினால் ஒளிருகின்ற முத்தினது சோதியென்று சொல்லவும், மேனை ஈன்ற குலப்பாவையுடன் கயிலைக்குன்றில் வாழ் - (மலையரசன்பத்தினியாகிய) மேனைபெற்ற மேன்மை பொருந்திய உமாதேவியுடன் கைலாசமலையி லெழுந்தருளி யிருக்



கின்ற, விற்குன்று உடையோன் - மேருமலையை வில்லாகவுடைய சிவபிரானது, திருக்கோலம் குறிப்பால் உன்னி - திருவுருவத்தை மனத்தாற் றியானித்து, புலப்பாடு புறம் பொசிய - அறிவின்கணுண்டாகிய ஆனந்தம் புறத்தே தோன்றும்படி, மார்புந் தோளும் பூரித்தான் - மார்புந் தோள்களும் பூரிக்கப்பெற்றான், உடல் புளகம் பாரித்தான் - உடம்பு முழுவது முரோமாஞ்சம் பரவப்பெற்றனன். எ-று.

என்ன வென்னு மெச்சங்கள் வாழென்னும் வினைகொண்டன. விற்குன்று - குன்றவில் எனப் பொருள்படுதலிற் பின்மொழிநிலையல். பொசிதல் - சுரத்தல், ஈண்டுத் தோன்றுதல், பாரித்தல் - பரத்தல், மிகுதல். அறிவின்கண் உண்டாய மகிழ்ச்சி பூரிப்பாலும் புளகத்தாலும் புறத்தே புலனாயிற்றென்பது கருத்து. (௨௦)

கருந்துறுகல் லெனக்கருதிப் பிடியுங் கன்றுங் களிற்றினமு
முடனுரிஞ்சக் கறையா னேறிப், பொருந்து முழைப் புற்றதெனப்
புயங்க மூரப் பூங்கொடிகண் மரனென்று பாங்கே சுற்றப், பரிந்து
வெயி னண்மழைநாள் பனிநா ளென்று பாராம னெடுங்காலம்
பயின்றான் மண்ணில், அருந்தவமுன் புரிந்தோரி லிவனைப்போன்
மற் றார்புரிந்தார் சிவசிவவென் றரிய வாறே.

இ - ள்: பிடியும் கன்றும் களிற்றினமும் - பெண்யானைகளும் அவற்றின் கன்றுகளும் ஆண்யானைக் கூட்டமும், கருந்துறுகல் எனக்கருதி - கரிய துறுகல் என்றெண்ணி; உடன் உரிஞ்ச - தன்மேற் சார்ந்து தினவு தீர்த்துக்கொள்ளவும், புயங்கம் - பாம்புகள், கறையான் பொருந்தும் முழைப்புற்றது என ஏறி ஊர - கறையான்களிருக்குந் துவாரங்களையுடைய புற்றென்று கருதி யேறியூரவும், பூங்கொடிகள் - பூவையுடைய கொடிகள், மரன் என்று பாங்கே சுற்ற - மரமென்று பக்கத்திற் றாவிப் படர்ந்து சுற்றிக்கொள்ளவும், வெயில்நாள் மழைநாள் பனிநாள் என்று - வெயிற்காலமென்றும் மழைக்காலமென்றும் பனிக்காலமென்றும், பரிந்து பாராமல் - வருந்திப் பொருட்படுத்தாமல், நெடுங்காலம் பயின்றான் - வெகுகாலம் தவஞ் செய்தனன், மண்ணில் - பூவுலகத்தில், முன் அருந்தவம் புரிந்தோரில் - முற்காலத்தே அரிய தவத்தைச் செய்தவருள்ளே, இவனைப்போல் - இவ்வருச்சுனனைப்போல, சிவசிவ என்று - சிவசிவ என்றுச்சரித்துக்கொண்டு, அரிய ஆறு - அருமையாகிய நியம நெறியுடன், மற்று ஆர் புரிந்தார் - வேறியாவர் செய்தனர். எ - று. ஏ - அசை.

துறுகல் - மலைப்பக்கத்தில் நிலத்தின்மேற் புடைத்துயர்ந்துள்ள பாறை: புயங்கம் - உடல்வளைந்து செல்வது; புஜங்கமென்னு மாரியமொழியின் றிரிபு. மரன்: போலி. இளவேனில் முதுவேனிலிரண்டையும் வெயினாளென்றும், கார் கூதிரிரண்டையும் மழைநாளென்றும், முன்பனி பின்பனியிரண்டையும் பனிநாளென்றுஞ் சுருக்கிக் கூறினார். சிவசிவவென்னு மடுக்கு இடைவிடாமைப் பொருளது. புற்றென்பது பகுதிப்பொருள் விகுதி பெற்றுப் புற்றதென நின்றது. (௨௧)

பகிரதனே முதலான வெண்ணில் கோடி பார்த்திவருந்
தவம்புரிந்தார் மைபம்பொன்மேனி, யிகலவுணர் முதலான ககன

வாண ரெத்தனைபேர் தவம்புரிந்தா ரிமையோ ரேத்து, மக பதிதன் மதலையிவ னெழுதொணாத வனப்பினுக்கு வரிசிலைக்கை மதவே ளொவ்வான், சகலகலை களுக்குமிவன் றானே யிங்ஙன் றவம்புரிய நினைப்பதே சார்ந்த பாவம்.

இ - ள்: பகிரதனே முதலான - (தங்குறை தீரவேண்டிப்) பகீரதன் முதலாகிய, எண் இல் கோடி பார்த்திவரும் தவம் புரிந்தார் - அளவிடற் கரிய பல அரசருந் தவஞ்செய்துள்ளார், பைம்பொன் மேனி இகல் அவுணர் முதலான - மாற்றுயர்ந்த பொன்னிறமாகிய சரீரத்தையுடைய போரை விரும்புமசுரராகிய காலகேயர் முதலாகிய, ககன வாணர் எத்தனைபேர் தவம்புரிந்தார் - ஆகாயவாசிகளும் அளவில்லாதோர் தவஞ்செய்தனர், இவன் - இவ்வருச்சுனனே, இமையோர் ஏத்து மகபதிதன் மதலை - தேவர்களாற்றுதிக்கப்படு மிந்திரனது குமாரனுயுள்ளவன், எழுதொணாத வனப்பினுக்கு - சித்திரிக்க முடியாத சிறந்த அழகில், வரிசிலைக்கை மதவேள் ஒவ்வான்-கட்டமைந்தவில்லையேந்திய கையினையுடைய மன்மதனே ஒப்பாகான், சகல கலைகளுக்கும் இவன்றானே - எல்லாவிதமான கல்வியறிவுகளிலுஞ் சிறந்த இவனே, இங்ஙன் தவம்புரிய நினைப்பது - இவ்வாறு தவஞ்செய்ய நினைப்பதற்குக் காரணம், சார்ந்த பாவம் - (அனுபவிக்கும்படி) அடைந்த (முன்னைத்) தீவினையேயாம் எ—று.

பகிரதன் முதலாயினோரெல்லாம் ஒவ்வோர் குறையுடையவராயிருந்தமையின் அவை தீர்த்தற்குத் தவஞ்செய்தமை சாலும்; இவனோ செல்வத்திற் சுவர்க்கலோகாதிபதியாகிய இந்திரனுக்கு மகனாய் அழகிலும் மேம்பட்டுச் சகல கலைகளிலும் வல்லவனாய் ஒருகுறையு மில்லாதவனாயிருந்தும் இங்ஙனந் தவஞ்செய்யக் காரணம் முன்னைத் தீவினையேயன்றி வேறன்றென்பதாம். பகிரதன்: குறுக்கல் விகாரம். பொன்மேனியவுணரென்றது காலகேயரை. "பொன்காலுமெய்யர்" என அடுத்த சருக்கத்தில் அவரைக் கூறுதலானுணர்க. வாணர் - வாழ்நரென்பதன் மரூஉ. ஏகாரம் முன்னைய இரண்டும் உயர்வு சிறப்புப் பொருளன. இப்பொருள் புறனடையாற் கொள்க.

வேறு.

பண்ணுக்கு வாம்பரித்தே ராதபனும் பணிந்துபசு பதியை நோக்கி, மண்ணுக்குத் தவம்புரியுந் தனஞ்சயற்குக் கோடையினு மதியம் போன்றான், எண்ணுக்கு வருட்புவனம் யாவினுக்குங் கண்ணுவா னிவனே யன்றோ, கண்ணுக்குப் புனைமணிப்பூண் கண்ணோட்ட மென்பதெல்லாங் கருணை யன்றோ.

இ - ள்: பண்ணுக்கு வாம் பரித்தேர் ஆதபனும் - இசையின் றாளத்துக் கேற்பத் தாவிச் செல்லுங் குதிரை பூட்டிய தேரின்மேற் செல்லுஞ் சூரியனும், பசுபதியை நோக்கிப் பணிந்து - பரமசிவனைத் தியானித்து வணங்கி, மண்ணுக்கு தவம்புரியும் தனஞ்சயற்கு - நாட்டைப் பெறும் பொருட்டுத் தவஞ்செய்கின்ற அருச்சுனனுக்கு, கோடையினும் மதியம் போன்றான் - கோடைக்காலத்திலுஞ் சந்திரனைப்போலக் குளிர்ந்திருந்தான், எண்ணுக்கு வரும் புவனம் யாவினுக்கும் - (எழுவகைப்பிறப்பு மெண்பத்து



நான்கு நூறாயிரயோனி பேதமுமாக) அளவிட்டுக் கூறப்படுகின்ற உலகத்துயிர்க ளெல்லாவற்றிற்கும், கண்ணுவான் இவனே அன்றோ - கண்ணாயுள்ளவன் இச்சூரியனே யல்லவா, கண்ணுக்கு புனைமணிப்பூண் கண்ணோட்டம் என்பது எல்லாம் கருணை அன்றோ - கண்ணுக் கணிகலங் கண்ணோட்டமென்று சொல்லுவதெல்லாங் கருணையினையல்லவா எ - று.

சூரியன் தான் உலகிற்குக் கண்ணாயுள்ளவனாதலின், கண்ணுக் கணிகலமாயுள்ள தாக்ஷிணியத்தினால் [=கருணையினால்] விசயனுக்குக் கோடையினுஞ் சுடுதலின்றி மதியம் போன்றான் போலும் என உத்பிரேக்ஷித்துக் கவி கூறினாராதலின் இது தற்குறிப்பேற்றவணி. சூரியனொளியை யின்றிக் கண்ணொளியான் மாத்திரம் பொருள்களைக் காண்கில்லாமையிற் சூரியனையுயிர்கட்குக் கண்ணுவானென்றார். புவனம்: ஆகுபெயர். கண்ணோட்டம்-தாக்ஷிணியம். புனைமணிப்பூண் - அணியத்தகு மிரத்தினாபரணம். இச் செய்யுள் அறுசீரடியாசிரியவிருத்தம். (௪௩)

வேறு.

அங்கியா லங்கியை வெதுப்பி வெம்மையைப்
பொங்கிய வாயுவாற் போக்கி மெய்ச்சிரந்
தங்கிய வமுதினாற் றண்ணெ னும்படி
யிங்கிதத் தொடுக்கின னிதயந் தன்னையே.

இ - ள்: அங்கியால் அங்கியை வெதுப்பி - மூலாதாரத்துள்ள அக்கினியினால் உதராக்கினியைத் தகித்து, வெம்மையை - அவ்வக்கினியினுஷ்ணத்தை, பொங்கிய வாயுவால் போக்கி - (பூரகத்தால் உள்ளே) நிறைந்த பிராணவாயுவினால் மேலே எழுப்பி, [அதனாற் சந்திரமண்டலத் தமுதை யுருக்கி]; மெய் சிரம் தங்கிய அமுதினால் தண்ணெனும்படி - சரீரமானது சிரத்திலுள்ள அச்சந்திரமண்டலத் தமுதத்தினாற் குளிரும்படி, இங்கு - இந்நிலையில், இதத்து - இனிதாக, இதயந்தன்னை ஒடுக்கினன் - மனத்தை (த் தியானத்தில்) அழுந்தச்செய்தனன். எ - று.

வாயுவை நாசியால் வெளியே விடல் இரேசகம்; உட்கொள்ளல் பூரகம்; உட்கொண்ட வாயுவை உள்ளே தடுத்து நிறைத்தல் கும்பகம் என்பர் வடநூலார். மூலாதாரத்துள்ள அக்கினியைப் பிராணவாயுவால் எழுப்பிச் சந்திரமண்டலத் தமுதை யுருகச்செய்யுந் திறத்தின் விரிவை யோக நூல்களிற் காண்க. இதுமுதல் ௧௦ செய்யுள் கலிவிருத்தம். (௪௪)

ஈண்டுதன் கருத்தினோ டியைந்த மாதவம்
பூண்டிள மதிமுடிப் புண்ணி யன்றனை
வேண்டிய வாறெலாம் விருப்பொ டுன்னினன்
பாண்டிய னுயர்குலப் பாவை கேள்வனே.

இ - ள்: பாண்டியன் உயர் குலப் பாவை கேள்வன் - பாண்டியனது உயர்ந்த குலத்திலுதித்த பாவைபோ லழகினையுடையாளாகிய சித்திராங்கைக்கு நாயகனான அருச்சுனன், ஈண்டு தன் கருத்தினோடு இயைந்த மாதவம் - மிகுந்த தன்விருப்பத்திற்கிசைந்த பெரிய தவத்தை, பூண்டு - மேற்கொண்டு, இளமதிமுடிப் புண்ணியன்றனை - இளமையாகிய பிறைச்சந்தி

ரனையணிந்த சடாமுடியினையுடைய பரிசுத்தராகிய கைலாசபதியை, வேண்டியவாறு எலாம் - தான் விரும்பியபடியெல்லாம், விருப்பொடு உன்னினன் - பத்தியுடன் றியானித்தான். எ - று.

வேண்டியவாறெல்லாமுன்னுதல் என்றது தன்விருப்பத்துக்கேற்றனவாகிய நாம ரூப குணக் கிரியாதிசயங்களையெல்லாமுடையவராகச் சிவனைத் தியானித்தலை. (௪௫)

நிரந்தர மநேகநா ணினைவு வேறற
உரந்தரு புலன்களை யொடுக்கி யாயுதம்
இரந்தனன் வரையிடை யியற்று நற்றவம்
புரந்தர னறிந்துமெய் புளக மேறவே

இ - ள்: அநேகநாள் - நெடுநாளாக, நிரந்தரம் - இடையறாமல் நினைவு வேறு அற - வேறுநினைவின்றி, உரம் தரு புலன்களை ஒடுக்கி - வலிய ஐம்பொறிகளையும் (புலன்கண்மேல் வெளியே செல்லாமல் அந்தர்முகமாக) ஒடுங்கச்செய்து, ஆயுதம் இரந்தனன் - பாசுபதாஸ்திரத்தை வேண்டி, வரையிடை இயற்று நல் தவம் - கைலாசமலையின்கண்ணே (அருச்சுனன்) செய்கின்ற சிறந்த தவத்தை, புரந்தரன் அறிந்து - இந்திரனறிந்து, மெய் புளகம் ஏற - (மகிழ்ச்சியாற்) சரீரத்திற் புளகமுண்டாக. எ - று.

ஏற என்னும் வினையெச்சத்தை அடுத்த செய்யுளில் வரும் கூறியென்னு மெச்சவினையோடியைக்க. இரந்தனன்: முற்றெச்சம். புலன்கள் -சுவையொளியூறோசைநாற்றமென்னும் விஷயங்கள், ஈண்டாகுபெயராய் ஐம்பொறிகளை யுணர்த்திற்று. (௪௬)

குருவுடன் விரகுறக் கூறி யீசனை
மருவுறு கொன்றைநாண் மாலை மௌலியைக்
கருமயில் பாகனைக் காண்டல் வேண்டிய
திருமகன் றவநிலை தெரிய வுன்னினன்.

இ - ள்: குருவுடன் விரகுறக் கூறி - தன்குருவாகிய பிருகஸ்பதிக்கு (அதனை) அறியச்சொல்லி, ஈசனை - சகல ஐசுவரியங்களையுமுடையவரும், மரு உறு கொன்றை நாள் மாலை மௌலியை - வாசனைபொருந்திய புதிய கொன்றைப்பூமாலையைத் தரித்த சடாமுடியையுடையவரும், கருமயில் பாகனை - நீலநிறத்ததாகிய மயிலையொத்த சாயலையுடைய பார்வதிதேவியையிடப்பாகத்திலுடையவருமாகிய கைலாசபதியை, காண்டல் வேண்டிய - தரிசிக்க விரும்பிய, திருமகன் தவநிலை தெரிய - அழகிய குமாரனாகிய அருச்சுனனது தவத்திற்குக் காரணத்தை யறிவதற்கு, உன்னினன் - ஞானக்கண்ணால் நோக்கினன். எ - று.

உன்னுதல் - நினைத்தல், தியானித்தல். விரகு - அறிவு; உடன் என்னு மூன்றுவதன் சொல்லுருபு நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்தது. இரண்டாம்வேற்றுமை யடுக்குகளில் முன்னைய விரண்டும் மற்றதற்கடையாய் நிற்க, அது காண்டல் என்னுந் தொழிற்பெயராகிய வினை கொண்டது. (௪௭)



அரும்பகை வலிமையா லவுண ரூர்சுடும்
பெரும்பிறை யணிசடைப் பிஞ்ஞ கன்றன
திரும்பக ழிகள்பெற வெண்ணி யேகொலாம்
விரும்பிய தித்தவம் வில்வ லானரோ.

இ—ள்: வில்வலான் - வில்வித்தையில் வல்ல அருச்சுனன், அரும் பகை வலிமையால் - பகைவரின் வெல்லுதற்கரிய வலிமைகாரணமாக, அவுணர் ஊர் சுடும் - அசுரரது முப்புரங்களை யெரித்த, பிறை அணி பெருஞ் சடை - பிறையையணிந்த பெருமை பொருந்திய சடையினையுடைய, பிஞ்ஞகன்றனது - சிவபிரானது, இரும் பகழிகள் பெற எண்ணியே - பெருமைதங்கிய அஸ்திரங்களைப் பெறக் கருதியே, இத்தவம் விரும்பியது - இத்தவத்தை விரும்பி மேற்கொண்டது. எ—று.

அரும்பகைவலிமை யென்றது வீஷ்மர், துரோணர், அசுவத்தாமா முதலிய வில்லாளிகளின் உதவிபெற்றிருக்குந் துரியோதனதியரின் வலிமையினை. வலிமையால் என்னு மூன்றுவதைப் பெற என்பதனோடு முடிக்க, ஏகாரம் தேற்றம். கொல், ஆம், அரோ: அசைநிலைகள். வில்வலான் என்னுமெழுவாய் விரும்பியதென்னுந் தொழிற்பெயரைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது; குருகுலச்சருக்கத்து ௧௭ - ம் செய்யுளிலும் இவ்வாறன முடிபு காண்க. பிஞ்ஞகன் - தலைக்கோலமுடையான். (௪௮)

நற்றவத் துறுதியு நரன்க ருத்துநாம்
முற்றறி குவமென முன்னுஞ் சிந்தையான்
கற்றையஞ் சடையவன் கயிலை யங்கிரி
உற்றறி வுறுவதற் குபாய மெண்ணினன்.

இ - ள்: நல் தவத்து உறுதியும் - சிறந்த தவத்தின துறுதிப்பாட்டையும், நரன் கருத்தும் - அருச்சுனனது நோக்கத்தையும், நாம் முற்ற அறிகுவம் என - நாம் முடிவாக அறிவோமென்று, முன்னும் சிந்தையான் - எண்ணு மனத்தையுடைய இந்திரன், கற்றை அம் சடையவன் - தொகுதியாகிய அழகிய சடையையுடைய சிவபிரான் (சாந்நித்தியமாக எழுந்தருளியிருக்கும்); கயிலை அம் கிரி உற்று - கைலாய மலையை அடைந்து; அறிவுறுவதற்கு - அறிந்து கொள்வதற்கு; உபாயம் எண்ணினன் - வேண்டிய சூழ்ச்சியை யோசித்தான். எ - று.

நற்றவம் - நன்னோக்கத்துடன் செய்யப்படுந் தவம். உறுதி - திண்மை. முற்றென்பதனீற்றில் உம்மை விகாரத்தாற் றொக்கது; முற்றறிகுவமென - பூரணமாக அறிவோமென்று; பூரணமாக அறிதற்கு நேரிற் சென்றறிதல் சாலுமாதலின், உற்றறிவுறுவதற்கு உபாயமெண்ணினனென்க. ஒருவன் தன்னைக் குறித்துப் பேசும்போதும் யோசிக்கும்போதும் நாம் என்று பேசுவதும் யோசிப்பதும் உலகவழக்காதலின், இங்கே "அறிகுவம்" என்பதும் அந்த வழக்கில் வந்த மரபுவழுவமைதியாகும். "உற்றறிகுறுவதற் குபாயம் உன்னினன்" என்றும் பாடம். (௪௯)

தூநகை யுருப்பசி யரம்பை தொண்டைவாய்
மேனகை திலோத்தமை யென்று வேலையின்

மானென மயிலென வந்த மாதரீர்
ஆனவா றறிதிர்போ யவன்ற னெண்ணமே.

இ—ள்: தூநகை உருப்பசி - சுத்தமான பற்களையுடைய ஊர்வசியும், அரம்பை - அரம்பையும், தொண்டை வாய் மேனகை - கொவ்வைக் கனி போன்ற அதரங்களைப் பொருந்திய மேனகையும், திலோத்தமை - திலோத்தமையும், என்று - என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டு, மான் என - மானைப் போலவும், மயில் என - மயிலைப் போலவும், வேலையில் வந்த மாதரீர் - பாற்கடலிலே பிறந்த பெண்களே, போய் - சமீபத்திற் சென்று, அவன் தன் எண்ணம் - அந்த அருச்சுனனுடைய மனக்கிடக்கையை, ஆனவாறு - (உங்களால்) இயன்ற வழியால், அறிதிர் - ஆராய்ந்து அறிந்துகொள்ளுதிர் எ—று.

மான் நோக்கிற்கும், மயில் சாயலுக்குமென்க. இன் ஐந்தனுருபு. மாது என்னும் பெண்பாற்பெயர் அர் போலி பெற்று மாதர் என நின்று பின் ஆர் என்னும் பன்மை விகுதி பெற்று மாதரார் என்றாகி விளி யுருபேற்று ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் மாதரீர் என வந்தது. (௩௦)

என்றுகொண் டிந்திர னியம்ப மற்றவன்
துன்றிய பேரவைத் தோற்ற மிக்கவர்
குன்றிரண் டெடுப்பதோர் கொடிம ருங்குலார்
சென்றன ரவனுழிச் செய்ய வாயினர்.

இ—ள்: என்று இந்திரன் கொண்டு இயம்ப - என்று இந்திரன் விளித்துச் சொல்ல, அவன் துன்றிய பேரவை - அவனுடைய (தேவர் முதலானோர்) விரவிய பெரிய சபையில், தோற்றம் மிக்கவர் - அழகிற் சிறந்தவர்களும், இரண்டு குன்று எடுப்பதோர் கோடி மருங்குலார் - (தனபாரமாகிய) இரண்டு மலைகளைச் சுமக்கும் ஒப்பற்ற பூங்கொடியை ஒத்த இடையினையுடையவரும், செய்ய வாயினர் - செந்நிறமான அதரங்களை யுடையவருமாகிய அப்பெண்கள், அவனுழிச் சென்றனர் - அந்த அருச்சுனன் நின்று தவஞ் செய்யும் இடத்திற்குப் போயினர் எ—று. 'அவ்வுழி' எனவும் பாடம்.

காமனை நினைந்தனர் காம ராசனும்
மாமலர் வாளியு மதுர சாபமுந்
தேமரு மலர்க்கையிற் சேர்த்திச் சேனையோ
டாமுறை புகுந்தன னரனை யஞ்சுவான்.

இ—ள்: காமனை நினைந்தனர் - (ஊர்வசி முதல் நால்வரும்) மன்மதனை (அங்கு வருதல் வேண்டுமென்று) நினைத்தனர், காமராசனும் - அம்மன்மதனாகிய தலைவனும், மாமலர் வாளியும் மதுர சாபமும் தேமரு மலர்க்கையிற் சேர்த்தி - பெருமை பொருந்திய பூம்பாணங்களையும் இனிய (கருப்பம்) வில்லையும் வாசனை பொருந்திய செந்தாமரைப் பூப்போன்ற (தன்) கரங்களிற் பரித்து, சேனையோடு - (தனது மகளிராகிய) சைநியத்துடன், ஆம்முறை - போர்க்குரிய முறைப்படி, அரனை அஞ்சுவான் - (ஆனால்) சிவபிரானை யிட்டுப் பயப்படுவானாகி, புகுந்தனன் - (அருச்சுனன் தவஞ் செய்யுமிடத்திற்) பிரவேசித்தான் எ—று.



மலர்வாளி - தாமரை, மா, அசோகம், முல்லை, நீலம் என்னும் ஐந்து மலர்களுமாம். பரமசிவன் முன்னர்த் தம்முடைய யோகநிலையைக் குழப்ப முயன்ற மன்மதனை யெரித்துள்ளாராதலின், "சுடுகண்ட பூனை அடுப்பங் கரையை நாடாது" என்றாங்கு, இப்பொழுதும் தம்மை நினைத்துத் தவஞ் செய்யும் அருச்சுனனுக்கு எதிரே செல்லின் பரமபதி தன்மீது சினங்கொள்வரோ வென அஞ்சுவனென்பார் 'அரனை யஞ்சுவான்' என்றார். "அரனு மஞ்சவே" என்பது பாடமாயின் உம்மையை உயர்வு சிறப்பாகக் கொண்டு, பரமசிவனும் அஞ்சும் வண்ணமெனப் பொருள் கொள்க. (௩௨)

செந்தமிழ் வரைதரு தேரன் செக்கர்வா
னந்தியா னையன்மதி யாத பத்திரன்
சிந்துவெம் முரசினன் செவ்வி கூரவே
வந்தனன் காலமும் வசந்த மாக்கியே.

இ—ள்: செந்தமிழ் வரைதரு தேரன் - செவ்விய தமிழுக்கு இருப்பிடமாகவுள்ள பொதியமலை உதவிய தென்றற் காற்றைத் தேராகவுடையவன், செக்கர் வான் அந்தி யானையன் - செவ்வானத்தோடு சேர்ந்த அந்திப் பொழுதை யானைப்படையாக உடையவன், மதி ஆதபத்திரன் - சந்திரனாகிய குடையைப் பிடித்தவன், சிந்து வெம் முரசினன் - சமுத்திரமாகிய கொடிய பறையை யுடையவனாகிய மாரன், காலமும் வசந்தம் ஆக்கி - அந்த நேரத்தையும் வசந்தகாலமாகச் செய்து, செவ்வி கூர வந்தனன் - அழகு வாய்ப்ப வந்தான் எ—று.

தமிழை வளர்க்கும் முனிவராகிய அகத்தியரின் வாசஸ்தானமாதலின் செந்தமிழ்வரை யெனவும், அம்மலையில் உற்பத்தியாகி வீசுங் காற்றே வசந்தனுக்குத் தேராகலின் வரைதரு தேரன் எனவுங் கூறினார். இக்காரணம் பற்றியே தென்றலுக்கு மலயக்கால் என்னும் பெயர் வந்தது. மலயம் - பொதியமலை. வெம் முரசு - விகாரமுற்றாரை வருத்துதலாகிய கொடுமையை யுடைய முரசு. தென்றல், அந்திக்காலம், சந்திரன், கடல் முதலியவைகள் மன்மதனுடைய வரிசைகளாகு மென்பது நூற் கொள்கை. தேரன், யானையன், ஆதபத்திரன், முரசினன் என்பன வினையெச்சப் பொருளில் வந்த குறிப்பு முற்றுக்கள். (௩௩)

வேறு.

கந்தனை யளித்த கன்னியோர் பாகங் கலந்தமெய்க் கண்ணுதற் கெதிராய்ச், செந்தமி ழுரைத்த குறுமுனி யிருந்த தெய்வமால் வரையிடைத் தோன்றி, யிந்துவு மரவு முறவுசெய் முடிமே லிருந்தமந் தாகினி யருவி, வந்திழி புனலுஞ் சந்தனங் கமழ வந்தது மந்தமா ருதமே.

இ—ள்: கந்தனை அளித்த கன்னி - கந்தசுவாமியை அருளிய நித்திய கன்னிகையாராகிய உமாதேவியார், ஓர் பாகங் கலந்த மெய்க் கண்ணுதற்கு - ஒப்பற்ற இடப்பாகத்திலே சேர்ந்துள்ள திருமேனியை யுடைய நெற்றிக் கண் பொருந்திய சிவபிரானுக்கு, எதிராய்ச் செந்தமிழ் உரைத்த - முன்பாக (இருந்து) செவ்விய தமிழ் மொழியைப் பயின்ற, குறுமுனி இருந்த - குறிய வடிவத்தையுடைய அகத்திய மகாமுனிவர் இருந்துள்ள,

தெய்வமால் வரையிடைத் தோன்றி - தெய்வத்தன்மை பொருந்திய பெரிய பொதிய மலையிலே பிறந்து, இந்துவும் அரவும் உறவுசெய் முடி மேல் இருந்த - பிறைச் சந்திரனும் பாம்பும் நட்புப் பாராட்டுகின்ற சடை முடியின் மீது பொருந்திய, மந்தாகினி யருவி வந்து இழி புனலும் - கங்கா நதி வந்து வீழ்தலாலுள்ள நீரும், சந்தனம் கமழ - சந்தனம் மணக்க, மந்த மாருதம் வந்தது - தென்றற் காற்றானது வந்து வீசியது எ—று.

கன்னியோர் பாகங் கலந்த மெய் - அர்த்தநாரீசுவர வடிவம்; திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியமுனி வருக்குச் செந்தமிழை அறிவுறுத்தினராதலின், "கண்ணுதற் கெதிராய்ச் செந் தமிழுரைத்த குறுமுனி" என்றார். பரமசிவனுடைய சடாமுடியிற் பொருந்தி யிருத்தலாகிய மகத்துவத்தினால் இந்துவும் அரவும் தமக்கு இயல் பாகவுள்ள பகைமை நீங்கி உறவு கொண்டிருந்தன வென்க. இதுமுதல் ௧௬ செய்யுள் எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம். (௫௪)

வம்பறு மதுரப் பல்லவங் கோதி மாமக ரந்தமா கந்தக்,
கொம்பெலா மிருந்து குயிலினங் கூவக் கொற்ற வெஞ் சிலையி
னான் முன்னஞ், சம்பரா சுரனை வென்றவீ ரனைப்பைந் தாமமா
மணிமுடி சூட்டி, யெம்பிரான் முனிவுக் கஞ்சலென் பதுபோ
லியைந்தது வசந்தகா லமுமே.

இ—ள்: வம்பு அறு மதுரப் பல்லவம் கோதி - நறுமணம் இடை யறாத இனிமையான தளிர்களைக் கோதி, மா மகரந்த மாகந்தக் கொம்பு எலாம் இருந்து - மாமரங்களின் தாதுக்களது நன்மணத்தோடு கூடிய கொம்பர்களிலே சஞ்சரித்து, குயில் இனம் கூவ - குயிற்பறவைகள் கூவ, கொற்றவெம் சிலையினால் - வெற்றியுடைய கொடிய வில்லினால், சம்பர அசு ரனை - சம்பரன் என்னும் அசுரனை, வென்ற வீரனை - வெற்றிகொண்ட (மன்மதனாகிய) வீரனுக்கு, பைந்தாம மாமணி சூட்டி - பசுமையாகிய மாலையணிந்த மாணிக்க ரத்தினம் அழுத்திய கிரீடத்தைச் சூட்டி, எம்பிரான் முனிவுக்கு அஞ்சல் என்பது போல் - எங்கள் தலைவராகிய பரமசிவனுடைய கோபத்திற்குப் பயப்படாதே யென்று சொல்லுந் தன்மையாக, வசந்த கால மும் இயைந்தது - வசந்த காலமும் பொருந்தி வந்தது எ—று.

எம்பிரான் தம்மைக் குறித்துத் தவம்புரியும் அருச்சுனனுக்கு யாதும் பங்கம் விளைக்கப் புகின் தன்னை முனிவரோ என்று பயந்து வந்த மன்மத னுக்கு வசந்தகாலம் முடிசூட்டி, அானுக்கு அஞ்ச வேண்டா, நானே துணையாக உடன்வருகின்றேனென அழைத்துவந்தவா றென்பதாம். முன் னர்ச் சம்பராசுரனை வென்ற மதனன் இப்பொழுது நாணாகிய விஜயனைச் சமீ பித்தற்கு அஞ்சியமை, அவன் பரமசிவனை நோக்கித் தவஞ் செய்கின்றா னென்பதை யிட்டேயா மென்க. மன்மதன் சிவனுக்கு அஞ்சி வந்தா னென் பதை, "......சேனையோ டாமுறை புகுந்தன னரனையஞ்சியே" என முன் இச் சருக்கத்தில் வந்துள்ள ௫௨-ம் கவியினாலு முணர்க; பகைவரை வெல்வ தற்குக் காலம் இடம் முதலியன சகாயமாக இருத்தல் வேண்டுமாதலின் இங்கே காலம் அவனுக்குச் சகாயமாயிருந்தமை கூறப்பட்டது. மாரன் காலத்தை வசந்த காலமாக்கினா னென்பதனை, "வந்தனன் காலமும் வசந்த மாக்கியே" என்னும் இச்சருக்கத்து ௫௭-ம் கவியினா லறிக.



வீரனை என்பதில் ஐ உருபுமயக்கம், வீரனுக்கு எனப் பொருள் கொள் ளப்பட்டது. ஆசிரியர் சிவத்தினிடம் தாம் பாராட்டும் பத்தியைக் குறிப் பால் உணர்த்துவார் வேறு வகையிற் கூறாது "எம்பிரான்" என்றார். அஞ் சல் எதிர்மறை யேவல். (௫௫)

பூதமைந் தினையும் புலத்துட னொடுக்கிப் புரிசடை யுடன்
புரு கூதன், காதலம் புதல்வ னருந்தவம் புரிதல் கண்டுபா
விப்பன போல, மாதிரந் தொறுஞ்செம் பல்லவச் செந்தீ வளர்த்து
வான் மணியினை நோக்கிப், பாதமொன் றினினின் றுயர்ந்தன
வொளிகூர் பணையுடைப் பாதவங் களுமே.

இ—ள்: புலத்துடன் பூதம் ஐந்தினையும் ஒடுக்கி - பஞ்சப் புலன்க ளுடன் ஐம்பூதங்களையும் ஒடுங்கச்செய்து, புரிசடையுடன் - கட்டப்பட்ட சடையையுடையனாகி, புருகூதன் காதல் அம்புதல்வன் - இந்திரனுடைய இனிய அழகிய மகனாகிய அருச்சுனன், அரும் தவம் புரிதல் கண்டு பாவிப் பன போல - அரிய தவத்தைச் செய்தலைப் பார்த்துத் தாமும் (அங்ஙனம்) பின்பற்றிச் செய்யுந் தன்மைபோல, மாதிரந் தொறும் செம்பல்லவச் செம் தீ வளர்த்து - திக்குகள் தோறும் செந்நிறமான தளிர்களாகிய செவ்விய அக் கினியை வளரச் செய்து, வான் மணியினை நோக்கி - சூரியனைப் பார்த்து, பாதம் ஒன்றினில் நின்று - (பாராரை யாகிய) ஒரு காலில் நின்று, ஒளி கூர் பணையுடைப் பாதவங்களும் உயர்ந்தன - ஒளி விளங்குகின்ற கொம்பர்களைக் கொண்ட மரங்களும் உயர்ந்து விளங்கின எ—று.

புலத்தை யொடுக்கலாவது ஐம்பொறிகளும் தத்தம் விடயங்களிற் செல்ல வொட்டாது தடுத்தல்; பூதமைந்தினையும் ஒடுக்குதலாவது பிருதிவியை அப்பு விலும், அப்புவைத் தேயுவிலும், தேயுவை வாயுவிலும், வாயுவை ஆகாசத் திலும் ஒடுக்குதல்; புலம் ஐந்தாவன: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். மலைச்சாரலிலுள்ள மரங்கள் தம் கொம்பர்களிற் செந்நிறமான தளிர் செறியப் பாராரையாகிய ஒரு காலில் மேலோங்கி நிற்றல், அருச்சுனன் பஞ் சாக்கினி மத்தியில் ஒற்றைக் காலில் நின்று தவஞ்செய்தலைப் பார்த்துத் தாமும் தவஞ் செய்தல் போன்றன என்பதாம். பாவித்தல் - இங்கே பின் பற்றுதல்; ஒன்றை இன்னொன்றாக ஒவ்வோர் காரணம்பற்றி மதித்தல்; சிவோகம்பாவனை கருடபாவனை என்னுமிவை பாவித்தலினால் வந்தன. "கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து" என வருதலால் அறிக; இச் சொல்லின் உண்மைப் பொருளை இக்காலத்தினர் விளங்காது பாவித்தலை உபயோகித்தல் என்னும் கருத்தில் வழங்குதல் தவறாகும். (௫௬)

உள்ளுறக் கலக்க மறத்தெளிந் தசலத் துயர்தலை முழை
யினின் றருவி, வெள்ளமொத் தமுதங் கரையறப் பொழிய
வெம்மையற் றளியுடன் குளிர்ந்து, புள்ளுடைக் கொடியோ திரு
வருங் காணாப் புண்ணியன் பொருப்பிடைத் தவஞ்செய், வள்ள
லொத் தனவச் சாரலைச் சூழ்ந்து வயங்குநீள் வாவியுஞ் சுனையும்

இ—ள்: அச்சாரலைச் சூழ்ந்து வயங்கு நீள் வாவியும் சுனையும் - அந்தக் கைலை மலையின் புறத்தைச் சுற்றி விளங்குகின்ற பரந்த வாவிகளும் சுனை களும், உள்ளுறு அக்கலக்கம் அறத் தெளிந்து - (எனையு வாவி சுனைகளில்

இயல்பாக வுள்ளதாகிய) அந்தக் கலங்குதல் முற்றாக ஒழியத் தெளிதலுற்று, அசலத்து உயர் தலை முழையினின்று அமுதம் அருவி வெள்ளம் ஒத்து கரை அறப் பொழிய - அம்மலையின் உயர்ந்த சிகரத்திலுள்ள முழைஞ்சுகளினின்றும் நீரானது ஆற்று வெள்ளத்தை யொத்துக் கரை சிதையும்படி பெருக, வெம்மை அற்று - சூரியனுடைய வெப்பம் இல்லாதொழிந்து. அளியுடன் குளிர்ந்து - வண்டுகள் மொய்ப்பக் குளிர்ச்சி யடைந்து, (இனி அருச்சுனனைக் குறிக்குங்கால்) உள்ளூறு அக்கலக்கம் அறத் தெளிந்து - மனத்தின் கண்ணே இயல்பாக வுள்ள சஞ்சலம் சந்தேக விபரீதம் முதலிய அக்கலக்க மெல்லாம் அற்றுப்போக ஞானமுற்று, அசலத்து உயர் முழையினில் நின்று - அசைவில்லாத உயர்ந்த சிரத்தின்கணுள்ள பிரமரந்திரத்தினின்று, அமுதம் அருவிவெள்ளம் ஒத்து - (சந்திர மண்டலத் திருந் தொழுகும்) அமிர்தம் ஆற்றுப் பெருக்கை நிகர்த்து, கரை யறப் பொழிய - எல்லையில்லாது சுரக்க, வெம்மை அற்று - கோபம் முதலாம் வெய்ய குணங்கள் தவிர்ந்து, அளியுடன் குளிர்ந்து - பத்தியோடு செந்தண்மை பூண்டு, புள்ளுடைக் கொடியோர் இருவரும் காணுப் புண்ணியன் பொருப்பிடை - பறவைகளாகிய கருடனையும் அன்னத்தையும் கொடியாக உயர்த்திய (முறையே) அரிபிரமர் இருவரும் காண்டற்கு அதீதரான புண்ணியமூர்த்தியாக வுள்ள பரமேசுவரன் சாந்நித்தியமாக எழுந்தருளிய கைலாய கிரியிலே (நின்று), தவஞ்செய் வள்ளல் ஒத்தன - தவஞ்செய்கின்ற ஈகையிற் சிறந்த அருச்சுனனை நிகர்த்தன.

முற்செய்யுளில் அம்மலையிலுள்ள விருக்கங்கட்கு அருச்சுனன் றவநிலையை ஒப்பிட்ட ஆசிரியர் இச்செய்யுளில் அம்மலைச் சாரலிலுள்ள வாவிகட்கும் சுனைகட்கும் அந்நிலையை ஒப்பாகக் கூறினரென்க. வாவி - பெரிய நீர்நிலை; சுனை - சிறிய நீர்நிலை. "புள்ளுடைக் கொடியோர் இருவருங் காணுப் புண்ணியன்" என்றதன் விரிவைக் கந்தபுராணம் காஞ்சிப் புராணம் அருணசலபுராணம் முதலியவற்றிற் காண்க. (௫௭)

நீறுபட்டிலங்கு மெய்ந்நில வொளியா னெஞ்சினி லிருளினை
யகற்றி, மாறுபட் டிடுமைம் புலன்களு மொடுக்கு மாதவன் வளர்த்த
செந்தழலாற்; கூறுபட் டுமையோ டொருவடிவானோன் குன்றுசூ
ழறைபொறை யனைத்தும், ஆறுபட் டுருகிப் பெருகியோ டினவா
லம்மலை வெள்ளியா தலினால்.

இ—ள்: மெய் நீறு பட்டு இலங்கும் நிலவு ஒளியால் - தேகத்தின் கண்ணே திருவெண்ணீறு படிந்து பிரகாசிக்கின்ற (ஞானமாகிய) சந்திரிகையினால், நெஞ்சினில் இருளினை யகற்றி - மனத்தின்கணுள்ள அவிச்சையாகிய இருளைக் கெடுத்து, மாறுபட்டிடும் ஐம்புலன்களும் ஒடுக்கும் - தவநிலையுடன் மாறுபட்டுள்ள ஐம்புலங்களின் உணர்ச்சியையும் அடக்கி நிற்கும்; மாதவன் வளர்த்த செந்தழலால் - பெரிய தபோதனனாகிய அருச்சுனன் வளர்த்த செந்நிறமான அக்கினியினால், உமையோடு கூறுபட்டு ஒருவடிவானோன் - அர்த்தநாரீசுவரராகிய சிவபெருமான் (எழுந்தருளி யுள்ள), குன்று சூழ் அறை பொறை அனைத்தும் - கைலை மலையிற் சூழ்ந்து கிடக்கின்ற பாறைகளும் துறுகற்களுமாகிய எல்லாம், அம்மலை வெள்ளியாதலினால் - அக் கைலைமலை வெள்ளிமலை யென்ற காரணத்தினால், உருகி ஆறுபட்டுப் பெருகி ஓடின - உருகி (நதிபோல) வழிக்கொண்டு பிரவாகித்துப் பாய்ந்தன.



"போதந் தருவது நீறு" "ஆசை கெடுப்பது நீறு" "அவல மறுப்பது நீறு" என்பன பெரியார் வாக்கியமாதலின் அத் திருவெண்ணீற்றினின்றும் பிறந்த ஞானவொளி அகத்தின்கட் பொருந்திய அவிச்சையைக் கெடுத்த தென்பார் "நீறுபட்டிலங்கு மெய்ந் நிலவொளியா னெஞ்சினி லிருளினை யகற்றி" யென்றார்; வெந்தழலுக்கு வெள்ளி உருகுமாறு விஜயன் வளர்த்த செந்தழலால் கைலாய கிரியிற் பொருந்திய பொருள்கள் உருகியமை நூதனமல்ல வென்பார் "அம்மலை வெள்ளியாதலினால்" என்றார். இச்செய்யுளால் பார்த்தனுடைய தவநிலைத் திண்மையும் கைலாயமலையின் மகத்துவமும் குறிப்பாற் கூறப்பட்டன வென்க. (௫௮)

அலைத்தடங் கடலி லமுதொடுற் பவித்தாங் கமரர்வாழ் பதி
குடி புகுந்தோர், குலைத்துமென் றெண்ணி யொருவருக் கொருவர்
கொடியிடை நுடங்கவந் தந்து, மலைத்தட நெருங்கப் புகுந்தனர்
குயிலு மயூரமு மானுமே யனையார், நிலைத்தவம் புரிவோ னைவகை
நெருப்பி னடுவுற நின்றவா கண்டார்.

இ—ள்: அலைத்தடம் கடலில் - திரை பொருந்திய பாந்த (பாற்)கடலிலே, அமுதொடு உற்பவித்து - அமிர்தம் பிறந்தபோது உடன்பிறந்து, ஆங்கு அமரர் வாழ்பதி குடி புகுந்தோர் - மேலேயுள்ள தேவர் வாழும் உலகத்திற் குடியேறியவர்களாகிய அரம்பை முதலிய நால்வரும், குலைத்தும் என்று எண்ணி - (அருச்சுனன் கொண்ட தவநிலையைப்) பங்கப்படுத்துவோமென நிச்சயித்து, குயிலும் மயூரமும் மானும் அனையார் - சொல்லினாற் குயிலையும் சாயலால் மயிலையும் நோக்கினால் மானையும் போன்றவர்களாய், கொடி இடை நுடங்க - பூங்கொடி போன்ற இடையானது துவள, ஒருவருக்கு ஒருவர் - ஒருவரைக் காட்டிலும் ஒருவர், அந்த மலைத்தடம் நெருங்க வந்து புகுந்தனர் - அந்த மலைச்சாரலிற் சமீபமாக வந்து சேர்ந்து, நிலைத்தவம் புரிவோன் - திடமான தவத்தைச் செய்பவனாகிய அருச்சுனன், ஐவகை நெருப்பின் நடுவுற நின்றவா கண்டார் - பஞ்சாக்கினி மத்தியில் நின்ற நிலையைக் கண்டார்கள் எ—று. ஐவகை நெருப்பு - நாற்புறமும் மூட்டிய தீயும் மேலேயுள்ள வெயிலுமாம். (௫௯)

அந்தரத் தமரர் துந்துபி முழங்க வநங்கதுந் துபியெதிர்
முழங்க, வந்துபொற் சிலம்பு மேகலை விதமு மலர்க்கைவெள்
வளைகளு முழங்கப், பந்தடித் திடுவா ரம்மனை யெறிவார் பயில்
கழங் காடுவார் நெற்றிச், சிந்துரத் திலகந் தீட்டுவா ராகித்
தனித்தனி திசைதொறுந் திரிவார்.

இ—ள்: அந்தரத்து அமரர் துந்துபி முழங்க - ஆகாயத்திலே தேவதுந்துபி யொலிக்க, அநங்க துந்துபி எதிர்முழங்க - மன்மதனுடைய பேரிகை பிரதி யொலியைச் செய்ய, வந்து - சமீபித்து, பொன் சிலம்பும் மேகலை விதமும் மலர்க்கை வெள் வளைகளும் முழங்க - பொன்னாலாய காற்சிலம்பும் மேகலை வர்க்கமும் பூப்போன்ற கைகளிற் பொருந்திய சங்க வளையல்களும் ஒலிக்க, பந்துஅடித்திடுவார் - பந்தடிப்பார்கள், அம்மனை எறிவார். அம்மனை யென்னும் விளையாட்டிற்குரிய காய்களை எறிவார்கள், பயில் கழங்கு ஆடுவார் - தாம் நன்கு பயின்றுள்ள கழங்காடுவார்கள், சிந்தூரத் திலகம்

நெற்றியில் தீட்டுவாராகி - தத்தம் நெற்றியிற் சிந்தூரப் பொட்டை யிடுவார்களாய், திசைதொறும் தனித்தனி திரிந்தார் - திசைகள் நான்கினும் தனித்தனி திரிந்தார்கள் எ-று.

அருச்சுனனுடைய தவநிலையைப் பங்கப்படுத்துதல் இந்திரன் முயற்சியாதலினால் தேவதுந்துபி ஒலித்ததாகும். அநங்க துந்துபி மன்மதனுக்குரியதாகிய முரசு. அவனுக்கு முரசு கடலென்பர்; மேகலை பல மணிகள் கோக்கப்பட்டதாய் எட்டு வகைத்தா யிருத்தலின் "மேகலை விதமும்" என்றார். அம்மனை கழங்கென்னு மிவைகள் மகளிர் விளையாட்டுக்களாம். தனித்தனி திசைதொறும் என்றது திசைக்கு ஒருத்தியாக நாற்றிசையும் நின்றவாறும். காண்டீபனுடைய உள்ளத்திற் காமவிகார முண்டாகு மென்றும் அங்ஙன முண்டாகவே அவனுடைய தவநிலை சிதையு மென்றும் எண்ணிய தேவமகளிர் இங்ஙன மெல்லாஞ் செய்தன ரென்றபடி. (௧௦)

குயிலொடு கூவிக் கிஞ்சுக மலர்ந்து கொஞ்சுபைங் கிளிகளை
யழைப்பார், மயிலின நடிக்கத் தாமும்வண் கலாப மணியணி
யொலியெழ நடிப்பார், வெயில்விடு பரிதி மதியுடன் வலஞ்செய்
விடரக முழுவது மொலிப்பக், கயிலையங் கிரியின் சாரலோ
வெம்மூர்க் கடவுளா லயமெனக் களிப்பார்.

இ-ள்: கயிலை அம் கிரியின் சாரலோ - அழகிய கயிலை மலையின்சாரலோ, எம் ஊர்க் கடவுள் ஆலயம் எனக் களிப்பார் - எங்கள் சுவர்க்கலோகத்திலுள்ள இந்திரனுடைய சுதன்மை யெனப்படும் மாளிகையாகு மென்று மகிழ்ச்சி யடைந்தவராய், வெயில் விடு பரிதி மதியுடன் வலம்செய் - ஒளி காலுகின்ற சூரியனும் சந்திரனும் சூழ்ந்துவரும்; விடர் அகம் முழுவதும் ஒலிப்ப - குகைகளினிட மெல்லாம் எதிரொலிக்க, கிஞ்சுகம் மலர்ந்து - முருக்கம்பூப்போலும் சிவந்த வாயைத் திறந்து, குயிலுடன் கூவி - குயில்கள் கூவ அவற்றுடன் எதிர்கூவி, கொஞ்சு பைம் கிளிகளை அழைப்பார் - கொஞ்சிப் பேசுகின்ற பசிய கிளிகளைக் கூப்பிடுவார்கள்; மயில் இனம் நடிக்க - மயிற்கூட்டங்கள் ஆட, வண் கலாபமணி அணி ஒலி எழத் தாமும் நடிப்பார் - சிறந்த கலாபமாகிய இரத்தினாபரணத்தினின்றும் ஒலி யுண்டாகத் தாங்களும் நாட்டியஞ் செய்வார்கள் எ-று.

மேகலை பல மணிகளைக் கோத்த எட்டு வடங்கொண்ட தென்பதும், கலாபம் இருபத்தொரு வடத்தினையுடைய தென்பதும் நச்சினார்க்கினியருரையாகும். மேகலை ஏழு வடத்தையுடைய தென்பதும் கலாபம் பதினாறு வடத்தை யுடைய தென்பதும் வீரமண்டலவருடைய கூற்றாகும். கலாபம் இரட்டுறமொழிதல்; மயிலைக் குறிக்கும்போது தோகை யெனப்படும். குயில் கூவக் கேட்டு மகளிரும் எதிர் கூவுதல் உலக வழக்காகும்; அருச்சுனனுடைய உள்ளத்தைப் பேதிக்க வெண்ணி அத்தேவமகளிர் இங்ஙனஞ் செய்யத் தொடங்கின ரென்பதாம். (௧௧)

கூந்தன்மா முகிலைக் குலைத்துடன் முடிப்பார் குங்குமங்
கொங்கைமே லணிவார், ஏந்துபே ரல்குற் கலைநெகிழ்த் துடுப்பா
ரிட்டவுத் தரியமாற் றிடுவார், பூந்துகி னனைய நறுஞ்சுனை படிவார்



புழுகுசந் தனநறும் பனிநீர், காந்திகொ டெறிவார் காமவேதத்
தைக் கருங்கடைக் கண்களான் மொழிவார்.

இ-ள்: கூந்தல் மா முகிலைக் குலைந்து உடன் முடிப்பார் - தங்கள் கூந்தலாகிய கருமேகத்தை அவிழ்த்து உடனே முடிப்பார்கள்; குங்குமம் கொங்கைமேல் அணிவார் - குங்குமச் சாந்தைத் தனங்களின்மீது மட்டிப்பார்கள்; பேர் அல்குல் ஏந்து கலை நெகிழ்த்து உடுப்பார் - சிறந்த இடையில் தரித்துள்ளதாகிய ஆடையை நெகிழச்செய்து பின்னர் உடுப்பார்கள்; இட்ட உத்தரியம் மாற்றிடுவார் - மார்பிலிட்ட மேலாடையை மாற்றி அணிந்துகொள்வர்; பூந்துகில் நனைய நறுஞ்சுனை படிவார் - பொலிவாகிய வஸ்திரம் நனைந்துபோம் வண்ணம் வாசனை பொருந்திய மலைச்சுனையில் மூழ்குவார்கள்; புழுகு சந்தனம் நறும் பனிநீர் - புழுகு சந்தனக்குழம்பு வாசனையுடைய பனிநீர் என்னுமிவைகளை, காந்தி கொடு எறிவார் - கமுகம் பாளையிலிட்டுச் சிவிறுவார்கள்; காமவேதத்தைக் கரும் கடைக்கண்களால் மொழிவார் - காம சாத்திரத்தின் குறிப்பைக் கருமையாகிய கடைக்கண்களின் பார்வையால் தெருட்டுவார்கள் எ-று.

மா - கருமை. பேரல்குல் - சிறந்த இடை (அரை). உத்தரியம் - இக்காலத்திற் றாவணி என வழங்கும். கமுகைக் குறிக்கும் கந்தி என்னுஞ்சொல் முதனீண்டு காந்தி யென வந்தது; அது முதலாகுபெயராய் கமுகம்பாளையைக் குறித்தது. கமுகம் பாளையில் மேலே சொல்லப்பட்ட சுகந்தாதிகளைச் சேர்த்துச் சிவிறுதல் அக்காலத்தில் மகளிரிடத்துள்ள வழக்கென்பர். முதற் குயிலினைக் கூவியும் கிளியை யழைத்தும் மயிலென நடித்தும் விஜயனுடைய சிந்தையைப் பிறழச்செய்ய முயன்ற தேவமகளிர், அவை பயன் பெறாமை கண்டு பின் தம் அங்கங்களில், விகாரமடைந்தாரால் விரும்பப்படுவனவற்றை ஒருவாறு காட்டி அவனுடைய திடபத்தியைப் பங்கப்படுத்த முயன்றன ரென்றபடி. (௧௨)

பண்ணுடை யெழாலி னின்னிசை வழியே பாடுவார் பைங்
குழல் குறிப்பார், பெண்ணுடை மடநா ணகன்றபே ரமளிப் பேச்
செலாம் பேசிவந் தடுப்பார், விண்ணுடை யமிர்தம் பருகுவா ருகி
ரான் மென்மலர் கொய்துமே லெறிவார், எண்ணுடை மடவார்
புரிந்தன விவ்வா றிங்கித மெத்தனை கோடி.

இ-ள்: பண்ணுடை எழாலின் இன்னிசை வழியே பாடுவார் - பண்ணமைந்ததாகிய யாழினது இனிமையாகிய இசையின் வழியே பாடுவார்கள்; பைங்குழல் குறிப்பார் - பசுமையாகிய வேய்ங்குழலை ஊதுவார்கள்; பெண் உடை மடம் நாண் அகன்ற - பெண்களுக்குரியனவாகிய மடம் நாணம் நீங்கிய, பேர் அமளிப்பேச்சு எலாம் பேசி வந்து அடுப்பார் - பரந்த படுக்கையிற் (காதலருடன் பேசும்) பேச்சுக்களை யெல்லாம் (அங்கே) பேசிக்கொண்டு சென்று சமீபிப்பார்கள்; விண்ணுடை அமிர்தம் பருகுவார் - சுவர்க்க லோகத்துக்குரியதாகிய அமிர்தத்தைக் குடிப்பார்கள்; உகிரால் மெல் மலர் கொய்து - தம் காத்து விரல்களிலுள்ள நகங்களினால் மிருதுவாகிய பூக்களைக் கிள்ளி, மேல் எறிவார் - அருச்சுனன்மீது வீசுவார்கள்; எண்ணுடை மடவார் - மதிப்புடைய அப்பெண்கள், இவ்வாறு புரிந்த இங்கிதம்

எத்தனை கோடி - இப்படிச்செய்த விரகத்தை யுணர்த்துங் குறிகள் எவ்வளவு கோடிக்கணக்கானவை எ—று.

பண்ணுடை எழால் - இறை நரம்பமைந்த யாழ்; குழல்குறிப்பார் - குழலூதுவார்; குறித்தல் ஊதுதல் என்னும் பொருள்பட வருதலை இந் நூலிலுள்ள காண்டவதகனச் சருக்கத்தில் "......அருச்சுனன் றனது வெற்றிகொள் சங்கமூங் குறித்தான்" என வருதலாலுணர்க. அமளிப்பேச்சு - சரசசல்லாபம். கோடி - பல என்ற கருத்தில் வந்தது. இத்தேவமகளிர் முதல் அருச்சுனனுடைய கட்புலனுக்கும் பின் செவிப்புலனுக்கும் தோன்றும்படி முறையே நடித்தும் நீராடியும் பின் கூவியும் பாடியும் அவனுள்ளத்தைக் குலைத்தல் இயலாமை கண்டு பின்னர் அவன் மெய்ப்புலனிற் றோன்றத் தம் விருப்பைக் காட்டவேண்டிப் பூக்களைக் கிள்ளி யெறிவாராயின ரென்பார் "உகிரான் மென்மலர் கொய்து மேலெறிவார்" என்றார். குழல் - பண்பாகு பெயர். எண் - முதனிலைத் தொழிற்பெயர். (௬௫)

காவும்வண் புறவுங் கயங்களு மரும்பக் கவர்ந்தவெங் கணை
களா மைந்து, பூவும்வந் துள்ள முறவுறப் பட்டுப் புதையவும் புலன்
வழி யன்றி, மேவுதன் கருத்தின் வழியிலே நின்ற விசயனை யங்கி
பால் வில்லு, மேவுமுன் பெற்ற விறைவனை யெய்தெய் திளைத்தன
னிரதிகேள் வனுமே.

இ—ள்: காவும் வண் புறவும் கயங்களும் அரும்ப - சோலைகளும் வளப்பமுடைய வனமும் குளங்களும் அவற்றிற்குரிய பூக்களைப் பூக்க; கவர்ந்த வெம் கணைகளாம் ஐந்து பூவும் - (அவற்றின்கண்) கொய்த கொடிய பாணங்களாகிய ஐந்து பூக்களும், வந்து உள்ளம் உற உறப் பட்டுப் புதையவும் - வந்தடைந்து மனத்தின்கண் மிகவும் உறைக்கப் பட்டுப் புதைந்து கொள்ளவும், புலன்வழியன்றி மேவுதன் கருத்தின்வழியிலே நின்ற விசயனை - ஐம்புலன்கள் வழிச் செல்லுதலின்றி ஒருவழியுற்ற தன் தியானத்திலே திடப்பட்டு நின்ற அருச்சுனனை; அங்கிபால் முன் வில்லும் ஏவும்பெற்ற இறைவனை; அக்கினி தேவனிடத்து முந்தி வில்லும் அம்பும் பெற்ற தலைவனை; இரதி கேள்வன் எய்து எய்து இளைத்தனன் - இரதியின் நாயகனாகிய மன்மதன் பூவாளிகளால் எய்து எய்து அலுத்தான் எ—று.

புதைதல் - தாக்கமாக ஏறுதல், உற உற எய்து எய்து என்னுமடுக்குகள் மிகுதியைக் குறித்து நின்றன; அங்கிபால் வில்லும் ஏவும் முன் பெற்றமை காண்டவ தகனஞ்செய்த காலத்தாம். அருச்சுனனுக்கு அக்கினிதேவனுடைய அருளுமுண்டாதலான் இப் பஞ்ச பாணங்கள் வெம்மையைத் தாவல்லனவல்ல வென்பதைக் குறிப்பாலுணர்த்துவார் "அங்கிபால் வில்லு மேவு முன் பெற்ற விறைவனை" என்றார். காவில் அசோகமும் மாவும், புறவில் முல்லையும், கயத்திலே தாமரையும் உண்டாதல் கொள்க. (௬௬)

கூற்றினை யுதைத்த பாதமு முடுத்த குஞ்சரத் துரிவையு மணி
ந்த, நீற்றொளி பரந்து நிலவெழு வடிவு நிலாவெயி லனலுமிழ் விழி
யும், ஆற்றறல் பரந்த கொன்றைவார் சடையு மல்லதை யாவையுங்
கருதான், மாற்றமொன் றின்றி நின்றனன் வரைபோல் வச்சிரா
யுதன்றிரு மகனும்.



இ—ள்: வச்சிர ஆயுதன் திரு மகனும் - குலிசப் படையையுடைய இந்திரனது சிறந்த மகனாகிய அருச்சுனனும்; கூற்றினை உதைத்த பாதமும் - (மார்க்கண்டேயர் பொருட்டு) யமனை உதைத்துள்ள இடத்திருவடியையும், உடுத்த குஞ்சரத்து உரிவையும் - திருமேனிமீது போர்த்தருளிய (கயாசுரன் என்னும்) யானையின் றோலையும், அணிந்த நீற்றொளி பரந்து நிலவு எழுவடிவும் - (உயிர்களின் பாசநீக்கத்தின் பொருட்டுப்) பூசியுள்ள திருநீற்றின் பிரகாசமானது பரவி நிலாவெறிக்கப்பெற்ற திருமேனியையும், நிலாவெயில் அனல் உமிழ் விழியும் - நிலாவையும் வெயிலையும் நெருப்பையும் (முறையே) காலுகின்ற (சந்திரன் சூரியன் அக்கினியாகிய) முக்கண்களையும், ஆற்று அறல் பரந்த கொன்றை வார்சடையும் - கங்கையாற்றின் நீர் பெருகப்பெற்ற கொன்றை மலர் பொருந்திய நீண்ட சடாமுடியையும், அல்லதை யாவையும் - அல்லாத எவற்றையும், கருதான் - சிந்தியாதவனாய், மாற்றம் ஒன்று இன்றி வரைபோல் நின்றனன் - மாறுதல் எதுவுமில்லாமல் மலைபோல(த் திண்மை பொருந்த ஏகாக்கிரசித்தமுடையவனாய்) நின்றான் எ—று.

சிவபிரான் யமனைத் தமது இடத்திருவடியினால் உதைத்தாரென்பதை "பதி மூன்றுஞ், சிதைத்தான் வாமச் சேவடி தன்னாற் சிறிதுந்தி, உதைத்தான் கூற்றன் விண்முகில்போன் மண்ணுற வீழ்ந்தான்" எனவருங் கந்தபுராணத் திருவிருத்தத்தா லுணர்க. உடுத்த - இங்கே போர்த்த; பரமேசுவரன் தமது செய்ய திருமேனியில் உத்தூளனமாகத் தரித்தருளிய விபூதி தண்ணிலவெறிக்கு மென்பதை "பவள மால்வரையி னிலவெறிப்பதுபோற் பரந்த நீற்றழகு" என வருந் திருவாதவூரடிகள் புராணக் காப்புச் செய்யுளானு மறிக. இடக்கண் சந்திரனும் வலக்கண் சூரியனும் நுதற்கண் அக்கினியு மாதலின் "நிலா வெயி லன லுமிழ் விழி" எனப்பட்டது; அல்லதை யென்பதில் ஐ சாரியை யெனினுமாம். மாற்றம் தொழிற்பெயர்; மாறு பகுதி, அம் புடைபெயர்ச்சியை உணர்த்தும் விகுதி; பகுதி யொற்றிரட்டல் விரித்தல்; உகரக்கேடு சந்தி; மாற்றமொன்றின்றி யென்பதற்கு யாதும் வார்த்தை யாடுதலின்றி யெனப் பொருள் கூறுதலுமுண்டு.

கூற்றினை யுதைத்த பாதத்தை நினைத்தலால் யமபயநீக்கமும், உடுத்த குஞ்சரத்துரிவையைச் சிந்தித்தலால் அசுர ராக்கதரால் நேரும் இடையூற்றையிட்டெழும் அச்ச நீக்கமும், அணிந்த நீற்றொளி பரந்து நிலவெழு வடிவை நினைத்தலாற் பாசநீக்கமும், நிலா வெயி லனலுமிழ் விழிகளை உள்ளத்துப் பதித்தலால் அஞ்ஞானமாகிய அந்தகாரத்தின் நீக்கமும், ஆற்றறல் பரந்த சடையை உள்ளத்துன்னுவதால் நீர் முதலாம் பஞ்சபூதங்களால் வரத்தக்க இடையூறுகளின் நீக்கமும், கொன்றை வார்சடையை உள்ளுவதனால் அடியார் செய்யும் பூசையை அரன் உவந்தேற்று அவ்வடியார்க்குச் செய்யும் திருவருட்டிறத்தின் பெருமை புலப்படுதலும் உண்டாமென்க. இது சிவத்தியானங் கூறியவாறும். (௬௭)

அன்றர னிருந்த யோகினை யுகற்றி யறிவிலா தனங்கனு
வெந்த, குன்றிது தடங்க ளுயிர முடையோன் கூறிய கூற்றினைத்
தேறி, யின்றிவன் மதலை புரிதவங் குலைத்தா லென்விளைந் திடுமென
வஞ்சி, நின்றிலன் மதன னிற்குமோ நெற்றி நெருப்பினு னீறுபட்
டுள்ளோன்.

இ—ள்: அரன் அன்று இருந்த யோகினை - பரமசிவன் முன்னொரு காலத்திற் கொண்டிருந்த ஞானயோக நிலையை, அறிவிலாது அகற்றி - ஞானமில்லாமையினாற் பங்கஞ்செய்ய முயன்று, அநங்கனா வெந்த குன்று இது - (நான்) உருவற்றவனாக வெந்து சாம்பரானமைக்கு இடமாகவுள்ள மலை இக்கைலையாகும்; ஆயிரம் தடம் கண் உடையோன் கூறிய கூற்றினைத் தேறி - ஆயிரம் பெரிய விழிகளை(த் தன் அங்கமெங்கும்) உடைய இந்திரன் சொன்ன சொல்லை நம்பி, இவன் மதலை புரி தவம் இன்று குலைத்தால் - இவ்விந்திரனுடைய மகனாகிய அருச்சுனன் ஆற்றுந் தவத்தினை இப்பொழுது பங்கப்படுத்தினால், என் விளைந்திடும் என அஞ்சி - (இன்னமும்) எனக்கு என்ன (தீமை) விளையுமோ என்று பயந்து, மதனன் நின்றிலன் - மன்மதன் அவ்விடத்தில் நிற்றலின்றி நீங்கினான்; நெற்றி நெருப்பினால் நீறுபட்டுள்ளோன் நிற்குமோ - பரமசிவனுடைய நெற்றிக்கண் நெருப்பினால் (முந்திச்) சாம்பரான மதனன் (பின்னருந் துணிந்து அம்மலையில்) நிற்பனோ, (நிற்க மாட்டான்) எ—று.

இவ்விந்திரனோ நல்ல ஞானமில்லாதவன்; நல்ல ஞானமுடையனாபின், கௌதமமுனிவர் பத்தினியாகிய அகலிகையிடத்திற் காவிற் சென்று அவளைக் கூட முயன்று அம்முனிவர் சாபத்திற்காளாய் ஆயிரங் கண்களைத் தன் மேனியிற் பெற்றிருக்கமாட்டான்; அப்படிப்பட்ட இந்திரனும் பிரமனும் சொன்ன புத்தியைக் கேட்டு இக்கைலையின்கண்ணே முன்னொருநான்று வந்து இறைவன் இருந்த யோகநிலையைப் பங்கஞ்செய்ய முயன்று அப்பெருமானுடைய நெற்றிநாட்டத் தீயினால் வெந்து சாம்பராய் அந்நாட்டொடக்கம் அநங்கனாகச் சஞ்சரிக்கும் யான், இப்பொழுதும் இப்பெருமானைக் குறித்து அருந்தவஞ் செய்யும் இவ்விசயன் றவநிலையைக் குழப்ப முயல்வேனேல், எவ்வகையான தீமை விளையுமோ என முந்திய நிகழ்ச்சியையுஞ் சிந்தித்து அஞ்சி மன்மதன் அவ்விடத்தைவிட் டகன்றா னென்பதாம். நிற்குமோ என்பதில் ஓ எதிர்மறைப்பொருளில் வந்தது. (௬௬)

வானவர் பெருமா னேவலால் வந்த வானவர் மகளிருந் தம்
மால், ஆனவக் கிரீடை யாவையும் புரிந்து மொருபயன் பெற்றில
ரகன்றார்; கானக முழுதும் பரிமளம் பரப்பிக் கானவண் டிமிர்
தரப் புகுந்த, வேனிலு மகன்ற தருக்கனுங் குடபால் வெண்டிரை
வேலைவாய் வீழ்ந்தான்.

இ—ள்: வானவர் பெருமான் ஏவலால் வந்த வானவர் மகளிரும் - தேவர்கட்கு அரசனாகிய இந்திரனுடைய தூண்டுதலினால் (அங்கே) சென்ற (உருப்பசி முதலாம்) தேவ மகளிரும், தம்மால் ஆன அக்கிரீடை யாவையும் புரிந்தும் - தங்களால் இயன்ற அக்காமத்திற்குரிய விளையாட்டெல்லாவற்றையுஞ் செய்தும்; ஒரு பயன் பெற்றிலர் அகன்றார்-ஒருவகையான அநுகூலத்தையும் அடையாதவராய் (அவ்விடத்தை விட்டு) நீங்கினார்கள்; கானகம் முழுதும் பரிமளம் பரப்பி - காடெங்கும் நறுமணத்தைப் பரவச்செய்து, கான வண்டு இமிர் தரப் புகுந்த வேனிலும் அகன்றது - இசைப்பாட்டை யுடைய வண்டுகள் ஒலிசெய்யும்படி (அங்கே) தோன்றிய வேனிற்காலமும் நீங்கியது; அருக்கனும் குடபால் வெள் திரை வேலைவாய் வீழ்ந்தான் - சூரியனும் மேற்குத்



திக்கிலுள்ள வெள்ளிய திரை மறியும் சமுத்திரத்தினிடத்து வீழ்ந்து மறைந்தான் எ—று. [பொழுதுபட்ட தென்றபடி]

கிரீடை - ஈண்டுக் காமத்தைக் கிளரச் செய்தற்காகிய லீலை. இமிர்தர - ஒலிக்க, ஒரு பயன் என்பதனீற்றில் முற்றும்பொருளோடு இழிவுசிறப்புப் பொருளுந் தரும் உம்மை தொக்கது. தமக்குத் துணையாக வந்த மன்மதன் அவ்விடத்தைவிட் டகலவே, அத்தேவமகளிர் நால்வரும் தாம் அங்கு அதன் மேலும் நிற்பதாற் பயனில்லையெனக்கண் டகன்றனர்; மாரனுக்குத் துணையாக வந்த வசந்தகாலமும் அவ்வசந்தகாலத்திற்குரிய பரிமளம் வண்டுகளென்னுமிவைகளும் நீங்கின வென்பதாம். (௬௭)

வேறு.

இந்திரன் சுதன்ற னெண்ணம் யாவதென் றினிதி னெண்ணி
யிந்திர சால மாக வேவினா ரெவரு மெய்தி
யிந்திர நீலந் தன்னி லிறைவனுக் குரைத்தா ரந்த
விந்திரன் றானு மைந்தன் றவம்புரி யிருக்கை சேர்ந்தான்.

இ—ள்: ஏவினார் எவரும் - (இந்திரனால்) ஏவப்பட்டவரெல்லாரும், இந்திரன் சுதன்றன் எண்ணம் யாவது என்று இனிதின் எண்ணி - தெய்வேந்திரனுடைய மகனாகிய அருச்சுனன் கொண்ட நோக்கம் எத்தன்மையதென நன்கு சிந்தித்து, இந்திரசாலமாக - இந்திரசாலமென்னும் வித்தை போல, இந்திர நீலந்தன்னில் எய்தி - இந்திரனுடைய (சுவர்க்க) உலகத்திற் போய், இறைவனுக்கு உரைத்தார் - தங்கள் தலைவனாகிய இந்திரனுக்கு (அருச்சுனன் செய்யுந் தவத்தின் திண்மையையும் தாங்கள் சென்ற கருமம் அனுகூலமுறாமையையும்) முறையிட்டார்கள்; அந்த இந்திரனும் மைந்தன் தவம்புரி இருக்கை சேர்ந்தான் - அதனைக் கேட்டவனாகிய இந்திரனும் தன் குமாரன் தவஞ்செய்கின்ற இடத்தை யடைந்தான் எ—று.

இந்திரசாலம் - இந்திரசம்பத்துப் போல்வனவற்றை யெல்லாம் உடனுக்குடன் காட்டி மறைத்தலாகிய வித்தை; இது நிலையற்றதென்பதை உணர்த்துவது; அங்கே சென்ற உருப்பசி முதலாந் தேவமகளிர் வசந்தகாலம் தென்றற்காற்று முதலியவற்றோடு அற்ப நேரத்தில் மறைந்தனராதலின் "இந்திரசாலமாக" என்றார். "வந்ததோர் வாழ்வுமோ இந்திரசாலக் கோலம்" எனத் தாயுமான சுவாமிகள் கூறியவாற்றானும் உணர்க. இந்திர நீலம் - தேவலோகம். நீலம் நீட்டல் விகாரம். அந்த பண்டறிசுட்டு; இருக்கை தொழிலாகுபெயர். (௬௮)

இதுமுதல் ஏழு செய்யுட்கள் அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விருத்தமா முனிவ னாகி விசயனை நோக்கி யாது
கருத்துநீ தவஞ்செய் கின்ற காரண மென்னை யென்னத்
திருத்தகு சிந்தை யோடுஞ் செந்தழ லிடைநின் றோனு
மருத்துவா னுருவ மாறி வந்தவா றுணர்கி லாதான்.

இ—ள்: விருத்தமா முனிவன் ஆகி - (அங்ஙனஞ் சேர்ந்த இந்திரன்) மூப்புள்ள பெருமையுடைய முனிவன் வடிவங்கொண்டு, விசயனை நோக்கி -

(சமீபத்தில் வந்து) அருச்சுனனைப் பார்த்து, (தவஞ் செய்கின்ற) கருத்து யாது - நீ தவம்புரிகின்ற நோக்க மென்னை, நீ தவம் செய்கின்ற காரணம் என்னை - நீ தவம் இயற்றுகின்ற ஏதுவென்னை, என்ன - என்று வினவ, செம் தழலிடை திருத்தகு சிந்தையோடும் நின்றோனும் - மகத்துவம் வாய்ந்த தியானத்துடன் செவ்விய நெருப்பின் மத்தியில் நின்றவனாகிய அருச்சுனனும், மருத்துவான் உருவம் மாறி வந்த ஆறு உணர்கிலாதான் - இந்திரன் தன் வடிவம் மாறி வந்த வரலாற்றை அறிகிலனாய் எ—று.

கருத்து - நோக்கம், காரணம் - ஏது, இங்கே சிவனிடத்துப் பாசுபதம் பெறுதல் கருத்தெனவும் பகைவரை வெல்லுவதற்காகவே அதனைப் பெற முயலுதல் காரணமெனவுங் கொள்க. சிவத்தியானத்தோடு கூடிய சிந்தையாதலின் "திருத்தகு சிந்தை" என்றார். மருத்துவன் - இந்திரன், அது மருத்துவான் என நீண்டது. இச்செய்யுள் குளகம். (௬௯)

மாசறு மதிய மன்ன வாண்முக மங்கை பாகத்
தீசன்வந் தெய்து காறு மித்தவம் புரிவே னென்ன
வாசறு கடவு ளோர்க்கு மருமறை தனக்கு மெட்டாத்
தேசவன் வருமோ வென்று சிரித்தனன் றேவர் கோமான்.

இ—ள்: மாசு அறு மதியம் அன்ன - களங்கம் நீங்கிய பூரண சந்திரனை யொத்த, வாள்முக மங்கை பாகத்து ஈசன் - ஒளியோடு கூடிய முகத்தினையுடைய உமையம்மை இடத் திருமருங்கில் இருக்கப்பெற்ற முழுமுதற் கடவுள், வந்து எய்து காறும் - எழுந்தருளிவந்து காட்சிதரும் வரையும், இத்தவம் புரிவேன் என்ன - இத் தவத்தைச் செய்வேன் என்று (அருச்சுனன்) சொல்ல, தேவர் கோமான் - (அதனைக் கேட்ட) தேவேந்திரன், ஆசு அறு கடவுளோர்க்கும் - குற்றமகன்றவர்களாகிய தேவர்களுக்கும், அருமறை தனக்கும் - அரிய வேதங்களுக்கும், எட்டா - அகப்படாத, தேசவன் வருமோ - பரஞ்சோதியாகிய சிவபிரான் (உன்னிடம்) எழுந்தருளி வருவரோ, என்று சிரித்தனன் - என்று சொல்லிச் சிரித்தான் எ—று.

மாசறு மதியம் - களங்கம் தேய்தல் வளர்தல் என்னு மூனங்க ளில்லாத சந்திரன். ஈசன் - எல்லார்க்குந் தலைவன்; இந்நாமம் சிவபிரானுக்கே சிறப்பாக நின்றது. பிரம விஷ்ணுக்கள் தாமே பரப்பிரம மென்று தனித் தனி மாறுபட்டுச் சமர் விளைத்தபோது அவ்விருவருக்கு மிடையே சோதிப் பிழம்பாகத் தோன்றி அவ் வரி பிரமர் முறையே அடியையும் முடியையும் காண்டற்கு அதீதராய் நின்றுள்ளவ ரென்பார் "ஆசறு கடவுளோர்க்கு... ...மெட்டாத் தேசவன்" என்றார். ஆசு - அகங்காரம் முதலிய குற்றம். அருமறை தனக்கு மெட்டாத் தேசவன் என்பதனை "வேதக் காட்சிக்குமுபநிடத் துச்சியின் விரித்த போதக் காட்சிக்குங் காணலன்........" என வருங் கந்த புராணத் திருவிருத்தத்தானுணர்க; காறும் என்பதில் உம்மை முற்று. கடவுளோர்க்கும் மறைதனக்கும் என்ற உம்மைகள் உயர்வோடு எச்சமுமாம். ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. (௭0)

சிரித்ததே னென்ன மீண்டுந் திருமகன் றன்னை நோக்கி
வருத்தமே யன்றி யிந்த மாதவம் பயனின் றென்று



னுருத்திவ னவனை நோக்கி யுயிரிறு மளவு மிந்தக்
கருத்துநான் வீடே னென்றான் கடுங்கன லூடு நின்றான்.

இ—ள்: சிரித்தது என் என்ன - சிரித்தமை ஏன் என்று (அருச்சுனன்) வினவ, திருமகன் தன்னை மீண்டும் நோக்கி - தனது அரிய மகனைப் பின்னரும் பார்த்து, இந்த மாதவம் வருத்தமே அன்றி பயன் இன்று என்றான் - (நீ செய்யும்) இத்தவத்தினால் சிரமமேயொழிய நன்மையில்லை என்று (இந்திரன்) கூறினான்; கடுங் கனல் ஊடு நின்றான் இவன் - வெவ்விய பஞ்சாக்கினி மத்தியிலே நின்றவனாகிய இந்த அருச்சுனன், அவனை உருத்து நோக்கி - அந்த இந்திரனைச் சினந்து பார்த்து, நான் இந்தக் கருத்தினை உயிர் இறும் அளவும் வீடேன் என்றான் - நான் இந்த நோக்கத்தை என்னுயிர் போகும் வரையிற் கைவிடேன் என்று கூறினான் எ—று.

தான் கொண்ட நியதிக்கு மாறாகக் கூறி அலட்சியமாக இந்திரன் சிரித்தானாதலின் சிரித்ததேனென வினவி உருத்தனனென்க. வருத்தமே யென்பதில் ஏகாரம் பிரிநிலை, விடேன் வீடேனென நீண்டது. (௭௧)

மைந்தனிம் மாற்றங் கூற மனனுற மகிழ்ந்து தெய்வத்
தந்தையும் விருத்த வேடந் தனையொரு கணத்தின் மாற்றி
யிந்திர னாகி முன்னின் றிப்பெருந் தவத்தால் வந்து
பைந்தொடி பாகன் பாசு பதமுனக் குதவு மென்றான்.

இ—ள்: மைந்தன் இம் மாற்றம் கூற - மகன் இந்த விடையைச் சொல்ல, தெய்வத் தந்தையும் - தேவ பிதாவாகிய இந்திரனும், மனன் உற மகிழ்ந்து - மனம் மிகவும் மகிழ்ச்சி யடைந்து, விருத்த வேடம் தனை ஒரு கணத்தில் மாற்றி - (தான் முன் பூண்டு வந்த) கிழப் பிராமண வடிவத்தைக் கணப்பொழுதில் ஒழித்து, இந்திரனாகி - சுவயவேடமாகிய தன் வடிவத்தைக் கொண்டு, முன் நின்று - அருச்சுனன் முன்னிலையில் நின்று, பைந்தொடி பாகன் - பசும் பொன்னாலாய வளையலை யணிந்த உமாதேவியாரை இடப்பாகத்தில் இருத்தியவராகிய கைலாசபதி, இப் பெருந் தவத்தால் வந்து - நீ செய்யும் இந்த அரிய தவங் காரணமாக வெளிப்பட்டு, உனக்குப் பாசுபதம் உதவும் என்றான் - உனக்குப் பாசுபதாஸ்திரத்தைத் தந்தருளுவர் என்று சொன்னான் எ—று.

மனன், போலி; மனனுற என்பதற்கு மனசார எனினுமாம். பைந்தொடி அன்மொழித்தொகை. இந்திரன் தன் சுதன்கொண்ட பத்திவைராக்கியத்தை யிட்டு மகிழ்ச்சியடைந்தா னென்பார் மனனுற மகிழ்ந்து என்றார். பாசுபதம் - சிவப்படைக்கலம். (௭௨)

என்றுரைத் தமரர் கோமா னேகிய பின்னர் வெள்ளிக்
குன்றுடைப் புனிதன் பாதங் குறிப்புறு மனத்த னாகி
நின்றுநற் றவஞ்செய் கின்ற நெடுந்தகை நீர்மை யெல்லாஞ்
சென்றுமைக் குரிய ரான சேடியர் செப்பி னாரே.

இ—ள்: என்று உரைத்து - என்று சொல்லி, அமரர் கோமான் ஏகிய பின்னர் - தேவேந்திரன் போன பின்பு, வெள்ளிக் குன்று உடைப்

புனிதன் பாதம் - வெள்ளி மலையை இடமாகவுடைய நிர்மலராகிய கைலாசபதியினுடைய திருவடிகளை, குறிப்பு உறும் மனத்தன் ஆகி - தியானிக்குஞ் சிந்தை கொண்டவனாய், நின்று நல் தவம் செய்கின்ற - (பஞ்சாக்கினி மத்தியில்) நின்று அரிய தவத்தை ஆற்றுகின்ற, நெடும் தகை நீர்மை எல்லாம் - பெருந்தன்மை யுடையனாகிய அருச்சுனனுடைய தன்மைகள் முழுவதையும், உமைக்கு உரியரான சேடியர் சென்று செப்பினார் - உமாதேவிக்கு உரியவர்களாகிய தோழிப்பெண்கள் போய் அப் பிராட்டிக்கு விண்ணப்பஞ் செய்தனர் எ—று.

ஆன்மகோடிகட்குத் திருவருள் செய்யும் வண்ணம் ஸ்ரீகண்டபரமேசுவரனாகக் கைலாசமலையிற் சாந்நித்தியமாக எழுந்தருளிய மலரகித ரென்பார் "வெள்ளிக் குன்றுடைப் புனிதன்" என்றார். உருப்பசி முதலாந் தேவப் பெண்கள் முயன்றும் பங்கஞ் செய்ய முடியாத திடசித்தத்துடன் தவஞ்செய்பவனாதலின் "நெடுந்தகை" யென்றும்; இந்திரன் ஆங்கு வந்து "இத்தவத்திற் பயனில்லை, இதனைச் செய்யாதொழிதி" யென்று தடுத்த போதும் அவ்விந்திரனைக் கடிந்து இறைவனைச் சிந்தித்துத் திண்மையுடன் தவம் ஆற்றுகின்றானாதலின் நீர்மையெல்லாம் என்றும் விதந்து கூறியவாறென்க. உமைக்குரியரான சேடியர் - அநிந்திதை, கமலினி, சுமாலி, மாலினி, மங்கலை, சுமனை, சுகேசை முதலியோர். (எரு)

மேனைமுன் பெற்ற கிள்ளை வேலையுஞ் சேலி னோடு
மானையும் பொருத செங்கண் மரகத வல்லி கேட்டுத்
தானையுங் கரிய பேருத் தரியமு மாகச் சாத்த
வானையன் றுரித்த நக்கற் கடிபணிந் தருளிச் செய்தாள்.

இ—ள்: மேனைமுன் பெற்ற கிள்ளை - (பர்வதராசன் மனைவியாகிய) மேனையென்பவள் முன்னொரு காலத்திலே (தன் மகளாக வளர்க்கப் பாக்கியம்) பெற்ற (மொழியிற்) கிளியை யொத்தவளாகிய, வேலையும் சேலினோடு மானையும் பொருத செம் கண் மரகத வல்லி - வேற்படையையும் சேன்மற்சத்தையும் மானின் நோக்கையும் நிகர்த்த (கடை) சிவந்த கண்களையுடைய மரகதரத்தினம்போன்ற நிறத்தையுடைய கொடியாகிய உமாதேவி, கேட்டு - (சேடியர் சொல்லக்) கேட்டு, தானையும் கரிய பேருத்தரியமுமாக சாத்த - திருவாடையும் கருநிறமுடைய பெரிய போர்வையுமாகத் தம் திருமேனியிலே யணிந்துகொள்ளும்பொருட்டு, அன்று ஆனை உரித்த நக்கற்கு அடி பணிந்து அருளிச்செய்தாள் - பூர்வத்திற் கயனென்னும் யானையின் றோலை யுரித்தருளிய பரமசிவனுக்கு அப்பெருமானுடைய திருவடிகளை வணங்கி விண்ணப்பஞ் செய்தாள் எ—று.

கயன் என்னும் யானை வடிவுடைய அசுரன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் பேரிடர் விளைக்க அத்தேவர்கள் அவனுக் கஞ்சிக் காசியின் கண்ணேயுள்ள திருக்கோயிலுட் சென்று விசுவநாதப்பெருமானிடத்தில் அடைக்கலம் புகுதலும், அக்கொடிய அசுரன் அதனையும் பொருட்படுத்தாது துரந்து செல்ல, விசுவநாதப் பெருமான் வெளிப்பட்டுத் தமது திருவடியால் அக்கயனை உதைத்து வீழ்த்திக் கொன்று தோலை யுரித்துத் தேவர் முனிவர் வேண்டுகோட்கிரங்கித் தமது திருமேனியிற் போர்த்தருளின ரென்பது



சரித்திரம்; இதன் வரலாற்றைக் கந்தபுராணம் முதலியவற்றுட் காண்க. உத்தரியம் இக்காலத்திற் சால்வையென வழங்கப்படுவது; நக்கன் - சங்காரகருத்தன், நிர்வாணி. (எசு)

வேறு

ஆலமுண் டமுதம் பொழிதரு நெடுங்க ணம்பிகை யருண்
மொழிகேட்டு, நீலமுண் டிருண்ட கண்டனு மிரங்கி நிரைவளைச்
செங்கையாய் நெடிது, காலமுண் டருள்கூ ரறத்தின்மைந் தனுக்
குங் காற்றின்மைந் தனுக்குநே ரிளையான், ஞாலமுண் டவனுக் குயி
ரெனச் சிறந்தோ னரனெனு நாமமும் படைத்தோன்.

இ—ள்: ஆலம் உண்டு - நஞ்சை யுட்கொண்டு, அமுதம் பொழி தரும் - அமிர்தத்தைச் சொரியும், நெடும் கண் அம்பிகை - பரந்த கண்களையுடைய உமாதேவியார், அருள் மொழி கேட்டு - கூறியருளிய வாக்கைச் செவிமடுத்து, நீலம் உண்டு இருண்ட கண்டனும் - நஞ்சை யுட்கொண்டமையாற் கறுத்த கண்டத்தையுடைய சிவபிரானும், இரங்கி - திருவுளமிரங்கி, நிரை வளைச் செம் கையாய் - நிரையே யணிந்த வளையல்களைக்கொண்ட சிவந்த கரங்களையுடைய உமையே, அருள் கூர் அறத்தின் மைந்தனுக்கும் - பொறையென்னும் அருட்குணம் பூண்ட தருமதேவதையின் மகனாகிய உதிட்டிரனுக்கும், காற்றின் மைந்தனுக்கும் - வாயுபுதல்வனாகிய வீமனுக்கும், நேர் இளையான் - நேரே யிளையவன் (அடுத்துப் பிறந்தவன்), ஞாலம் உண்டவனுக்கு உயிர் எனச் சிறந்தோன் - பூமியை (ஒருகாலத்து) விழுங்கி யுமிழ்ந்த திருமாலின் அவதாரமாகவுள்ள கண்ணனுக்குப் பிராண சிநேகிதன் என்ற சிறப்புடையவன், நரன் எனும் நாமமும் படைத்தோன் - நரன் என்னும் பெயரையுங் கொண்டவன், நெடிது காலம் உண்டு - (இப்படியுள்ள இவ்வர்ச்சுனன் தவஞ் செய்யத் தொடங்கி) நீடித்தகாலங் கழிந்ததுண்டு எ—று.

அகத்தேயுள்ள கண்மணியும் கருவிழியும் கருமையாயிருத்தலின் ஆலமுண்டென்றும், அவற்றைச் சூழ்ந்து பரந்துள்ளது வெள்விழியாதலின் அமுதம் பொழிதரு என்றுங் கூறப்பட்டது; இதனை, "நச்சகவமிர்த மன்ன நங்கையர் நாட்ட வைவேல்" எனவும், "கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்" எனவும் பிறர் கூறியவாற்றானு முணர்க. இனி "ஆலமுண் டமுதம் பொழி நெடுங்கண்" என்பதற்கு விடத்தின் கொடுமையை யடக்கி யமுதமாக்கிய பரந்த கண்களையுடைய எனக் கூறுதலுமொன்று. இவ்வரலாற்றைக் காஞ்சிப்புராணம், மணிகண்டேசப்படலத்திற் காண்க. பதினான்கு உலகங்களிலுமுள்ள சராசரங்களை எககாலத்தில் அருளொடு நோக்குங் கண்களாதலின் "நெடுங்கண்" என்றார். ஈசுவரியே பதினான்குலகிற்குந் தலைவி யென்பது "நாயேன்றனக்கும் பதினாலுலகுக்கும் நாயகியே" என்பதனால் உணரத்தகும். அம்பிகை - உலகத்திற்குத் தாய். நீலம் - நஞ்சு, பண்பாகுபெயர். நரன் - அருச்சுனனுக்குரிய நாமங்களுள் ஒன்று; கண்ணபிரானோடு சேர்த்துச் சொல்லப்படும்போது இருவரையும் நரநாராயணர் என்பது மரபு. அருச்சுனன் நீடித்தகாலம் அருந்தவம் புரிகின்றானென்பதைத் தஞ்சேடியர் சொல்லக் கேட்டருளிய உலகமாதாவாகிய ஈசுவரி திருவுள நெகிழ்ந்து பரமபிதாவாகிய இறைவருக்கு முறையிட, அவ்விறைவர் முன்னர்ப் பாற்கடலிற் பிறந்து அரிபிரமேந்திராதி தேவர்களை யெல்லாந் துரந்த நஞ்சை ஆலால

சுந்தரரைக்கொண்டு பற்றுவித்துத் தம் திருவாயிலிட்டுக் கண்டத்திலடக்கி அத்தேவர்கள் முதலாயினோரைக் காத்தருளிய கருணாநிதியாதலின், இப்பார்த்தன் விஷயத்திலும் திருவுளமிரங்கினா ரென்பார், "ஆலமுண் டிருண்ட கண்டனு மிரங்கி" என்றார். கண்டனு மென்றதில் உம்மை உயர்வுசிறப்போடு ஒருபுடை இறந்ததுதழீஇய எச்ச உம்மையுமாம். இது முதல் எழு செய்யுட்கள் எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (எடு)

ஆடியா னனன்றன் மதலையர் விரகா லாடிய சூதினுக் கழிந்து,
காடுதா முறையுங் கடனின ரவரிற் கடவுணா யகன் றருகாளை, நீடுபே
ரமரிற் பகைவரைச் செருக்கு நினைவினா னெருப்பிடை நம்மை, நாடி
யே யரிய தவம்புரி கின்றா னமிது முன்னமே யறிவோம்.

இ—ள்: ஆடி ஆனனன்றன் மதலையர் - கண்ணாடியில் ஆக்கப் பெற்ற விழிபோற் பார்க்குஞ் சத்தியில்லாத கண்களை முகத்திற்கொண்டவன் (குருடன்) ஆகிய திருதராட்டிரனுடைய மக்களாகிய துரியோதனாதியர்; விரகால் ஆடிய சூதினுக்கு - வஞ்சனையினால் ஆடிய சூதாட்டத்தில், அழிந்து - தோல்வியுற்று, தாம் காடு உறையும் கடனினர் - தாங்கள் காட்டில் வசிக்கும் கடமை பூண்டுள்ளார், அவரில் - அப்பாண்டவர் ஐவருள், கடவுள் நாயகன் தரு காளை - இந்திரன் பெற்ற மகனாகிய அருச்சுனன், நீடு பேரமரில் பகைவரைச் செருக்கும் நினைவினால் - நீடித்த காலம் நிகழவிருக்கும் பெரிய போரிலே பகைவர்களாகிய துரியோதனாதியரைக் கொல்லும் நோக்கத்தினால், நம்மை நாடியே நெருப்பிடை அரிய தவம் புரிகின்றான் - எம்மைக் குறித்துப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று செய்தற்கரிய தவஞ் செய்கின்றான், இது முன்னமே நாம் அறிவோம் - இதனை முந்தியே நாம் அறிந்துள்ளேம் எ—று

தம் மாதுலனாகிய சகுனியைக்கொண்டு சூதாடுவித்தனரேனும் துரியோதனாதியரின் விருப்பத்தினாலும் தூண்டுதலினாலும் ஆடப்பட்ட சூதாதலின் பிறவினையாகக் கூறாது ஆடிய சூதெனத் தன்வினையாகக் கூறினார்; சூதினுக் கழிந்து என்பதில் நான்கனுருபு மூன்றாவதன் எதுப்பொருளில் வந்தது. சத்தி பிரேரிப்பதற்கு முந்தியே சிவம் அறியுமாதலின் நாமிது முன்னமே யறிவோம் எனப்பட்டது. நம், நாம் இரண்டும் உயர்வினால் வந்த பால்வழுவமைதி. (எகூ)

பருகுநீர் துறந்து காற்றும்வெவ் வெயிலும் பாதவங்களின் சினை
யுதிர்ந்த, சருகுமே யொழியக் காய்கனி கிழங்குந் தானினி தருந்துத
றவிர்ந்தான், உருகுமா மனத்தை நாமுவந் திருத்தற் குறைபதி யாக்
கிநம் மிடத்தே, செருகினா னுணர்வை யாவரே யிவன்போற் செய்
தவஞ் சிறந்தவ ரென்றான்.

இ—ள்: பருகு நீர் துறந்து - (இன்றியமையாது) உட்கொள்ளுதற்குரிய தண்ணீரை உட்கொள்ளா தொழிந்து, காற்றும் வெவ் வெயிலும் - வாயுவும் வெப்பத்தோடு கூடிய வெயிலும், பாதவங்களின் சினை உதிர்ந்த சருகுமே யொழிய - மரங்களின் கொம்பர்களிலிருந்து உதிர்ந்த சருகுமேயல்லாமல், காய்கனி கிழங்குதானும் இனிது அருந்துதல் தவிர்ந்தான் - காய் பழம் கிழங்கு என்னு மிவைகளைத்தானும் விரும்பி உண்ணுதலைத் தவிர்ந்தான், உருகும் மா மனத்தை - (இயல்பாகவே எம்மைத் தியானிக்குந் தோறும்) நெகிழுகின்ற தனது தூய உள்ளத்தை; நாம் உவந்து இருத்தற்கு உறை பதி ஆக்கி - நாம் இருந்தருளுவதற்காகிய திருக்கோயிலாகப் பாவித்து, உணர்வை நம்மிடத்தே செருகினான் - தன் தியானத்தை எம்மிடத்து உறப் புகுத்தினான், இவன் போல் செய்தவம் சிறந்தவர் யாவர் - இவ்விஜயனை யொப்பத் தாம் செய்யுந் தவத்திலே சிறப்புற்றவர் வேறு எவருளர்; (எவருமில்லை), என்றான் - என்று கூறியருளினார் எ—று.



காய் கனி கிழங்கென்னுமிவைகள் ஓரறிவுயிராதலின் அவற்றை உண்ணுதலும் பாவமென மதித்து உண்ணாதொழிந்து வாயுவையும் வெயிலையும் சருகையும் உட்கொண்டானென்க. வெயிலைப் பருகுதல் கொடிய வெயிலிலே அதன் வெம்மையைப் பொருட்படுத்தாது திளைத்து உடம்பினை உலரவிடுதல். இறைவன் நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்டவனாதலின், "உருகுமா மனத்தை நாமுவந் திருத்தற் குறைபதியாக்கி" என இறைவன் கூறியதாகக் கூறினாரென்க; உறைபதி - கோயில். தம்மை உறைக்கத் தியானித்தா னென்பார் "நம்மிடத்தே செருகினா னுணர்வை" யென்றார்; யாவரென்னும் வினாப்பெயரின் பகுதி எதிர்மறைப் பொருளில் வந்தது.

இச் செய்யுளானும் இதற்கு முற்செய்யுளானும் அருச்சுனன் சிறந்த சிவபத்தி பூண்டவனென்பதும், சிவபெருமானை யொழிய வேறெத் தேவரும் வெற்றி முதலிய பேறுகளை அருளுமாற்ற லிலரென்பதும் பெறப்பட்டன.()

போகமாய் விரிந்தும் போகியாய்ப் பரந்தும் புலன்களின் வழி
மனஞ் செலுத்தா, யோகியா யிருந்தும் யோகிகண் முதலா வுரைப்
பரும் பலபொரு ளாயும், ஏகமாய் நின்றுந் தத்துவ மறைக்கு
மெட்டுதற் கரியதன் வடிவிற், பாகமாய் விளங்கும் பைந்தொடி
யுடனே பரிவுடன் சின்மொழி பகர்வான்.

இ—ள்: போகமாய் விரிந்தும் - போகப் பொருளாய்ப் பரந்தும், போகியாய்ப் பரந்தும் - போகமூர்த்தியாய் வியாபித்தும், புலன்களின் வழி மனம் செலுத்தா - பஞ்சப்புலன்களின் வழியிலே மனத்தைச் செல்லவிடாத, யோகியாய் இருந்தும் - யோகமூர்த்தியாக எழுந்தருளியும், யோகிகள் முதலா உரைப்ப அரும் பல பொருளாயும் - யோகிகள் முதலானவர்களினாலும் இத்தன்மையவெனச் சொல்லுதற்கரிய நவபேத மூர்த்தங்களாகியும், ஏகமாய் நின்றும் - நிர்க்குணசிவமாகிய ஏகமூர்த்தியாக நிலவியும், தத்துவ மறைக்கும் எட்டுதற்கு அரிய தன் வடிவில் - உண்மையான வேதங்கட்கும் அளவிடுதற்கரிய தமது திருமேனியின், பாகமாய் விளங்கும் பைந்தொடியுடனே - இடப்பாகத்தில் விளங்குகின்ற பசிய வளையலையணிந்த உமாதேவியாருடன், பரிவுடன் சின்மொழி பகர்வான் - கருணையோடு சில வார்த்தைகளைக் கூறியருளுகின்றார். எ—று.

அபக்குவான்மாக்கட்குப் போகத்தையூட்டித் தொலைத்துப் பக்குவம் வருவித்தற்பொருட்டுச் சிவபிரான் போகமூர்த்தியா யெழுந்தருளியிருப்பராதலின் போகியாய்ப் பரந்தும் எனவும், அங்ஙனம் பக்குவம் வருவித்த பின்னர் அவ்வான்மாக்கட்கு யோகமுத்தியை உதவுதற்பொருட்டுத் தக்ஷிணாமூர்த்தி யெனப்படும் யோகமூர்த்தியாக விளங்குவராதலின் யோகியா

பிருந்தும் எனவும், இறைவன் வாக்கு மனாதீத கோசரப்பொருளாதலின் தமது உண்மைநிலையைத் தாமே அறிவிக்க அவர் திருவருளை முன்னிட்டே எவரேனும் அறிதன் முடியுமேயன்றி அங்ஙனம் இல்லாவழி அறிதல் முடியாதாதலின் யோகிகண் முதலா வுரைப்பரும் பலபொருளாயும் எனவும், உயிர்கள் பொருட்டுத் தாம் கொள்ளும் இம்மூர்த்தங்கட்கு மேலான நிர்க்குண சிவமென்பார் ஏகமாய் என்றும், தத்துவ மறைக்கு மெட்டுதற்கரிய தன் வடிவு என்றுங் கூறினார். பரமசிவன் இங்ஙனம் இருவகை மூர்த்தங்களையுங் கொண்டு போகிகட்கும் யோகிகட்கும் அருள் புரிவரென்பதை "போகியாயிருந் துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார் - யோகியாயிருந்து முத்தியுதவுத லதுவுமோரார் - வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார் - ஊகியா மூடரெல்லா முபரி லொருவ னென்பார்" எனவும், "முன்புலகீன்ற முகிழ்முலைக் கன்னியோ, டின்புறும் யோகி யெழுபுவிக் கரசே" எனவும் வருவனவற்றா லுணர்க. நவபேதங்களாவன: சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், விஷ்ணு, பிரமா. "தன் வடிவிற் பாகமாய் விளங்கும் பைந்தொடி" என்பதற்கு அர்த்தநாரீசுவரர் எனப் பொருள்கோடலு மொன்று. பரிவுடன் - அருச்சுனன் மீது வைத்த கருணையோடெனினுமாம். (எஅ)

கேட்டிநீ செவ்வாய்க் கிளிநிகர் மொழியாய் கிரீடியைத் துணை
வர்களுடனே, காட்டிலே யொதுக்கி இளைஞருந் தானுங் கடியவஞ்
சனையினாற் கவர்ந்த, நாட்டிலே வாழ்வோ னேவலான் மூக நாமதா
னவனிவன் றன்னைக், கோட்டிலே கொலைசெ யேனமாய் வந்திக்
குன்றிடை யின்றபுக் கனனால்.

இ—ள்: செவ்வாய்க் கிளி நிகர் மொழியாய் நீ கேட்டி - சிவந்த அதரங்களையும் கிளியின் சொற்போலும் இனிய சொற்களையு முடைய உமையே நீ கேட்பாயாக, தானும் இளைஞரும் - தானும் தம்பிமாரும் (சேர்ந்து), கிரீடியைத் துணைவர்களுடனே காட்டிலே ஒதுக்கி - அருச்சுனனை உடன் பிறந்தோருடன் காட்டின்கண்ணே ஒதுங்கியிருக்கச் செய்து, கொடிய வஞ்சனையினாற் கவர்ந்த நாட்டிலே வாழ்வோன் ஏவலால் - பொல்லாத வஞ்சகச் செயலினால் அபகரித்துக்கொண்ட நாட்டிலே அரசனாக) வாழ்கின்றவனாகிய துரியோதனனுடைய தூண்டுதலினால், மூக நாமதானவன் - மூகனென்னும் பெயரையுடைய அசுரன், இவன் தன்னைக் கோட்டிலே கொலை செய் ஏனமாய் இன்று இக்குன்றில் வந்து புக்கனன் - இப் பார்த்தனைத் தன் கொம்பினாலே கொலைசெய்யும் நோக்கமாக இப்பொழுது இக் கைலையங்கிரியின் கண்ணே வந்து புகுந்துள்ளான் எ—று.

கிரீடி - இந்திரனாற் சூட்டப்பட்ட முடியைப் புனைந்துள்ளவன்; தருமன் மூத்தவனாயிருப்ப இவனை விதந்தெடுத்துச் சொன்னமை இங்குப் பேசப்படுவோன் இவனாதலி னென்க. குறித்த கால எல்லை முடியுமுன் எக்காரணத்தினாலும் பாண்டவர் காட்டைவிட்டு நாட்டுட் புகுசற்கு அருகரல்லராதலின் "காட்டிலே யொதுக்கி" யென்றார். கடிய வஞ்சனையினால் என்பதனைக் காட்டிலே யொதுக்கி என்பதனோடு சேர்த்துப் பொருள் கூறலுமொன்று. கடிய வஞ்சனை யென்றது தருமரைச் சூதாடத் தூண்டி ஆடியவிடத்தில் தோல்வியுறச் செய்தமை; கவர்தல் - அபகரித்தல்; நீதியீனமாகப்



பெறுதல். கோட்டிலே - கோட்டினால்; உருபுமயக்கம். வந்து புக்கனன் - முந்தியே வந்து ஒளித்திருக்கின்றான் என்றபடி.

மற்றவன் விரைவி னுடனமர் மலைந்து வாசவன் மதலையை
வதைத்து, நற்றவ மகற்று முன்னமே விரைந்து நாமுயிர் கவருதல்
வேண்டும், கொற்றவன் மதலை கேட்டன வரங்கள் கொடுத்தலும்
வேண்டுமென் றெழுந்தான், கற்றவர் வளைத்துத் திரிபுர மெரித்
தோன் கற்றவர் கருத்தினாற் காண்போன்.

இ—ள்: அவன் - அந்த மூகாசுரன், விரைவினுடன் அமர் மலைந்து - விரைவாகச் சமர் புரிந்து, வாசவன் மதலையை வதைத்து - இந்திரகுமாரனாகிய அருச்சுனனைக் கொன்று, நல் தவம் அகற்று முன்னமே - (எம்மைக் குறித்துச் செய்கின்ற) நல்ல தவத்தைக் கெடுப்பதற்கு முந்தியே, நாம் விரைந்து உயிர் கவருதல் வேண்டும் - நாம் விரைந்து சென்று (அத்தானவனுடைய) உயிரைக் கவர்ந்துவிடவேண்டும் (கொல்லுதல் வேண்டும்), கொற்றவன் மதலை கேட்டன வரங்கள் கொடுத்தலும் வேண்டும் - (அவ்வளவோடமையாது) அந்த இந்திரகுமாரன் எம்மிடங் கேட்பதற்கு நினைத்துள்ள வரங்களையும் (அவனுக்கு) அருளுதல் வேண்டும், என்று - எனத் திருவாய் மலர்ந்து, கல் தவர் வளைத்துத் திரிபுரம் எரித்தோன் கற்றவர் கருத்தினாற் காண்போன் எழுந்தான் - மேருமலையை வில்லாக வளைத்துத் திரிபுரங்களை எரித்தவரும் ஞான நூல்களைப் பயின்றவர்களாகிய முனிவர்கள் தம் ஞானக் கண்ணால் தரிசித்தற்குரியவருமாகிய கைலாசபதி யெழுந்தருளினார். எ—று.

எம்பெருமான் எழுந்தருளாவழி அம்மூகாசுரன் விஜயனைக் கோறல் திண்ணமாதலின் "வாசவன் மதலையை வதைத்து நற்றவ மகற்று முன்னமே விரைந்து நாமுயிர் கவருதல் வேண்டும்" என்றார். தவர் - வில். கற்றவர் கருத்தினாற் காண்போன் என்பதை "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை" எனவும், "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" எனவும், வருவனவற்றானுமுணர்க. மேருமலையை வில்லாக வளைத்து முப்புரங்களைத் தம் புன்சிரிப்பா லெரித்தருளிய சர்வ வல்லமை யுடையவராகிய கைலாசபதிக்கு இம்மூகதானவனைக் கோறல் ஒரு திருவிளையாட்டாகு மென்பதைக் குறிப்பாகக் காட்டுவார் "கற்றவர் வளைத்துத் திரிபுர மெரித்தோன்" என்றார். இக்கவியினால் பரமசிவன் தம்மைத் தியானிப்போர்க்கு எவ்வகையான இடையூறும் நேராது காத்து அவர் வேண்டுவ வேண்டியாங்கு ஈந்தருளுவரென்பது புலப்படக்கிடத்தல் காண்க. (அ௦)

நனைமலர் சிதறித் தொழுதுமுன் னின்ற நந்திமே னயனம்
வைத் தருளி, வினைபடு கேழல் வேட்டைநா மின்றே வேடரா யாடு
தல் வேண்டும், நினைவுற வெமது கணத்தொடிக் கணத்தே நீயுமவ்
வுருக்கொளு கென்று, மனைவியுந் தானுங் கிராதர்தங் குலத்து மகிழ்
நனும் வனிதையு மானார்.

இ—ள்: நனைமலர் சிதறித் தொழுது முன் நின்ற - தேனில் நனைந்த (அன்றலர்ந்த) பூக்களைச் சொரிந்து தம்மை வணங்கிபடி சந்நிதியில் விநயத்துடன் நின்ற, நந்திமேல் நயனம் வைத்தருளி - நந்தியந்தேவர்மீது கிருபாநோக்கஞ் செய்து, நாம் இன்றே வேடராய் வினைபடு கேழல் வேட்டை

ஆடுதல் வேண்டும் - நாம் இப்பொழுதே வேட்டுவர் வடிவங் கொண்டு தீமையோடு கூடிய பன்றிவேட்டையாடல் வேண்டும், நினைவுற எமது கணத்தொடு இக்கணத்தே - நினைத்தவண்ணம் எமது கணங்களுடன் இப்பொழுதே, நீயும் அவ்வருக்கொளுக - நீயும் அவ்வேட்டுவ வடிவைக் கொள்ளுதி, என்று - எனத் திருவாய்மலர்ந்து, மனைவியும் தானும் - உமாதேவியும் தாமும், கிராதர் குலத்து மகிழ்நனும் வனிதையும் ஆனார் - வேடர் குலத்துப் பெண்ணும் ஆடவனுமாக வேடங்கொண்டருளினர் எ—று.

கண்ணின் பெயர் அதன் தொழின்மேனின்றமையின் நயனம் பொருளாகுபெயர்; மகிழ்நனும் வனிதையுமென்றது எதிர்நிரனிறைப்பொருள் கோள். காலதாமசஞ்செய்யின் மூகாசுரனாகிய பன்றியினால் அர்ச்சுனனுக்கு இடையூறு நேருதல்கூடு மென்பது போதர "இக்கணத்தே கொளுக" எனப்பட்டது.

வேறு.

என்றபொழு தினினந்தி முந்திமுதற் கூற்றுதைத்த விருதாள் போற்றி, வென்றிபுனை கணநாதர்க் குரைசெய்தா னவர்களுமவ் வேடங் கொண்டார், கொன்றைகமழ் முடியோனும் வேணியினைப் பின்னல்படு குஞ்சி யாக்கித், துன்றுமயிற் பீலிநெடுங் கண்ணிதிரு நெற்றியுறச் சுற்றி னானே.

இ—ள்: என்ற பொழுதினில் - என்று சிவபிரான் கட்டளை யிட்டருளியவுடன், நந்தி முந்தி - நந்திதேவர் முற்பட்டு, முதல் கூற்று உதைத்த இரு தாள் போற்றி - முன்னர் யமனை உதைத்தனவாகிய இரண்டு திருவடிகளையும் துதித்து, வென்றி புனை கணநாதர்க்கு உரை செய்தான் - வெற்றி மாலையைச் சூடுகின்றவர்களாகிய சிவகணத் தலைவர்கட்கு (பரமசிவனது கட்டளையை) த் தெரிவித்தார், அவர்களும் அவ்வேடங் கொண்டார் - அக்கணநாதர்களும் அங்ஙனம் வேட்டுவ வடிவத்தைக் கொண்டனர் கொன்றை கமழ் முடியோனும் - கொன்றைப் பூமாலை பரிமளிக்கும் முடியினையுடைய கைலாசபதியும், வேணியினைப் பின்னல் படு குஞ்சியாக்கி - தமது சடைமுடியைப் பின்னலோடு கூடிய குடுமியாகச் சமைத்து, துன்று மயிற்பீலி திருநெற்றியுற - செறிந்த மயிலிறகானது முற்புறத்துப் பொருந்த, நெடுங் கண்ணி சுற்றினான் - நெடிய மாலையைச் சூழ அணிந்தார் எ—று.

மார்க்கண்டேயரைக் காக்கும்படி, அவருடைய உயிரைக் கவர வந்த யமனை உதைத்த நோன்றாளென்பார் கூற்றுதைத்த தாள் என்றார்; வாமத் திருவடியுடன் மற்றைத் திருவடியையுஞ் சேர்த்து இருதா ளெனப்பட்டது. இதுமுதற் பத்துக் கவிகள் அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (௮௨)

நீலமணித் திருக்கண்ட நிலவெழுவே பலகறைப்பூ ணிறையக் கட்டிக், கோலமணிக் குழைகளினுங் குழையாகப் பிணையன்மலர் கொண்டு சாத்திச், சேலையெனப் புலியதளுந் திருமருங்கி லுறச் சேர்த்திச் செய்ய பைம்பொற், காலிணையிற் செருப்பணிந்து செய்ய திரு வடிவுமிகக் கரிய னானான்.

இ—ள்: நீலமணித் திருக்கண்டம் நிலவு எழவே - நீலரத்தினத்தை நிகர்த்த திருக்கண்டத்தில் ஒளியுண்டாக, பலகறைப்பூண் நிறையக்கட்டி - சோகியினாலாகிய அணியைப் பரக்கத் தரித்து, கோலமணிக் குழைகளினும் - அழகிய பவளமணி போன்ற நிறத்தையுடைய திருச்செவிகளிலும், குழையாக - காதணியாக, பிணையல்மலர் கொண்டு சாத்தி - இணைக்கப்பட்ட பூக்களை எடுத்து அணிந்து, புலிஅதளும் சேலைஎனத் திருமருங்கில் உறச் சேர்த்தி - புலித்தோலையும் ஆடையெனச் சொல்லத்தக்கதாகத் திருவரையிற் பொருந்த உடுத்தி, செய்ய பைம் பொன் கால்இணையில் செருப்பு அணிந்து - சிறந்த மாற்றுயர்ந்த பொன்போன்ற இருதிருவடிகளிற் செருப்பினைமாட்டி, செய்ய திருவடிவு மிகக் கரியன் ஆனான் - சிவந்த திருமேனி மிகவும் கருநிறமமையத் தோன்றியருளினார் எ—று.



வடிவு கரியனானான், தினை வழுவமைதி, இது கைலாசபதி கொண்ட வேட்டுவத் திருக்கோலத்தைக் கூறியவாறும் (௮௩)

இடக்கைமலர் வரிசிலையும் வலக்கைமலர்ப் பாணமும்வெந் நிடையே பாண, மடக்கியவெங் கொடுவரித்தோ லாவநா ழிகையுமிக வழகு கூரக், கடக்களிறன் றுரித்தபிரான் கண்டவர்கள் வெருவரமுன் கொண்ட கோலந், தொடக்கியுரை செயநினைக்கி லாயிரநா வுடையோர்க்குஞ் சொல்ல லாமோ.

இ—ள்: இடக் கைமலர் வரி சிலையும் - இடத் திருக்கரமாகிய செந்தாமரைப்பூவின்கண்ணே வரிந்து கட்டப்பட்ட வில்லும், வலக் கைமலர்ப் பாணமும் - வலத் திருக்கரமாகிய பூவின்கண்ணே அம்பும், வெந்நிடையே - திருமுதுகினிடத்து, பாணம் அடக்கிய - அம்புகளைத் தன்னகத்துக் கொண்ட, வெம் கொடு வரித்தோல் ஆவ நாழிகையும் - கொடிய புலியின் றோலினால் ஆக்கிய தூணியும், மிக அழகு கூர - அதிக அழகைச் செய்ய, கடக்களிறு அன்று உரித்த பிரான் - மதத்தோடு கூடிய கயன் என்னும் யானையின் தோலை முற்காலத்து உரித்தருளியவராகிய சிவபிரானானவர், கண்டவர்கள் வெருவா முன்கொண்ட கோலம் - பார்த்தவர்கள் அஞ்சும்படியாக அச்சமயத்திற் கொண்டருளிய திருக்கோலத்தை, தொடக்கி உரைசெய நினைக்கில் - உத்தேசித்துச் சொல்ல முயலின், ஆயிரம் நா உடையோர்க்கும் சொல்லல் ஆமோ - ஆயிரம் நாக்களை யுடையவனாகிய சேடனுக்கும் கூறுதல் அமையுமோ (அமையாது) எ—று.

தொடங்கி யென்பது தொடக்கியென வலித்து நின்றது. ஈற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு; யானை வடிவங்கொண்ட கயனென்னும் அசுரனைச் செற்று அவன் றோலைப் போர்த்த பிரானுக்கு மூகாசுரனாகிய இப்பன்றியைக் கோறல் ஒரு பொருட்டாமோ வென்பதைக் குறிப்பாலுணர்த்துவார் "கடக்களிறன் றுரித்த பிரா" னென்றார். ஞானக்கண்ணாற் றரிசிப்பார்க்கன்றி ஊனக்கண்ணாற் காண்பார்க்கு அச்சந்தருந் திருக்கோலமாதலின் "கண்டவர்கள் வெருவர முன்கொண்ட கோலம்" எனப்பட்டது. கைலாயபதி அன்று கொண்டருளிய வேட்டுவத் திருக்கோலத்தின் பொலிவை அவனருளாலே எடுத்துப் பாராட்டுதல் முடியுமே யொழிய அவனருளின்றித் தாமாக நினைத்துச் சொல்லுதல், நாவன்மைபற்றி இயலாதென்பார் "தொடக்கி யுரைசெய நினைக்கி லாயிரம் நா வுடையோர்க்குஞ் சொல்லலாமோ" என்றார். "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" யென்றருளிப்போந்தார் நாவுக்கரசரும். கொடுவரி - கோடிய வரிகளையுடையது. (௮௪)

## வேறு.

குறைந்த சந்திர கிரணமும் பீலியுங் கொன்றையந் திருத்தாரும், புறந்த யங்கிட விழுந்தசெந் தனிச்சடைப் பொலிவையார் புகல்கிற்பார், சிறந்த பைம்பொலங் கிரிமுடி யடியுறத் தேவர்கோன் றிருச்செங்கை, நிறந்த ருஞ்சிலை வளைவற வழகுற நிமிர்ந்துநின் றது போலும்.

இ—ள்: குறைந்த சந்திர கிரணமும்-பிறைச்சந்திரனது ஒளியும், பீலியும் கொன்றை அம் திருத்தாரும் - மயிலிறகும் கொன்றைப் பூமாலையும், புறந் தயங்கிட - புறத்தே விளங்க, விழுந்தசெந் தனிச்சடைப் பொலிவை - சோர்ந்த ஒப்பற்ற செவ்விய திருச்சடையின் தோற்றத்தை, யார் புகல்கிற்பார் - எவர் இத்தன்மையதென்று சொல்ல வல்லார்; தேவர்கோன் திருச்செங்கை நிறந்தரும் சிலை - தேவர்கட்கதிபனாகிய இந்திரனுடைய சிறந்த கரத்திற் பொருந்திய பன்னிறமமைந்த வில்லானது, சிறந்த பைம்பொலம் கிரிமுடியடியுற - சிறந்த பொன்மலையாகிய மேருவின் முடிதொடக்கம் அடிவரையும் படிய, வளைவு அற - (அவ்வில்லிற்கு இயற்கையாகவுள்ள) வளைவு நீங்க, அழகு உற நிமிர்ந்து நின்றது போலும் வனப்பு வாய்ப்ப உயர்ந்து அமைந்த தன்மையை நிகர்க்கும் எ—று.

பிறைச்சந்திரனால் வெண்மையும் மயிற்பீலியாற் பசுமையும் கொன்றை மலர்மாலையாற் பொன்மையும் தம்மியற்கை நிறமாகிய செம்மையும் மயங்கி விளங்குதலின் சிவவேடருடைய சடை பன்னிறத்தோடு கூடிய இந்திரவில்லிற்கு உவமையாகக் கூறப்பட்டது தேவர்கோன் சிலை - வானவில்; யார் புகல்கிற்பார் என்ற வினா எவராலும் புகல முடியாதென எதிர்மறைப் பொருளில் வந்தது. திருமுடியிலிருந்து வெரிநிடை நேரே படிந்து தொங்குஞ் சடைக்கு வளைந்த வில் ஒப்பாகாதாதலின் வளைவற என்றார். பொலங்கிரி யென்பது பொன்கிரி யென்பதன் விகாரப் புணர்ச்சி; இது சிவவேடரின் திருச்சடைப் பொலிவைக் கூறியவாறும். (௮௫)

## வேறு.

வரையரசன் றிருமடந்தை வனமுலைமேன் மணிக்குன்றி வடமுஞ் செங்கை, நிரைவளையும் புலிப்பலலா னிறந்திகழ்மங் கலப்பூணு நீலமேனி, விரையகிலி னறுஞ்சாந்தும் விரித்ததழைப் பந்துகிலும் வேட மாதர், நிரைநிரையே தனைச்சூழ நின்றவடி வழகினுக்கு நிகர்வே றுண்டோ.

இ—ள்: வரை அரசன் திருமடந்தை - பர்வதராசனது திருக்குமாரியாகிய உமாதேவியார், வனமுலைமேல் மணிக்குன்றி வடமும் - மாமை நிறமமைந்த திருத்தனபாரங்களின்மீது குன்றி மணிகள் கோத்துள்ள மாலையும், செம்கை வளை நிரையும் - திருக்கரங்களில் நிரையேயிட்ட சங்க வளையல்களும், புலிப்பல்லால் நிறந்திகழ் மங்கலப்பூணும் புலிப்பல்லாலாகிய அழகு விளங்கும் மங்கல அணியும் (மாங்கல்யம்), நீல மேனி விரை அகிலின் நறுஞ் சாந்தும் - நீல நிறமான திருமேனியின்கண்ணே மட்டிக்கப்பெற்ற வாசனை பொருந்திய அகிற்குழம்பும், விரித்த தழைப் பூந்துகிலும் - பாக்க அணிந்த இலையினாலாகிய பொலிவான உடையுமாய், வேடமாதர் - வேட்டுவப் பெண்கள், தனை நிரைநிரையே சூழநின்ற வடிவழகினுக்கு-தம்மை நிரை நிரையாகச் சூழ்ந்துவர அமைந்த காட்சிக்கு, வேறு நிகர் உண்டோ - அந்தக் காட்சியைத் தவிர வேறாக ஒப்புச் சொல்வதற்கு இடமுண்டோ (இல்லை) எ—று.

எல்லா நலனும் இயல்பி லமைந்துள்ள இறைவியாதலின் திருமடந்தை யென்றார். வனமுலை பாஞானம் அபாஞானமாகிய தனங்கள். அநிந்திதை கமலினி முதலிய சேடிமார்களே தேவியைச்சூழ்ந்து வேடமகளிராய் உடன் வந்தன ரென்க. இலக்குமியும் தேவி கொண்ட இவ்வேடிச்சியின் திருக்கோலத்திற்கு ஒப்பாகா ளென்பதைக் குறிப்பா லுணர்த்துவார் "வடிவழகினுக்கு நிகர் வேறுண்டோ" என்றார்; ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு; "கடக்களிறை யுரித்த பிரான்...கொண்ட கோலம், தொடக்கி யுரைசெய... ஆயிரம் நாவுடையோற்குஞ் சொல்லலாமோ" என மேற்கூறியதற் கமைய "வரையரசன் திருமடந்தை...நின்ற வடிவழகினுக்கு நிகர் வேறுண்டோ" என்றா ரென்க. வேட்டுவ மகளிர் தழையுடுக்கை முதலியவற்றை யணிதல் இயல்பாமென்க. மாமை நிறம் மங்கைப்பருவத்தில் உண்டாம் நிறமென்பர்.



ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப், போரேனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான் புனங்க ளெல்லாஞ் சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாங் குழவியையுஞ் செங்கை யேந்திப், பாரேனை யுலகனைத்தும் பரிவுடனே யீன்றுடன் பதிபின் வந்தாள்.

இ—ள்: ஓர் ஏனம் தனைத் தேட - திருமாலாகிய ஒப்பற்ற பன்றி தம் திருவடிகளைத் தேடும்வண்ணம், ஒளித்து அருளும் இரு பாதத்து ஒருவன் - மறைத்தருளிய இரு திருவடிகளையுடைய முழுமுதற்கடவுளாகிய கைலாசபதி, அந்தப் போர் ஏனம் தனைத் தேடி - அந்தப் போர்த்தொழிலில் வல்ல மூகாசுரனாகிய பன்றியைத் தேடி, கணங்களுடன் புறப்பட்டான் - வேட்டுவ வடிவங் கொண்டவர்களாகிய சிவகணத்தவர்களுடன் எழுந்தருளினர், புனங்கள் எல்லாம் சீர் ஏனல் விளை கிரிக்கு - சாரல் தோறும் சிறந்த தினை விளைகின்ற குறிஞ்சி நிலத்திற்கு, தேவதையாம் குழவியையும் - தெய்வமாகவுள்ள முருகக்கடவுளாகிய குழந்தையையும், செம் கை ஏந்தி - சிவந்த திருக்கரங்களில் ஏந்தியபடி, பார் ஏனை உலகு அனைத்தும் பரிவுடனே ஈன்றாள் - இப்பூவுலகையும் ஏனைய உலகங்களையும் திருவருள் சுரக்கப்பெற்ற தாயாகிய ஈசுவரியார், தன் பதி பின் வந்தாள் - தமது நாயகராகிய (வேட்டுவத் திருக்கோலங் கொண்ட) கைலாசபதியைப் பின்றொடர்ந்து வந்தார் எ—று.

ஓரேனம் தனைத்தேடிய வரலாற்றைக் கந்த புராணம் காஞ்சிப்புராணம் முதலியவற்றிற் காண்க. திருமாலே பன்றி வடிவங் கொண்டாராதலின் ஓரேனம் என்றார். ஓர் - ஒப்பற்ற; விஷ்ணுமூர்த்தி அகங்கார மேலீட்டினால் தாமே பரப்பிரமமெனப் பிரமதேவருடன் வாதிட்டு, சிவபிரான் அச்சமயத்திற் கொண்ட பரஞ்சோதி வடிவத்தின் அடியைத் தேடத் துணிந்து, பாரிய பன்றி வடிவங் கொண்டு பூமியை இடந்து வெகுதூரஞ் சென்றும் காண முடியாது அலுத்து, மீண்டுவர முயன்றபோது தாம் கொண்ட வராக வடிவத்திற்குரிய யாக்கையைச் சுமக்கலாற்றாது அவசமுற்றுச் சிவனை நினைக்க, அப்பெருமான் அருள் சுரக்க, அதனால் வலிமை பெற்று அவ்வடிவத்தோடு மீண்டனரென்பது சரித்திரம். அச்சமயத்திற் பரமேசுவரன்

திருமாலுக்குச் செய்த கருணை மறக்கருணையாதலால், ஒளித்தருளும் ஒருவன்" என்றாரென்க. ஒருவன் - ஏகமூர்த்தி; அங்கு அகங்காரமுற்ற திருமாலாகிய வராகத்திற்கு அதீதமாக நின்ற பெருமான் இங்குத் தம் அடியவனாகிய அர்ச்சுனனைக் காத்தற்பொருட்டுத் தாமே எழுந்தருளினாரென்பதைக் குறிப்பா லுணர்த்துவான் வேண்டி ஆசிரியர் "போரேனக் தனைத் தேடி...புறப்பட்டான்" என்றார். இது இறைவன் மார்ச்சால சம்பந்தமாக ஆண்டடிமைக்கொண்டவாறும். மூழுதுலகருள்புரி முதல்வராகிய முருகக் கடவுளை ஈசுவரி கைகளி லேந்திச் செல்லும் பிராயமுடைய பசுங்குழவியாகச் செய்தா ளென்பதை விளக்குவார் "தேவதையாங் குழவியையும்' என்றார். "வேயீன்ற முத்துக்கும் விண்ணவர் கோவுக்கும் வேதனுக்கும் - நாயேன் தனக்கும் பதினாலுலக்குக்கும் நாயகி" யாதலின் இறைவியை "பாரேனை யுலகனைத்தும் பரிவுடனே யீன்றாள்" என்றார். இறைவியும் முருகனும் இறைவனுங் கூடிய மூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தமெனப்படும். பரிவு - உயிர்களை ஈடேற்றவேண்டுமென்ற தலையாய அன்பு. கிரி - சாதியொருமை. குழவியையும் என்றதில் உம்மை உயர்வுசிறப்பு. பார் ஏனை உலகு என்பன பூமியையும் ஏனைய உலகங்களையும் குறித்து நிற்பதோ டமையாது இடவாகு பெயராய் அவற்றின்கணுள்ள சராசரங்களையும் குறித்து நின்றனவாம். (அஎ)

அனந்தவே தமுமிறைவ னேவலினா ஞாளிகளா யருகு சூழ
வனந்தகோ டியிற்கோடி கணநாதர் வேட்டுவரா யருகு போத
வனந்தனா லினித்தரிகக வரிதரிதிப் பூதலமென் றமரர் கூற
வனந்தமா முகமாகி யடிச்சுவடு நோக்கினா னடவி யெல்லாம்.

இ—ள்: இறைவன் ஏவலினால் - முழுமுதற்கடவுளாகிய சிவபிரானுடைய அருளினால், அனந்த வேதமும் ஞாளிகளாய் அருகு சூழ - முடிவில்லாதனவாகிய வேதங்கள் (வேட்டைக்குரிய) நாய்களாகிப் பெருமானுடைய திருமருங்கிற் சூழ்ந்து வர, அனந்த கோடியிற கோடி கணநாதர் வேட்டுவராய் அருகு போத - பல கோடிக்கணக்கான சிவகணத்தவர் வேட்டுவர் வடிவங்கொண்டு திருமருங்கிற் செல்ல, இப்பூதலம் இனி அனந்தனால் தரிக்க அரிது அரிது என்று அமரர் கூற - இங்ஙனம் நிகழ்தலின் இனிமேல் இப்பூமிபாரம் ஆதிசேடனாற் சுமத்தல் அரிதாகும் அரிதாகுமென்று தேவர்கள் சொல்ல, அனந்த மாமுகமாகி - பலமுகமாகப் பார்த்துக்கொண்டு, அடவி யெல்லாம் - அக்காட்டினிட மெங்கணும், அடிச்சுவடு நோக்கினான் - அப்பன்றியின் அடிச்சுவட்டை அவதானித்தார் (அச்சிவவேடர்) எ—று.

அனந்த வேதம் - பொருளின் முடிவு காண்டற்கரிய வேதம். அனந்த மாமுகமாகி நோக்கலாவது எத்திசையும் இடைவிடாது திரும்பிப்பார்த்தல்.

மூகதா னவனவன்மேன் முந்தியுயிர் கவருமெனுஞ் சிந்தை யானப்
பாகசா தனிதவஞ்செய் பாக்கியபூ மியைநோக்கிப் பரிவி னோடு
மேகசா பமும்வணக்கி யேகினா னேகுதலு மிலங்கு வெண்ணீற்
றாகனா னோக்கப்பட் டணுகியதா லருந்தவன்மே லந்த வேனம்.

இ—ள்: மூகதானவன் - மூகாசுரன், முந்தி அவன்மேல் உயிர் கவரும் எனும் சிந்தையான் - அவனிடத்து முற்பட்டுச் சென்று அந்த அருச்சுனனுடைய உயிரைக் கவருவான் என்னும் கருத்துடையவராய், அப்பாக



சாதனி - அந்த இந்திரகுமாரன், தவம்செய் பாக்கிய பூமியை நோக்கி - தவஞ் செய்கின்ற புண்ணியபூமியாகிய அந்த இடத்தைக் குறித்து, பரிவினோடும் - திருவருளுடன், ஏகசாபமும் வணங்கி ஏகினான் - (சிவவேடர்) தமது ஒப்பற்ற பினாகம் என்னும் வில்லை வளைத்து (நாண்பூட்டி)க்கொண்டு சென்றருளினார். ஏகுதலும் - அங்ஙனஞ் சென்றபோது, அந்த ஏனம் - மூகாசுரனாகிய அப்பன்றியானது, இலங்கு வெள் நீற்று ஆகனால் நோக்கப்பட்டு அருந்தவன்மேல் அணுகியது - பிரகாசிக்கின்ற வெள்ளிய விபூதியைப் பரவப் பூசிய திருமேனியையுடைய சிவவேடரால் அவதானிக்கப்பட்டபடி அரிய தவத்தைச் செய்கின்றவனாகிய அருச்சுனனிடத்துச் சமீபித்துச் சென்றது எ—று.

முந்தி - அருச்சுனன் அப்பன்றியின் வரவை அவதானித்தற்கு முந்தியென்க. பாகசாதனி - பாகசாதனனது மகன், இந்திரகுமாரன் என்றபடி. இது அர்ச்சுனனுக்குரிய நாமங்களு ளொன்றாம். இராவணன் மகன் இராவணி யென வந்தவாறு பாகசாதனன் மகன் பாகசாதனியென வந்தது. பாக்கியம் இங்கே பாக்கியத்திற்கேதுவாகிய புண்ணியத்தைக் குறித்து நிற்றலின் ஆகுபெயர் அது இப்பொருளில் வந்தமையை, இராமாயணம் மந்தரை சூழ்ச்சிப் படலத்திற் "பாக்கியம் புரிந்திலாப் பரதன்" என வந்தவாற்றானு முணர்க.

அன்னையானவள் நோய்வாய்ப்பட்ட தன் சிசுவின் நோய்நீக்கத்தை உத்தேசித்துத் தானும் பத்தியங் காக்குந் தன்மையென. பரமேசுவரனும் ஆன்மகோடிகளைப் பந்தித்திருக்கும் பாசப்பிணியை நீக்கியருளும் வண்ணம் தமது பவளம்போன்ற நிர்மலமான திருமேனியின்கண்ணே தூயதாகிய விபூதியைத் தரித்தருளுபவராதலின் "வெண்ணீற் றாகன்" எனப்பட்டார். தன்னைக் கொல்வான் வரும் மூகனைத்தானும் பார்த்தலின்றிச் சிந்தையையொருவழிப்படுத்திச் சிவததைத் தியானித்தபடி அரிய தவஞ்செய்பவனாதலின் "அருந்தவன்" என்றார். அணுகியதால் என்பதில் ஆல் அசைநிலை. (அகூ)

அதிர்ந்துவரு கேழலைக்கண் டருந்தவத்தை யழிக்குமென
வஞ்சி நாளும், உதிர்ந்தசரு குணவொழிய வுணவிலான் விரைவி
னிற்றன் னொருவில் வாங்கி, முதிர்ந்தசினத் துடனெய்தான் முகம்
புதைய வக்கணைக்கு முன்னே யண்டம், பிதிர்ந்திடவின் னாணெ
றிந்து வேடனத னபராங்கம் பிளக்க வெய்தான்.

இ—ள்: நாளும் உதிர்ந்த சருகுணவொழிய உணவிலான் - நாள்தோறும் (மரங்களினின்றும்) உதிர்ந்த சருகாகிய உணவைத் தவிர வேறு எவ்வகையான உணவுமில்லாதவனாகிய அருச்சுனன், அதிர்ந்துவரு கேழலைக் கண்டு - நிலம் அதிரும்படியாக வருகின்ற பன்றியைக் கண்டு, அரும் தவத்தை அழிக்கும் என - தான் செய்கின்றதாகிய அரிய தவத்தைக் கெடுத்துவிடுமென்று, அஞ்சி - பயந்து, விரைவினில் தன் ஒரு வில் வாங்கி - விரைவாகத் தன்னுடைய ஒப்பற்ற வில்லை வளைத்து, முதிர்ந்த சினத்துடன் எய்தான் - முற்றிய கோபத்தோடு எய்தான்; முகம் புதைய - (அந்தப் பாணம் பன்றியின்) முகத்திற் செறிய, வேடன் - சிவவேடர், அண்டம் பிதிர்ந்திட வில்நாண் எறிந்து - (தொனியினால்) அண்டஞ் சிதையும்படி வில்லின் நாணில் ஓசையெழச்செய்து, அக்கணைக்கு முன்னே - அருச்சுனன் ஏவிய

அந்தப் பாணம் போய்ப் புதைவதற்கு முந்தியே, அதன் அபராங்கம் பிளக்க எய்தான் - அப்பன்றியின் பிட்டம் பிளவுறும்படி எய்தார் எ—று.

தன்னை யழிக்குமென அஞ்சினனலன் தான் செய்யும் அரிய தவத்தை யழிக்குமென்று அஞ்சினனென்பது போதர "அருந்தவத்தை யழிக்குமென வஞ்சி" என்றார். சருகு உணவொழிய வேறுணவிலனெனினும் தன் சீற்றத்திலும் ஆற்றலிலும் குறைந்திலனென்பார் "உதிர்ந்த சருகுணவொழிய வுணவிலான்" என்றார். முன்னே - அருச்சுனனெய்த அம்பு சென்று முகத்திற் புதைவதற்கு முந்தியே, அபராங்கம் - பிட்டம்; பிற்புறம். சிவவேடர் தாம் ஆங்கு வந்தருளியமையையும் முந்தியே யம்பெய்தமையையும் அருச்சுனனுக்கு உணர்த்தவேண்டி "பிதிர்ந்திட வின்னணெறிந்தார்" என்க. நாளும் என்பதில் உம்மை முற்றும்மை. (௧௦)

இருவருமே வியவாளி யுடனேபட் டுடலுருவி யேனம் வீழ,
வெருவருமா றடவியெலாந் தடவிவரு வெஞ்சிலைக்கை வேடன்
சேனை, யொருவன்முத லெய்திருக்க வவ்விலக்கை நீயெய்த
துரனோ வென்று, பொருவருமா தவம்புரியும் புருகூதன் மதலை
யுடன் பூச லிட்டார்.

இ—ள்: இருவரும் ஏவியவாளி - அருச்சுனன் சிவவேடர் என்னும் இருவரும் தூண்டிய பாணங்கள், உடனே பட்டு உடலுருவி - ஒரே சமயத்திற் பட்டு உடலை யறுத்துச் சென்றமையால், ஏனம் வீழ - அந்தப் பன்றியானது வீழ்ந்துவிட, வெருவருமாறு அடவியெலாம் தடவிவரும் - (கண்டோரும் கண்டனவும்) பயப்படும்வண்ணம் காடு முழுவதும் ஆராய்ந்து வருகின்ற, வெம் சிலைக்கை வேடன் சேனை - வலிய வில்லைத் திருக்கரத்திற் கொண்ட சிவவேடருடன் வந்த சைநியத்தவர், முதல் ஒருவன் எய்திருக்க - முந்தியே (எங்கள் தலைவராகிய) வேடர் அம்பைச் செலுத்தியிருப்ப, அவ்விலக்கை நீ எய்தது உரனோ - அந்த இலக்குக்குரிய பொருளை நீ எய்தது வலிமையின்பாற்படுமோ, என்று - என்று சொல்லி, பொரு அரும் மாதவம் புரியும் - சமானமில்லாத சிறந்த தவத்தைச் செய்யும், புருகூதன் மதலையுடன் பூசல் இட்டார் - இந்திரகுமாரனாகிய விஜயனுடன் ஆரவாரஞ் செய்தனர்.

தான் செய்யும் தவத்திற்குப் பங்கம் நேராவண்ணம் பகழி தூண்டிப் பன்றியைக் கொன்றுவிட்டுப் பழையபடி அரிய தவத்தைச் செய்கின்றவனாகிய விசயனுடன் சிவகணத்தவர்களாகிய வேடர்கள் வலிதில் வாதிற்குச் சென்றனரென்பது போதர "ஒருவன் முத லெய்திருக்க அவ்விலக்கை நீயெய்த துரனோ வென்று பொருவரும் மாதவம் புரியும் புருகூதன் மதலையுடன் பூசலிட்டார்" என்றார். விலங்கை யென்னும் பாடத்திற்குப் பன்றியாகிய மிருகத்தையெனப் பொருள் கொள்க. (௧௧)

வேறு

புராத னாகம வேத கீத புராண ரூபமொ ழித்துவெங்
கிராத னாகிய வடிவு கொண்ட கிரீச னோடுரை செய்குவான்
விராத னாதிநி சாச ரேசரை வென்று முச்சிக ரத்தின்மே
லிராத வாறட லமர்பு ரிந்த விராம னேநிக ரேவினான்.



இ—ள்: விராதன் ஆதி நிசாசர ஈசரை வென்று - விராதன் முதலாகிய இராக்கதத் தலைவர்களை வென்று, முச்சிகரத்தின் மேல் இராதவாறு - அவர்கள் திரிகோணாசலமென்னும் மலையைத் தன்னகத்துக் கொண்டதாகிய இலங்கையிலே குடியிராவண்ணம், அடல் அமர் புரிந்த - கொல்லுதற்காகிய யுத்தத்தைச் செய்த, இராமனே நிகர் ஏவினான் - இராமபிரானையே ஒத்த அம்பில் வலியவனாகிய விசயன், புராதன ஆகம வேத கீத புராண ரூபம் ஒழித்து - பழைய ஆகமங்களாலும் வேதவாக்கியங்களாலும் புராணங்களாலும் எடுத்துப் பாராட்டப்படுகின்ற தமது சுவய வடிவத்தை மறைத்து, வெம் கிராதனாகிய வடிவு கொண்ட - வெவ்விய வேட்டுவராகிய வடிவத்தைக் கொண்டருளிய, கிரீசனோடு - கைலாசபதியாகிய சிவபிரானுடன், உரை செய்குவான் - பின்வருமாறு கூறுகின்றான் எ—று.

வேதாகம புராணங்களால் எடுத்துப் பாராட்டப்படும் வடிவம் இறைவன் ஆன்மாக்கள் ஈடேறும்வண்ணம் கொண்டருளிய தடத்த வடிவமாம். விராதனாதி நிசாசரர் - விராதன், கவந்தன், கரன், தூடணன், திரிசிரா, இராவணன், கும்பகன்னன், இந்திரசித்து முதலியோர். முச்சிகரமென்றது திரிகோணமலையை. இதனை இவ்வாசிரியர் "அணி முக்கோணக் குன்றினையும்" என அருச்சுனன் றீர்த்தயாத்திரைச் சருக்கத்திற் கூறியவாற்றானு முணர்க. மேலே சொல்லப்பட்ட அரக்கருட் சிலர் தென்னிந்தியாவிற் சஞ்சரித்தனரேனும் இலங்கைக்கு அந்நாடு சமீபமாய் இருத்தல்பற்றியும் அக்காலத்தில் இராவணன்பரிபாலனத்தின் பாற்பட்டமைபற்றியும் இலங்கையுடன் சேர்த்துச் சொல்லப்பட்டது; நிசாசரர் - இராக்காலத்திற் சஞ்சரிப்பவர்; வடநூன் முடிபு. இராமனே நிகர் ஏவினான் என்பதற்கு இராமபிரான் கையிற் கொண்ட அம்பையொத்த அம்பைக் கொண்ட அருச்சுனன் என விரித்துப் பொருள் கொள்க. வில்யுத்தத்தில் இராமபிரானை நிகர்த்தவனென்றபடி. இராமனே என்றதில் ஏகாரம் பிரிநிலை. இதுமுதல் மூன்று கவிகள் எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (௧௨)

முன்பு விட்டவென் வாளி கேழன் முகம்பி ளந்துபி னுருவநீ
பின்பு விட்டச ரஞ்சி ரத்திடை யுருவு மாறுபி ளந்ததால்
வன்பொ டிப்படி புகலுகின்றது வன்மை யோதிறல் வின்மையோ
வென்பெ யர்ப்பொறி யேவு பாரித னுடலி னீவிடு மேவுபார்.

இ—ள்: முன்பு விட்ட என் வாளி - முந்திச் செலுத்திய என் பாணம், கேழல் முகம் பிளந்து பின் உருவ - இப்பன்றியின் முகத்தைப் பிளந்து பிற்புறமாக ஊடறுத்துச் செல்ல, நீ பின்பு விட்ட சரம் - நீ பன்றியின் பின்புறமாகச் செலுத்திய அம்பு, சிரத்திடை உருவுமாறு பிளந்தது - அதன் தலையை ஊடறுத்துப் பிளந்துவிட்டது, வன்பொடு இப்படி புகலுகின்றது - (இங்ஙனமாக) வன்கண்மையோடு இப்படி வாதிடுவது, வன்மையோ திறல் வின்மையோ - உன் வாக்கு வல்லபமோ இல்லையேல் உனது வில் யுத்தத்தின் திறனோ, இதன் உடலில் - இப்பன்றியின் உடம்பில், என் பெயர்ப் பொறி ஏவு பார் - என் பெயர் பொறிக்கப்பட்ட அம்பின் நிலையைப் பார், நீ விடும் ஏவு பார் - நீ செலுத்திய பாணத்தின் நிலையை அவதானிப்பாய் எ—று.

வன்பு - இங்கே பழிக்கஞ்சாமை; இப்படிப் புகலுகின்றதென்பது சந்த நோக்கி இயல்பாய் நின்றது; வன்மையோ என்பதில ஓகாரம் வினவொடு எதிர்மறைப் பொருளுமாம் இருவருமெய்த அம்புகள் பன்றியின் உடம்பைப் பிளந்து கிடக்கும் நிலையைக் கண்டு இருவருள் எவர் எய்தமை முறையென்பதை ஐயமற அறிதலாகு மாதலினால் அர்ச்சுனன "என் பெயர்ப் பொறி யேவுபா ரிதனுடலி னீவிடு மேவு பார்" என்றானென்க. (கங)

எனக்க ருந்தவ முயற லானுதிர் சருக லாலுணா வில்லையால்
உனக்கு முன்படை வேட ருக்குநல் லுண்டி யாமிது கொண்டுபோ
வனக்கு றும்பொறை நாட வுன்படை வலிமை கொண்டு வழக்கறச்
சினக்கில் வெங்கணை விடுவன் யானுயர் திசைதொ றுந்தலை சிந்தவே.

இ—ள்: அரும் தவம் முயறலால் - அரிய தவத்தைச் செய்கின்றமையினால், உதிர் சருகு அல்லால் உணவு எனக்கு இல்லையால் - மரங்களிலிருந்து உதிரும் சருகேயொழிய எனக்கு வேறு உணவு இல்லையாதலால், வனக்குறும்பொறை நாட - சிறந்த குறிஞ்சிநிலத தலைவனே, உனக்கும் உன் படை வேடருக்கும் - உனக்கும் உன்னுடைய பரிசனராகிய வேடுவர்களுக்கும், இது நல் உண்டியாம் - இப்பன்றி ஏற்ற உணவாகும், கொண்டுபோ - (ஆனதால்) இதனை எடுப்பித்துக்கொண்டு போகுதி, உன் படை வலிமைகொண்டு வழக்கறச் சினக்கில் - (அங்ஙனஞ் செய்தலை விடுத்து) உனது பரிசனர் உடன் நிற்கின்றார்கள் என்ற துணிவுகொண்டு முறைதவறச் சீற்றங் கொள்வையேல், தலை உயர் திசை தொறும் சிந்த யான் வெம் கணை விடுவன் - உன் தலையும் உன் பரிசனர் தலைகளும் பரந்த திக்குகடோறும் வெட்டுண்டு சிதறும்படி யான் வெவ்விய பாணங்களைச் செலுத்துவேன் எ—று.

இது அருச்சுனன் சிவவேடரை எச்சரித்தவாறும். (கச)

வேறு.

என்றமொழி செவிப்படலு மெயினர்க் கெல்லா மிறைவனா
கியவெயின னிவனை நோக்கிப், பன்றிபெரு மோகரத்தோ டின்றுன்
னாவி பருகியிடு மெனமிகவும் பயப்பட் டாயோ, நின்றுபெருந்
தவமுயல்வோர் தாங்கள் கொண்ட நினைவொழியப் புறத்தொன்று
நினைவரோசொல், பொன்றிடினு நீயறியப் பசுத்தோல் போர்த்துப்
புலிப்பாய்ச்சல் பாய்வரோ புரிவி லாதாய்.

இ—ள்: என்ற மொழி செவிப்படலும் - என்று அர்ச்சுனன் கூறிய வார்த்தை திருச்செவியிற் படுதலும், எயினர்க்கு எல்லாம் இறைவனாகிய எயினன் - வேடர்கட்கெல்லாந் தலைவராகிய சிவவேடர், இவனை நோக்கி - இவ்வருச்சுனனைப் பார்த்து, பன்றி பெரு மோகரத்தோடு இன்று உன் ஆவி பருகியிடுமென மிகவும் பயப்பட்டாயோ - இப்பன்றியானது பெருஞ் சத்தத்துடன் இன்று உன்னுடைய உயிரைக் கவர்ந்துவிடுமென் றெண்ணிப் பெரிதும் அஞ்சினையோ, நின்று பெரும் தவம் முயல்வோர் - நிலையாக நின்று அரிய தவத்தைப் புரிபவர்கள், பொன்றிடினும் - இறக்க நேர்ந்தாலும், தாங்கள் கொண்ட நினைவு ஒழியப் புறத்து ஒன்று நினைவரோ - தாங்கள் மனத்திற் கொண்ட இலக்கைத் தவிர வேறு கருமத்திற் சிந்தனை செல்ல



விடுவரோ, புரிவு இலாதாய் - செய்யவேண்டியதைச் செய்யும் நியதியில்லாதவனே, பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வரோ - பசுவின் தோலைப் போர்த்துக்கொண்டு புலியின் பாய்ச்சலைப் பாய்வார்களோ, நீ அறியச் சொல் - நீயே அறிந்து விடை சொல்லுதி எ—று.

மோகரம் உக்கிரமெனினுமாம். பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்தல், புறத்தொன்றும் அகத்தில் அதற்கு மாறான பிறிதொன்றுமாகச் செய்தல். புரிவு அன்பெனினுமாம். ஓகாரங்களுள் முன்னையது வினா. ஏனையவை எதிர்மறை. இது முதல் எட்டுக் கவிகள் எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (கரு)

மறையவனோ வொருகுடைக்கீழ் வையங் காக்கு மன்ன
வனோ வைசியனோ வடிவமாறிப், பொறையுடனே தவம்புரியு மவுண
மாக்கள் புத்தேளிர் நிருதரிலோர் புறத்து ளானோ, நிறையுடன்
மெய்ப் பிறைபோல வடிவந் தேய்ந்து நெருப்பிடைநீ நிற்கின்றாய்
நெடுநா ளுண்டு, குறையுனக்கி யாதுரையென் றானென்ற போதக்
குருகுலநா தனுந்தன்னைக் கூறி னானே.

இ—ள்: மறையவனோ - நீ பிராமணனோ, ஒரு குடைக்கீழ் வையம் காக்கும் மன்னவனோ - ஒப்பற்ற வெண்கொற்றக் குடை நீழலிற் பூமியைப் பாதுகாக்கும் அரசனோ, வைசியனோ - வணிகர் குலத்தவனோ, வடிவம் மாறி - வேடம் மாறி (மாறுவேடங்கொண்டு), பொறை - பொறுமையோடு, தவம் புரியும் அவுண மாக்கள் - தவஞ்செய்யும் அசுரர்கள், புத்தேளிர் - தேவர்கள், நிருதரில் - அரக்கர்களென்னு மிவர்களுள், ஒரு புறத்துளானோ - ஒரு பாலினரைச் சேர்ந்துள்ளனையோ, நிறையுடல் - நிறைவுள்ள உன்தேகம், பிறை மெய் போல - பிறைச்சந்திரனைப்போல, வடிவம் தேய்ந்து - வடிவம் தேயப்பெற்று, நெருப்பிடை நீ நிற்கின்றாய் - பஞ்சாக்கினி மத்தியிலே நிற்கின்றாய், நெடு நாள் உண்டு - (நீ இப்படி நிற்றல்) பல நாட்களாயின, உனக்குக் குறை யாது - இப்படி நிற்றற்கு உனக்கு நேர்ந்த குறையென்னை?, உரை என்றான் - அக்குறையைச் சொல்வாயாக என்று சிவவேடர் வினவியருளினார், என்ற போது - என்று வினவியபோது, அக்குருகுல நாதனும் தன்னைக் கூறினான் - அந்தக் குருகுலத் தலைவனாகிய விசயனும் தன் வரலாற்றைச் சொன்னான் எ—று.

அசுரர்க்கும் இராக்கதர்க்கும் வக்கிரதந்தம் கோரரூப மென்னுமிவைகள் இருத்தலாலும் தேவர்களிடத்தில் இமையாநாட்டம் அடி படியிற்றோயாமையமைதலாலும், வடிவம் மாறி யென்றார். பிறைச் சந்திரன்போல் இவனும் தன் சிறந்த தேகம் தேயப் பெற்றானாதலின், 'நிறையுடன் மெய்ப்பிறைபோல வடிவந் தேய்ந்து" என்றார். தன்னை யென்றது இங்கே தன்னுடைய வரலாற்றையும் நோக்கத்தையும் குறித்து நின்றது. அக்குருகுலநாதன் என்பதில் 'அ' பண்டறிசுட்டு. ஏகாரம் ஈற்றசை. (கசு)

கூறியசொற் கொண்டறிந்து வேடன் மீண்டுங் குருகுலத்தோ
ரைவருளுங் குனிவிற் கற்றாச், சீறிவரு துருபதனைத் தேரிற் கட்டிச்
சென்றுகுரு தக்கிணைசெய் சிறுவ னீயோ, வீறியலெங் குலத்தி

லொரு வேடன் றன்னை வின்மைபொரு தவன்றடக்கை விரலுங் கொண்டாய். பேறறவன் றொருமுனிவன் வார்த்தை கேட்டுப் பிளந்தனைபல் வேடுவரைப் பிறைவா யம்பால்.

இ—ள்: கூறிய சொல் கொண்டறிந்து வேடன் - அருச்சுனன் சொன்ன வார்த்தையை மனத்திற் கொண்டுணர்ந்து சிவவேடர், மீண்டும் - பின்னரும் (கூறுகின்றார்), குருகுலத்தோர் ஐவருளும் - குருகுலத்தவர்களாகிய பஞ்சபாண்டவருள், குனிவில் கற்ற - வளைக்கப்படுகின்றதாகிய வில்லிற்குரிய வித்தையைத் துரோணரிடம் பயின்று, சீறிவரு துருபதனை - உன்னோடு மாறுபட்டு வந்த துருபதனென்னும் அரசனை, தேரிற் கட்டிச் சென்று - தேர்க்காலிற் கட்டிக் கொண்டுபோய், குருதக்கிணை செய் சிறுவன் நீயோ - உன் குருவாகிய துரோணாச்சாரியருக்குத் தக்கிணையாக உதவிய சிறுவன் நீதானோ, வீறு இயல் எங் குலத்து ஒரு வேடன்றன்னை - வலிமையமைந்துள்ள எங்கள் குலத்துப் பிறந்த ஒரு வேட்டுவச் சிறுவனை, வின்மை பொருது அவன் றடக்கை விரலுங் கொண்டாய் - வில்வித்தையில் அவன் உன்னைக்காட்டிலுஞ் சிறந்திருப்பதைக் கண்டு பொறாமைகொண்டு அச்சிறுவனுடைய திண்ணிய வலக்கைப் பெருவிரலை உன் குருமூலமாகத் தமக்குத் தக்கிணையாக வாங்குவித்தாய், பேறு அற - ஒரு பயனுமில்லையாக, அன்று ஒரு முனிவன் வார்த்தை கேட்டு - முன்னர் ஒரு முனிவனுடைய சொல்லை நம்பி, பல் வேடுவரைப் பிறைவாய் அம்பால் பிளந்தனை - (நங் குலத்தவராகிய) பல வேடுவர்களை (க் காரணமின்றி)ப் பிறைமுகப் பாணங்களினாற் பிளந்து கொன்றனை எ—று.

சீறிவரு துருபதனென்பதற்குத் துரோணருடன் மாறுபட்டு வந்த துருபதனெனப் பொருள் கொள்ளலுமாம்; எங்குலத்திலொரு வேடனென்றது ஏகலைவனை துருபதன் ஏகலைவனென்னு மிவர்கள் வரலாற்றை வாரணாவதச் சருக்கத்திற் காண்க. ஒரு முனிவனென்றது வேடராலே தனது ஆனிரையை யிழந்த ஒரு வைதிகமுனியை; இம்முனிவன் பெயர் சொல்லப்படவில்லை. முனிவன் வரலாற்றைத் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திற் காண்க. இவ்வினைகள் சிவவேடர் அர்ச்சுனனுக்குக் கோபம் மூளச்செய்தவாறும். ()

கன்றிவரு கனற்கடவுள் கையிற் றேருங் காண்டீவக் கார்முகமுங் கணையும் வாங்கி, யொன்றுபடக் காண்டவக்கானெரித்த நாளி லோருயிர்போற் பலயோனி யுயிரு மாட்டிக், குன்றுதொறுங் குன்றுதொறு மிருந்த வேடக் குழாமனைத்து நீறுபடக் கொன்று யென்ப, ரின்றுமெனை முகநோக்கி வன்மை வின்மை யிரண்டுக்கு மன்னவநீ யிகழ்ந்திட் டாயே

இ—ள்: கன்றி வரு கனற் கடவுள் கையில் - பசியால் வருந்தி வந்த அக்கினிதேவனிடத்தில், தேரும் காண்டீவக் கார்முகமும் கணையும் வாங்கி - தேரையும் காண்டீப மென்னும் வில்லையும் அம்பையும் பெற்று, காண்டவக் கான் ஒன்றுபட எரித்த நாளில் - காண்டவம் என்னும் வனத்தை ஒருங்கு அழியும்படி எரித்த சமயத்தில், ஓர் உயிர் போல் பல யோனி உயிரும் மாட்டி - ஒரு உயிரை மாளச் செய்தது போலப் பல பேதமான உயிர்களை



யும் வதைத்து, குன்று தொறும் குன்று தொறும் இருந்த வேடக் குழாமனைத்தும் - பல மலைகள்தோறும் சஞ்சரித்த வேட்டுவக் குலத்தினர் எல்லோரையும், நீறுபடக் கொன்று என்பர் - சாம்பராம்படி அழித்தாயென்று சொல்வர், மன்னவ நீ - அரசர் குலத்திற் பிறந்தவனாகிய நீ, இன்றும் - இப்பொழுதும், என்னை முகம் நோக்கி - என்னை நேரிற் பார்த்து, வன்மை வின்மை இரண்டிற்கும் இகழ்ந்திட்டாய் - வலிமை விற்றொழில் என்னும் இரு திறமையிலும் அவமதித்தனை எ—று.

கையில் என்பதிற் கை ஏழாம் வேற்றுமை யுருபாய் இடப்பொருளில் வந்தது. மாட்டி மாள் என்பதன் பிறவினை; மாளச்செய் தென்றபடி. குன்றுதொறும் குன்றுதொறும் என்ற அடுக்கு மிகுதிபற்றி வந்தது. வன்மை வின்மை என்னுமிரண்டுக்கு மிகழ்ந்தது, "சினக்கில் வெங்கணை விடுவன் யா னுயர் திசைதொறுந் தலை சிந்தவே" என மேலே சொல்லப்பட்டதையாம். பொதுவாக உயிர்கட்கும் சிறப்பாக வேடருக்கும் நீ அனர்த்தம் விளைத்தாயெனச் சிவவேடர் விஜயனைக் குறைகூறியவாறும். (கூஅ)

மல்லுக்கும் புயவலிக்கும் கலக்குறாத மனவலிக்கும் மறையுடன்போர் வாளி யேவும், வில்லுக்கு முனின்மிக்கார் மண்மேலுண்டோ விசயனெனும் பெயர்க்குரிய விசயத்தாலே, சொல்லுக்கு விடேனின்று நீயு நானுந் தோள்வலியுஞ் சிலைவலியுங் காண்டல் வேண்டுங், கல்லுக்கு நிகர்மனத்தா யென்றா னந்தக் காளையும்வில் வளைத்தொருவெங் கணைமேல் விட்டான்.

இ—ள்: மல்லுக்கும் - மற்போருக்கும், புயவலிக்கும் - தோள் வலிக்கும், கலக்குறாத மன வலிக்கும் - கலக்க மடையாத மனத் திண்மைக்கும், மறையுடன் போர் வாளி யேவும் வில்லுக்கும் - மந்திர சகிதமாகப் போர்க்குரிய பாணங்களைத் தூண்டும் வில்லின் திறமைக்கும், உனின் மிக்கார் மண்மேல் உண்டோ - உன்னிற் சிறந்தவர் உலகத்தில் உளரோ, விசயன் எனும் பெயர்க்கு உரிய விசயத்தாலே - விசயன் என்னும் பேரளவில் வந்ததாகிய வெற்றிப்பாடு காரணமாக, சொல்லுக்கு விடேன் - உன் வீர வார்த்தையை மாத்திரங் கேட்டு (அதனால் உன்னைத்) தப்பிப்போக விடமாட்டேன், கல்லுக்கு நிகர் மனத்தாய் - கல்லுக்கு ஒப்பான மனத்தையுடையவனே, நீயும் நானும் தோள்வலியும் சிலைவலியும் இன்று காண்டல் வேண்டும் - நீயும் நானும் எங்கள் புய வலிமையையும் வில் வலிமையையும் இப்பொழுதே சோதித்துப் பார்த்தல் வேண்டும், என்றான் - என்று சிவவேடர் கூறினார், அந்தக் காளையும் வில்வளைத்து ஒரு வெம் கணை மேல் விட்டான் - (இவற்றைக்கேட்ட) அந்த இடபம்போன்ற அர்ச்சுனனும் தன் கையிற் கொண்ட வில்லை வளைத்து (நாண்பூட்டி) ஒருகொடிய அம்பைச் சிவவேடர் மீது தூண்டினான் எ—று.

இச்செய்யுளில் முதலடி யிரண்டும் வஞ்ச நவிற்சியாகும். இரக்கமின்மைபற்றிக் "கல்லுக்கு நிகர் மனத்தாய்" என விளித்தாரென்க. (கூகூ)

விட்டகொடுங் கணையையொரு கணையால் வேடன் விலக்கிவரி சிலைக்குரிய விசயன் றன்மேற், றொட்டனனோ ரிரண்டுகணை யவை போய் மார்புந் தோளுமுடன் றுளைத்தனவாற் றுளைத்த போது, கட்

டழலி னிடைநின்ற காளை மீளக் கடுங்கணைக ளொருமூன்று கடி
தின் வாங்கி, வட்டநெடும் பீலியணி முடியு மார்பும் வாகுவுமே யிலக்
காக வலியோ டெய்தான்.

இ—ள்: விட்ட கொடும் கணையை - விசயன் செலுத்திய கொடிய பாணத்தை, வேடன் ஒரு கணையால் விலக்கி - அச்சிவவேடர் ஒரு அம்பினால் மாற்றி, வரி சிலைக்கு உரிய விசயன்மேல் ஓர் இரண்டு கணை தொட்டனன் - வரிந்து கட்டப்பட்ட வில்லிற் சிறந்த அர்ச்சுனன்மீது இரண்டு பாணங்களைத் தூண்டினார், அவை போய் மார்புந் தோளும் உடன் துளைத்தன - அப்பாணங்கள் சென்று அருச்சுனனுடைய மார்பினையும் தோள்களையும் ஒருங்கு ஊடறுத்தன, துளைத்தபோது - அங்ஙனம் ஊடறுத்துச் சென்றபோது, கட்டழலின் இடை நின்ற காளை - வெவ்விய பஞ்சாக்கினி மத்தியிலே நின்று தவஞ்செய்த அருச்சுனன், கடுங்கணைகள் ஒரு மூன்று மீளக் கடிதில் வாங்கி - வேகமாகச் செல்லும் மூன்று அம்புகளை மீளவும் எடுத்து, நெடும் பீலி வட்ட அணி முடியும் மார்பும் வாகுவுமே இலக்காக வலியோடு எய்தான் - பரந்த மயிற்பீலியை வட்டமாகத் தரித்துள்ள (சிவவேடரின்) முடியும் மார்பும் புயங்களும் குறியாக வலிமையுடன் எவினன் எ—று.

எய்தகணை திருமேனி யெய்து முன்ன ரிறகு துணிந் தொன்றி
ரண்டா யிலக்குறுமல், வெய்தின்வலி யுடனெய்தான் மூன்றுவாளி
விண்ணவர்கோன் மகன்மேலும் வேறொன் றெய்தான், ஐதினிவன்
வினைதமுறத் தொடுத்தா னென்ப தறியாம லெயினன்முடி யணி
ந்த பீலி, கொய்துநதி யறல்சிதறப் பிறையு மானுங் குலையவொரு
கணைகுரக்குக் கொடியோ னெய்தான்.

இ—ள்: எய்த கணை திருமேனி எய்து முன்னர் - விசயன் விட்ட பாணங்கள் சிவவேடருடைய திருமேனியை யடைதற்கு முந்தியே, இறகு துணிந்து ஒன்று இரண்டாய் - அடியிறகுகள் சிதைந்து தனித்தனி ஒவ்வொரு பாணமும் இரு துண்டாகி, இலக்குறுமல் - (அருச்சுனன் குறித்த) இலக்கை யடையாமல், மூன்று வாளி வெய்தின் வலியுடன் எய்தான் - மூன்று அம்புகளை விரைவில் திண்மையோடு செலுத்திச் சிதைத்தார், விண்ணவர்கோன் மகன் மேலும் வேறு ஒன்று எய்தான் - (அச்சிவவேடர்) இந்திரகுமாரனாகிய அருச்சுனன்மீதும் வேறொருபாணத்தைப் பிரயோகித்தார், குரக்குக் கொடியோன் - அனுமக்கொடியை யுடையவனாகிய விசயன், இவன் ஐதில் வினைதமுறத் தொடுத்தான் என்பது அறியாமல் - இவ்வேடர் சிறப்புடன் திருவிளையாட்டாகத் தன்மேற் பாணங்களைப் பிரயோகித்தாரென்ற இரகசியத்தை உணராமையால், எயினன் முடி அணிந்த பீலி கொய்து நதி யறல் சிதற பிறையும் மானுங் குலைய - சிவவேடர் முடியிலணிந்திருந்த மயிற்பீலியையும்வெட்டிக் கங்கைநீர்சிந்த பிறைச்சந்திரனும் அதன்கணுள்ள மான் களங்கமும் நிலைகுலைய, ஒருகணை எய்தான்-ஒரு பாணத்தைச் செலுத்தினன்.

நிர்மலமான மேனியாதலின் திருமேனி யெனப்பட்டது. இறகு - அம்புகள் விரைவாகச் செல்லுதற்கு ஏதுவாய் அவற்றின் அடியிற் கட்டப்படும் பருந்து முதலிய பறவைகளின் இறகாம். இலக்குறுமல் - இலக்காகக் கொண்ட அங்கங்களிற் படாவண்ணம்; இங்கே இலக்காய் நின்றவை "முடி



யும் மார்பும் வாகுவ்"மாம். ஐதினென்பதற்கு இடையிடையே யெனப் பொருள் கொள்ளலுமாம். சிவவேடர் தமக்கொரு திருவிளையாட்டாக இடையிடையே பாணங்களைத் தூண்ட, அருச்சுனன் அந்த இரகசியத்தை உணரானுதலின் சீற்றமுற்று, 'முடியணிந்த பீலி கொய்து நதியறல் சிதறப் பிறையும் மானுங் குலைய ஒருகணை யெய்தா' னென்றபடி. பரமசிவன் வேட்டுவத் திருக்கோலங்கொண் டெழுந்தருளியபோது திருமுடியின்கண்ணே கங்காநதியும் பிறைச்சந்திரனும் பொருந்தி யிருந்தனவோ வெனின், அவை அச்சமயத்தில் விஜயன் கண்ணுக்குப் புலப்படா திருந்தனவேனும் ஆங்குப் பொருந்தியிருந்தனவென்பதே நூலாசிரியர் கொள்கையாம். இனி, சிவபிரான்றிருமுடிக்கு நதியும் பிறையும் இயற்கையாகவுள்ளன எனினுமாம்.

அற்போலச் சூழ்கின்ற கிராத ரெல்லா மவன்முடிமே லிவ
னெய்த தறிந்து தீயி, னிற்போன்மே லெழுதலுமங் கவரை யெல்லா
நில்லுமெனக் கையமைத்து நீயின் றெய்த, விற்போர்கண் டன
மடடா விற்பி டிக்கும் விரகறியோ முன்னிடத்தே வேத விற்போர்,
கற்போமென் றொருகணைமற் றவன்மேல் விட்டான் கனகமலைச்
சிலைவளைத்த கையி னனே.

இ—ள்: அல் போலச் சூழ்கின்ற கிராத ரெல்லாம் - இருள்போலச் சூழ்ந்து நிற்கின்ற வேடர்களெல்லோரும், அவன் முடிமேல் இவன் எய்தது அறிந்து – அச்சிவவேடரின் திருமுடிமீது இந்த அர்ச்சுனன் அம்பெய்தமையைக் கண்டு, தீயில் நிற்போன்மேல் எழுதலும் - பஞ்சாக்கினி மத்தியில் தவஞ் செய்துகொண்டு நிற்கும் அர்ச்சுனன்மீது போர்க்குப் புறப்படுதலும், அங்கு அவரையெல்லாம் நில்லும் எனக் கை அமைத்து-அப்பொழுது அவர்களெல்லோரையும் நிற்பீர் (பொறுங்கள்) எனக் கையாற் றடுத்து, நீ இன்று எய்த விற்போர் கண்டனம் அடடா - நீ இப்பொழுது அம்பெய்த தன்மையால் உன் வில்யுத்தத் திறமையை அறிந்தேம் அடடா, வில் பிடிக்கும் விரகு அறியோம் - வில்லைக் கையாளும் முறையை (இதுகாறும்) அறியேம், உன்னிடத்தே வேத விற்போர் கற்போம் - உன்னிடத்தில் வில்யுத்தத்திற்காகிய சாத்திரத்தைப் பயின்றுகொள்வோம், என்று - என்று கூறி, கனகமலைச் சிலை வளைத்த கையினன் - மேருமலையாகிய வில்லை வளைத்த திருக்காத்தையுடைய சிவவேடர், ஒரு கணை அவன்மேல் விட்டார் - ஒரு அம்பை அவ் விசயன்மீது செலுத்தினர் எ—று.

அடடா என்னுமடுக்கு வியப்புப் பொருளில் வந்தது. 'விற்பிடிக்கும் விரகறியோம் உன்னிடத்தே வேதவிற்போர் கற்போம்' என்றமை வஞ்சநவிற்சி.

(௬0௨)

வேறு.

பீலிமுடி யோன்விடு பிறைக்கணையை வேறொரு பிறைக்கணையி
னால்வில கிவிற், கோலிவடி வாளிமழை சிந்தினன்ம ழைக்கரிய
கொண்டலென நின்ற குமரன், மூலிவடி வாமெயினன் மேலவைப
டாமன்முனை மண்மிசை குளிக்க முரணுர், வேலியிடு மாறெனவி
ழுந்தன விழுந்ததனை விசயனனி கண்டு வெகுளா.

இ—ள்: மழைக் கரிய கொண்ட லென நின்ற குமரன் - மழைக்குக் காரணமாகிய கருமேகம்போல அங்கே நின்ற விசயன், பீலி முடியோன் விடு பிறைக் கணையை-மயிலிறகை யணிந்த திருமுடியையுடைய சிவவேடர் செலுத்திய பிறைமுகப் பாணத்தை, வேறு ஒரு பிறைக்கணையினால் விலக்கி-தன்னிடத்துள்ள வேறொரு பிறைமுகப் பாணத்தாற் றடுத்து, வில் கோலி-தன் வில்லை யுறவளைத்து, வடி வாளி மழை சிந்தினன் - கூரிய அம்புகளை மழைபோலச் சொரிந்தான், அவை - அப்பாணங்கள், மூலி வடிவாம் எயினன் மேல் படாமல் - உலக காரணமாயுள்ள திருவடிவத்தை யுடையவராகிய சிவவேடர்மீது படுதலில்லாமல், மூனை மண்மிசை குளிக்க - அப்பாணங்களின் நுதி நிலத்திலே புதைய, முரணார் வேலி யிடுமாறு என விழுந்தன - வலிய வேலி கோலியவாறு புதையுண்டு நின்றன, விழுந்த தனை - அங்ஙனம் தன் பாணங்கள் மண்மிசை வீழ்ந்து புதையுண்டு நிற்றலை, விசயன் கண்டு நனி வெகுளா - அர்ச்சுனன் பார்த்து அதிக கோபமுற்று எ—று.

விலக்கி யென்னும் பிறவினை சந்தவின்பம் நோக்கி விலகியென வந்தது. சகத்திற்குக் காரணமாகிய வடிவமாதலின் அர்ச்சுனன் எவிய அம்புகள் அச்சிவவேடரை யணுகுதற்கஞ்சி நிலத்தில் வீழ்ந்து நுதி மண்ணிற் புதைந்தபடி வேலி கோலியவாறு நின்றவென்க. இதுமுதற் பதின்மூன்று கவிகள் எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம். (௧௦௩)

வேணிமுடி வேடன்மிசை வேறுமொரு சாயகம் விடுத்தனன் விடுத்த கணைவின், ஞாணியற முன்பினொடு பின்புதொடு கின்றகணை நடுவணற வெட்டு தலுமே, கோணிய விளம்பிறை முடித்தவன் வெகுண்டுபல கோல்கள்விட இந்த்ர குமரன், பாணியுடனேதொடை நடுங்கியய னின்றதொரு பாதவ மருங்க ணுகினான்.

இ—ள்: வேணிமுடி வேடன்மிசை - சடைமுடியையுடையவராகிய சிவவேடர்மீது, வேறும் ஒரு சாயகம் விடுத்தனன் - (விஜயன்) வேறும் ஒரு அம்பைச் செலுத்தினான், விடுத்த கணை - செலுத்திய பாணம், வில் நாணி யற - வில்லின் நாணும் அறும்படி, முன்பினொடு - வலிமையுடன், பின்பு தொடுகின்ற கணை நடுவண் அற வெட்டுதலும் - (தாம்) பின்பு தொடுத்த பாணத்தை இரு துண்டாக நடுவில் துணித்துவிடுதலும், கோணிய இளம்பிறை முடித்தவன் - வளைந்த பாலசந்திரனைத் தரித்த சிவவேடர், வெகுண்டு - சினந்து, பல கோல்கள் விட - பல பாணங்களைத் தூண்ட, இந்திர குமரன் பாணியுடனே தொடை நடுங்கி - (அதனால்) விசயன் தன் கையும் தொடையும் (கால்களும்) நடுங்கப்பெற்றவனாய், அயல் நின்றது ஒரு பாதவ மருங்கு அணுகினான் - அயலே நின்றதாகிய ஒரு பெரு மரத்தடியிற் சென்று ஒதுங்கினான் எ—று.

விசயன் செலுத்திய ஒரு பாணம் சிவவேடர் தொடுத்த பாணத்தை வெட்டியமையின் அச்சிவவேடர் வெகுண்டு பல கோல்கள் விட்டாரென்றபடி. அச்சமேலீட்டினாலும் சோர்வினாலும் கைகால்நடுங்குதல் இயல்பாதலின் தொடையென்பதற்குப் பாணமெனப் பொருள்கோடல் ஈண்டுப் பொருந்தாதென்க. சிவவேடரின் பாணப்பிரயோகத்திற்கு நிர்வகித்து நிற்ற லாற்றானாய் "அயல் நின்றதொரு பாதவமருங் கணுகினான்" என்க. (௧௦௪)



கொண்டதவ மேதன மெனப்புரியும் வில்லிமெய் குலைந்தயருகின்ற நிலையைக், கண்டருகு நின்றவிம வான்மக ளுரைக்கமிகு கருணையொ டிரங்கி யவனைப், பண்டுதவ மேபுரி யிளைப்பற மனத்தின்மிகு பரிவுடைய னாகி வெகுளா, வெண்டிசையும் வென்றனலளித்தசிலை நாணியற வெயினர்பதி யெய்த னனரோ.

இ—ள்: கொண்ட தவமே-தான் நியதியாகக் கொண்ட தவமொன்றே, தனமெனப்புரியும் வில்லி - சிறந்த செல்வமென்று இயற்றுகின்ற அருச்சுனன், மெய் குலைந்து அயருகின்ற நிலையை-தேகம் நிலைகுலைந்து சோருகின்ற நிலைமையை, அருகு நின்ற இமவான் மகள் கண்டு உரைக்க - சிவவேடரின் திருமருங்கில் நின்ற இமயமலையரசன் (வளர்த்த) புதல்வியாராகிய உமாதேவியார் பார்த்துத் தமது தலைவருக்கு விண்ணப்பஞ் செய்ய, மிகுகருணையொடு இரங்கி - இறைவர் மிக்க திருவருளுடன் பரிவுகூர்ந்து, பண்டுதவமேபுரி இளைப்பு அற - பல நாட்களாகத் தவஞ் செய்தமையினால் உண்டாகிய சிரமம் ஒழியும்படி, மனத்தில் மிகு பரிவுஉடையனாகி-அகத்தே மிகுந்த இரக்கங் கொண்டவராய், வெகுளா-புறத்தே அவன்மீது கோபிப்பார் போல், எண்திசையும் வென்று அனல் அளித்த சிலைநாணி அற-எட்டுத்திக்கிலும் எதிர்த்தாரைவென்றதும் அக்கினிதேவன் உதவியதுமாகிய காண்டீபமென்னும் வில்லின் நாண் அறும்வண்ணம், எயினர்பதி- வேட்டுவத் தலைவராக எழுந்தருளிய கைலாசபதி, எய்தனன் - அம்பு செலுத்தினார் எ-று.

இறைவி பிரேரிக்க இறைவர் திருவருள் பாலித்தாரென்பார் "அருகு நின்ற இமவான் மகளுரைக்க மிகு கருணையொடிரங்கி" என்றார். சத்தியின்றிச் சிவத்தின் அருளைப் பெறுதல் எலாதாகலின். அகத்தே அறக்கருணையும் புறத்தே மறக்கருணையுங் காட்டினாராதலின், "மனத்தின் மிகு பரிவுடையனாகி வெகுளா ... ... எய்தனன்" எனப்பட்டது. அரோ, அசை.

உழுந்துருளு மெல்லைதனில் வில்லினெடு நாணற வுரத்தொடெதிரோடி வரிவிற், கழுந்துகொடு மாமுடியின் மோதுமுன் னிழந்ததுயர் கண்ணிபடு பீலி மதியின், கொழுந்தமுது சோரவிட நாகர்சுடி கைத்தலை குலைந்துமணி சிந்த நதியாள், எழுந்து தடுமாறியகல் வானிலுற வேடனு மிளைத்தவச முற்றனனரோ.

இ—ள்: வில்லின்நெடு நாண் அற - தனது வில்லிற் பூட்டிய நாண் அறுந்துவிட, உழுந்து உருளும் எல்லைதனில் - (கண்ணடிமீது உழுந்து உருளும்நேரத்துள், எதிர் ஓடி - எதிரே ஓடிச் சென்று, வரிவிற் கழுந்துகொடு மாமுடியில் உரத்தொடு மோதுமுன் - அருச்சுனன் தனது கையிற் கொண்ட கட்டமைந்த வில்லின் குதையினாற் சிவவேடரின் திருமுடியின்மீது வலிமையுடன் அடித்த மாத்திரத்தே, உயர் கண்ணிபடு பீலி இழந்தது - (திருமுடியின் கண்) சிறந்த மாலை வடிவாகக் கட்டப்பட்டிருந்த மயிற்பீலியானது இறங்கியது, மதியின் கொழுந்து அமுது சோர - பிறைச்சந்திரன் தன்னகத்துள்ள அமிர்தத்தை உகுக்க, விட நாகர் சுடிகைத்தலை குலைந்து மணி சிந்த - திருமுடியிற் பொருந்திய நஞ்சையுடைய பாம்புகளின் உச்சிச் சூட்டோடு கூடிய தலைகள் சிதைந்து அதனால் அவற்றின்கட் பொருந்திய இரத்தினஞ் சிதற, நதியாள் எழுந்து தடுமாறி அகல் வானில் உற - கங்கை

யாகிய கங்கை திடுக்குற்றெழுந்து தடுமாற்றமடைந்து பரந்த விண்ணிடைச் செல்ல, வேடனும் இளைத்து அவசம் உற்றனன் - சிவவேடரும் இளைத்து மயக்கமடைந்தார் எ—று.

வேடனுமென்றதில் உம்மை எச்சத்தோடு உயர்வு சிறப்புமாம்; அரோ- அசை. உழுந்துருளுமெல்லை - கண்ணடியில் உழுந்துருளும் நேரம்; அற்ப நேரமென்றபடி. சிவவேடர் செலுத்திய பல கோல்கள் பட்டு அவசமுற்று மரத்தின் மருங்கு ஒதுங்கிநின்ற அருச்சுனனுக்கு இறைவியின் பிரேரணைப் படி இறைவர் திருவுளமிரங்கி இளைப்பறச் செய்தருளினரென்பது மேலே யுள்ள இரு கவிகளிலும் எடுத்துக் கூறப்பட்டது; அங்ஙனம் இளைப்பு நீங் கிப்பெற்ற வலிமையொடு அடித்தான் என்பார் "ஊத்தொடெதிரோடி" என்றார். சிவபிரான் அவசமுற்ற தமது அன்பனுக்குத் தாமே மீள வலியை யருளி அவன் வில்லால் மோதுண்டமை அப்பெருமானுருடைய அருள்விளை யாட்டென்க. கங்கைநீரில் அடிபட்ட மாத்திரத்தே அந்நீர் கலங்கித் துள்ளி மேலெழுந்து சிதறியதென்பதை நதியாளெழுந்து தடுமாறி யகல்வானிலுற வென உருவகித்தார். இறைவன் சடைமுடியாகிய புகுந்த இடத்தில் எவ் வகையான ஆபத்தும் நேராவென எண்ணியிருந்த கங்கையாள் காத்திராப் பிரகாரம் அடிபட்டமாத்திரத்தே திடுக்குற்றெழுந்து செய்வதின்னதென்றறி யாது தடுமாறித் தான் புகுந்த இடமாகிய அச்சடாமுடியை விட்டகன்று பிறந்தவிடமாகிய விண்ணிடை ஒதுக்கிடந்தேடிப் புகுந்தாளென்னும் பொருள் இக்கவியிலே தொனித்தலையுங் காண்க. இறைவர் இளைத்தவச முற்றமை புறத்தோற்றத்தளவில் மாத்திரமெனக் கொள்க. (க0சு)

விண்ணினுறை வானவரில் யாரடி படாதவர் விரிஞ்சனரி யேமுதலினோர், மண்ணினுறை மானவரில் யாரடி படாதவர் மனுக் கண்முதலோர்களதலக், கண்ணினுறை நாகர்களில் யாரடி படா தவர்கள் கட்செவி மகிபன் முதலோர், எண்ணில்பல யோனியினும் யாவடி படாதன விருந்துழி யிருந்துழி யரோ.

இ—ள்: விண்ணினுறை வானவரில் விரிஞ்சன் அரியே முதலினோர் யார் அடி படாதவர்-மேலுலகத்திலுள்ள தேவர்களுள் பிரமா விஷ்ணு முத லிய யார்தாம் அடி படாதவர், மண்ணில் உறை மானவரில் மனுக்கள் முத லோர் யார் அடிபடாதவர்-நிலவுலகத்திலுள்ள மனுஷருள் மனுக்கள் முத லாக எவர் அடிபடாதவர், அதலக் கண்ணினுறை நாகர்களில்-பாதலத்தின் கணுள்ள நாகர்களுள், கட்செவி மகிபன் முதலோர் யார் அடி படாதவர்- கண்ணையே செவியாகவுமுடைய நாகராசன் முதலானவர் யார் அடி படாத வர்கள் (அனைவரும் அடி பட்டவர் என்றபடி), எண் இல் பல யோனியினும் யாஅடி படாதன-அளவிறந்த பல பேதமான யோனியிற் றோன்றும் உயிர் களுள் எவை அடியுண்ணாதன (எவையும் அடிபட்டன), இருந்துழி இருந் துழி- (அவர் அவை) இருந்த இருந்த இடங்களிற்றானே எ—று.

இருந்துழி யிருந்துழி என்பதைப் படாதவர், படாதவர்கள், படாதன, என்னுமிவற்றுடன் தனித்தனி கூட்டிப் பொருள்கொள்க: அடுத்த செய் யுளில் "நாத னமலன் சமரவேட வடிவங்கொடு நரன்கை யடியுண்ட பொழு தே" என்னும் ஈற்றடியை இச்செய்யுளின் உரைத் தொடக்கத்திற் சேர்த் துப் பொருள்கொள்க. மனுக்கள் முதலோர்-சுவாயம்புவன், சுவரோசிஷன்,



உத்தமன், தாமசன், இரைவதன், சாக்ஷுசன், வைவச்சுதன், சூரியசாவர்ணி, உருத்திரசாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, இரௌ சியன், பௌசியன் எனப் பதினால்வராவர். இவர்கள் சிருட்டி, ஆரம்பத் திற் பூமியைப் பரிபாலிக்கும்படி தெய்வ ஆஞ்ஞையாற் பிறந்தவர்கள். யார், யா என்னும் வினாக்கள் இன்மைப் பொருளில் வந்தன. "அதலக் கண்ணி னுறை" என்பதில் கண் இல் இரண்டும் ஏழாம் வேற்றுமை யுருபுகள். சரா சரமனைத்து மடியுண்டன வென்றபடி. (க0எ)

வேதமடி யுண்டன விரிந்தபல வாகம விதங்களடி யுண்டன வோரைம், பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல்செய் பொழு தொடு சலிப்பில் பொருளின், பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப் பிலி பிறங்கலரசன்றன் மகளார், நாதனமலன்சமர வேடவடி வங் கொடு நரன்கையடி யுண்ட பொழுதே.

இ—ள்: பிறப்பிலி இறப்பிலி - பிறப்பில்லாதவரும் இறப்பில்லாத வரும், பிறங்கலரசன்றன் மகளார் நாதன்-மலையரசன் புதல்வியாராகிய பரு வதவர்த்தனியின் நாயகரும், அமலன்-உயிர்களைப் பந்தித்த மலத்தை நீக்கி யருளுபவருமாகிய கைலாசபதி, சமர வேட வடிவம் கொடு-போர்க்குரிய வேட்டுவத் திருக்கோலத்தைக் கொண்டு, நரன் கை அடியுண்ட பொழுது- நரனென்னும் நாமத்தைப் பூண்ட விசயன் கை வில்லின் அடியை ஏற்ற போது, வேதம் அடி யுண்ட-நான்கு வேதங்களும் அடிபட்டன, விரிந்த பல ஆகம விதங்கள் அடியுண்டன-பலவாறு பரந்துள்ள ஆகம பேதங்களும் அடி பட்டன, ஓர் ஐம்பூதம் அடியுண்டன-ஒப்பற்ற பஞ்சபூதங்களும் அடிபட் டன, விநாழிகை முதல் புகல் செய் பொழுதொடு-விநாழிகை முதலாக வகுக்கப்படுகின்ற கால வகையுடன், சலிப்பில் பொருளின் பேதமடி யுண் டன-பெயர்தலில்லாத பொருள்களின் பேதங்களும் அடிபடப் பெற்றன.

ஆகமங்கள் சிறப்பு நூல்களாதலாலும் பல வகையினவாதலாலும், "விரிந்த பல வாகம விதங்கள்" என்றார்; அடியுண்டன-அடிபடப் பெற் றன; விநாழி-நாழிகையின் அறுபதிலொரு கூறு; விநாழி முதற்கொண்டு வகுக்கப்பட்ட நாழிகை யாமம் பகல் இரா நாள் வாரம் மாசம் அயனம் ஆண்டு முதலிய கால வெல்லைகளென்பார் "விநாழிகை முதற் புகல் செய் பொழுதொடு' என்றார். சிவபிரான் இறப்பிலி பிறப்பிலி என்பதை:— "எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ், சொல்லாற் றெளிந்தோநஞ் சோணேசர்—இல்லிற், பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட் டிலேம்". எனப் பிறர் கூறியவாற்றானு முணர்க. சலிப்பில் பொருளின் பேதமென்பது மலை முதலிய சலனமற்ற பொருள் களாம். வேதம் முதலாகச் சலிப்பில் பொருளின் பேதங்கட்குரிய அதி தேவதைகளே அடியுண்டன வெனக் கொள்க. அமிர்தம்-மிருத்துவை— அதாவது மரணத்தை இல்லாமற் செய்வது எனப் பொருள்படுதல் போல, அமலன் என்பதற்கும் உயிர்களைப் பற்றியுள்ள மலத்தை யொழிப்பவன் எனப் பொருள் கோடலே சிறப்புடைத்தாம். மகாசங்கார கருத்தாவாகிய பரமசிவனே உலகத்திற்கு முழுமுதற் கடவுளென்பதும், அப்பரம்பொருளே உயிர்களைப் பந்தித்த பாசத்தை நீக்கும் திருவருளாற்றலுடையரென்பதும், அவர் விச்சுவரூபி யென்பதும் உண்மைநூற் றுணிபாதலின் அப்பசுபதி

மீது பட்ட அடி உலகெங்கும் பட்டதென்பதை இவ்விருகவிகளாலு முணர்க.
இங்ஙனமே மதுரையில் மண்சுமத்தலாகிய திருவிளையாடலைச் செய்தபோது
பாண்டியனுற் பரமசிவனுகிய கூலியாளர்மீது பட்ட பிரம்படி உலகங்கண்
முழுவதிலுமுள்ள சராசரங்களிலும் பட்டதென்பதை,

"........அயன் மேலும் மான் மேலும் அறவோர் மேலும், தேர்மேல்
வெம்பகன் மேலும் மதியின் மேலும் சிறந்துள இந்திரன் மேலும் தேவர்
மேலும், பார்மேலுங் கடன்மேலும் மரங்கண் மேலும் பட்டதான் மெய்யி
லடி பட்டபோதே" என வருந் திருவாதவூரடிகள் புராணத் திருவிருத்தத்
தானு முணர்க. (க0அ)

என்பொடு கொழுந்தசை நிணங்குருதி யென்னுமவை ஈரிரண்
டாலும் வயிரா, வன்பொடு வளர்ந்தமிரு காதிபதி காரியெனும் வடி
வழகு பெற்றமற வோன், அன்பினொடு பேரறம் வளர்த்தரு ளெயிற்
றிமிக வஞ்சவபி ராம வெயினன், பொன்புரைய மேனியி லடித்
தமை பொறுதுமற் போர்புரியு மாறு கருதா.

இ—ள்: என்பொடு கொழுந் தசை நிணம் குருதி என்னும் அவை
ஈரிரண்டாலும் வயிரா-என்புடன் கொழுமையாகிய ஊன் கொழுப்பு இரத்
தம் என்று சொல்லப்படும் அந்நான்கு தாதுக்களாலும் உறுதிப்பட்டு, வன்
பொடு வளர்ந்த-வலிமையோடு வளர்ந்ததாகிய, மிருக அதிபதி-ஐராவத
மென்னும் யானைக்குத் தலைவனுகிய, காரி யெனும் வடிவு அழகு பெற்ற
மறவோன்-இந்திரன் என்று சொல்லத்தக்க தேக அழகைப்பெற்ற வலியவ
னுகிய அருச்சுனன், அன்பினொடு பேரறம் வளர்த்தருள் எயிற்றி மிக அஞ்ச-
உயிர்கண்மீது கொண்ட திருவருள் காரணமாக முப்பத்திரண்டு சிறந்த தரு
மங்களையும் செய்கின்ற காமாக்ஷியம்மையாராகிய வேட்டுவ மகள் மிகவும்
பயப்பட, அபிராம எயினன் பொன் புரை மேனியில் அடித்தமை பொறுது
-பேரழகுடைய சிவவேடர் தமது பொன்போன்ற திருமேனிமீது (விஜயன்)
அடித்தமையைத் திருவுளத்திற் பொறுது, மற்போர் புரியும் ஆறு கருதா-
(அவனுடன்)மல்யுத்தஞ் செய்யத் திருவுளங் கொண்டு எ-று

என்பு தசை நிணம் குருதி யென்னு மிந்நான்குமே சத்த தாதுக்க
ளுள்ளும் பிரதானமானவை யாதலின் இவற்றை எண்டெடுத்துக் கூறினர்.
வயிர்த்தல் - உறுதிப்படுதல்; வலிமையுறுதல். மிருக அதிபதி காரி - ஐரா
வதமென்னும் யானைக்கு அதிபனுகிய இந்திரன். அர்ச்சுனன் இந்திரனை
யொத்த வடிவழகுடைய னென்பதை மேல் நிவாதகவசர் காலகேயர் வதைச்
சருக்கத்தில் வரும் "மங்கையர் வாய்மை கேட்டு மணிக்குறுமுறுவல்செய்து,
கங்கையம் பழனநாடன் கடிமதில் வாயில் செல்ல, அங்கவன் றன்னைக் கண்ட
வணிகழ லமரரெல்லாம், மங்குல் வாகனனென் றெண்ணிக் கதுமென வந்து
தொக்கார்" என்னுங் கவியானு முணர்க. அபிராமம் - பேரழகு. எயிற்றி
மிக வஞ்ச ... ... அடித்தமை யென முடிக்க. வயிரா - செய்யா என்னும்
வாய்பாட்டு வினையெச்சம். ((க0கூ)

உள்ளடி விரற்றலைகள் புறவடி பரட்டினுட னுயர்கணைக் கான்
முழந்தாள், தள்ளரிய வூருவுயர் தாள்வரைக ளொத்தகடி தட
முதர மார்பு திணிதோள், துள்ளிவரு செங்கையொடு முன்கை



பிடர் நெற்றியோடு சூடமென வெண்ணு படையால், வள்ளலெனை
யாளுடைய மாதவனு மாதவனு மல்லமர் தொடங்கி யுறவே.

இ—ள்: உள் அடி - உள்ளங்கால், விரற்றலைகள் - விரலின் நுதிகள்,
புறவடி - புறங்கால், பரட்டினுடன் உயர் கணைக்கால் - பரட்டோடு
திரண்ட கணைக்கால், முழந்தாள் - முழங்கால், தள்ளரிய ஊரு - இன்றி
யமையாத தொடை, உயர்தாள் - நீண்டகால்கள், வரைகள் ஒத்த கடி தடம்-
நரப்புக் கட்டுப் பொருந்தியதாகிய வயிற்றின் கீழ்ப்புறம், உதரம் - வயிறு,
மார்பு - மார்பு, திணி தோள் - திண்மையுள்ள தோள்கள், துள்ளி வரு
செங்கையொடு - முற்பட்டு எழுந்துவருகின்ற சிவந்த கைகளுடன், முன்கை-
முன்னங்கை, பிடர் - பிடர், நெற்றியொடு சூடம் - நெற்றியுடன் உச்சி,
என எண்ணு படையால் - என மற்போருக்கு மதிக்கப்பட்ட இப்படைக்
கலங்களைக்கொண்டு, வள்ளல் - திருவருள் வள்ளலும், எனை ஆளுடைய-
அடியேனை ஆட்கொண்டருளியவருமாகிய, மாதவனும் - உமாதேவியாரை
இடப்பாகத்திற் கொண்டருளிய சிவவேடரும், மாதவனும் - சிறந்த
தவத்தைச் செய்கின்றவனுகிய அர்ச்சுனனும், மல் அமர் தொடங்கியுறவே -
மல் யுத்தத்தைச் செய்யத் தொடங்கியபோது எ—று.

விரற்றலை யென்பதற்குக் கால் விரல்களின் நுதி யெனக்கொள்க. மல்
யுத்தத்திற் கைவிரலின் நுதிகள் உபயோகிக்கப்படுதல் மரபன்றும். மேலே
சொல்லப்பட்ட அங்கங்களே மல்யுத்தத்திற்குப் படைக்கலம்போல் மதித்து
உபயோகிக்கப்படுதல் மரபாதலின் "எண்ணு படையால்" என்றார். விஷ்ணு
சமயத்தவ ரெனச் சொல்லப்படும் இந்நூலாசிரியராகிய வில்லிபுத்தூரார்
தமது சிவபத்தித் திறத்தைப் பிறர்க்கும் எடுத்துத் தெருட்டி அப்பிறரை
யும் ஈடேறச் செய்யும் நோக்கம்பற்றிப் போலும் எமையாளுடைய மாதவ
னும் என்று பன்மையிற் பிறரையுஞ் சேர்த்துக் கூறுதற்கு மனம் பொரு
ராய் "எனை யாளுடைய மாதவனும்" என ஒருமையிற் சிறப்பாகக் கூறின
ரென்க. (கக0)

மல்லமர்தொ டங்கியிவ ரிருவரும்வெ குண்டுபொர மாதிரமு
மாநில முமேல், எல்லையும திர்ந்துசுழல் கின்றபொழு தத்திமைய
வின்பமயில் கேள்வன் வெகுளா, நல்லிசைபு னைந்தமணி நூபுரவி
சாலவொளி நண்ணுபத நாண்மல ரினுல், வில்லியரி லெண்ணுதிறல்
வில்லுடைய காளைதனை விண்ணினுற வீசி னனரோ.

இ—ள்: இவர் இருவரும் மல் அமர் தொடங்கி வெகுண்டு பொர -
இவர்கள் இரண்டுபேரும் மல்யுத்தத்தைத் தொடங்கிச் சினந்து போர்
செய்ய, மாதிரமும் மாநிலமும் மேல் எல்லையும் அதிர்ந்து சுழல்கின்ற பொழு
தத்து - திக்குக்களும் பரந்த பூமியும் விண்ணுலகும் அதிர்ந்து சுழலுகின்ற
சமயத்தில், இமய இன்ப மயில் கேள்வன் வெகுளா - உயிர்களுக்கெல்லாம்
இதஞ்செய்கின்ற மயில்போன்ற சாயலையுடைய பருவதவர்த்தனிக்கு நாயக
ராகிய சிவவேடர் சினந்து, நல் இசை புனைந்த மணி நூபுரவிசால ஒளி
நண்ணுபத நாண்மலரினுல் - நன்மையான கீர்த்தியையுடைய இரத்தினச்
சிலம்பின் பரந்த ஒளிபடிகின்ற திருவடியாகிய அன்றலர்ந்த தாமரைப் பூவி
னுல், வில்லியரில் எண்ணு திறல் வில்லுடைய காளைதனை - வில் வீரருள்

(மேலாக) மதிக்கப்படுகின்ற வலிய காண்டீபமென்னும் வில்லைக்கொண்ட இடபம்போன்ற விசயனை, விண்ணில் உற வீசினன் - ஆகாயத்திற் செல்லும் படி எற்றினர் எ—று.

உயிர்களுக்கு இதத்தைத் தருதலால், இன்ப மயில் என்றார். "இதந்தரு மடந்தை" யென்றார் பிறரும். இங்கே மயிலென்ற ஒப்பு சாயலொடு தேவியின் நீலநிறத்திற்குமாகி நின்றதென்க. நல்லிசை புனைந்த என்பதை நூபுரத்திற்கு அடையாகக்கொண்டு - நல் இசையொடு கூடிய வேதமாகிய சிலம் பெனக் கோடலொன்று; இனி, நல்லிசை புனைந்த ... ... பதமெனக்கொண்டு சர்வ சங்கார காலத்திலே சகல ஆன்மகோடிகளும் அடைக்கலம் புகுதற்கு இடமாயிருத்தலானும் அடியார்க்குத் திருவடி தீட்சை செய்தற்கும், மார்க் கண்டேயர் பொருட்டு யமனை உதைத்தற்கும் கருவியாய் விளங்கியமையி னாலும் அரிபிரமேந்திராதி தேவர்களாலும் முனிவர்களாலும் ஏனைய ஆன்ம கோடிகளாலும் அரணெனக்கொண்டு வணங்கித் துதிக்கப்படுதலானும் முத்தியடைந்த ஆன்மாக்களுக்குப் பேரின்பமாகிய நிழலைத் தருதலினாலும் தோன்றாள் என்று விதந்து கூறப்படுதலினாலும் நிலைபெற்ற அருட்புகழொடு கூடிய திருவடியென வுரைத்தலுமாம்; இன்னும், விசாலவொளி நண்ணு பதம் என்பதற்கு - பரந்த ஞானவொளி அடியாரிடத்திற் செறிதற்கு ஏது வான பதம் எனக் கொள்ளினும் பொருந்தும். அப்பதத்தினால் எற்றிய எற்று, காலனை எற்றிய காலத்து அவனுக்கு ஊற்றம் விளைத்தவாறு, இங்கே விளைத்தலின்றி அன்றலர்ந்த தாமரை மலரால் எற்றியவிடத்து இதந் தருதல்போல், அர்ச்சுனனுக்குத் திருவருள் சுரத்தலாகிய இதத்தைச் செய் தற்கு ஏதுவாயிருந்தமையினால் "பதநாண்மலரினால் விண்ணிலுற வீசின னரோ" என்றாரென்க. (கககூ)

விண்ணவர்த மூர்புகுத விண்ணவர்பி ரான்மதலை விசையுடனெ
ழுந்து முகில்போன், மண்ணினிடை வீழ்தருமுன் மார்பகல மல்
லதை வயங்குபுற மென்று தெரியான், எண்ணரிய ஞானவொளி
யாகிவெளி யாகிவரு மெயினர்பதி யான கருணைப், புண்ணியன் மகி
ழ்ந்துருக நின்றொலியு டன்பழைய பூசல்பொரவெண்ணி யெதிர்
வான்.

இ—ள்: விண்ணவர் பிரான் மதலை - இந்திரனது மகனாகிய அருச் சுனன், விண்ணவர்தம் ஊர் புகுத விசையுடன் எழுந்து - தேவருலகத்திற் புகக்கூடிய விசையோடு மேலே சென்று, முகில்போல் - மேகத்தைப்போல், மண்ணின் இடை வீழ்தருமுன் - பூமியில் மீண்டு வந்தவுடன், மார்பகலம் அல்லதை - (அர்ச்சுனனுடைய) பரந்த மார்பகத்தை யல்லாமல், வயங்கு புறம் என்று தெரியான் - விளங்குகின்ற முதுகைக் காணாதவராகிய, எண் ணரிய ஞான ஒளியாகி வெளியாகி வரும் - தியானித்தற்கரிய ஞானசோதி யாகவும் சிதாகாச சொரூபியாகவும் எழுந்தருளிய, எயினர் பதியான கரு ணைப் புண்ணியன் மகிழ்ந்து உருக - வேட்டுவத் தலைவர் வடிவங்கொண் டருளிய கருணாசமுத்திரமாகவுள்ள புண்ணியமூர்த்தி மகிழ்ச்சியடைந்து திருவுளம் உருக, நின்று ஒலியுடன் - நிர்வகித்து நின்று ஆரவாரத்தோடு, பழைய பூசல் பொர எண்ணி எதிர்வான் - (அர்ச்சுனன்) பழையபடி மல் யுத்தஞ் செய்ய நினைத்து முற்பட்டு வருவானாயினன் எ—று.



விஜயன் போர்முகத்தில் மார்பகத்தை யன்றிப் புறங்காட்டானாகலின் அவனுடைய மார்பையன்றி முதுகைக் காண்ட லரிதாயிற்றென்க. எண் ணரிய - யோகிகள் ஞானிகளாலுந் தியானித்தற்கரிய; இறைவன் உயிர் கட்குத் திருவருள் செய்யும் வண்ணம் கொண்டருளிய திருவருள் வடிவத் தை அவனருள்கொண்டு தரிசித்தல் ஒருவாறு இயலுமேயொழிய, அவ் விறைவனுக்குரிய ஞானவொளி வடிவத்தையும் ஞானவெளி வடிவத்தை யும் எவரும் தியானித்தலும் தரிசித்தலும் அரிதென்பார் "எண்ணரிய ஞான வொளியாகி வெளியாகி வருமெயினர் பதி" என்றார். இதனுண்மையை, "வந்தபடி யிவ்வுரு வணங்கு மிதுவல்லால் - அந்த வடிவாகி லுனையாரறிய வல்லார்" எனவும், "ஒளித் துலகெங்கு நிற்போன் உருபவ மொழித்து ஞானம் - அளித்திடி னன்றி யாவர் அவன்றிற மறிய வல்லார்" எனவும், "ஆதி சிவயோகி மிகு போகி யருவாகுஞ் - சோதி வெகு ரூபி சுகவாரி துயரில்லா - நீதிமணி மன்றதனி னின்றநிலை யல்லால் - யாது முடியாது பதம் யாரறிவ ரென்றார்" எனவும் வரும் திருவாதவூரடிகள் புராணத் திரு விருத்தங்களானு முணர்க. புண்ணியன் - தம்மை வழிபடும் உயிர்கட்குப் புண்ணியத்தை அருள்பவன். "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்றார் அப்பர் சுவாமிகளும். ஆகாயத்தில் வீசுண்டுபோய் மீண்டுவரும் விஜயனைக்கண்டு சிவவேடர் திருவுளமுருக, அவன் அத்திருவருட்டிறத்தை யுணராதலின் நிலத்தை யடைந்த மாத்திரத்தே மீட்டுஞ் சமர்புரியச் சென்றானென்றபடி; "மார்பமுக மல்லதை" என்னும் பாடத்திற்கு மார்பை யும் முகத்தையு மல்லாமல் எனப் பொருள் கொள்க. (கஉ0)

வெய்யகண நாதர்கண தேவர்விபு தாதியர் விரிஞ்சிசிவ
யோகியரருஞ், செய்யசுட ரோனளகை யாதிபதி கின்னரர்கள்
சித்தர்பல சாரணர்மணிப், பையரவி னாடிபுரு கூதனிவர் சூழ்தர
வொர் பச்சைமயில் பாதி யுடனே, துய்யவிடை மீதொரு செழுஞ்
சுட ரெழுந்தது தொழுந்தகைய தாகு மளவோ.

இ—ள்: வெய்ய கணநாதர் - விரும்பத் தகுந்த சிவகணத் தலைவர் களும், கணதேவர் - அச்சிவகணத் தலைவர்களுக்கு அதிபர்களாகிய (நந்தி தேவர் முதலாம்) சிவகணத் தேவர்களும், விபுதாதியர் - தேவர் முதலா னோரும், விரிஞ்சி - பிரமாவும், சிவயோகியரரும் - சிவயோகியர்களும், செய்ய சுடரோன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனும், அளகையாதி பதி - அளகாபுரிக்குத் தலைவனாகிய குபேரனும், கின்னரர்கள் - கின்னரர் களும், சித்தர் - சித்தர்களும், பல சாரணர் - பலராகிய சாரணர்களும், அரவின் மணிப் பையில் ஆடி - காளியனென்னும் பாம்பின் மணியோடு கூடிய படத்தின்மேல் ஏறி மிதித்தாகின்றாடிய விஷ்ணுமூர்த்தியும், புரு கூதன் இவர் சூழ்தர - இந்திரன் முதலிய இவர்கள் திருமருங்கிற் சூழ்ந்து வர, ஓர் பச்சை மயில் பாதியுடனே - ஒப்பற்ற பசிய மயிலையொத்த ஈசுவரி இடப்பாகத்திற் பொருந்த, துய்ய விடைமீது - பரிசுத்தமான தரும தேவ தையாகிய இடபத்தின்மீது, ஒரு செழும் சுடர் எழுந்தது - (பரம்பொரு ளாகிய) ஒப்பற்ற செம்பொற் சோதியான திருவடிவம் எழுந்தருளியது, தொழுந் தகைய தாகுமளவோ - அத்திருவுருவம் எல்லாராலும் வணங்கும் அளவின்பாற்பட்டதோ எ—று.

வெம்மை - விருப்பம்; சித்தர் - அணிமா முதலிய சித்திகளைப் பெற்றவர்; கின்னரர் சாரணர் தேவசாதியாரின் பேதங்களைச் சேர்ந்தவர்கள்; மணிப் பையரவினுடி - காளிய னென்னும் பாம்பின் படத்தின்மீது நின்று கூத்தாடிய கண்ணபிரானைக் குறிப்பினும், இங்கே அக்கண்ணபிரானுக்கு மூலமூர்த்தியாகவுள்ள விஷ்ணுவைக்குறித்து நின்றதென்க; செழுஞ்சுடரென்றது சிவபிரானை; "செழுஞ் சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க உருவே" என்பது நாவுக்கரசர் திருவாக்காம்; அவனருளாலே அவன்றாள் வணங்கவேண்டுமாதலின், அங்ஙனம் அருள் பெறார்க்கு வணங்குதல் சாலாதென்பார் "தொழுந்தகைய தாருமளவோ" என்றார்; ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது; சுடர் என்னும் எழுவாய்க் கியைய எழுந்ததென்னும் பயனிலை கொண்டு முடிக்கப்பட்டது. (௧௧௩)

கைவிலுட னேயெயினர் கோடிபலர் சூழ்வரக் கன்னிமயில்
பின்னர் வரவே, தெய்வமறை ஞாளிகடொ டர்ந்துவர வந்துபொரு
செய்யசிவ வேடன் முடிமேற், சைவமுறை யேயிறைவர் தண்மலரி
னோடறுகு சாத்தியொளிர் நாண்ம லரெலா, மெய்வடிவு கொண்ட
னைய கரியதவ வேடனிணை விழிமலர் பரப்பி மகிழா.

இ—ள்: கை வில்லுடனே - திருக்கரத்தில் வில்லோடு, கோடிபலர் எயினர் சூழ்வர - பல கோடிக்கணக்கான வேடுவர்கள் தம்மைச் சூழ்ந்துவர, கன்னிமயில் பின்னர்வர - நித்திய கன்னிகையாகிய மயில்போன்ற சாயலையுடைய உமாதேவியார் பின்தொடர, தெய்வமறை ஞாளிகள் தொடர்ந்துவர - தெய்வத்தன்மை பொருந்திய வேதங்களாகிய நாய்கள் தொடர்ந்து செல்ல, வந்து பொரு செய்ய சிவவேடன் முடிமேல் - (சற்றுமுன்பு) எழுந்தருளிவந்து சமர்புரிந்த சிறந்த சிவவேடாது திருமுடியின்கண், சைவ முறையே - சிவாகமங்களில் விதித்த முறைப்படி, இறைவர் தண் மலரினோடு - சிவபிரானுக்குரிய பிரணவ வடிவமாகிய குளிர்ச்சி பொருந்திய கொன்றைப்பூக்களுடன், அறுகு சாத்தி - அறுகம் புல்லையும் சாத்தி, ஒளிர் நாண் மலர் எலாம் - (மேலும் சாத்தப்பட்டு) விளங்குகின்ற அன்றலர்ந்த பூக்களையெல்லாம், மெய்வடிவு கொண்டு அனைய - சத்தியமே ஒருவடிவெடுத்தாலொத்த, கரியதவ வேடன் - கரியநிறத்தை யுடையவனாகிய தவக்கோலங்கொண்ட அருச்சுனன், இணைவிழி பரப்பிமகிழா - தனது இருகண்களாலும் விழித்து நோக்கி மகிழ்ச்சியடைந்து எ—று.

மலரெலாம் இணைவிழி பரப்பி மகிழா எனக் கொண்டுகூட்டி முடிக்க. சிறிது முன்னர் உண்மையை உணராமையால், சிவவேடர் முடியிற் பொருந்திய மதியும் நதியும் மாலைகளும் சிதையும்படி வில்லாற்புடைத்து மோசம் போனேனேயெனச் சஞ்சலப்பட்டு நின்ற விசயன், பின்னர்ச் சிவபிரானுடைய திருமுடியில் அவையெல்லாம் சிதைவின்றி உள்ளபடி அமைந்து விளங்குவதைக் கண்டு தான் கொண்ட அச்சமுங் கவலையும் நீங்கியவனாய் மகிழ்ச்சியடைந்தானென்பார். "மகிழா" என்றார். மகிழா என்னும் வினையெச்சத்தை அடுத்த அடுத்த கவிகளில்வரும் அஞ்சலிசெய்து, தொழா என்னும் வினையெச்சங்களுடன் சேர்த்து "ஆடினன்" என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிக்க. (௧௧௪)



தும்பைவகை மாலைசெறி வில்வமொடு கொன்றைமலர் சூத
மறு கேகமழ்தருஞ், செம்பவள வேணிமிசை திங்கணதி சூடியருள்
செம்பொன்வட மேரு வனையான், உம்பர்மணி யாழினொடு தும்
புருவு நாரதனு முருகியிசை பாட வருள்கூர், அம்பையுட னேவிடை
யின் மீதொளிர நின்றதனை யஞ்சலிசெய் தன்பொ டுதொழா.

இ—ள்: தும்பை வகைமாலை - தும்பைப் பூவாற் றொடுக்கப்பட்ட (இண்டை முதலிய) பலவகை மாலையும், செறி வில்வம் ஒடு - செறிந்தவில்வபத்திரமும், கொன்றைமலர் - கொன்றைப்பூவும், சூதம் - மாந்தளிரும், அறுகு - அறுகம்புல்லும், கமழ்தரும் செம்பவள வேணிமிசை - பரிமளிக்கின்ற சிவந்த பவளம்போன்ற சடைமுடியின்மீது, திங்கள் நதி சூடியருள் செம்பொன் வடமேரு அனையான் - பிறைச்சந்திரனையும் கங்கையாற்றையுந் தரித்தவரும் சிறந்த பொன்மயமானமேருமலையையொத்த திருக்கோலத்தையுடையவருமாகிய கைலாசபதி, தும்புருவும் நாரதனும் உம்பர்மணி யாழினொடு உருகி இசை பாட - தும்புரு நாரதரும் மேலான அழகிய யாழைக் கொண்டு உள்ளமுருகி இசையோடு கூடிய தோத்திரங்களைப்பாட, அருள் கூர் அம்பையுடனே - உயிர்களிடத்தில் திருவருள் சுரக்கும் உலகமாதாவாகிய ஈவசுரியுடன், விடையின்மீது ஒளிர நின்றதனை - (தருமதேவதையாகிய) இடபத்தின்மீது எழுந்தருளிநின்ற திருக்கோலத்தை, அன்பொடு அஞ்சலிசெய்து தொழா - பத்தியுடன் கைகூப்பி வணங்கி எ—று.

மாலைவகையாவன: இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு, பிணையலென்பன. அம்பை - தாய்; 'அம்பா'என்னும் வடமொழி 'ஆவீறையும்' என்னும் விதிப்படி அம்பை என்றாயிற்று. நின்றதனை - நின்ற திருக்கோலத்தை, வினையா லணையும் பெயர். (௧௧௫)

வேறு.

ஆடினன் களித்தன னயர்ந்து நின்றனன்
ஓடினன் குதித்தன னுருகி மாழ்கினன்
பாடினன் பதைத்தனன் பவள மேனியை
நாடின னடுங்கின னயந்த சிந்தையான்.

இ—ள்: நயந்த சிந்தையான் - (திருக்கோலத்தைத் தரிசித்த மாத்திரத்தே) ஆசைப்பட்ட உள்ளத்தையுடையவனாகிய அருச்சுனன், ஆடினன் - ஆநந்தக் கூத்தாடினான், களித்தனன் - பெருமகிழ்ச்சியுற்றான், அயர்ந்து நின்றனன் - சிறிது நேரம் தன்னை மறந்து (பரவசப்பட்டு) நின்றான், ஓடினன் - ஓடிமீண்டான், குதித்தனன் - துள்ளினான், உருகி மாழ்கினன் - (வெயிலிடைப்பட்ட மெழுகென) உள்ளமுருகிச் செய்வதின்னதென் றறியாமல் வருந்தினான், பதைத்தனன் - மனந்துடித்தான், நடுங்கினன் - சரீரம் நடுங்கப் பெற்றான், பவளமேனியை நாடினன் - பவளம் போன்ற திருக்கோலத்தை (தெவிட்டாமையினாற் பலமுறை) பார்த்து, பாடினன் - தோத்திரஞ் செய்வானாயினான் எ—று.

ஆடுதல் களித்தல் அயர்தல் ஓடுதல் குதித்தல் உருகி மாழ்குதல் பதைத்தல் நடுங்குதன் முதலிய இச்செயல்களெல்லாம் பத்திமேலீட்டினால் விளை

வன வென்க; பெருமானுர் கொண்ட திருக்கோலத்தைப் பலமுறை தரிசித்தாளுயினும் தெவிட்டாமை கண்டு பின்னரும் உற்று உற்று நோக்கினுனென்பார் "பவள மேனியை நாடினன்" என்ருர்; இறைவன் றிருக்கோலத்தைப் பல்காற் பார்க்கினுந் தெவிட்டாதென்பது:—

"சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
வர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லாம்
ஆர்க்குள வுலகி லம்மா அற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென் பார்வை தானும்"

எனவரும் கந்தபுராணத் திருவிருத்தத்தானுமுணர்க; இதுமுதன் மூப்பத்து மூன்று கவிகள் கலிவிருத்தம். (கககூ)

விழுந்தரு வினையினின் மெலிந்து நாயினும்
அழுந்திய பிறவிய னயரு வேன்முனஞ்
செழுஞ்சுடர் மணிப்பணித் திங்கண் மௌலியாய்
எழுந்தரு ளியவிஃ தென்ன மாயமோ.

இ—ள்: அருவினையினின் விழுந்து மெலிந்து - நீக்குதற்கரிய இருவினையில் வீழ்ந்து (அகப்பட்டு) மெலிவுற்று, நாயினும் அழுந்திய பிறவியில் அயருவேன் முனம் - நாயைக்காட்டிலும் துன்பந் தருகின்ற பொல்லாப் பிறவியெடுத்து மயங்கும் தமியேனிடத்தும், செழுஞ்சுடர் மணிப்பணித் திங்கள் மௌலியாய் - செழுமையுடைய ஒளி காலுகின்ற இரத்தினம் பொருந்திய பாம்பையும் (அதற்கஞ்சுஞ்) சந்திரனையும் ஒருங்கு தரித்த சடைமுடியையுடைய பெருமானே, எழுந்தருளிய இஃதென்ன மாயம் - தேவரீர் எழுந்தருளி வந்தமையாகிய இஃதென்ன அற்புதம் எ—று.

பிறவியின்கடையாயது நாயாய்ப் பிறத்தலென்பது கொள்கையாதலின் "நாயினும் அழுந்திய பிறவி" என்ருனென்க. "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத், தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்ருர் மணிவாசகப் பெருமானும்; நாயினும் என்றதில் உம்மை இழிவு சிறப்பு. ஓ - ஈற்றசை. ()

ஆதியே யண்டமு மனைத்து மாயொளிர்
சோதியே கொன்றையந் தொங்கன் மௌலியாய்
வாதியே மரகத வல்லி யாளொரு
பாதியே பவளமாம் பரம ரூபியே.

இ—ள்: ஆதியே - மூலகாரணராயுள்ளவரே, அண்டமும் அனைத்துமாய் ஒளிர் சோதியே - சகல அண்டங்களும் அவற்றின்கண்ணே யுள்ள சராசரங்களுமாய் விளங்குகின்ற சோதி சொரூபரே, கொன்றையம் தொங்கல் மௌலியாய் - அழகிய கொன்றைப் பூமாலையைத் தரித்த சடைமுடியையுடையவரே, வாதியே - (என்தெய்வம் உன்தெய்வமென்று) வாதிக்கப்படுகின்றவரே, மரகத வல்லியாள் ஒரு பாதியே - பசியரத்தினத்தின் நிறத்தையொத்த கொடிபோன்ற உமாதேவியார் இடப் பாகத்திற் பொருந்தப்பெற்றவரே, பவளமாம் பரமரூபியே - பவளநிறமான மேலான திருவடிவத்தையுடையவரே எ—று.



எல்லாச் சமய வாதிகளும் எம்தெய்வம் எம்தெய்வமென்று தனித்தனி வாதித்தாலும் அவ்வச் சமயவாதிகட்கெல்லாம் அருள்புரிபவர் பசுபதியாகிய சிவபிரானுதலின் "வாதியே" என்ருன். இதனை "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே - மாதொரு பாகனுர்தாம் வருவர்... ........." எனவருஞ் சித்தியாரின் கூற்ருனு முணர்க. (ககஅ)

பையரா வணிமணிப் பவள மேனியாய்
செய்யவாய் மரகதச் செல்வி பாகனே
ஐயனே சேவடி யடைந்த வர்க்கெலாம்
மெய்யனே யெங்குமாய் விளங்குஞ் சோதியே.

இ—ள்: பைஅரா அணிமணிப் பவளமேனியாய் - படம் பொருந்திய பாம்பை ஆபரணமாகத் தரித்த அழகிய பவளம் போன்ற திருமேனியையுடையவரே, செய்யவாய் மரகதச் செல்வி பாகனே - (கொவ்வைக்கனி போன்ற) சிவந்த அதரங்களைப் பொருந்திய திருவாயினையும் மரகத இரத்தினத்தையொத்த திருமேனியையுமுடைய திருவருட் செல்வியாராகிய உமாதேவியாரை இடப்பாகத்திற் கொண்டவரே, ஐயனே - பரமபிதாவே, சேவடி அடைந்தவர்க்கெல்லாம் மெய்யனே-சாண்புகுந்தவர்களெல்லார்க்கும் உண்மையான அருளைச் செய்பவரே, எங்குமாய்விளங்கும் சோதியே - எங்கணும் வியாபித்திருக்கும் சோதிசொரூபரே எ-று.

சேவடியை யடைந்தவர் மார்க்கண்டேயர் போன்ற அன்பர்கள்; மெய்யனே - நிசமாக வெளிப்பட்டு அருள் செய்பவரே. (ககக)

முக்கணு நிலவெழ முகிழ்த்த மூரலுஞ்
சக்கர வதனமுந் தயங்கு வேணியும்
மைக்கயன் மரகத வல்லி வாழ்வுறு
செக்கர்மெய் வடிவமுஞ் சிறந்து வாழியே.

இ—ள்: முக்கண்ணும் - சந்திரன் சூரியன் அக்கினியென்னும் மூன்று திருவிழிகளும், நிலவு எழ முகிழ்த்த மூரலும் - தண்ணொளி உண்டாம்படி அரும்பிய பற்களும், சக்கரவதனமும்-வட்டவடிவாகிய திருமுகமும், தயங்கு வேணியும் - ஒளிருகின்ற சடைமுடியும், மைக்கயல் மரகதவல்லி வாழ்வுறு-கரிய கயல்மற்சம் போன்ற விழிகளையும் மரகதமணியையொத்த திருமேனியையுமுடைய கொடிபோன்ற மகேசுவரி இடப்பாகத்தில் எழுந்தருளப் பெற்ற, செக்கர் மெய் வடிவமும் - செவ்வானத்தை நிகர்த்த நிலையான திருமேனியும், சிறந்து வாழி - சிறப்புற்று வாழ்க எ—று.

வாழியவென்னும் வியங்கோள் வினைமுற்று ஈற்றுயிர் மெய்கெட்டு வாழியென நின்றது; ஏ, ஈற்றசை. இது கைலாசபதிகொண்டருளிய திருவுருவத் தியானங் கூறியவாறும், இச் செய்யுள்:-

"மைக்களமும் மான்மழுவும் வரதமுட னபயமுறு, மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும், செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய், முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்"

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தை யொத்திருத்தல் காண்க. இத்தோத்திரப்பாக்கள்தோறும் அர்ச்சுனன் தனக்கு வாமுதவும்படி இறைவ

ரிடம் பிரேரித்த ஈசுவரியையும், தன் வில்லால் அடிபட்ட இறைவரது சடை முடியையும் போற்றுதலை உற்றுணர்க. (கஉ௦)

அன்புறு தருமனுக் கநுச னாயினேன்
நன்பரம் பொருளுக்கு நண்பு மாயினேன்
பொன்புரை மேனியாய் போற்றி னேனுனை
என்பெருந் தவப்பயன் யார்பெற் றார்களே.

இ—ள்: அன்பு உறு தருமனுக்கு அநுசன் ஆயினேன் - உயிர்களிடத்து அன்புமிக்கவராகிய தருமபுத்திரருக்குத் தம்பியாயுள்ளேன், நன்பரம்பொருளுக்கு நண்பும் ஆயினேன் - நன்மையைத் தரும் பரம்பொருள் எனப்படும் திருமாலின் அவதாரமாகிய கண்ணபிரானுக்கு நண்பனாயுமுள்ளேன், பொன்புரை மேனியாய் - பொன்போல் ஒளிர்கின்ற திருமேனியை யுடையவரே, உனைப் போற்றினேன் - தேவரீரைத் துதித்தலாயினேன், என் தவப் பெரும்பயன் யார் பெற்றார்கள் - தமியேன் இழைத்த தவத்தின் பெரும்பேற்றினை வேறு எவர்கள் பெற்றார்கள்? (ஒருவரும் பெற்றிலர்) எ—று.

உனைப் போற்றினேன் - உம்மை நேரிற் றரிசித்துத் துதிக்கும் பேற்றைப் பெற்றேனென்றபடி. பரம்பொருளுக்கு நண்புமாயினேன் என்பதில் நான்காம் வேற்றுமையுருபு நேர்ச்சிப் பொருளில் வந்தது. அண்ணனுடைய அருளும் கண்ணனுடைய அருளும் அடியேனுக்குண் டெனினும் தேவரீருடைய திருவருளும் வேண்டுமென்பான் இங்ஙனம்போற்றியிரந்தானென்க.

என்றுகொண் டிம்முறை யிவனி யம்பவே
மன்றலங் கொன்றையம் மாலை மௌலியான்
ஒன்றிய தவம்புரி யும்பர் தம்பிரான்
றன்திரு மதலையைத் தழுவி னானரோ.

இ—ள்: இவன் - இவ்வருச்சுனன், என்று இம்முறை கொண்டு இயம்ப - என்று இப்படியாகத் தோத்திரஞ் செய்ய, மன்றலம் கொன்றையம்மாலை மௌலியான் - வாசனை பொருந்திய கொன்றைப்பூ மாலையையணிந்த முடியையுடைய கைலாசபதி, உம்பர் தம்பிரான்றன் ஒன்றிய தவம் புரி திருமதலையை - தேவர்கட்கரசனாகிய இந்திரனுடைய சிந்தையொரு வழிபட்டுத் தவஞ்செய்கின்ற சிறந்த புதல்வனாகிய அருச்சுனனை, தழுவினான் - தமது திருக்கரத்தால் தழுவினார் எ—று.

ஒன்றியதவம்புரி மதலை, உம்பர் தம்பிரான் மதலை எனத் தனித்தனி சேர்த்துப் பொருள்கொள்ளப்பட்டது. அம் இரண்டுஞ் சாரியை; அரோ அசை. (கஉஉ)

தழுவினன் பெருந்துய ரகற்றித் தண்ணளி
பொழிதரு கண்ணினன் புரக்குஞ் சிந்தையன்
அழிவற வொழிவற வமர்ந்த சோதியன்
பழுதறு மொழிசில பகர்ந்து தேற்றினான்.

இ—ள்: தழுவினன் பெருந்துயரகற்றி - அவனை அங்ஙனந் தழுவி அவன் மனத்திலுள்ள பெரிய கவலையை நீக்கி, தண் அளி பொழி தரு கண்ணினன் - கருணை பொழிகின்ற நோக்கினையு முடையராய், புரக்குஞ் சிந்தையன் - அவனைப் பாதுகாத்தல் வேண்டு மென்னுந் திருவுளத்தினராய் அழிவு அற ஒழிவு அற அமர்ந்த சோதியன் - அழிதலும் இடையீடுமில்லாது அமர்ந்தருளிய பரஞ்சோதியாகிய கைலாசபதி, பழுது அறு மொழி சில பகர்ந்து தேற்றினான் - தீமைகளை நீக்குதற்கான சில வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்து தேற்றியருளினார் எ—று. (கஉ௩)



சூதினில் யாவையுந் தோற்றுக் கானிடை
யேதிலர் போலநீ ரிளைத்து வாடினீர்
வாதுசெய் புலன்களை யடக்கி மண்ணின்மேல்
நீதவம் புரிந்தமை நினைய லாகுமோ.

இ—ள்: சூதினில் யாவையுந் தோற்று - சகுனியுடன் ஆடிய சூதாட்டத்தில் உங்களுக்குரியன எல்லாவற்றையும் பறிகொடுத்து, கானிடை - காட்டிலே, நீர் - நீவிர் ஐவீரும், ஏதிலர்போல - ஏழைகள்போல், இளைத்து வாடினீர் - சரீரம் மெலிந்து மனவாட்ட முற்றீர், நீ - நீ, வாதுசெய் புலன்களை அடக்கி - மாறுபடும் ஐம்புலன்களையும் அடக்கி ஒருவழிப்படுத்தி, மண்ணின்மேல் - இப்பூமியில், தவம் புரிந்தமை - தவஞ்செய்த தன்மை, நினையல் ஆகுமோ - என்னையொத்தார் அங்ஙனஞ் செய்தற்கு நினைத்தலும், முடியுமோ எ—று.

யாவையு மென்றது நாடுநகர் அதிகாரம் செல்வம் முதலியவற்றை, ஏதிலர் என்பதற்கு அந்நியரெனினுமாம். இங்கே துரியோதனாதியர்க்கும் நாடு நகர் செல்வம் முதலியவற்றிற்கும் அந்நியர்போலெனக் கொள்க. (கஉ௪)

மூகனென் றுரைக்குமம் மூக தானவன்
வேகமோ டேனமாய் விரைவில் வந்தனன்
நாகவெங் கொடியவ னவின்ற வாய்மையால்
யோகுசெ யுனதுயி ருண்ண வெண்ணியே.

இ—ள்: நாகவெம் கொடியவன் நவின்ற வாய்மையால் - வெவ்விய நாகபாம்புக்கொடியையுடைய துரியோதனன் சொல்லிய சொற்படி, மூகன் என்றுரைக்கும் அ மூக தானவன் - மூகனென்று சொல்லப்படும் அந்தப் பன்றியின் இயல்பு கொண்ட அசுரன், யோகுசெய் உனது உயிர் உண்ண எண்ணியே - தவஞ்செய்கின்ற உன்னுடைய உயிரைக் கவர நோக்கங்கொண்டு, ஏனமாய் வேகமோடு விரைவில் வந்தனன் - பன்றி வடிவுகொண்டு, மிக்க விரைவுடன் இங்கே வந்தான் எ—று.

நீ அவனைக் காட்டிலும் வலியுடையனாயினும் அவன் வந்தபோது நீ பராமுகமாயிருந்தால் அவன் உன்னைக் கொல்லுதலுங் கூடு மென்பார் 'யோகுசெ யுனது' என்றார். (கஉ௫)

வந்தவன் முந்துமுன் மங்கை தன்னுடன்
இந்தவெற் புறைதரு மெயின வேடமாய்ச்
சுந்தர மரகதச் சோதி வீரனே
யந்தவல் லசுரனை யம்பின் வீழ்த்தினேன்,

இ—ள்: சுந்தர மரகதச் சோதி வீரனே - அழகிய மரகதரத்தினம் போன்ற ஒளிபொருந்திய மேனியையுடைய வீரனே, வந்தவன் முந்துமுன் -

அங்ஙனம் வந்தவனாகிய மூகன் முற்பட்டு உனக்குக் கேடுவிளைத்தற்கு முந்தி, மங்கை தன்னுடன்-எமது திருவருட் சத்தியாகிய இப்பார்ப்பதியுடன், இந்த வெற்பு உறை தரும் எயின வேடமாய்-இக் கைலாச கிரியிற் சஞ்சரிக்கும் வேட்டுவர்க்குரிய வடிவு கொண்டு, அந்த வல் அசுரனை அம்பின் வீழ்த்தினேன்-அந்த வலிய மூகாசுரனை அம்பினால் மாண்டு வீழச் செய்தேம். ()

நின்னுட னமர்செய்து நின்வின் னாணறுத்
தந்நெடு வில்லினா லடியு முண்டனன்
உன்னரு மல்லினா லுதையு முண்டனன்
என்னினி யுன்கருத் தென்று கூறினான்

இ—ள்: நின்னுடன் அமர் செய்து-உன்னோடு யுத்தஞ் செய்து, நின்வில் நாண் அறுத்து-உனது வில்லின் நாணை யறுத்து, அந்நெடு வில்லினால் அடியு முண்டனன்-அந்த நீண்ட வில்லினால் அடியும் பட்டேன், உன் அரு மல்லினால் உதையமுண்டனன்-உனது அரிய மற்போரினால் உதையும் பட்டேன், இனி உன் கருத்து என்-இப்பொழுது உனது நோக்கமென்ன, என்று கூறினான்-எனக் கைலாசபதி வினவியருளினார் எ—று.

உன்னரு மல்லினா லென்பதற்கு-நினைத்தற்கரிய மல்யுத்தத்தினால் எனப் பொருள் கொள்ளினுமாம். (௧௨௭)

அந்தவில் விசயனு மவன் பதம்பணிந்
தெந்தைபா ரதவமர்க் கிசைந்த வீரர்மெய்
சிந்தநின் பேர்பெறு தெய்வ வாளியைத்
தந்தரு ளென்றனன் றவத்தின் மேனின்றான்.

இ—ள்: தவத்தின் மேல் நின்றான்-தவ நெறியில் நின்றவனாகிய, அந்த வில் விசயனும் அவன் பதம் பணிந்து-அந்த வில்லிற் சிறந்த அருச்சுனனும் கைலாசபதியின் திருவடிகளை வணங்கி, எந்தை-எம் பரமபிதாவே, பாரத அமர்க்கு இசைந்த வீரர் மெய் சிந்த-பாரத யுத்தத்தில் நேரும் வீரர்களுடைய உடலைச் சிதைத்தற் பொருட்டு, நின் பேர் பெறு தெய்வ வாளியைத் தந்தருள் என்றனன்-தேவரீருடைய பெயரைப் பெற்றுள்ளதாகிய பாசுபதப் படைக்கலத்தைத் தந்தருள்க என்று விண்ணப்பஞ் செய்தான் எ—று.

எந்தை, அண்மை விளியாதலின் இயல்பாய் நின்றது. இசைந்தவீரர்-நேரும் வீரர்; நிச்சயம் பற்றி எதிர்காலம் இறந்த காலத்திற் கூறப்பட்டது. பசுபதி சம்பந்தமானது பாசுபதமென்றாயிற்றானமையினால் நின்பேர்பெறு தெய்வவாளி யென்றான். (௧௨௮)

ஐயனு மம்மையோ டருள்பு ரிந்துபின்
வெய்யபொற் றூணியும் வில்லும் விஞ்சையும்
துய்யபா சுபதமெய்த் தொடையு முட்டியு
மொய்யென நிலையுட னுதவி னானரோ.

இ—ள்: ஐயனும் அம்மையோடு அருள் புரிந்து-சிவபிரானும் உமா தேவியாருடன் திருவருள் சுரந்து, பின்-பின்னர், வெய்யபொன் தூணியும்-வலிய பொன் மயமாகிய அம்பறாத் தூணியையும், வில்லும்-வில்லையும், விஞ்சையும்-உரிய மந்திரத்தையும், துய்ய பாசுபதமெய்த்தொடையும்-மேலான அழிதலில்லாத பாசுபதப் படைக்கலத்தையும், முட்டியும்-அதனைப் பிடிக்கும் முறையையும், நிலையுடன் ஒய்யென உதவினான்-பிரயோகிக்கும் முறையையும் உடனே அருளினார் எ—று

வெய்ய என்பதை வில்லொடும் சேர்த்துக்கொள்க. தூணியும் வில்லும் பாசுபதமும் உதவி விஞ்சையும் முட்டியும் நிலையும் உபதேசித்தாரென்க. அரோ, அசை. "வில்லுமந்த்ரமும்" என்றும் பாடம் (௧௨௯)

பெற்றனன் விசயனும் பேயும் பூதமுஞ்
சுற்றிய கணங்களுஞ் சுருதி யோசையும்
வெற்றிகொள் பெற்றமும் விழைந்து சூழவே
கற்றையஞ் சடையவன் கயிலை யேகினான்.

இ—ள்: விசயனும் பெற்றனன்-அருச்சுனனும் அவைகளை ஏற்றான், சுற்றிய பேயும் பூதமும் கணங்களும்-முன்னர்ச் சூழ்ந்து வந்தனவாகிய பேய்களும் பூதங்களும் சிவகணங்களும், சுருதி ஓசையும்-வேதங்களின் ஒலியும், வெற்றிகொள் பெற்றமும் விழைந்துசூழ-வெற்றியையுடைய திருநந்திதேவரும் பத்திகொண்டு பழையபடி சூழ்ந்துவர, கற்றை அம்சடையவன்-கூட்டமாகிய சடையையுடைய சிவபிரான், கயிலை ஏகினான்-கைலாசகிரியை அடைந்தருளினர் எ—று. "கற்றவருடையவன்" என்றும் பாடம் (௧௩௦)

ஏகிய பின்னரா யிரங்க ணாதனு
மோகர துந்துபி முழங்கத் தேரின்மேல்
நாகரு முனிவரு நண்ணி வாழ்த்தவே
வாகைகொள் விசயனை வந்து புல்லியே

இ—ள்: ஏகிய பின்னர்-பரமசிவன் மறைந்தருளிய பின்பு, மோகர துந்துபி முழங்க-ஒலியோடு கூடிய தேவதுந்துபி ஆரவாரிக்க, நாகரும் முனிவரும் நண்ணி வாழ்த்த-தேவர்களும் முனிவர்களும் சூழ்ந்து வாழ்த்த, ஆயிரம் கண் நாதனும் தேரில் மேல் வந்து - ஆயிரங்கண்ணனாகிய இந்திரனும் தேரின்மீதேறி வந்து, வாகை கொள் விசயனைப் புல்லி - வெற்றியுடைய அருச்சுனனைத் தழுவி எ—று. (௧௩௧)

நீபுரி தவப்பயன் நீடு வாழியே
சாபமுந் தூணியுஞ் சரமும் வாழியே
தீபமெய் யொளியுடன் சேர்ந்து போர்செயு
மாபெரு நீலமெய் வாழி வாழியே.

இ—ள்: நீ புரி தவப் பயன் நீடு வாழியே-நீ செய்த தவத்தின் பேறு நிலைபெற்று வாழ்க, சாபமும் தூணியும் சரமும் வாழியே - (பரமசிவன் அருளிய) வில்லும் அம்பறாத்தூணியும் பாசுபதமென்னும் படைக்கலமும் வாழ்க, தீபமெய் ஒளியுடன் சேர்ந்து போர் செயும்-ஞான தீபமாகிய நிலைபெற்ற சோதிப்பிழம்பொடு எதிர்த்துச் சமர் செய்த, மா பெரு நீலமெய் வாழி வாழியே-அழகிய சிறந்த உனது நீலநிறமான மேனி வாழ்க வாழ்க எ-று. ()

என்றுகொண் டிணையடி யிறைஞ்சு மைந்தனைத்
தன்றிருத் தேரின்மேற் றாழ்ந்த கைகளால்
ஒன்றிய வுவகையோ டேற்றி யும்பர்கோன்
சென்றனன் றன்பெருந் தெய்வ வானமே.

இ—ள்: உம்பர்கோன்-இந்திரன், என்று கொண்டு-என்று கூறி, இணையடி இறைஞ்சும் மைந்தனை-தனது இரு பாதங்களையும் வணங்கிய மகனாகிய விசயனை, தாழ்ந்த கைகளால் - நீண்ட கரங்களினால், ஒன்றிய உவகையோடு தன் திருத் தேரின் மேல் ஏற்றி-ஒரு வழிப்பட்ட மகிழ்ச்சியுடன் தனது சிறந்த தேரின்மீது (அணைத்தெடுத்து) ஏற்றி, தன் பெரும் தெய்வ வானம் சென்றனன்-தன்னுடைய மேலான தெய்வ உலகத்தை அடைந்தான்.

முழந்தாள்வரையிற் கரம் நீண்டிருத்தலே உத்தமபுருஷருக்குரிய அங்க இலக்கணமாதலின் "தாழ்ந்த கைகளால்" எனப்பட்டது. (கருஙு)

ஒருபெரு மாதலி யூருந் தேரின்மேல்
இருமர கதகிரி யிருந்த வென்னவே
மருவரு கற்பக மாலை மௌலியும்
விரிபுகழ் மைந்தனும் விளங்கி னாரரோ.

இ—ள்: மாதலி ஊரும் ஒரு பெரும் தேரின்மேல்-மாதலி யெனப்படுஞ் சாரதி செலுத்துகின்ற சமானமற்ற சிறந்த தேரின்மேல், இரு மரகத கிரி இருந்த என்னவே-இரண்டு மாகதரத்தின மலைகள் இருந்தன என்று சொல்லத் தக்கதாக, மருவரு கற்பகமாலை மௌலியும்-வாசனை பொருந்திய கற்பகப்பூமாலை சூடிய முடியினையுடைய இந்திரனும், விரிபுகழ் மைந்தனும் விளங்கினர்-பரந்த கீர்த்தியையுடைய மகனாகிய விசயனும் விளங்கினார்கள்.

மாலை மௌலி-அன்மொழித்தொகை. (கருச)

ஆயிரம் பொலங்கிரி யழித்து வானின்மேன்
மாயிரு மொருபுரம் வகுத்த தென்னவே
பாயிர மறைபுகழ் பரமன் றேசெனச்
சேயிரும் பொன்னகர் திகழ்ந்து தோன்றுமால்.

இ—ள்: ஆயிரம் பொலம் கிரி அழித்து - (பூவுலகத்திலுள்ள) ஆயிரம் பொன்மலைகளை இடித்தழித்து, மா இரும் ஒருபுரம் வானின்மேல் வகுத்தது என்ன-சிறந்த விசாலமான ஒரு நகரத்தை விண்ணுலகில் வகுத்த தன்மை போலவும், பாயிர மறை புகழ் பரமன் தேசு என-வரலாற்றோடுகூடிய வேதங்களினாற் பாராட்டப்படும் பரம் பொருளின் திருமேனியிற் பொருந்திய ஒளியைப் போலவும், சே இரும் பொன்னகர் திகழ்ந்து தோன்றும்-விண்ணின் கண்ணதாகிய சுவர்க்க உலகத்தின் பட்டினம் சிறப்புடன் காணப்படும் எ-று

புரம், நகர் என்பன இங்கே இந்திரனுடைய பட்டினமாகிய அமராவதியைக் குறித்தன. பூமியிலுள்ள மலைகளின் சிறகர்களை ஒரு காலத்தில் அரிந்தவனென்று சொல்லப்படும் இந்திரன் அவ்வளவோடமையாது ஆயிரக்கணக்கான பொன்மலைகளை இடித்தெடுத்து அப்பொன்னைக் கொண்டு போய் விண்ணுலகில் ஒரு பட்டினம் அமைத்தாற் போலவும், பரமேசுவரனுடைய திருமேனியின் தேசஸ் போலவும், அமராவதியின் அமைப்பும் அதனிடத்



துள்ள பேரொளியும் விளங்குமென்றபடி. வேதங்கள் பரம்பொருளெனப் பாராட்டுவது சிவபிரானொருவரையே யாதலானும், அப்பெருமானுடைய நிர்மலமான திருமேனியிற் பிரகாசிக்கும் ஞான ஒளி சிறந்ததாகலானும் "பாயிர மறை புகழ் பரமன் றேசு" என்றார். (கருடு)

விண்ணவர் முனிவருள் விளங்கி வாழ்தலால்
நண்ணிய முடிப்பெயர் நாகம் பூணலால்
எண்ணரு மகபதி யிருந்த மாநகர்
புண்ணியன் வடிவெனப் புகழ்ந்தி லங்குமால்.

இ—ள்: எண்ணரு மகபதி இருந்த மாநகர் - நினைத்தற்கரிய நூறு யாகங்களுக்குத் தலைவனாகிய இந்திரன் வதிந்த அமராவதி யென்னும் நகரமானது, விண்ணவர் முனிவர் உள் விளங்கி வாழ்தலால்-தன்னகத்தே தேவர்களும் முனிவர்களும் சிறந்து வாழ்தலினாலும், நண்ணிய முடிப்பெயர் நாகம் பூணலால்-பொருந்திய தலையாயபெயர் நாகம் எனப் பூண்டிருத்தலினாலும், புண்ணியன் வடிவு என- (தம்மைத் தியானிக்குந் தேவர்கள் முனிவர்களுடைய உள்ளத்து வியாபித்திருத்தலினாலும் பொருந்திய திருமுடியின் கண் ஊருகின்ற பாம்புகள் பொருந்தியிருத்தலினாலும்) புண்ணிய மூர்த்தியாகிய பரமேசுவரனுடைய திருக்கோலமென, புகழ்ந்து இலங்கும்-பாராட்டப்பட்டு விளங்கும் எ—று.

நாகம்-தேவருலகம். இச்செய்யுளின் முதலிரண்டடியும் இந்திரன் நகருக்கும் பரமசிவனுக்கும் சிலேடையென்க. ஆல்-அசை. (கருகூ)

மாவலி சிறைப்பட வைத்த தாண்மலர்
தாவிய விண்ணிடைத் தயங்கு பொன்னகர்
தேவருந் தொழுகழற் றேவ னுந்தியம்
பூவிரிந் ததுவெனப் பொலிந்து தோன்றுமால்.

இ—ள் மாவலி சிறைப்பட வைத்த தாண்மலர் தாவிய விண்ணிடை-மாவலிச் சக்கரவர்த்தி சிறைபுகும் வண்ணம் மிதித்த திருவடியாகிய தாமரைப்பூ ஒரு காலத்தில் நிமிர்தற்கு இடமாகவுள்ள விண்ணுலகத்தில், தயங்கு பொன் நகர்-விளங்குகின்ற பொன்மயமான அமராவதி நகரம், தேவரும் தொழுகழல் தேவன் உந்தியம் பூவிரிந்தது என-தேவர்களும் வணங்குகின்ற வீரக்கழலை யணிந்த தேவராகிய திருமாலது நாபிக்கமலம் அலர்ந்ததென்று சொல்லும்படி, பொலிந்து தோன்றும் - சிறந்து காணப்படும் எ—று.

வாமன வடிவங்கொண்டு இரக்கும்படி மாவலிச் சக்கரவர்த்தியிடஞ் சென்ற திருமால், அவனை மூன்றடி நிலந் தரும்படி கேட்க, அவன் தன் குலகுருவாகிய சுக்கிரன் தடுப்பவுங் கேளாமல், மூன்றடி மண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்க, உடனே அத்திருமால் திரிவிக்கிரம வடிவமென்னும் நீண்ட பெரிய வடிவத்தைக் கொண்டு ஒரு அடியால் மண்ணுலகையும் மற்றையடியால் விண்ணுலகையும் அளந்து கொண்டு, இன்னுமொரு அடி மண் உதவும்படி கேட்க, மாவலி தன் தலையையே ஓர் அடி மண் பொருட்டு அளந்து ஏற்றுக்கொள்ளும்படி வணங்க-அவன் சென்னிமீது மிதித்து அவனுடைய வலியைக் கெடுத்து அவனைச் சிறைப்படுத்தினரென்பது சரித்திர

மாதலின் "மாவலி சிறைப்பட வைத்த தாண்மலர்" என்றார். திருமால் மாவலியைச் சிறைப்படுத்தினு ரென்பதை: "ஈரெயிற் றசுரர் கோமான் மாவலி யென்போன் றன்னைக், காரகப் படுத்தி மற்றைக் கடிகம ழலங்கற் குல்லைத், தாரகப் படுத்த மாயோன் றன்னிக ரின்மை நோக்கிப், பேரக லண்ட மெல்லாம் பிளப்பதற் குருத்து நின்றான்." என வரும் உபதேச காண்டச் செய்யுளானு முணர்க. (கசஎ)

பொலிவுறு மந்நகர் புகுந்து தாதையுஞ்
சிலைகணை பெறுதிறற் றெய்வ மைந்தனு
மெலிவுறு மின்னிடை நுடங்க மீனினும்
பலரர மாதரார் பரிவு கூரவே.

இ—ள்: தாதையும் சிலை கணை பெறு திறல் தெய்வ மைந்தனும் - பிதாவாகிய இந்திரனும் (பரமசிவனிடத்தில்)வில் பாசுபதப் படைக்கலம் என்னுமிவைகளைப் பெற்ற வலிமையுடைய தெய்வத்தன்மை பொருந்திய மகனாகிய அருச்சுனனும், பொலிவு உறும் அந்நகர் புகுந்து - சிறப்பமைந்த அந்த அமராவதியிற் சென்று, மீனினும் பலர் அரமாதரார் - விண்மீனெனப்படும் நட்சத்திரங்களைக் காட்டிலும் பலரான தேவமகளிர், மெலிவு உறும் மின்னிடை நுடங்க பரிவு கூர - வருந்துகின்ற மின்னல்போன்ற இடையானது துவள ஆர்வம் பாராட்ட எ—று.

அவ்விருவரையுங் கண்ட மாத்திரத்தே ஆர்வம் பெருக அதனால் தனம் பூரிக்க, அத்தனபாரத்தைச் சுமக்கலாற்றாது வருந்தி நுடங்குமிடை யென்பார் "மெலிவுறு மின்னிடை நுடங்க" என்றார். நுடங்க, பரிவுகூர என்னும் வினையெச்சங்களை அடுத்த கவியில் வரும் வைகினார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிக்க. (கசஅ)

பருமணி வெயிலெழப் பணில மாநிரை
தருமணி நிலவெழத் தமனி யப்பெருங்
குருமணிச் சிலம்பொலி கூரு மண்டபத்
தொருமணி யாசனத் தோங்கி வைகினார்,

இ—ள்: பருமணி வெயில் எழ - தன்னகத்து அழுத்தப்பட்ட பெரிய இரத்தினங்களின் ஒளி கிளரவும், பணில மாநிரை தருமணி நிலவு எழ-சங்கினமீன்ற முத்துக்களிலிருந்து தண்ணொளி பிரகாசிக்கவும், தமனியப்பெருங் குருமணிச் சிலம்பு ஒலி கூரும் மண்டபத்து-மாற்றுயர்ந்த பொன்னால் ஆக்கப்பட்டு அகத்தே சிறந்த இரத்தினங்கள் பெய்தமைத்த சிலம்பென்னுங் காலணியினோசை இடையறாது ஒலிக்கின்ற சுதன்மை யென்னுங் கொலு மண்டபத்தில், ஒரு மணியாசனத்து ஓங்கி வைகினார்-(இடப்பட்டிருந்த) ஒப்பற்ற இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்கள் எ—று.

சங்கும் இப்பியும் ஈன்ற முத்தே சிறந்தவாதலின் இங்கே "பணில மாநிரை தருமணி" என்றார். அரம்பை முதலாம் தேவமகளிர் நாட்டியஞ் செய்தற் கிடமாக வமைந்த மண்டபமாதலின் "குரு மணிச் சிலம்பொலி கூருமண்டபம்" எனப்பட்டது. (கசக)



முருகவிழ் பரிமள மொய்த்த தண்டுழாய்
மரகத கிரிதிரு மைத்து னன்றனைப்
பெருமித வபிமனைப் பெற்ற காளையை
யருள்பெறு முவகையோ டன்னை யெய்தினாள்.

இ—ள்: முருகு அவிழ் பரிமளம் மொய்த்த தண் துளாய் மரகத கிரி திரு மைத்துனன்றனை-தேன் பிலிற்றும் வாசனை வீசுகின்ற குளிர்ச்சி பொருந்திய துளசிப் பூமாலையைத் தரித்த மரகதரத்தின மலையை நிகர்த்த திருமாலின் அவதாரமாகவுள்ள கண்ணபிரானுக்குச் சிறந்த மைத்துனனாகவுள்ளவனும், பெருமித அபிமனைப் பெற்ற காளையை- (வீரர்களால் மதிக்கப்படும்) மேம்பாட்டையுடைய அபிமந்யுவைப் புதல்வனாகப்பெற்றவீரனுமாகிய அருச்சுனனை, அருள் பெறும் உவகையோடு அன்னை எய்தினள்-அன்போடு கலந்த மகிழ்ச்சியுடன் பெரிய தாயாகிய இந்திராணி வந்தடைந்தாள்.

மைத்துனன்றனை காளையை என ஒரு பொருண்மேல் வந்த பல பெயர்கள் எய்தினளென்னும் ஒரு வினை கொண்டன. கண்ணபிரானுக்கு மைத்துனனாகவும் அபிமந்யுவுக்குத் தாதையாகவும் முறைபூண்டிருத்தல் விஜயனுக்குப் பெருமை யளித்தலின் இங்ஙனம் கூறப்பட்டது. மரகதகிரி அன்மொழித்தொகை. (கசா)

அன்னையை மின்னிடை யரிய பாவையைக்
கன்னலை யமுதொடு கலந்த சொல்லியை
யுன்னருந் தவப்பய னுற்ற மைந்தனுஞ்
சென்னியை யவள்பதஞ் சேர்த்து நின்றனன்.

இ—ள்: அன்னையை - தாயாகவுள்ளவளும், மின் இடை அரிய பாவையை-மின்னுகின்ற இடையானது காண்டற்கரிய கொல்லிப் பாவை போன்றவளும், கன்னலை அமுதொடு கலந்த சொல்லியை-கருப்பரசத்தை அமிர்தத்தோடு கலந்தாற் போன்ற வார்த்தையை யுடையவளுமாகிய இந்திராணியை, உன்ன அரும் தவப்பயன் உற்ற மைந்தனும்-ஏனையோரால் நினைத்தற்குமரிய தவத்தின் பேற்றை(ச் சிவபிரானிடத்து)ப் பெற்ற மகனாகிய அர்ச்சுனனும், சென்னியை அவள் பதம் சேர்த்து நின்றனன்-தன் சிரசை அவ்விந்திராணியின் பாதங்களிற் பொருந்தச் செய்து (அவள் திருவடியில் வீழ்ந்து வணங்கி) எழுந்து விநயத்தோடு நின்றான் எ—று.

கேட்போர் செவிக்கு இனிமையும் உள்ளத்திற்கு இதமும் பயக்குஞ் சொல்லினா ளென்பார் "கன்னலை யமுதொடு கலந்த சொல்லியை" என்றார்.

நின்றவக் குமரனைத் தழுவி நேயமோ
டொன்றிய வுவகைய ளூரைவ ழுத்தினள்
வென்றிகொ ளையநீ விபுதர் தம்பிரான்
றன்றிருச் செல்வமுந் தாங்கு வாயென.

இ—ள்: நேயமோடு ஒன்றிய உவகையள் அன்புடன் கலந்த மகிழ்ச்சியைக் கொண்டவளாகிய இந்திராணி, நின்ற அக்குமாரனைத் தழுவி-தன்னைப் பணிந்து விநயத்துடன் நின்ற அந்த மகனாகிய விசயனைத் (தன்கரங்களினால்)

தழுவி, வென்றிகொள் ஐய-வெற்றியைக் கொண்டுள்ள அப்பனே, நீ விபுதர் தம்பிரான் தன் திருச்செல்வமும் தாங்குவாய் என - நீ தேவராசனுக்குரிய சிறந்த செல்வம் முழுவதையும் பெறுவாயாகவென்று, உரை வழுத்தினள்-உபசார வார்த்தைகளைச் சொன்னாள் எ—று.

சிவபிரானிடத்திற் பெற்ற வரத்தோடு இந்திரச் செல்வத்தையும் பெறுவாயென்றாள்; செல்வமும் என்றதில் உம்மை சிறப்பொடு இறந்ததுதழீஇய எச்சமுமாம். மகனை ஐய என்னல் மரபுவழுவமைதி. (கசஉ)

ஆயிரம் பதின்மடங் காக வன்னையும்
மாயிரும் புதல்வனை வாழ்த்தி வாழ்த்தியே
தூயசெம் பருமணி சுடரு மாளிகை
யேயின ளிந்திர னிதயம் போன்றுளாள்.

இ—ள்: இந்திரன் இதயம் போன்றுளாள் அன்னையும்-தன்னுயகனுகிய இந்திரனது சித்தத்தையொத்த சித்தத்தையுடைய தாயாகிய இந்திராணியும், மாயிரும் புதல்வனை-மிகச் சிறந்த மகனுகிய அருச்சுனனை, பதினுயிரம் மடங்காக வாழ்த்தி வாழ்த்தியே-பல்லாயிரக் கணக்கான முறை பாராட்டி வாழ்த்தி, தூயசெம் பருமணி சுடரும் மாளிகை ஏயினள்-களங்கமற்ற பெரிய மாணிக்க மணிகள் ஒளிரும் மாளிகையின் அந்தப் புரத்திற்கு மீண்டாள்.

ஆயிரம் பதின்மடங்கென்பதும் வாழ்த்தி வாழ்த்தி யென்னும் அடுக்கும் மிகுதிபற்றி வந்தன. இந்திர னிதயம் போன்றுளாள்-இந்திரன் பேதம் பாராட்டாதவாறு தானும் பேதம் பாராட்டாதவள். இனி, இந்திரனுடைய மனக் குறிப்பறிந்தொழுகும் இயல்பினளெனக் கொள்ளினுமாம்; ''கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'' யாதலினென்க. ஏகினள் எதுகை நோக்கி ஏயினளெனத் திரிந்தது. (கசங)

அந்தர துந்துபி யதிரும் பேரொலி
முந்திய மறையொலி முழங்குஞ் சங்கொலி
சிந்துர மதகரி சீறு நீடொலி
சுந்தர முகிலொலி தூங்கத் தூங்குமால்.

இ—ள்: அந்தர துந்துபி அதிரும் பேரொலி-தேவதுந்துபி ஒலிக்கின்றதாகிய பெரிய ஓசையும், முந்திய மறை யொலி-பழமையாகிய வேதத்தின் கோஷமும், முழங்கும் சங்கு ஒலி-இரைகின்ற சங்கநாதமும், சிந்துர மதகரி சீறு நீடு ஒலி-சிந்துரத் திலகமிடப்பட்ட மதங்கொண்ட அயிராவத மென்னும் யானை செய்கின்ற நிலயான பிளிற்றொலியும், சுந்தர முகிலொலி தூங்க-அழகிய மழைமுகிலின் முழக்கம் சோரும்வண்ணம் (அடங்கும்படி), தூங்கும்-பரவும் எ—று.

ஆல் அசை. துந்துபி சங்கமென்னுமிவைகள் முறையே ஒலிப்பாரும் ஊதுவாரு மின்றித் தாமாகவே ஒலிக்கும் இயல்புடையனவாதலின் அதிரும் முழங்கும் என்னும் தன்வினைகளாற் கூறப்பட்டன. தூங்குதல் என்னும் பலபொருள் குறித்த சொல் இங்கே சோர்தல் பரத்தல் என்னும் பொருள்களை முறையே கொண்டு நின்றது. (கசச)



பத்திகொ ணவமணி பயின்று செந்துகிர்க்
கொத்தொளிர் தளிருடன் குலவு கற்பகஞ்
சித்திர விசயவில் விசயன் சென்னிமேல்
வைத்தது முருகவிழ் வாச மாலையே

இ—ள்: பத்தி கொள் நவமணி பயின்று - நிரையான ஒன்பது வகை இரத்தினங்கள் நிறையப்பெற்று, செம் துகிர் கொத்து ஒளிர் தளிருடன் குலவு கற்பகம்-சிவந்த பவளத்தையொத்த தளிர்களுடன் விளங்குகின்ற கற்பகதரு, சித்திர விசயவில் விசயன் சென்னிமேல்-சிறந்த வெற்றிக்கேதுவாகிய காண்டீபமென்னும் வில்லைக்கொண்ட அருச்சுனனது சிரசின் மீது, முருகு அவிழ் வாச மாலை வைத்தது-தேன் சிந்துகின்ற நறுமணங் கமழும் மாலையை இட்டது எ—று.

கற்பகம் தெய்வத்தன்மையுடைய தருவாதலின் விசயன் சிரமிசைத் தானுகவே சமயமறிந்து மாலையை யிட்டதென்றபடி. நவமணிகளாவன: கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. (கசரு)

கிளரிசைத் தும்புரு கிளருங் கற்பகத்
தளையவிழ் நாண்மலர் சாத்து நாரதன்
அளிபயி லமுதமுண் டகமகிழ்ந் துளக்
களியொடு கின்னரர் கானம் பாடவே

இ—ள்: கிளர் இசைத் தும்புரு-உள்ளக்கிளர்ச்சியைத் தரும் இசையில் வல்ல தும்புருவும், கிளரும் கற்பகத் தளையவிழ் நாண்மலர் சாத்தும் நாரதன்-விளங்குகின்ற கற்பகதருவின் இதழ்விண்டு அன்றலர்ந்த பூவினுலாகிய மாலையைத் தரித்த நாரதரும், அளிபயில் அமுதமுண்டு அகமகிழ்ந்து உளக் களியொடு கின்னரர்-குளிர்ச்சி பொருந்திய அமுதத்தை உட்கொண்டு மன மகிழ்ச்சியுற்று அவ்வுள்ளக்களிப்புடன் கின்னரர்களும், கானம்பாடவே-இசையைப் பாட எ—று. (கசசு)

தகையுள வகத்தியன் புலத்தி யன்றவ
வகைபெறு வசிட்டனேழ் வசுக்க ளாதியர்
அகமகிழ்ந் துவகைகொ ளன்பி னுற்றிரு
முகமலர்ந் தருமறை முனிவர் வாழ்த்தவே.

இ—ள்: தகையுள அகத்தியன்-தவப்பெருமைவாய்ந்த அகத்திய முனிவர், புலத்தியன்-புலத்திய முனிவர், தவவகைபெறு வசிட்டன்-பலவகையான தவங்களை இயற்றியுள்ள வசிட்ட முனிவர், ஏழ் வசுக்கள் ஆதியோர்-ஏழுவசுக்கண் முதலானோர், அருமறை முனிவர்-அரிய வேதங்களை உணர்ந்த ஏனைய இருடிகள், அகமகிழ்ந்து உவகைகொள் அன்பினுல்-மனப்பூர்வமாக எழுந்த மகிழ்ச்சியோடு கூடிய அன்பு காரணமாக, திருமுகம் மலர்ந்து-தங்கள் சிறந்த முகம் மலரப்பெற்றவர்களாய், வாழ்த்த-வாழ்த்தெடுப்ப எ—று

முனிவருட் சிறந்தவர் அகத்தியராதலின் தகையுள அகத்தியன் எனப்பட்டது. அட்டவசுக்களுள் பிரபாசன் வீடுமனுகப் பிறந்திருத்தலின் அவனையொழித்து ஏழ் வசுக்களென்றார்; அவ்வெழுவர்:—தான், துருவன், சோமன், ஆபத்சைவன், அநலன், அநிலன், பிரத்தியூசன். (கஎ)

செம்மணி வெயில்விரி சிலம்பு கொஞ்சவே
கைம்மணி வரிவளை கலந்து பொங்கவே
பெய்மணி மேகலை பிறங்கி யார்க்கவே
தூய்ம்மணி யொளியர மாதர் சூழவே.

இ—ள்: செம்மணி வெயில் விரி சிலம்பு கொஞ்ச-மாணிக்கமணியழுத்திய ஒளி காலுகின்ற சிலம்புகள் பாதங்களிற் பொருந்த, கை மணி வரி வளை கலந்து பொங்க-கரங்களில் அணிந்துள்ள வரிகள் பொருந்திய இரத்தின வளையல்கள் சேர்ந்து ஒலிக்க, மணி பெய் மேகலை பிறங்கி ஆர்க்க-இரத்தினங் கோக்கப்பட்ட மேகலாபரணம் ஒளிசெய்து ஒலிக்க, தூய்மணி ஒளி அர மாதர் சூழ-சிறந்த இரத்தினம் போன்ற தேககாந்தியையுடைய தேவமகளிர் புடைசூழ எ—று.

கொஞ்ச, பொங்க, ஆர்க்க என்னும் காரியப்பொருட்டு வினையெச்சங்கள் சூழ என்னும் வினைகொண்டன. (கசஅ)

வேறு.

இவ்வாறிவ ரிருவோர்களு மிணைமாமுகி லெனவே
செவ்வாளரி கிளர்கின்றதொர் செம்பொற்றவி சிடையே
மைவானக முழுதுஞ்செழு மறையோசைவிளைக்கும்
அவ்வானவர் புடைசூழ்தர வழகெய்தியி ருந்தார்.

இ—ள்: இவர் இருவோர்களும்-இந்திரன் அருச்சுனனென்னும் இவ்விருவரும், இணை மாமுகில் எனவே-இரண்டு நீலமேகங்கள் என்று சொல்லத் தக்கவராய், செவ்வாள் அரி கிளர்கின்றது ஓர்செம்பொன் தவிசிடையே-சிவந்த ஒளியுடைய சிங்கத்தின் பிடரில் விளங்குகின்றதாகிய ஒரு மாற்றுயர்ந்த பொன்னால் அமைக்கப்பட்ட ஆசனத்தின்மீது, மை வானகம் முழுதும்-முகில்கள் சஞ்சரிக்கின்ற ஆகாயமெங்கும், செழு மறை ஓசை விளைக்கும்-செவ்விய வேதத்தின் ஒலியைச் செய்கின்ற (வேதத்தை ஓதுகின்ற), அவ்வானவர் புடை சூழ்தர-அத்தேவர்கள் பக்கலிலேசூழ, இவ்வாறு அழகு எய்தி இருந்தார்-இந்தப்பிரகாரம் சிறப்புற்று வீற்றிருந்தார்கள் எ—று.

இருந்தாரிவர் குளிர்சாமரை யிருபாலு மிரட்டப்
பெருந்தாரகை மதியொத்தொளி பெறுகின்றகு டைக்கீழ்
முருந்தார்நகை யரமாதரின் முதன்மைப்பெயர் புனையுஞ்
செருந்தார்குழ லுடையாளரி திருவூருவின் வந்தாள்.

இ—ள்: குளிர் சாமரை இருபாலும் இரட்ட-குளிர்ச்சியான காற்றைத் தரும் வெண்சாமரைகளை(த் தேவமகளிர்) இருமருங்கும் நின்று வீச, பெரும் தாரகை மதி ஒத்து ஒளி பெறுகின்ற குடைக்கீழ்-கூட்டமாகிய நட்சத்திரங்களின் மத்தியில் விளங்கும் பூரண சந்திரனை நிகர்த்து ஒளிவீசுகின்ற வெண்கொற்றக்குடை நீழலில், இவர் இருந்தார்-(இந்திரன் அர்ச்சுனன் என்னும்) இருவரும் வீற்றிருந்தார்கள், (அப்படி இருக்குஞ் சமயத்தில்) முருந்து ஆர் நகை அரமாதரின் முதன்மைப் பெயர் புனையும்-மயிலிறகின் அடிமுட்போன்ற வெண்மையான பல் வரிசையை யுடையவர்களாகிய தெய்வமகளிருள் முதன்மையான புகழோடு கூடிய, செருந்து ஆர்குழல் உடையாள்-



பூவின் இதழ் செறிந்துள்ள கூந்தலையுடையவளும், அரிதிரு ஊருவின் வந்தாள்—விஷ்ணுமூர்த்தியின் அமிசமாகவுள்ள நாராயண இருடியின் அழகிய தொடையிலிருந்து பிறந்தவளும் எ—று.

குடையைச் சூழ்ந்து தொங்கும் முத்துமாலைகட்கு நட்சத்திரங்களும் குடைக்கு மதியும் உவமானமாயின. செருந்து-பூவின் இதழ் இதனை இந்நூலின் எட்டாம்போர்ச் சருக்கத்தில் "செருந்தவிழ் துளபமாலைத் திருநெடுமாலுமங்கே" என வருதலானுமுணர்க. விஷ்ணுமூர்த்தி ஆசாரிய சீட முறையை உலகத்தினர்க்கு எடுத்துக் காட்டும் பொருட்டு முன்னொரு காலத்துக் கொண்ட அவதாரமாகிய நரநாராயணர்களில், நாராயணரிஷியின் தவத்திண்மையைச் சோதிக்கும்படி மேனகை முதலிய தெய்வப் பெண்களையும் மன்மதனையும் தேவர்கள் அம்முனிவரிடம் ஏவிவிட, அம்முனிவர் அவர்களால் தம்மனத்திண்மை மாறுபடுதலின்றி, தம்முடைய தொடையிலிருந்து ஒரு சிறந்த பெண்ணை உடனே தோன்றச்செய்து அப்பெண் வாயிலாக அத்தேவர்களை மயக்குவித்தார் என்பது வரலாறு. முனிவருடைய ஊருவிற் றோன்றியமையினால் ஊர்வசி யென்னுங் காரணப் பெயரைப் பெற்றாளென்க. (க௫௦)

மானேதரு விழியாடிரு மாதேநிக ரெழிலாள்
தேனேதிகழ் மொழியாள்பொரு சிலையேதரு நுதலாள்
தானேதனை நிகர்வாள்பெயர் தருநாடக மெல்லாங்
கானேசெறி தொடையாரிரு கண்கண்டு களித்தார்.

இ—ள்: மானே தரு விழியாள் - மறிமானுடைய கண்களையொத்த கண்களையுடையவள், திருமாதே நிகர் எழிலாள் . இலக்குமியை யொத்த பேரழகுடையவள் தேனே திகழ் மொழியாள் - தேன்போன்ற இனிமை விரவிய சொற்களைப் பேசுபவள், பொரு சிலையே தரு நுதலாள் - போர்புரியும் வில்லையொத்த நெற்றியை யுடையவள், தானே தனை நிகர்வாள்-எல்லா வகையிலும் தானே தனக்கு ஒப்பானவளாகிய ஊர்வசி, பெயர் தரு நாடகம் எல்லாம் - அடிபெயர்த்துச் செய்த நடனவகை முழுவதையும், கானே செறி தொடையார் - வாசனைநிறைந்த மாலையை யணிந்தவர்களாகிய இருவரும், இருகண் கண்டு களித்தார் - தனித்தனி தம் இரு கண்களாலும் பார்த்து உவப்படைந்தார் எ—று.

ஏகாரங்கள் பிரிநிலை, மானே தரு விழியாள் - மானே தன் கண்களை உதவினாற்போன்ற கண்களை யுடையவளென்பது நேரான கருத்து, சிலை போர்புரியும்போதே வளைவுறுமாதலினாலும் அங்ஙனம் வளைந்த சிலையே நுதலுக்கு உவமையாமாதலினாலும் சிலையென வாளா கூறாது, "பொரு சிலையே தரு நுதலாள்" என்றார். அவள் ஒப்பாரும் மிக்காரு மில்லாதவளாதலின், "தானே தனை நிகர்வாள்" எனப்பட்டது. பலவகையான நடனங்களை அச்சமயத்தில் அவள் செய்தமையின் "நாடகமெல்லாம்" என்றார். ()

இந்நாடக விதம்யாவையும் யாரேதனி புரிவார்
மின்னாரிடை மின்னேரிழை மென்கொம்பை யலாதார்
என்னாவிழி களியாமன முருகாவிசை யெழுதும்
பொன்னாடுடை யவன்மைந்தன்வி யப்போடு புகழ்ந்தான்.

இ—ள்: இசை எழுதும் பொன் நாடு உடையவன் மைந்தன் - (புலவர்களால்) தன்புகழ் பாடப்படும் பொன்னுலகத்தை யுடையவனாகிய இந்திரனது புதல்வனாகவுள்ள விசயன், மின் ஆர் இடை மின் நேர் இழை மெல் கொம்பை அலாதார் யாரே - மின்னலை நிகர்த்த இடையையும் ஒளியுடைய ஆபரணங்களையும் உடைய மெல்லிய பூங்கொம்பை யொத்தவளாகிய இந்த ஊர்வசியை யல்லாதார் எவர், இந்நாடக விதம் யாவையும் தனி புரிவார் - இப்பலவகையான நாட்டியங்களையும் ஒப்பின்றிச் செய்ய வல்லுநர், என்ன - என்று கூறி, விழி களியா - கண் களிக்க, மனம் உருகா - உள்ளம் உருக, வியப்போடு புகழ்ந்தான் - அற்புதத்தோடு பாராட்டினான் எ—று.

யார் புரிவார் என்பதில் யார் என்னும் வினா எதிர்மறைப் பொருள்.

திகழ்கின்றன வுரை தந்தைசெ விப்போதுற மகிழா
இகல்கொண்டுயர் தோளாய்புதி தின்னாடக மென்னா
மகவான்பெரு மிதவாழ்வுறை வானோர்முதல் யாரும்
மிகுகுங்கும முலையாருடன் விடைகொண்டிட விட்டான்.

இ—ள்: திகழ்கின்றன வுரை தந்தை செவிப்போது உற - வியப்போடு கூடிய அவ்வார்த்தைகள் பிதாவாகிய இந்திரனுடைய பூப்போன்ற காதிற் படுதலும், மகிழா - (அவன்) மகிழ்ச்சியடைந்து, இகல் கொண்டு உயர் தோளாய் - வலிமைகொண்டு பூரித்த புயங்களையுடைய மகனே, இந்நாடகம் புதிது - இப்பொழுது செய்த இந்நாட்டியம் புதியதாகும், என்ன - என்று கூறி, மகவான் - இந்திரனனவன், பெருமித வாழ்வு உறை வானோர் முதல் யாரும் - மகிழ்ச்சியோடு கூடிய வாழ்க்கையிலிருக்கும் தேவர்கள் முதலிய எல்லோரும், குங்குமம் மிகு முலையாருடன் விடை கொண்டிட - குங்குமக் குழம்பை மட்டித்த தனங்களையுடைய தேவமகளிர் முதலிய பெண்பாலாருடன் அநுமதி பெற, விட்டான் - அவர்களுக்குச் செல்லும்படி விடை கொடுத்தான் எ—று.

அன்று ஊர்வசி செய்த நாட்டியம் அவளுடன் பலகாலம் பயின்ற இந்திரனுக்கும் அபூர்வமாக இருந்தமையின் அவன் "புதிதிந்நாடகம்" என்றானென்க. வானோர் முதல் யாருமென்றது அகத்தியர் புலத்தியர் முதலாம் முனிவர்களையும் எழ் வசுக்கள் முதலியோரையும் உட்படுத்தியென்க. குங்கும முலையார் ஈண்டு மேலே சொல்லப்பட்டவர்களுடைய தேவிமாரும் ஏனைய பெண்பாலினருமாவர். (௧௫௩)

மகனும்புகழ் புனைதந்தையு மந்தாகினி யாடிச்
சிகரம்பயில் வரைபோலுயர் திருமண்டப மிசையே
யகிறுன்றிய குழலார்பல ரரமாத ரளிக்கும்
நிகரம்பயி லமுதுண்டவர் நிறைவெய்தி யிருந்தார்.

இ—ள்: மகனும் - மகனாகிய அருச்சுனனும், புகழ் புனை தந்தையும் - சீர்த்தியையுடைய பிதாவாகிய இந்திரனும், மந்தாகினி ஆடி - ஆகாய கங்கையில் மூழ்கி, சிகரம் பயில் வரை போல் உயர் திருமண்டப மிசையே - சிகரங்கள் பொருந்திய மலைபோல் உயர்ந்த சிறந்த மண்டபத்தின்கண்ணே, அகில் துன்றிய குழலார் பலர் அரமாதர் அளிக்கும் - அகிலம் புகை விரவிய கூந்தலை யுடையவர்களாகிய பல தேவமகளிர் பரிமாறிய, நிகரம் பயில்



அமுது அவர் உண்டு - விழுங்குதலையுடைய அமுதத்தோடு கூடிய உணவை அவ்விருவரும் அருந்தி, நிறைவு எய்தி இருந்தார் - திருப்தியுற்றிருந்தார்கள்.

நிகரம் - திரட்சி யெனினுமாம். (௧௫௪)

தருக்குங்களி யமுதுண்டவர் தனிவாழ்வுறு மெல்லைச்
சுருங்குங்கண மணிநீள்வெயில் சுடர்மாளிகை வேறொன்
றிருக்கும்படி விசயன்பெற வீந்தான்விடை யதுகண்
டருக்கன்குட கடன்மாளிகை யணிதேரொட டைந்தான்.

இ—ள்: தருக்கும் களி அமுதுண்டவர் தனி வாழ்வு உறும் - பெருமிதத்தைத் தரும் மகிழ்ச்சிக்குரிய அமிர்தத்தை யுண்டவர்களாகிய தேவர்கள் சிறப்பாக வாழ்தற்குரியதும், எல்லைச் சுருக்கும் கண மணி - பகலவனுடைய கிரணங்களைக் குறையச்செய்கின்ற கூட்டமாகிய இரத்தினங்கள், நீள் வெயில் சுடர் மாளிகை வேறு ஒன்று - பரந்த ஒளியைக் காலுகின்றவுமாகிய வேறு ஒரு மாளிகையை, விசயன் இருக்கும்படி பெற - அருச்சுனன் இருக்கும்வண்ணம் எற்ப, விடை ஈந்தான் - அநுமதி செய்தான் (இந்திரன்), அது கண்டு - அச்செயலைக் கண்டு, அருக்கன் - சூரியனானவன், அணி தேரொடு குடகடன் மாளிகை அடைந்தான் - அழகிய தன் தேருடன் மேற்குக் கடலாகிய மாளிகையைச் சேர்ந்தான் (பொழுதுபட்டதென்றபடி) எ—று.

அமிர்தத்தை யுண்டமையினாலே மேன்மை யுற்றவர்களாகிய தேவர்களே வசித்தற்காகிய ஒரு சிறந்த மாளிகையை, நானென்பதைப் பொருட்படுத்தாமல் இந்திரன் தன் மைந்தனென்ற காரணம்பற்றியும் அவனுடைய பெருமையைக்குறித்தும் அருச்சுனனுக்குக் கொடுத்தானென்றபடி. வாழ்வுறும் என்னும் எச்சம் மாளிகையென்னும் பெயரைக்கொண்டது. (௧௫௫)

மேலைத்திசை காலைச்சுடர் வீழ்தந்திடு முன்னம்
மாலைச்சுடர் காலைத்திசை வாழ்வுற்றிட வந்தான்
சோலைத்தரு வருள்வாரிதி சூழ்வான்முக டேறிப்
பாலைப்பொழி வதுபோனில வொளிகொண்டு பரப்பா.

இ—ள்: காலைச்சுடர் - காலையில் உதிக்கின்றவனாகிய சூரியன், மேலைத் திசை வீழ்தந்திடு முன்னம் - மேற்குத்திசையில் மறைவதற்கிடையில், தருச் சோலை அருள் வாரிதி - கற்பகச்சோலையை (த் தேவர்கட்டு) உதவிய பாற்கடலானது, சூழ் வான் முகடு ஏறி - பரந்த ஆகாயத்தின் முகட்டில் ஏறி, பாலைப் பொழிவது போல் - தன்னிடத்துள்ள பாலினைச் சொரியுந் தன்மையென, மாலைச் சுடர் - இராவோனாகிய சந்திரன், நிலா ஒளி கொண்டு பரப்பா - தனது சந்திரிகையைப் பரவச்செய்துகொண்டு, காலைத்திசை வாழ்வு உற்றிட வந்தான் - கிழக்குத்திசை பொலிவுற உதயஞ்செய்தான்.

காலைத்திசை - சூரியன் காலையில் உதித்தற்கு இடமாகவுள்ள கிழக்குத் திசை. கற்பகச்சோலை முதலிய சில பொருள்கள், பாற்கடலைத் தேவரும் அசுரருங் கடைந்த காலத்தில் அதனிடத்திற் றோன்றி விண்ணுலகடைந்தனவென்பது கொள்கையாதலின், "சோலைத் தருவருள் வாரிதி" என்றார். சூரியன் மறையச் சந்திரன் றோன்றியமையின் அன்று உதயஞ்செய்த சந்திரன் பூரணசந்திரனென்க. (௧௫௬)

அந்தச்சிலை மகவான்மக னம்மாளிகை யிடையே
மூந்துற்றதொர் தவிசிற்கரு முகில்போல விருந்தான்
கந்தர்ப்பன்வெ குண்டேவிய கணைபட்டுள முருகா
நொந்துற்றுமு னடனம்புரி நுண்ணேரிழை யங்கண்.

இ—ள்: அந்தச் சிலை மகவான் மகன் - வில்லைக்கொண்ட அந்த இந்திரகுமாரனாகிய அருச்சுனன், அம்மாளிகையிடையே முந்துற்றது ஓர் தவிசில் - அந்த மாளிகையின் மத்தியிலுள்ள முதன்மையுடைய ஒரு ஆசனத்தில், கருமுகில்போல இருந்தான் - நீலமுகில் வதிந்தவாறு வீற்றிருந்தான், அங்கண் - அப்பொழுது, முன் நடனம்புரி நுண் நேர் இழை - சற்று முன்பு நாட்டியஞ் செய்தவளாகிய நுண்ணிய சிறந்த ஆபரணங்களையுடைய ஊர்வசியானவள், கந்தர்ப்பன் வெகுண்டு ஏவிய கணை பட்டு-மன்மதன் சினந்து செலுத்திய பாணம் பட்டதனால், உளம் உருகா நொந்துற்று - மனம் உருகி மேனி வருந்தியவளாய் எ—று.

அந்த, அ என்னு மிரண்டும் பண்டறிசுட்டுக்கள். கந்தர்ப்பன் - மன்மதன், சிறு பொருள்களையும் எய்து பேதிப்பவனென்பது பொருள். மன்மதன் சீற்றமின்றி ஏவின் அக்கணைகள் அவள்பாற் சென்று ஊற்றஞ் செய்யாவாதலின் சீற்றத்தோடு அவன் ஏவினனென்பதும், அதனாற்றான் அவள் வருந்தினளென்பதும் போதர "கந்தர்ப்பன் வெகுண்டேவிய கணைபட்டுளமுருகா நொந்து" என்றார். நேரிழை அன்மொழித்தொகை. (௧௫௭)

அக்கங்குலி னிடையேமல ரரிசந்தன வாச
மைக்கங்குனி கர்க்கும்பரு மணிநீல மணிந்தாள்
உய்க்கும்பரி மளநீலித வுடையாடை யுடுத்தாள்
மெய்க்குந்தவ வயவாளிகொள் விசயன்னுழை வந்தாள்.

இ—ள்: அக்கங்குலின் இடையே - அந்த இராக்காலத்தில், மலர் அரிசந்தன வாச - அலர்ந்த அரிசந்தன மென்னுந் தேவதருவின் மலர்வாசத்தையுடைய, மைக்கங்குல் நிகர்க்கும் பருமணி நீலம் அணிந்தாள் - கரிய இருளையொத்த பெரிய அழகிய நீலமலர்மாலையை அணிந்து, பரிமளம் உய்க்கும் நீலிதவுடை யாடை உடுத்தாள் - நறுமணம் வீசும் நீலநிறமான உடையாகிய வஸ்திரத்தைத் தரித்து, மெய்க்கும் தவவயவாளி கொள் விசயன் உழை வந்தாள் - உண்மையான தவத்தின் பயனாகப்பெற்ற வெற்றிக்குரிய பாசுபதப் படைக்கலத்தைக்கொண்ட அருச்சுனன் இருக்குமிடத்திற்கு வந்தாள்.

அரிசந்தனம் இந்திரனுக்குரிய பஞ்சதருக்களுள் முதலாவதாகவுள்ளது; ஏனைய நான்காவன:—கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம். நீலமணிந்தாளென்பதில் நீலம் பண்பாகுபெயர். மெய்க்கும் என்பதற்கு இலக்குத் தவறாத எனினுமாம். அரிசந்தன மென்பதற்கு வாசனையுள்ள ஒருவகைச் சந்தனமென்றும், மணிநீலமென்பதை நீலமணியென மாற்றி நீலரத்தினத்தாலாகிய ஆபரணத்தை யென்றும் பொருள் கூறலு மொன்று.

ஓராயிர மகல்வான்மணி யொக்குந்தவி சிடையே
யீராயிர தீபங்க ளெறிக்குஞ்சுட ரெழவே
வாராயிர முகமாநுகர் மஞ்சூர்தரு நயனப்
பேராயிர முடையான்மக னெதிர்கொண்டிவை பேசும்.



இ—ள்: ஆயிரமுகமா வார் நுகர் - ஆயிரக்கணக்கான முகங்களைக்கொண்டு கடல்நீரைப் பருகுகின்ற, மஞ்சு ஊர் தரும் - மேகத்தை வாகனமாகக் கொண்ட, ஆயிரம் நயனப் பெயருடையான் மகன் - ஆயிரங் கண்ணனென்னும் பெயரைக் கொண்டவனாகிய இந்திரனுடைய குமாரனாகிய விசயன், ஈராயிர தீபங்கள் எறிக்கும் சுடர் எழ - இரண்டாயிரமென்னுந் தொகைகொண்ட விளக்குக்கள் ஒளிர்கின்றமையொத்த பிரகாசம் உண்டாக, அகல் - பரந்த, ஓராயிரம் வான்மணி ஒக்கும் தவிசிடையே - ஆயிரம் சூரியர்களை நிகர்த்த ஒளியோடு கூடிய சயனத்தின்மீது (கிடந்தவன் அதனைவிட் டிறங்கி) எதிர்கொண்டு இவை பேசும் - (அவள்) முன்னர்ச் சென்று உபசரித்துப் பின்வருமாறு கூறுகின்றான் எ—று.

ஆயிரங்கள் எண்மிகுதியைக்கொண்டு நின்றன. வார் - நீர். (௧௫௯)

எந்தைப்பெயர் புனையாயு வெனும்பேர்முடி யிறைவன்
றந்தைக்குயிர் நிகராகிய தளவத்திரு நகையாய்
கொந்துற்றெழு குழலாய்குழ னிகராகிய மொழியாய்
வந்துற்றதெ னெனவன்னைம லர்த்தாள்களில் வீழ்ந்தான்.

இ—ள்: எந்தை - எங்கள் மூதாதையும், ஆயு எனும் பெயர் புனை - ஆயு என்னும் நாமத்தை யுடையவருமாகிய, பேர் முடி இறைவன் தந்தைக்கு - சீர்த்தியோடு கூடிய கிரீடத்தைத் தரித்த (குருகுலத்து) அரசனுடைய பிதாவாகிய புரூரவாவுக்கு, உயிர் நிகராகிய தளவத் திருநகையாய் - பிராணநாயகியாகவிருந்த முல்லையரும்புபோன்ற பல் வரிசையை யுடையவளே, கொந்து உற்று எழு குழலாய் - பூங்கொத்துச் செறிந்து விளங்குகின்ற கூந்தலை யுடையவளே, குழல் நிகராகிய மொழியாய் - வேய்ங்குழல் போன்ற இனிய வார்த்தையைப் பேசுபவளே, வந்து உற்றது என்ன - இந்த அகாலத்தில் வந்துள்ள நோக்கமென்ன, என அன்னை மலர்த்தாள்களில் வீழ்ந்தான் - என்று வினவிக்கொண்டு தாய்க்குச் சமானமானவளாகிய அந்த ஊர்வசியின் செந்தாமரைப்பூவை யொத்த பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் எ—று.

ஊர்வசி பூண்டுள்ள கோலமும், போந்த காலமும் விபரீத நோக்கத்திற்கு ஏதுவானவையென்பதை உடனே குறிப்பா லுணர்ந்த விசயன், அவளுடைய உள்ளத்திற் கொண்ட விபரீத எண்ணத்தை அறவே யொழித்துவிடுதற்பொருட்டுத் தங்கள் மூதாதையின் தேவியென்று கூறிக் குருகுலத்திற்கு மூதாட்டி என்ற முறையில் அவளுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கினனென்க. அர்ச்சுனன் முதலியோர் சந்திரகுலத்தவர்; சந்திரனுடைய மகன் புதன், அவனுடைய மகன் புரூரவா; முன்னொருகாலத்திலே இந்த ஊர்வசியானவள் பூஞ்சோலையில் நின்றுலாவுஞ் சமயம் பார்த்து அசுரர்கள் இவளைக் கவர்ந்து சென்றனரென்பதும், அந்தவேளையில் இப்புரூரவா என்பவன் அசுரர்களிடமிருந்து இவளைச் சிறைமீட்டு இந்திரனுடைய அநுமதிப்படி தான் மணந்தானென்பதும் வரலாறு. இதன் விரிவை நல்லாப்பிள்ளை பாரதத்திற் காண்க. (௧௬௦)

இவ்வாறிவ னவடாள்களி றைஞ்சிப்புற நின்றான்
மெய்வாய்மையி னுயருந்தவ விபுதாதியர் மகளுஞ்

செவ்வாயிதழ் மடியாவிழி சிவவாவுள மழலா
வெவ்வாளர வுமிழுங்கடு விடநேர்மொழி பகர்வாள்.

இ—ள்: இவ்வாறு இவன் அவள் தாள்கள் இறைஞ்சிப் புறம் நின்றான் - இந்தப்பிரகாரம் இவ்விசயன் அந்த ஊர்வசியின் பாதங்களை வணங்கி (எழுந்து) ஒதுங்கி (விநயத்துடன்) நின்றான், மெய் வாய்மையில் உயரும் தவவிபுதாதியர் மகளும் - நிலையான சத்தியத்திலும் உயர்ந்த தவத்திலுஞ் சிறந்த தேவர்மகளாகிய ஊர்வசியும், செவ்வாய் இதழ் மடியா - (அவன் வார்த்தை தன்னெண்ணத்திற்கு மாறானதெனக்கண்டு கோபங்கொண்டு) சிவந்த அதரங்களை அதுக்கி, விழி சிவவா - கண்கள் சிவப்புற, உளம் அழலா - மன மழன்று, வெவ் வாள் அரவு உமிழும் கடுவிடம் நேர்மொழி பகர்வாள் - வெம்மையோடுகூடிய கொல்லுகின்ற நாகபாம்பு காலும் கொடிய விடத்திற் கொப்பான வார்த்தைகளைச் சொல்வாளாயினள் எ—று.

இவள் தவத்திற் சிறந்தவளென்பதையும் இவளிடுஞ் சாபந் தவறாதென் பதையும் விளக்குதற்கு "மெய் வாய்மையி னுயருந் தவ விபுதாதியர் மகள்" என்றார். இதழ் மடித்தல், விழி சிவத்தல், உளம் அழலல் என்னுமிவை கோப மேலீட்டினால் நிகழ்வன. கடுவிடமென்பதை இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத் தொடரெனக் கொள்ளினுமாம். (கசுக)

இந்தத்தனி இரவின்கணின் னிருதோடழு வுறவே
வந்துற்றவெ னைத்தாயர்தம் வகையிற்புகல் செய்யா
நிந்தித்தனை நீசெய்தவ நெறியின்பய னெல்லாம்
வெந்துற்றரு நீறாயெழ விடுவேனென வெகுளா.

இ—ள்: இந்த இரவின்கண் - இந்த நள்ளிரவில், நின் இரு தோள் தழுவுற தனி வந்து உற்ற என்னை - உனது இரண்டு புயங்களையும் அணையும் படி நோக்கங்கொண்டு தன்னந் தனியே வந்தவளாகிய என்னை, தாயர் தம்வகையில் புகல் செய்யா நிந்தித்தனை - தாயென்ற முறையில் வார்த்தை யாடி (குறிப்பறியாதவன் போல்) அவமதித்தாய், நீ செய் தவநெறியின் பயன் எல்லாம் வெந்துற்று அரு நீறாய் எழ - (அதனால்) நீ செய்த தவஒழுக் கத்தின் பயன் முழுவதும் எரிந்து நுண்ணிய சாம்பராம்படி (அறவேகெடும் வண்ணம்) இடுவேன் என வெகுளா-(உனக்குச் சாபம்)இடுவேன் என்று சீறி.

தாயர் சாதிப்பன்மை; தாயராவார்: தன்னை யளித்தாள், தமயன் மனைவி, குருபன்னி, அரசன்பயில்தேவி, தன்மனையைப் பெற்றாளென ஐவர்.

நின்போன்மர புடையாரிரு நிலமன்னரி னுண்டோ
அன்போடழல் வருபாவையை யடைவுன்னி யளித்தாய்
பொன்போலிர விடையாடவர் புகலாமொழி புகல்வாய்
வன்போவரு ணலமோபெரு மிதமோவளர் புகழோ.

இ—ள்: அழல் வரு பாவையை-யாகாக்கினியிற் பிறந்தவளாகிய துரோபதையை, அடைவு உன்னி அன்போடு அளித்தாய்-முறையை நினைத்து அன்புடன் ஆதரித்து வருகின்றாய், பொன் போல் இரவிடை ஆடவர் புகலா மொழி புகல்வாய்-(ஆனால் என்னளவில்) பொன்போன்ற இந்தச் சிறந்த இரவில் ஆண்மையுள்ளவர்கள் சொல்லத் தகாத எதிர்வார்த்தை சொல்லு கின்றாய், நின்போல் மரபு உடையார் இருநில மன்னரில் உண்டோ-உன் னைப் போன்ற கொள்கையுள்ளவர் உங்கள் பெரிய பூவுலக அரசரில் இருக் கின்றார்களோ, வன்போ அருள் நலமோ பெருமிதமோ வளர்புகழோ-(நீ இப்பொழுது செய்த செயலானது) வன்மையின்பாற்படுமோ அருளாகிய நன்மையின்பாற்படுமோ பெருமையின்பாற்படுமோ பரவுகின்ற சீர்த்தியின் பாற்படுமோ எ—று.



இச்செய்யுளில் ஓகாரங்கள் எதிர்மறைப்பொருளில் வந்தன. பொன் போலிரவு காதலர்க்கு வாய்த்த நிலவு தென்றல் முதலியவற்றோடு கூடிய இரவு; அருமந்த இரவு என்றாற்போல. அடைவு-முறை; அனலிடைப் பிறந்தாளாகிய பாஞ்சாலியை நீவி ரைவீரும் ஒருவனுக்கு ஒரு ஆண்டென்ற அடைவுடன் முறையே ஆதரித்து வருகின்றீர்; அங்கே தமயன்மனை தாயா வள் தம்பிமனை மகளாவள் என்ற மரபு பார்க்கின்றிலீர், ஆனால் இங்கே நானாக வுன்னிடந் தேடிவந்து ஆதரிக்கக் கேட்டபோது மூதாட்டி, அன்னை யென்ற முறையெல்லாம் பாராட்டி என்னைச் சேர மறுத்து உன் நாட்டி லொன்றும் இந்நாட்டிற் பிறிதொன்றுஞ் செய்தாய், இப்படியான முறை பிறழுஞ் செயலை நீ யொருவனே யொழிய மண்ணுலகிற்றானும் வேறு எந்த அரசருஞ் செய்யாரென்பாள் "நின்போன் மரபுடையா ரிருநிலமன்னரி னுண்டோ" எனக் கடிந்து கூறினாளென்க (கசுஉ)

எனமன்னனை நீபேடிய ரியல்பாகென விதியா
நனைமென்குழல் மலர்மங்கையு நாணுந்நல முடையாள்
தனிகங்குலி னிடைசென்றுயர் தன்கோயில்புகுந்தாள்
அனலன்றரு சிலைவீரனு மஃதெய்தின னந்தோ.

இ—ள்: என-என்றிவ்வாறு கூறி, மன்னனை-அரசனாகிய அருச்சுனனை நீ பேடியர் இயல்பு ஆகு என விதியா-நீ பேடியரின் தன்மையை யடைவா யாக எனச் சாபமிட்டு, நனை மெல் குழல் மலர் மங்கையும் நாணும் நலமுடை யாள்-(சூடிய மலர்களிற் பொருந்திய தேனால்) நனைந்த மிருதுவாகிய கூந் தலை யுடையவளும் செந்தாமரைப்பூவி லிருக்கின்றவளுமாகிய இலக்குமியும் வெள்கக்கூடிய பேரெழில் வாய்ந்தவளாகிய ஊர்வசி, தனிகங்குலினிடையே -அந்நள்ளிருளிற்றானே, சென்று போய், தன் கோயில் புகுந்தாள்-தனது மாளிகையுட் பிரவேசித்தாள், அந்தோ-ஐயகோ! அனலன் தரு சிலை வீர னும் அஃது எய்தினன்-அக்கினிதேவன் கொடுத்த காண்டீபமென்னும் வில் லைக் கைக்கொண்ட வீரனாகிய அருச்சுனனும் அவள் இட்ட சாபம் தன்னைப் பீடிக்கப்பெற்றான் எ—று.

விசயன் சிறந்த மன்னனாயிருந்தும், அக்கினிதேவன் கொடுத்த காண்டீப மென்னும்திண்ணிய சிலையைக் கரத்திற்பரித்தவனாயிருந்தும் ஊர்வசிஇட்ட சாபத்தைத்தடுக்கமுடியாதவனாய் அச்சாபத்திற்குஆளானானென்பதைக்குறிப் பாற்காட்டுவார், அவனை மன்னனென்றும், அனலன் றரு சிலை வீரனென்றுங் கூறினார். ஆணுமன்றிப் பெண்ணுமன்றி எடுத்த மானுடசன்மத்தில் ஆண வாவியது அலியென்றும் பெண்ணவாவியது பேடியென்றும் வழங்கும். பெண்ணவாவியது-பெண்களைப்போல் ஆடையாபரணந் தரித்துக் கூந்த லிற் பூ முதலியன வைத்து ஒழுகுவது. அந்தோ இரக்கக்குறிப்பு. (கசுச)

ஆடித்திரு முகமன்னவ னநுசன்றரு விசயன்
பேடிப்பெயர் நாமோபெறு வோமென்றெழில் வடிவம்

வாடிப்பெரி துளநொந்தணி மாசற்றதொர் தூசான்
மூடித்துயில் கொண்டான்மணி முடிமன்னவர் திலகன்.

இ—ள்: ஆடித்திரு முகமன்னவன் அநுசன் தரு விசயன்-கண்ணடி போன்ற (குருட்டுக் கண்கள் பொருந்திய) திருமுகத்தை யுடையவனாகிய திருதராட்டிரனது தம்பியாகவுள்ள பாண்டுபெற்ற மகனும், மணி முடி மன்னவர் திலகன்-இரத்தின கிரீடத்தைச்சூடிய அரசர்களுள் திலகம்போன்றவனும் (சிறந்தவனும்) ஆகிய அருச்சுனன, நாமோ பேடிப் பெயர் பெறுவோம் என்று-நாமோ இப்பேடி யென்னும் நிலைமையையும் அதனால் வந்த பெயரையும் பெறலானோம் என்று, எழில் வடிவம் வாடி-பேரழகுடைய தன் மேனி வாடப் பெற்றவனாய், பெரிது உளம் நொந்து-அதிகம் மனம் வருந்தி, மாசு அற்றது ஓர் அணி தூசால் மூடி-குற்றமற்ற (சுத்தமான) ஒரு சிறந்த வஸ்திரத்தினால் தன் உடம்பு முழுவதையும் போர்த்துக் கொண்டு. துயில் கொண்டான்-நித்திரை செய்தான் எ —று.

"ஆடித் திருமுகம்" என்பது இச்சருக்கத்தில் "ஆடியானனன்" என்றதொடக்கத்ததாகிய எசு-ம் செய்யுளுரையில் விளக்கப்பட்டது. குருட்டுக் கண்களோடு கூடிய முகமெனினும் அரசன் முகமாதலின் திருமுகமென்றார். நாமோ என்பதில் ஓ கழிவிரக்கம். (ககூ)

அக்காலையில் விசயன்றன திடராரிரு ளகலச்
செக்காவியு மரவிந்தமும் வரிவண்டொடு திகழ
மைக்காரிருள் வெள்ளம்பில வள்ளத்திடை வடியத்
தொக்கானுயர் குணதிக்கினி லகிலந்தொழு சூரன்.

இ—ள்: விசயன் தனது இடர் ஆர் இருள் அகல-அருச்சுனனுடைய துன்பமாகிய பேரிருள் கழியவும், செங்காவியும் அரவிந்தமும் வரி வண்டொடு திகழ-(நீர் நிலைகளிலுள்ள) செங்கழுநீர்ப்பூவும் தாமரைப்பூவும் இரேகை பொருந்திய வண்டுகளுடன் பொலிய, மைக்கார் இருள் வெள்ளம்-மிகவும் கரிய இருட்டாகிய வெள்ளமானது, பிலவள்ளத்திடை வடிய-மலைக் குகைகளாகிய வட்டில்களுட் பாய்ந்து அடங்க, அகிலம் தொழு சூரன்-உலகத்தவர் வணங்கும் சூரியன், உயர் குணதிக்கினில் அக்காலையில் தொக்கான்-சிறந்த கிழக்குத் திசையில் அன்று காலை உதித்தான் எ—று.

அன்று காலையில் ஊர்வசி இந்திரனுடைய வேண்டுகோட்கியைந்து, தானிட்ட சாபத்தை அவ்வர்ச்சுனனுக்கு அவன் நினைத்தவுடனே நீக்கவும் ஆக்கவும் வரங்கொடுத்தாளாதலின், "அக்காலையில் விசயன்றன திடராரிருளகல" என்றார். செங்காவி எதுகை நோக்கிச் செக்காவி யென வலித்து நின்றது; "செழுக் கமலத் திரள்" என்றாற்போல; வரிவண்டு சிலேடை மொழி; செங்காவி நீளமான பாணத்தோடொத்து விளங்கவென்றும், அரவிந்தம் இசைப்பாட்டையுடைய வண்டுகளோடு விளங்க வென்றும் பொருள் கொண்டு முறையே குவிதலும் விரிதலும் செய்ய என்பது கருத்தாகக் கொள்க. இருள்வெள்ள மென்றதற் கேற்ப வடிய என்னும் வினை கொடுத்துக் கூறப்பட்டது. இனி, பிலவள்ளமென்பதற்குப் பாதலமாகிய வட்டிலெனக்கொண்டு பூதலத்தின் இப்புறத்தே சூரியன் வர, அப்புறமாகிய பாதலத்தில் இருள் சேர்ந்ததெனக் கூறலும் பொருத்தமுடைத்தென்க. இந்



நூலாசிரியர் விண்ணுலகைப்பற்றிக் கூறுமிடத்துச் சந்திர சூரியர்களின் உதயம் அஸ்தமனம் பூக்கண் மலர்தல் கூம்புதல் முதலிய பூமியில் நிகழும் செயல்களை யெடுத்துச் சொல்லுதலால், இவர் கொண்ட விண்ணுலகம் இப்பூமியிற்றானே உள்ள இமயமலைப் பிரதேசமெனக் கொள்ளக்கிடக்கின்றது; இராக்காலம் நீங்கி எப்போது விடியுமெனச் சீவராசிகள் எதிர்பார்த்தற்கும், மங்கலகருமங்களையும் சந்தியாவந்தனம் முதலிய வழிபாடுகளையுஞ் செய்யும் மக்கள் நோக்குதற்கும் உரிய திக்காதலின் "உயர் குணதிக்கு" என்றார். ()

வேறு.

கதிரு தித்தவக் காலையில் மாமறை
முதல்வர் முப்பத்து மூவருஞ் சூழ்வரப்
புதல்வ னுற்ற துணரான் புரந்தரன்
விதம ணிப்பணி மண்டப மேவினான்.

இ—ள்: கதிர் உதித்த அக்காலையில்-சூரியன் உதயஞ் செய்ததாகிய அக்காலை நேரத்திலே, மாமறை முதல்வர் முப்பத்து மூவரும் சூழ்வர-மகத்தான வேதங்களை யுணர்ந்த தலைவர்களாகிய முப்பத்து மூன்று தேவர்கள் சூழ, புரந்தரன்-இந்திரன், புதல்வன் உற்றது உணரான்-தன் மகனாகிய காண்டீபன் அடைந்த ஆபத்தை யறியாதவனாய், வித மணிப் பணி மண்டபம் மேவினான்-நவரத்தினங்கள் இழைத்து வேலை செய்யப்பட்டதாகிய சுதன்மை யென்னும் தனது அத்தாணி மண்டபத்தில் வந்திருந்தான்.

உற்றது, வினையாலணையும் பெயர். முப்பத்து மூவராவார்: ஆதித்தர் பன்னிருவர், அசுவினியர் இருவர், உருத்திரர்பதினொருவர், வசுக்கள் எண்மர்.

கண்ப ரப்பியொர் கந்தரு வன்றனை
விண்பு ரக்குமவ் வேந்தனி ருந்தபின்
மண்பு ரக்கும் வரிசிலை வீரனை
யெண்பெ றக்கொணர் வாயென வேவினான்.

இ—ள்: விண் புரக்கும் அவ்வேந்தன் இருந்தபின்-விண்ணுலகத்தை ஆளும் அந்த இந்திரன் (அம்மண்டபத்திலுள்ள ஒரு சிம்மாசனத்தில்) வீற்றிருந்த பின், எண் பெற-(அருச்சுனனைப் பற்றிய) நினைவுண்டாக, ஓர் கந்தருவனைக் கண்பரப்பி-அயலே நின்ற ஒரு கந்தருவனைக் கட்குறிப்பால் நோக்கி, மண்புரக்கும் வரிசிலை வீரனைக் கொணர்வாய் என ஏவினான்-பூமியைக் காக்கின்றவனாகிய வரிந்து கட்டப்பெற்ற வில்லினையுடைய அருச்சுனனை அழைத்து வருதியெனக் கட்டளை செய்தான் எ—று.

மற்ற வன்றிருத் தாண்மலர் போற்றியக்
கொற்ற வன்றிரு முன்னர்க் குறுகியாங்
குற்ற யாவு முணர்ந்தனன் மீண்டுபோய்ச்
சொற்ற னன்சுரர் கோமுன் றொழுதரோ.

இ—ள்: அவன் திருத்தாள் மலர் போற்றி-அந்த இந்திரனுடைய சிறந்த பாததாமரைகளைத் துதித்துக் கொண்டு, அக்கொற்றவன் திருமுன்னர்க் குறுகி-(கந்தருவன்) அரசனாகிய அவ்வருச்சுனனுடைய சிறப்பானமுன்

ணிலையை யடைந்து, ஆங்கு உற்ற யாவும் உணர்ந்தனன்-அங்கே அன்றிரவு நிகழ்ந்தவை முழுவதையும் அறிந்து கொண்டு, மீண்டுபோய்-பெயர்ந்து சென்று, சுரர் கோ முன் தொழுது-தெய்வேந்திரன் முன்னிலையில் வணங்கி, சொற்றனன்-தான் அறிந்தவற்றை விண்ணப்பஞ் செய்தான். எ—று.

உற்ற யாவும்-ஊர்வசி அருச்சுனனைக் காதலித்ததும் அவன் இசையாமை கண்டு சாபமிட்டதும் முதலிய எல்லா விபரங்களுமாம். கந்தருவன் சொல்லாமலே யுணரும் ஞானமுடையவனாதலின் 'உணர்ந்தனன்'' என்றார்.

சொன்ன வாசகங் கேட்ட சுரபதி
கன்னம் வெந்துகண் ணாயிர மும்புனல்
துன்ன வானவர் சூழ்வரத் தானும்போய்
யந்ந ராதிபன் றன்னை யணுகினான்.

இ—ள்: சொன்ன வாசகம் கேட்ட சுரபதி-(அக்கந்தருவன்)கூறிய வார்த்தையைக் கேட்ட தேவர்கோன், கன்னம் வெந்து-செவித்துவாரம் வேகப்பெற்றவனாய், ஆயிரம் கண்ணும் புனல் துன்ன-தன் ஆயிரங் கண்களிலும் நீர் ததும்ப, வானவர் சூழ் வர-தேவர்கள் தன்னைச் சூழ்ந்து வர, தானும் போய்-தானுஞ் சென்று, அந்நராதிபன் தன்னை அணுகினான்-அந்தப் பூவுலக அரசனாகிய விசயனை அடைந்தனன் எ—று.

தானும் என்றதில் உம்மை இறந்தது தழீஇயதனோடு உயர்வுசிறப்புமாம்

அணுகி மைந்தனை யன்பொ டுறத்தழீஇக்
கணிகை யிட்ட கடுங்கொடுஞ் சாபநீ
தணிதி யஞ்சலென் றானொரு தையலாற்
பிணியு ழந்துமுன் பேர்பெறும் பெற்றியான்.

இ—ள்: முன் ஒரு தையலால் பிணியுழந்து பேர் பெறும் பெற்றியான்-முன்னர் அகலிகை யென்று சொல்லப்படுகின்ற ஒரு பெண் காரணமாகக் காமநோயுற்றுத் துயரத்திற்காளாகி ஆயிரங்கண்ணன் என்னும் பெயரைப் பெற்ற இயல்புடையவனாகிய இந்திரன், மைந்தனை அணுகி-மகனாகிய அருச்சுனனை யடைந்து, அன்பொடு உறத் தழீஇ-ஆர்வத்தோடு மார்புறத் தழுவி, கணிகை இட்ட கடும் கொடும் சாபம் நீ தணிதி-பொது மகளாகிய ஊர்வசியிட்ட மிகவுங் கொடிய இச்சாபம் விரைவில் நீங்கப்பெறுவை, அஞ்சல்-பயப்படாதே, என்றான்-எனத் தேறுதல் கூறினான் எ—று.

வெறுப்பு மேலீட்டினால் ஊர்வசியைக் கணிகை யென்றான். கடும் கொடும் என்பன மிகுதிப்பாட்டை உணர்த்தவந்த ஒருபொருட் பன்மொழி. தன்னைக் காதலித்தவள் பேரழகிற் சிறந்த தேவமகளாக, தேவமகளுள்ளும் பொதுமகளாக, தானிருக்கு மிடத்திற்குத் தேடிவந்து தன்னைச் சேரும்படி இரந்தாளாக, தான் ஒரு நரனாக, அங்ஙனமெலாமிருந்தும் அவள் தன் மூதாட்டியெனக் காரணங் காட்டி, அவள் வேண்டுகோளை நிராகரித்துச் சாபத்திற் காளாகிய விசயனுடைய மேலான ஒழுக்கத்திற்கும், தன்னாற் காதலிக்கப்பட்டவள் கற்பிற் சிறந்த இருடிபத்தினியாக, அவளை வஞ்சித்து அற்றம் நோக்கி அவள் நாயகனாகிய முனிவன்போல் வேடம் பூண்டு பிறன் றாரமென்பதையுஞ் சிந்தியாது காவிற் சென்று காமந் துய்த்தவிடத்துச்



சாபத்திற்காளாகிய இந்திரனுடைய படிற்றொழுக்கமாகிய இழுக்கத்திற்குமிடையேயுள்ள பேதத்தை எடுத்துக் காட்டுவான்வேண்டி ஆசிரியர் "ஒரு தையலாற் பிணியுழந்து முன்பேர்பெறும் பெற்றியான்'' என்றார்.

அன்ன மென்னடை யாயிழை தன்னுழைத்
துன்னி னன்சுர ரோடுஞ்சு ரேசன்போய்
மின்னி னுண்ணிடை யாளும் வெருவுறா
மன்ன வன்பதம் வந்து வணங்கினாள்.

இ—ள்: சுரேசன் சுரரோடும் அன்ன மெல் நடை ஆயிழை தன்னுழைப் போய்த் துன்னினன்-தேவர் தலைவனாகிய இந்திரன் தேவர்களுடன் அன்னநடையெனச் சொல்லத்தக்க நடையினையும் ஆய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களையும் உடையவளாகிய ஊர்வசி இருக்குமிடத்திற் போய்ச்சேர்ந்தான், மின்னின் நுண்ணிடையாளும் வெருவுறா-(அவன் வரவைக்கண்டு)மின்னல்போன்ற நுண்ணிய இடையினையுடையவளாகிய ஊர்வசியும் அச்சமுற்று, வந்து மன்னவன் பதம் வணங்கினாள்-எதிரே வந்து இந்திரனுடைய பாதங்களை(ப் பஞ்சாங்கமாக வீழ்ந்து) வணங்கினாள் எ—று.

வணங்கு முன்ன மடநடை யோதிமக்
கணங்கொ லென்னக் கவின்பெறு கோதையைச்
சுணங்க ருமுலைத் தோகையை வார்குழல்
அணங்கை யண்ட ரனைவரும் போற்றியே.

இ—ள்: வணங்கு முன் (இந்திரனை அவள்) வணங்குதற்கிடையில், மடநடை ஓதிமக் கணங்கொல் என்னக் கவின்பெறு கோதையை-இளமையோடு கூடிய சிறந்த நடையினையுடைய அன்னத்தின் இனமோவெனச் சந்தேகிக்கத்தக்க வனப்பையுடைய மாலையணிந்த அப்பெண்ணை, சுணங்கு அரு முலைத் தோகையை-பொற்சுணங்கு நீங்காத் தனங்களையுடைய அம்மயில் போன்றவளை, வார் குழல் அணங்கை-நீண்ட கூந்தலினையுடைய தெய்வமகளாகிய அந்த ஊர்வசியை, அண்டர் அனைவரும் போற்றி-ஆங்கு வந்த தேவர்களெல்லாரும் பாராட்டி எ—று.

கோதை, தோகை, அணங்கு என்னும் ஒரு பொருள் குறித்த பல பெயர்கள் இரண்டாம் வேற்றுமை யுருபேற்றுப் "போற்றி'' என்னும் ஒரு வினை கொண்டன. தோகை யென்பது மயிலுக்குச் சினையாகு பெயராய்ப் பின் பெண்ணுக்கு உவமையாகு பெயராய் நின்றது. (௧௭௱)

அன்னை நீயவற் காயினு மாசையின்
இன்ன றீர்ப்ப தெவர்க்கு மியல்பரோ
மன்ன னாயினும் வான்பிழை செய்தனன்
என்ன நாகர் அவட்கிதங் கூறியே.

இ—ள்: அவற்கு நீ அன்னையாயினும்-அவ்வருச்சுனனுக்கு நீ தாய் முறை பூண்டுள்ளாயெனினும், ஆசையின் இன்னல் தீர்ப்பது எவர்க்கும் இயல்பு-காமவேதனையை ஒழித்தல் ஆடவரெவர்க்கும் முறையாகும், மன்னனாயினும் வான்பிழை செய்தனன்-அவ்வருச்சுனன் அரசகுலத்தவனாயிருந்தும்

உனக்குப் பெருந் தவற்றைச் செய்தான், என்ன-என்று, நாகர் அவட்கு இதங்கூறியே-தேவர்கள் அவளுக்குச் சமாதானஞ் சொல்லி.

அரோ-அசை; நீ அவனுக்குத் தாயாயினும், அவன் அரசனாயினும், ஆசையால் வந்த இன்னலைத் தீர்க்க அவன் மறுத்தமை தவறாகு மெனத் தேவர்கள் ஊர்வசிக்குத் தேறுதல் கூறினா ரென்றபடி; தேவர்கள் கூறிய நியாயம் அவளுக்கு மாத்திரம் இதமெனப் புலப்படுமேயொழிய ஏனையோர்க்குப் புலப்படாதென்பதைக்குறிப்பாலுணர்த்துவார் 'அவட்கிதங்கூறியே' என்றார்.

காம மிக்கவுன் கட்டுரைச் சாபநோய்
பூமி பொய்ப்பினும் பொய்ப்பதன் றாலரோ
வேய்ம லர்த்தொடை யானெஞ்சில் வேண்டுநாள்
ஆம வற்கிவ் வுருவருள் செய்திநீ.

இ—ள்: பூமி பொய்ப்பினும்-உலகிலுள்ள பெரியோர் நிலை தவறினும், காமம் மிக்க உன் கட்டுரைச் சாபநோய் பொய்ப்பதன்று-ஆசை மேலீட்டினால் நீ யிட்ட உறுதியான சாபத்தால் வந்த பிணி தவறுதலில்லையாம், (ஆனதால்) வேய்மலர்த் தொடையான்-அணிதற்குரிய கற்பகப்பூ மாலையைப் பொருந்திய அருச்சுனன், நெஞ்சில் இவ்வுரு வேண்டும் நாள்-தன் மனத்தில் இப்பேடி வடிவத்தை விரும்பிய நேரத்தில், ஆம்-ஆகும்படி, அவற்கு நீ அருள் செய்தி-அவனுக்கு நீ கருணை புரிவாயாக எ—று.

என்று வானவர் யாவரு மேத்தவே
யன்ற வற்கவ் வரங்கொடுத் தாளவள்
வென்றி வார்சிலை மீளியுந் தன்பெருந்
துன்று கோலஞ் சிறந்திடத் தோன்றினான்.

இ—ள்: என்று வானவர் யாவரும் ஏத்த-என்று இவ்வாறு தேவர்களெல்லாரும் அவளைப்போற்ற, அவள் அன்றுஅவற்கு அவ்வரம்கொடுத்தாள்-அந்த ஊர்வசி உடனே அவ்வருச்சுனனுக்கு அப்படியான வரத்தை யளித்தாள், வென்றி வார்சிலை மீளியும்-வெற்றியை உதவும் நீண்ட வில்லினைக் கொண்ட வீரனாகிய விசயனும், தன் பெரும் துன்று கோலம் சிறந்திடத் தோன்றினான்-தனது பெருமையான பழைய வடிவம் சிறந்து விளங்கக் காணப்பட்டான் எ—று.

அவ்வரம் என்றது அருச்சுனன் நினைத்தமாத்திரத்தே அப்பேடி வடிவம் அவனைப் பீடித்தலும் நீங்குதலுமாம். (கஎசு)

அருச்சுனன் தவநிலைச் சருக்கம் மூலமு முரையும்
முற்றுப்பெற்றன.

2391

அறம் மறம்

ஆக்கம் : அழிவு
கேடு

இளமை : முதுமை

பகை : நட்பு

பண்டிதர் : பாமரன்

உ

# பிரகடனம்.

**திருவாதவூரடிகள் புராணம்**

ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் செய்த விருத்
விலை ரூபா 2-25.

**மேற்படி புராணம் பதவுரை** (மாணவர் பதிப்பு)

**மயூரகிரி புராணம்**

வித்துவசிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்
பொழிப்புரை, ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழு
வுரை, ஷை வித்துவசிரோன்மணி யவர்களின் பிர
வாலாறு முதலியவற்றுடன் ரூபா 1.50.

**மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்**

(திருவாசகத் திரட்டுடன்) சைவ வித்தியாசாலைகளிற்
மாக உபயோகிக்கப்படுவது. விலை சதம் 60. (அணா 10.

**இராமாயணம் சடாயுகாண் படலம்**

பதவுரை, விசேடக்குறிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு
னுடன். (ஆங்கில எஸ். எஸ். ஸி. வகுப்பிற்கும்,
ஸீனியர் வகுப்பிற்கும் தமிழ்ப் பாடமாக விதிக்கப்பட்டுள்
சதம் 40

**வில்லிபாரதம், அருச்சுனன் தவநிலைச் சருக்கம்**

பதவுரை, விசேடவுரை, நூலாசிரியர் வாலாறு முதலி
(1944-ம் ஆண்டு ஆங்கில S. S. C., H. S. C. பரீட்
தமிழப் பாடமாக விதிக்கப் பெற்றுள்ளது.) விலை ரூபா

**உலகம் பலவிதக்கதை - 3. — துரைரத்தினம் நேசமணி**

படிக்கப் படிக்கத் தெவிட்டாத இனிமை வாய்ந்த கதை
சதம் 60. (அணா 10.)

*Apply to.*

PANDIT V. T. SAMBANDHA
Vannarpannai,
(Ceylon)